தரமான கற்றல் விளைவுகளுக்கு இட்டுச் செல்லுதல்

(LEADING FOR QUALITY LEARNING OUTCOMES)

பாடத்தொகுதி வழிகாட்டி

SCL 202:

எதிர்கால இரண்டாம் நிலைப் பாடசாலைகளை முன்னெடுத்துச் செல்வதற்கான அதிபர்கள், பிரதி அதிபர்களுக்கான வலுவூட்டல் நிகழ்ச்சித்திட்டம்

தேசிய கல்வி நிறுவகம்

கல்வி அமைச்சு

ஆசிய அபிவிருத்தி வங்கியின் அனுசரணையுடன் கல்வி அமைச்சின் துறைசார் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

LEADING FOR QUALITY LEARNING OUTCOMES

COURSE GUIDE

SCL 202:

Programme for Empowerment of the Principals, Deputy Principals for Future Secondary Schools

NATIONAL INSTITUTE OF EDUCATION
MINISTRY OF EDUCATION

Education Sector Development Programme of Ministry of Education sponsored by Asian Development Bank

SCL 202:

தரமான கற்றல் விளைவுகளுக்கு இட்டுச் செல்லுதல்

(Leading for Quality Learning Outcomes)

ADB EKSP

Education for Knowledge Society Project

SCL 202: தரமான கற்றல் விளைவுகளுக்கு இட்டுச் செல்லுதல்

ISBN:

அறிவுசார் சமூகத்திற்கான கல்விச் செயற்றிட்டத்தின் விசேட நிபணத்துவர் **ரிச்சட். டி.எல். சி. கொன்சலஸ், நிஹல் ஹெரத்** அவர்களால் தயாரிக்கப்பட்டது. **எஸ். கருணாநிதி** அவர்களால் மொழி **பெயர்க்கப்பட்டது.**

இப் பாடத்தொகுதி வழிகாட்டியிலுள்ளவை மேற்படி இருசிறப்பறிஞர்களின் கருத்துகளும் பார்வைகளுமாகும். இவற்றை கல்வி அமைச்சு அல்லது, அறிவுசார் சமூகத்திற்கான கல்வி செயற்திட்டம் எப்பொழுதும் பகிர்ந்து கொள்ளும் எனக் கூறுவதற்கில்லை.

இந்த பாடத்தொகுதி வழிகாட்டியில் உள்ள பகுதிகள் இணையம், மற்றும் பல்வேறு மூலகங்களிலிருந்து பெறப்பட்டவை. இவை முற்று முழுவதாக பாடசாலை அதிபர்கள் மற்றும் கல்வி அதிபர்களின் வாண்மைத்துவம் மற்றும் அதிகாரமளிப்பிற்குமான தேவைகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். தவிர எவ்வித வர்த்தக நோக்கங்களுக்கும் பயன்படுத்தலாகாது. இவ்மொடியூல்கள் வாண்மைத்துவ விருத்தி மற்றும் அமுலாக்கத்திற்கும் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.

பதிப்பு: தேசிய கல்வி நிறுவகம்.

முதல் பிரசுரம்: 2014

எதிர்கால இரண்டாம் நிலைப் பாடசாலை அபிவிருத்தியினை முன்னெடுத்துச் செல்வதற்கான அதிபர்கள்/பிரதி அதிபர்களுக்கான வலுவூட்டல் நிகழ்ச்சித்திட்டம்

அதிபர் பிரதி அதிபர்கள் வலுவூட்டல் நிகழ்ச்சித்திட்டமானது எதிர்காலங்களில் தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதற்கும், முன்னெடுத்துச் செல்வதற்கும் கல்வி அமைச்சின் அனுசரனையுடன் தேசிய கல்வி நிறுவகம், கல்வித் தலைமைத்துவ அபிவிருத்தி நிலையம் ஊடாக இந்நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சித்திட்டம் விரிவுரைகள், விடய ஆய்வு, விவாதம், கலந்துரையாடல், பாடசாலை மேற்பார்வை மற்றும் செயற்றிட்டங்களைக் கொண்டுள்ளது. இவ்வழிகாட்டி கற்றல் செயற்பாட்டின் நடைமுறையை உறுதி செய்யவும் பாடத்தொகுதியின் உள்ளடக்கம், விடயங்கள் என்பவற்றை விளக்குவதோடு அவை எவ்வாறு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன என்பதையும் விபரிக்கின்றது.

இது உங்களுக்கு கற்றல் கற்பித்தலுக்கான ஓர் வழிகாட்டியாகவிருந்து கற்பவர்களதும், ஏனையவர்களதும் அறிவு , திறன், மனப்பாங்கை விருத்தி செய்வதற்குமாக தயாரிக்கப்பட்டுள்ளது. இவ்வழிகாட்டி உங்களது கற்றல் கற்பித்தல் செயற்பாட்டிற்கு பிரதான ஆதாரமாக உள்ளதுடன் கல்விசார் துறையில் சிறந்த ஆளுமை உடையவர்களாக மாற்றுவதற்கு உதவி புரிகின்றது. இவ்வழிகாட்டி கல்வி அமைச்சின் அறிவுசார் சமூகத்திற்கான கல்வி செயற்திட்டத்தினரால்(EKSP) பிரசுரிக்கப்பட்டுள்ளது. இந்த வழிகாட்டிகள் கல்விசார்துறையில் உள்ள பயிலுனர்களுக்காக வழங்கப்படுகின்றது. இவ்வழிகாட்டிகளை வழங்கிய கல்வி அமைச்சுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த வழிகாட்டிகளை அச்சடித்துத் தந்த தேசிய கல்வி நிறுவக அச்சுக் கூட முகாமையாளர் (உதவிப் பணிப்பாளர்) அவர்களது ஊழியர்கள் மற்றும் கல்வித் தலைமைத்துவ அபிவிருத்தி நிலைய கல்வி சார்,கல்வி சாரா ஊழியர்களுக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

என்.ஏ.யு.சி.முனசிங்க,

இணைப்பாளர்,

பணிப்பாளர். (தொழில்வாண்மை அபிவிருத்தி மற்றும் கல்வி முகாமைத்துவம்)

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III க்கான

பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III க்கு சேர்த்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களுக்கான திசைமுகப்படுத்தல் பயிற்சி நெறி கல்வி அமைச்சின் அனுசரனையுடன் தேசிய கல்வி நிறுவகம், கல்வித் தலைமைத்துவ அபிவிருத்தி நிலையம் ஊடாக் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சித்திட்டம் விரிவுரைகள், விடய ஆய்வு, விவாதம், கலந்துரையாடல், பாடசாலை மேற்பார்வை மற்றும் செயற்றிட்டங்களைக் கொண்டுள்ளது.

கல்வித்துறையின் முகாமையாளர்களாகிய அதிகாரிகளுக்கு எதிர்கால உலகிற்கு பொருந்துமாற் போல கல்வி முறைமையை வழி நடாத்துவதற்கு தேவையான அறிவு திறன் மனப்பாங்கு போன்ற ஆற்றல்களை விருத்தி செய்து கொள்ளுதல் இந் நெறி மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்பயிற்சி நெறியில் மேலதிக வாசிப்பிற்கு தயாரிக்கப்பட்டுள்ள இந்த மொடியூல்கள் மூலம் தேவையான அறிவை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்குமென்பதுடன் தொழில் வாழ்வின் பல்வேறு சந்தர்ப்பங்களில் இந் நூல்கள் பயன்படக் கூடியதாக உள்ளது.

இந்த மொடியூல்களை அச்சிடுவதற்கு தேவையான நிதி ஒதுக்கீட்டினை பெற்றுக் கொள்வதற்கான உதவிகளை நல்கிய கல்வி அமைச்சின் செயலாளருக்கும் மேலதிக செயலாளருக்கும் (கொள்கை திட்டமிடல் தரங்கணிப்பு மீளாய்வு) அத்துடன் இம் மொடியூல்களை அச்சிட்டுத் தந்த தேசிய கல்வி நிறுவக பணிப்பாளர் நாயகம் உட்பட அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் மீபே கல்வித் தலைமைத்துவ அபிவிருத்தி நிலைய உத்தியோகத்தர்களுக்கும் எனது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேற்படி சகல பணிகளதும் இறுதி விளைசான நாமட்டின் பிள்ளைகளுக்கு தரமான தும் பூரணத்துவம் அனதுமான கல்வியை பெற்றுக் கொடுக்கும் உங்களது சக்தி பலம் மற்றும் அர்ப்பணிப்புக்களை பெரிதும் மதிக்கின்றேன்.

புஷ்பா விஜேயசூரிய
பணிப்பாளர்
மனித வள அபிவிருத்தி
கல்வி அமைச்சு

உள்ளடக்கம்

மொடியூல் 1	கலைத் திட்டத்தின் பொதுவியல்புகள்

குறிக்கோள்கள்:



இந்த மொடியூலானது பொதுக்கலைத்திட்டம் பற்றிய மேலோட்டமான நோக்கினை வழங்குவதுடன் பாடசாலைக்கு எவ்விதம் பொருந்தும் எனவும் கூறுகிறது. வகுப்பறை மட்டம் வரையில் கலைத்திட்ட விளக்கத்தின் படிமுறைகளும் கவனத்துக்குள்ளாயின. ஒவ்வொரு நிலையிலும் கல்விசார் தலைவர்களின் வகிபாகங்கள் கலைத்திட்டத்தை விளைத்திறனுள்ள வகையில் நடைமுறைப்படுத்துவதும் கவனத்துக் குட்பட்டுள்ளன.

கற்றல் விளைவுகள்:



மொடியூலின் முடிவில் மாணவர்கள்:

1. உள்ளூர்க் கல்வி முறைமைக்குப் பொருத்தமான கலைத்திட்டத்திற்கான வரைவிலக்கணம் தருவார்.
2. பணியணியினருக்குத் தலைமைத்துவத்தை வழங்குவதற்காகப் பல்வேறு கட்டங்களில் கலைத்திட்டத்தை இனங்கண்டு பயன்படுத்துவார்.
3. கல்விசார் தலைவரின் வகிபாங்களை மதிப்பதுடன் தமது பாடசாலைகளில் கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இத்தகைய வகிபாகங்களை வெற்றிகரமாகப் பிரயோகிப்பார்.

மொடியூல் பற்றிய நோக்கு



வாரம்	தலைப்பு÷உள்ளடக்கம்	செயல்முறை	மாணவருடைய கற்றல் பணி
1	1. கலைத்திட்டத்தை வரையறுத்தல் 2. வகுத்துரைக்கப் பட்டதில் இருந்து கற்கப்பட்டது வரை கலைத்திட்டம் பற்றி விளக்கமளித்தல்	அறிமுகம் குழுக் கலந்துரையாடல் வளங்களைத் தேடுதல்	வகுப்புக் கலந்துரையாடல் குழு வேலைகளில் பங்கேற்பு தனியாள் தேடல்

வாரம்	தலைப்பு÷உள்ளடக்கம்	செயல்முறை	மாணவருடைய கற்றல் பணி
2	1. கற்கை நெறியின் கூறுகள் 2. கல்விசார் தலைவரின் வகிபாகம்	விரிவுரை குழுக் கலந்துரையாடல்	அனுபங்களைப் பகிர்தல் பாடசாலைப் பிரயோகங்களை கற்றல்

கலைத் திட்டத்தின் பொதுவியல்புகள்

1. கலைத்திட்டத்தை வரையறைசெய்தல்.

கலைத்திட்டம் பல வழிமுறைகளிலும் வெவ்வேறு கண்ணோட்டங்களிலும் வறையறை செய்யப்படுகிறது. கலைத்திட்டம் பற்றிய வரைவிலக்கணங்கள் சில கீழே தரப்படுகின்றன.

"கலைத்திட்டம் என்பது தொடர்ச்சியான மீளமைப்பாகும். பிள்ளையின் தற்போதைய அனுபவத்திலிருந்து உண்மையில் ஒழுங்கமைக்கப்பட்ட அமைப்புகளால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றவை வரை மாறுகின்றது. இவற்றை கற்கைகள் என நாம் அழைப்பபோம்..... பல்வேறு கற்கைகள் ..... அவை யாவும் அனுபவங்களே".(John Dewey, 1902)

"கலைத்திட்டம் என்பது நெறிப்படுத்தப்பட்ட மற்றும் நெறிப்படுத்தப்படாத அனுபவங்களாகும். இவை தனியாள் ஆற்றல்கள்மீது கவனஞ் செலுத்துகின்றன. அல்லது உணர்வு பூர்வமாக நெறிப்படுத்தப்பட்ட பயிற்றப்படும் அனுபவமாகும். இவற்றைப் பூரணப்படுத்துவதற்கும் முற்றுப் பெறச் செய்வதற்கும் பாடசாலை பயன்படுத்துகிறது".((Franklin Bobbit,1918)

"கலைத்திட்டமானது ஆசிரியரின் வழிகாட்டலின்கீழ் மாணவர்கள் பெறும் அனுபவங்கள் யாவற்றையுங் கொண்டு தொகுக்கப்படுகிறது. ஆகவே கலைத்திட்டமானது ஒரு கற்கைத்துறையாகக் கருதப்படுவதுடன் மட்டுப்படுத்தப்பட்ட உள்ளடக்க அமைப்பை கடுமையாகப் பிரதிநிதித்துவப் படுத்துவதில்லை. ஆயினும் ஒழுங்குமுறை பற்றிய செயல்முறையாக உள்ளது."–(Hollis Caswell,1935)

"பாடசாலை அதன் கல்விசார் இலக்குகளை அடைவதற்காகத் திட்டமிட்டு நெறிப்படுத்தும் சகல கற்றல் அனுபவங்களும் கலைத்திட்டமாகும்.". - (Ralph Tyler,1957)

"அனுபவங்களைப் பின்தொடர்ந்து, அவற்றினடிப்படையில் செயற்படுவதற்குப் பிள்ளை தெரிவுசெய்யும், ஏற்றுக் கொள்ளும் மற்றும் தன்னோடு இணைத்துக் கொள்ளும் கற்றலாகும்." - (Thomas Hopkins,1941)

"கலைத்திட்டம் என்பது உள்ளடக்கத்தில் இடம்பெறும் அலகுகளின் வரிசைக்கிரமமாகும். கற்பவர் ஏலவே பாண்டித்தியம்பெற்ற குறித்த முன்னைய அலகின் மூலம் வழங்கப்படும் ஆற்றல்களை தனியலகினைக் கொண்டு பூர்த்திசெய்ய் கற்பதற்கேற்றவகையில் ஒழுங்கு செய்யப்பட்டவையாகும்".–(Robert Gagne,1967)

"சகல திட்டமிட்ட கற்றல் விளைவுகளும் கலைத்திட்டமாகும். இதற்குப் பாடசாலை பொறுப்பானதாகும். இது போதனையினால் விரும்பப்படும் முடிவுகளையும் கருதும்".– (James Popham& Eva baker,1970)

"திறன் மேம்பாடும் திறனாய்வுச் சிந்தனையும் மற்றும் ஆக்கத்திறன் உபாயங்கள், பிரச்சினை தீர்த்தல், ஏனையோருடன் கூட்டாகச் செயற்படல், சிறந்த தொடர்பாடல், விளைதிறன்மிக்க எழுத்து, பகுப்பாய்வுடன் கூடிய வாசிப்பு, பிரச்சினை தீர்ப்பதற்காக ஆராய்ச்சி மேற்கொள்ளல் மற்றும் மாணவர் பெறும் தொடர்புடைய சகல பாடசாலை அனுபவங்கள் யாவும் கலைத்திட்டமாகும்."- (D. F. Brown, 2006)

"கலைத்திட்டம் என்பது தொடர்ச்சியானதொரு திட்டமிட்ட போதனையாகும். இவை மாணவர்களால் குறிப்பான அறிவையும் திறனையும் அடைவை விளைவாகக் கொண்டு பெறப்படும் வகையில் வடிவமைக்கும் விதத்தில் இயைபுபடுத்தப்படுகிறது மற்றும் தெளிவுற இணைக்கப்படுகிறது. மற்றும் அறிவைப் பிரயோகித்தலுமாகும்."
(Pennsylvania Department of Education, 2007)

பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடு 1.1:

மேலே தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களுள் இலங்கையின் தேசிய பாடசாலைத் திட்டத்திற்குப் பொருத்தமான வரைவிலக்கணத்தை நியாயப்படுத்துக.

பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடு 1.2:

தெரிவுசெய்த வரைவிலக்கணத்தின் குறைபாடுளை இனங்காண்க. (பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடு 1.1) இலங்கை பாடசாடைலக் கலைத்திட்டத்துக்கு மிகவும் பொருத்தமான முறையில் அதனை மீட்டுப் பார்க்க.

பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடு 1.3:

இணையம் மற்றும் ஏனைய உசாத்துணைச் சாதனங்களைப் பயன்படுத்தி கலைத்திட்டம் பற்றிய வரைவிலக்கணங்கள் 3 எழுதுக. இம்மூன்று வரைவிலக்கணங்களை எழுதுவதற்கு உசாவிய சாதனங்கள் தொடர்பான இணையத்தளம் மற்றும் அவை பற்றிய சரியான குறிப்புகளைத் தருக.

பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடு 1.4:

1.1 தொடக்கம் 1.3 வரையான செயற்பாடுகளைப் பயன்படுத்தி கலைத்திட்டத்திற்கான உங்களது வரைவிலக்கணத்தை அமைக்குக.

2. வகுப்பறை மட்டம் வரையில் கலைத்திட்டம் பற்றிய விளக்கம்.

ஆரம்பத்தில் லத்தின்மொழியில் கலைத்திட்டம் என்ற சொல் "கற்கை நெறியை நடத்துதல்" என்னும் பொருள்பட வரைசெய்யப்பட்டிருந்தது. முறைசார் கலைத்திட்டம் என்பது அரசினால் உத்தியோக பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டிருக்கும். கலைத்திட்டத்தில் பலவகை உண்டு. அவையாவன:

அ. விதந்துரைக்கப்பட்ட கலைத்திட்டம்
ஆ. எழுதப்பட்ட கலைத்திட்டம்
இ. கலைத்திட்டம்
ஈ. கற்பிக்கப்படும் கலைத்திட்டம்
உ. பரீட்சிக்கப்பட்ட கலைத்திட்டம்
ஊ. கற்ற கலைத்திட்டம்.

அ. விதந்துரைக்கப்பட்ட கலைத்திட்டம்

விதந்துரைக்கப்பட்ட கலைத்திட்டம் என்பது பொதுவாக அரசினால் அல்லது அரசுக்குப் பொறுப்புக்கூறும் அதிகாரசபையினால் விதந்துரைக்கப்பட்ட கலைத்திட்டம் ஆகும். கலைத்திட்டத்தை ஆயத்தஞ்செய்வதில் அரசானது தேசிய இலக்குகள் மற்றும் தேசிய தேர்ச்சிகளைப் பயன்படுத்தும். அரசானது கல்வியின் தராதரம் உயர்த்தப்படுவதனை எதிர்பார்ப்பதுடன் தராதரங்கள் முக்கியமாக தேசிய மட்டத்தில் தேசிய ஒருமைப்பாட்டினை உறுதிசெய்யும் விதத்தில் பயன்படுத்தப்படுகிறது. இது பொதுவாக, மாணவர்கள் எவற்றைக் கற்க வேண்டும். ஆசிரியர்கள் எவற்றினைக் கற்பித்தல் வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்தும் வகையில் கல்விசார் தராதரங்கள் பயன்படுத்தப்படும். அரசினால் விதந்துரைக்கப்பட்ட கலைத்திட்டமானது கலைத்திட்டத்தை அபிவிருத்தி செய்வோரும்

ஆசிரியரும் தமது போதனை நிகழ்ச்சித்திட்டங்களை அபிவிருத்தி செய்தல் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ள உதவும்.

பல நாடுகளிலே, மையக் கலைத்திட்டத்திற்கு மேலதிகமான விதந்துரைகளில் கலைத்திட்டப் பன்முகப்படுத்தலில் கவனங் குவிக்கப்படுகிறது. அதனைத் தேசியமட்டத்தில் அல்லது பாடசாலை மட்டத்தில் அங்கீகரித்தல் வேண்டும். அத்தகைய நெகிழ்ச்சித்தன்மை, பல்வகைப்பட்ட மாணவர் தொகையின் பல்வேறு கற்றல் தேவைகளை நிறைவு செய்வதோடு பன்மைச்சமுதாயத்திலுள்ள பிள்ளைகள், சமூகங்கள் எதிர்நோக்கும் முக்கிய விடயங்களுக்குப் பொறுப்பாகவுமுள்ளது.

அட்டவணை 1.1.

விதந்துரைக்கப்பட்ட கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துபவர் என்ற வகையில் பாடசாலை அதிபரின் பொறுப்புகள்

விதந்துரைக்கப்பட்ட கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் அதிபர்களின் தலைமைத்துப் பொறுப்புகள்.	
பொறுப்புகள்	அதிபர் எந்தளவுக்கு.....
தேசிய இலக்குகள்	கலைத்திட்டத்திணை ஒன்றிணைப்பதற்கு ஆசிரியருக்கு உதவுகிறார்
தேசிய தேர்ச்சிகள்	கற்பித்தலின் போதும் கணிப்பீட்டிலும் மாணவர்களுக்குத் தேவையான தேர்ச்சிகளை அவதானித்தலும் நெறிப்படுத்துதலும்.
கலாசாரம்	ஒரு தொகுதித் தராதரங்கள், நடைமுறை ஒழுங்குகள் மற்றும் வழமையான நடைமுறைகளை உருவாக்குதல்.
குவிமையம்	தெளிவான இலக்குகளை உருவாக்குவதுடன், அத்தகைய இலக்குகளைப் பாடசாலைகளின் கவனத்தில் முன்னிலைக்குக் கொண்டு வருதல்.

பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடு 1.5:

அட்டவனை 1.1 வாசித்து மேலும் இரண்டு பொறுப்புகளை நிரப்புக. அத்தகை பொறுப்புகளை நிறைவேற்றுவதில் அதிபர் விதந்துரைக்கப்பட்ட கலைத்திட்டத்தை உங்கள் பாடசாலை அல்லது வலய அலுவகத்தில் நடைமுறைப்படுத்தும்போது எந்தளவுக்கு தமது தலைமைத்துவத்தை வெளிப்படுத்த வேண்டும் எனக் கூறுக.

ஆ. எழுதப்பட்ட கலைத்திட்டம்

எழுதப்பட்ட கலைத்திட்டமானது, முறைமையின் கல்விசார் இலக்குகள் நிறைவு செய்யப்படுகின்றன என்பதை உறுதிசெய்யும் நோக்குடையது. இது கலைத்திட்டத்தைக் கட்டுப்படுத்தும். எழுதப்பட்ட கலைத்திட்டம் விதந்துரைக்கப்பட்ட கலைத்திட்டம் நிறைவேற்றப்பட வேண்டிய பொது இலக்குகள், பாண்டித்தியமடைய வேண்டிய குறிப்பான குறிக்கோள்கள், அத்தகைய குறிக்கோள்களைக் கற்றுக்கொள்ளும் வரிசைக் கிரமம், பயன்படுத்த வேண்டிய கற்றல் செயற்பாட்டின் வகை ஆகிய விடயங்களில் குறிப்பானதாகவும் விரிவானதாகவும் இருக்கும்.

எழுதப்பட்ட கலைத்திட்டத்தின் பிரதான தொழிற்பாடு இடைநின்று பரிந்துரைத்தல், தராதரப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் ஆகியனவாகும். இவை விதந்துரைக்கப்பட்ட கலைத்திட்டதுக்கும் வகுப்பறை யதார்த்த நிலைக்குமிடையில் இடைநின்று செயற்படும். பரந்தமுறையில் எவற்றைக் கற்பிக்க வேண்டும், எவற்றைக் கற்பிக்கலாமென ஆசிரியர் நம்புகின்றனர் ஆகியவற்றுக்கிடையில் நிகழும் சமரசமாகும். அவை கொள்கை வகுப்பாளரின் எதிர்பார்ப்புகளுக்கும் ஆசிரியரின் விருப்பங்களுக்கும் இடையில் நடுவராயிருந்து செயற்படுகிறது.

எழுதப்பட்ட கலைத்திட்டமானது கலைத்திட்டத்தைத் தராதரப்படுத்துவதில் தேசியரீதியில் நடைமுறைப்படுத்தப்படும் கலைத்திட்டத்தில் முக்கியமான வகிபாகத்தை ஏற்கிறது. பாடசாலைகள் ஒரே விதத்தில் வினையாற் றுவதற்கான வாய்ப்புகளை வழங்குகிறது. கலைத்திட்டத்தை தரப்படுத்துதலும் மத்தியமயப்படுத்துவதும், எது கற்பிக்கப்படுகிறது என்பதைக் கட்டுப்படுத்தும் முகாமைத்துவக் கருவியாகப் பயன்படுத்தப்படுகிறது. எழுத்துமூலக் கலைத்திட்டத்துடன் பாடசாலையின் தலைவர். எழுத்துமூலக் கலைத் திட்டமானது மாணவரின் அடைவுகளை மேம்படுத்துவதை உறுதி செய்வதை செயலூக்கத்துடன் கண்காணிக்கலாம் என்பதை உறுதிப்படுத்தும் முகமாக விநியோகிக்கப்படுகிறது.

அட்டவணை 1.2

எழுத்துமூலக் கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொழுது பாடசாலையின் தலைவர் என்றவகையில் அதிபரின் பொறுப்புகள்.

கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் அதிபர்களுடைய தலைமைத்துவப் பொறுப்புகள்.	
பொறுப்புகள்	அதிபர் எந்தளவுக்கு.....
கலைத்திட்டம் பற்றிய அறிவு	பாடசாலையில் அறிவுரை வழங்குவதற்கும் மேற்பார்வைக்கும் கலைத்திட்டம் பயன்படுகிறது என்னும் அறிவுடையவராதல்
பாடத்திட்டங்கள்	சாதனங்களை வழங்குதல், அவற்றின் பயன்பாடுபற்றி பணியணியினருக்குக் கூறுதல் மற்றும் அறிவுரைகளை வழங்குதல்
ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகள்	ஆசிரியர் அறிவுரைப்புக் கைந்நூல்களுக்கான குறிப்புகளை (TiM) வழங்குவார். பொருத்தமான ஆட்களை வெவ்வேறு பாடங்களுக்கு ஏற்பப் பயன்படுத்தி பணியணியினருக்கு விளக்குவார்.
உதவும் சாதனங்களும் கற்பித்தல் சாதனங்களும்	உதவுசாதனங்களை வழங்கக்கூடிய நிலையில் இருப்பதும் குறிப்புகளின் அடிப்படையில் கற்பித்தல் சாதனங்களைத் தயாரிக்க உதவுதலும்
நடுவராயிருத்தல்	விதந்துரைக்கப்பட்ட கலைத்திட்டத்திற்கும் எழுத்துமூலக் கலைத்திட்டத்திற்கும் இடையில் நடுவராயிருத்தல்
தரப்படுத்தல்	அதே பாடத்தை அதே தரத்தில் கற்பிக்கும்போது அதே தரத்தைப் பேணுதல்
கட்டுப்படுத்தல்	கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதிலுள்ள முன்னேற்றங்களை வகுபுகளிடையில் அடையும் வகையில் கற்பித்தலைக் கட்டுப்படுத்தல்

பரிந்துரைக்கப்பட்ட 1.6:

மேலும் இரண்டு தொடர்புகளைச் சேர்த்து அட்டவணை 1.2 ஐப் பூரணப்படுத்துவதுடன் எழுத்துமூல கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் ஓர் அதிபர் தமது பொறுப்புகளை நிறைவேற்றும் பொருட்டு தலைமைத்துவத்தை எந்தளவுக்கு வெளிப்படுத்த வேண்டும்.

கட்டுப்படுத்துதலும் கண்காணித்தலும் ஆசிரியர் கண்டதுபோல இடையீடாக இருப்பதனால், ஆசிரியர்கள் போதனைச் செயல்முறையில் சுதந்திரத்தை விரும்புவதால் அதனைப் பயனுள்ளதாகக் கருதப்படுவதில்லை. விதந்துரைக்கப்பட்ட கலைத்திட்டம் மற்றும் எழுத்துமூலக் கலைத்திட்டங்களின் இணைப்பும் உளளு;ர் நடைமுறைகளும் சிறந்தவையாகக் கருதப்படுகின்றன. கல்விமுறைமையில் பயன்படுத்தப்படும் பல கலைத்திட்டங்களில் இத்தகைய கலப்பு இல்லை. சில கலைத்திட்டங்களில் கூறப்படும் குறிக்கோள்கள் எடுத்துக்கூறப்பட்ட இலக்குகளுடன் தொடர்புடையனவாக இருப்பதில்லை

போதனைச் செயற்பாடுகள் குறிக்கோள்களுடன் நேரடியாகத் தொடர்புபடுவதில்லை. செயற்பாடுகள் கற்றல் கற்பித்தல் பற்றிய சமகால அறிவினைப் பிரதிபலிப்பதில்லை என்பதுடன் வழிகாட்டிகளும் பயன்பாட்டில் எளிதில் கையாள முடியாத மற்றும் கடினமானவையாக உள்ளன.

இ. ஆதரவளிக்கப்பட்ட கலைத்திட்டம்

ஆதரவளிக்கப்பட்ட கலைத்திட்டம் என்பது, கலைத்திட்டத்தை வழங்குவதற்கும் அதற்கு உதவவும் ஒதுக்கீடு செய்யப்பட்ட வளங்களின் மூலம் பிரதிபலிக்கப்படுவதும் வடிவமைக்கப்பட்டதுமாகும்.

முக்கியமான வளங்கள சில் கீழே தரப்பட்டுள்ளன:

- பாடசாலைக் காலத்தில் குறிப்பிட்டதொரு தரத்தில் குறிப்பிட்ட பாடத்திற்கு ஒதுக்கப்பட்ட நேரம்
- கலத்திட்டத்தின் குறிப்பான விடயங்களுக்கான முழுமையான பாட ஒதுக்கீட்டுக்குள் ஆசிரியரால் ஒதுக்கப்பட்ட நேரம்
- ஆசிரியர் அறிவுரைப்புக் கைந்நூல்
- கற்பித்தலுக்கான மேலதிக கற்பித்தல் கற்றல் சாதனங்கள்
- கற்பித்தலுக்கும் அவற்றின் கிடைக்கக்கூடிய தன்மைக்குமான உயர் ஒழுங்கிலான இடைவெளி
- மாணவர் பாடநூல்

வகுப்பாசிரியர் முக்கியமான வகிபாகத்தை ஏற்கிறார். அதிபர்களும் அதிகாரிகளும் ஆசிரியர்களின் சுதந்திரத்தை மட்டுபடுத்த முற்படுகின்ற போதிலும் அநேகமான ஆசிரியர்கள் குறிப்பிட்ட பாடத்துக்கு எவ்வளவு நேரம் ஒதுக்கப்படுதல் வேண்டும் என்பதில் தமது செல்வாக்கினைப் பயன்படுத்த முற்படுகின்றார்கள்.

அட்டவணை 1.3.

ஆதரவளிக்கப்பட்ட கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் பாடசாலையின் தலைவர் என்ற வகையில் அதிபருக்குள்ள பொறுப்புகள்.

கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் அதிபர்களின் தலைமைத்துவப் பொறுப்புகள்	
பொறுப்புகள்	**ஓர் அதிபர் எந்தளவுக்கு**
வருடாந்த நாட்காட்டி	வருடாந்தப் பாடத்திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்குக் கற்பித்தலுக்கான வருடாந்தத் திட்டத்தை ஆயத்தஞ் செய்தற்கு ஆசிரியருக்கு வழிகாட்டுகிறார்
பாடவேளைகளை ஒதுக்குதல்	தேசிய விதிமுறைகளுக்குட்பட்டுப் பாடவேளைகளை ஒதுக்குதல்
ஆசிரியர் நேரசூசிகை	ஆசிரியர்கள் நன்கு வடிவமைக்கப்பட்ட கற்பித்தல் செயல்முறைகளை முன்னெடுப்பதற்காக வழங்குதல்
பாட ஆயத்தம்	ஆசிரியர்களுக்கு உதவுதல் வழிகாட்டலை வழங்குதல் ஆகிய

	பொறுப்பை பிரதி அதிபர்களுக்கு அல்லது பகுதித் தலைவர்களுக்கு ஒப்படைத்தல்
கற்பித்தல் சாதனங்கள்	கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான வளங்களை விநியோகித்தல்
உயர் ஒழுங்கிலான இடைவெளிகள்	கற்பித்தலுக்கு வழங்கப்படுகின்ற நேரத்தில் வசதிகளை உயர்மட்டத்தில் பயன்படுத்தக்கூடியவாறு ஆசிரியர்களிடம் சமமாகப் பகிர்தல்.

பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடு 1.7:

அட்டவணை 1.3 இனை மேலும் இரண்டு பொறுப்புகளைச் சேர்த்துப் பூரணப்படுத்துக ஆதரவளிக்கப்பட்ட கலைத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு இந்தப் பொறுப்புகளை நிறைவேற்றுவதில் அதிபர் தமது தலைமைத்துவத்தை வெளிப்படுத்த வேண்டும் எனவும் கூறுக.

ஈ. கற்பிக்கப்படும் கலைத்திட்டம்

எழுத்துமூலக் கலைத்திட்டத்திற்கும் கற்பிக்கப்படும் கலைத்திட்டத்திற்கும் இடையில் ஏற்படுத்தப்படும் விட்டுக்கொடுப்புகள் கணிசமான அளவுக்கு வேறுபடுகின்றன. பாடசாலைகளிலே தராதரமுள்ள அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களிடத்தில் இரண்டு கலைத்திட்டங்களும் ஒருநிலைப்படுத்தப் படுகின்றன. அதேவேளையில், இவ்வாறு செய்யாத பாடசாலைகளும் உண்டு. எழுத்துமூலக் கலைத்திட்டத்துடன் இணைந்து செல்லாத பகுதிகளையும் ஆசிரியர் சிலர் விட்டுவிடுகின்றனர் அல்லது சேர்த்துக் கொள்கின்றனர்.

கற்பிக்கப்படும் கலைத்திட்டம் என்பது விநியோகிக்கப்பட்ட கலைத்திட்டமாகும். அச்சந்தர்ப்பத்தில் ஆசிரியர் கற்பிக்கும் நேரத்தில் ஓர் அவதானி ஆசிரியரைப் பார்க்கிறார். கற்பிக்கப்படும் கலைத்திட்டமானது ஆசிரியரின் சிந்தனை, திட்டமிடல் மற்றும் தீர்மானம் மேற்கொள்ளலைப் பொறுத்து எழுத்துமூலக் கலைத்திட்டத்திலிருந்து வேறுபடும். எனவே எழுத்துமூல கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் பற்றிய ஆசிரியர்களுடைய தீர்மானமானது வகுப்பறையிலும் மாணவர் மத்தியிலும் நிலவும் தன்மைகளுக்குரிய தீர்ப்புகளுக்கேற்ப வேறுபடும்.

அட்டவணை 1.4.

கற்பிக்கப்பட்ட கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் பாடசாலையின் தலைவர் என்ற வகையில் அதிபருக்குள்ள பொறுப்புகள்.

கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் அதிபரின் தலைமைத்துவப் பொறுப்புகள்	
பொறுப்புகள்	**எந்தளவுக்கு. . . அதிபர். . .**
பாடக்குறிப்புகள்	அல்லது பிரதிஅதிபர் அல்லது பிரிவுத் தலைவர் பாடங்களுக்கான பாடக்குறிப்புகளைத் தயாரிப்பதற்கு ஆசிரியருக்கு வழிகாட்டுகிறார்.

கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் அதிபரின் தலைமைத்துவப் பொறுப்புகள்	
பொறுப்புகள்	எந்தளவுக்கு. . . அதிபர். . .
செயற்பாடுகளைப் பயன்படுத்துதல்	அல்லது பிரதி அதிபர் எழுதப்பட்ட கலைத்திட்டத்தில் செயற்பாடுகளைப் பயன்படுத்த ஊக்கமளிக்கிறார்.
அவதானிப்பு அட்டவணை	அல்லது அதிபரால் நியமிக்கப்பட்ட ஒருவர் அட்டவணையின்படி ஆசிரியரை அவதானிக்கிறார் மற்றும் பின்னூட்டலை வழங்குகிறார்.
சகபாடி அவதானம்	ஒழுங்குகளை மேற்கொள்வதுடன், சகபாடி அவதானம் மற்றும் பின்னூட்டலின் சிறப்புகளைப் பணியணி யினருக்குக் கூறுகிறார்.
தராதர அபிவிருத்திக்கான பின்னூட்டல்	பின்னூட்டலுக்காக அவதானிப்பு அட்டவணையைப் போதனையின் தராதரத்தை அடைவதற்காகப் பயன்படுத்தியுள்ளார்.

பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடு 1.8:

அட்டவணை 1.4 இனை மேலும் இரண்டு பொறுப்புகளைச் சேர்த்துப் பூரணப்படுத்துக. ஓர் அதிபர் கற்பிக்கப்பட்ட கலைத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதிலுள்ள பொறுப்புகளை நிறைவேற்றுவதில் தமது தலைமைத்துவத்தை எந்தளவுக்கு வெளிப்படுத்த வேண்டும்.

உ. பரீட்சிக்கப்பட்ட கலைத்திட்டம்

பரீட்சிக்கப்பட்ட கலைத்திட்டம் என்பது கற்கின்ற பகுதிகளை வகுப்பறையில் பாடசாலை மட்டக் கணிப்பீடு, தவணை இறுதி, வருட இறுதிச் சோதனைகள் ஆகியவற்றின் மூலம் பாடசாலைகளால் நடத்தப்படுபவை மற்றும் கூட்டுச் சோதனையாக நடத்தப்படும் தேசிய சோதனைகளாகும். கற்பிக்கப்பட்ட கலைத்திட்டம் எந்தளவுக்கு பலவகையான சோதனைகளுடன் ஒத்துசெல்கின்றன, வகுப்பறை நடத்தப்படும் பாடசாலை மட்டக் கணிப்பீடுகள் கற்பிக்கப்பட்ட கலைத்திட்டத்திற்குப் பொருந்துவதாகவும் அறிகை மற்றும் அறிகைசாரா திறன்களும் பரீட்சிக்கப்படுகின்றன.

தேசியமடடத்திலான கூட்டுச் சோதனைகள் முக்கியமாக அறிவுசார் விடயங்களைப் பயன்படுத்தி அமைக்கப்படுவதுடன் ஞாபகப்படுத்தல், கிரகித்தல், பிரயோகம், பகுப்பு, தொகுப்பு, மதிப்பீடு மற்றும் புத்தாக்கம் ஆகிய நிலைமைகளுக்கேற்ப வேறுபடலாம். கற்பித்தலும் சோதிப்பும் பொருந்தாத வேளையில் மாணவர்கள் பின்தங்கிய நிலைக்குத் தள்ளப்படுவதுடன், பெற்ற புள்ளிகள் அவர்கள் கற்ற விடயங்களுக்கான அளவீடாகவும் இருப்பதில்லை.

மறுபுறத்தில், பாடசாலை மட்டக் கணிப்பீடானது ஆசிரியரின் கற்பித்தலிலுள்ள குறைபாடுகள் பற்றிய அறிவினை வழங்குவதோடு, கற்பிக்கப்பட்ட விடயத்தில் மாணவர் புரிந்துணர்வையும் குறிப்பிடுகிறது.

அட்டவணை 1.5.

பரீட்சிக்கப்பட்ட கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் பாடசாலையின் தலைவர் என்ற வகையில் அதிபருடைய பொறுப்புகள்

கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் அதிபரின் தலைமைத்துவப் பொறுப்புகள்	
பொறுப்புகள்	எந்தளவுக்கு அதிபர்.....
மாணவர் பற்றிய ஒழுங்கான பாடசாலை மட்டக் கணிப்பீடு	வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கு ஏற்ப வகுப்பறையில் அர்த்தமுள்ள கணிப்பீடுகளை நடைமுறைப்படுத்த உதவி வழங்குகிறார்
அதிகாரிகளால் அனுப்பப்பட்ட கணிபீட்டு நியதிகளை வழங்குதல்	கணிப்பீடு பற்றிய சுற்றறிக்கைகள் மற்றும் ஏனைய போதனைச் சாதனங்களின் உள்ளடக்கங்களை ஆசிரியருக்குச் சரியான விளக்கத்துக்காக வழங்குதலும் எடுத்துக் கூறுதலும்
வழிமுறைகளைப் பயன்படுத்துதல்	உள-இயக்கம் மற்றும் மனவெழுச்சி ஆட்சிகளிலிருந்து வரும் வழிமுறைகளை மேம்படுத்துதல்
வளங்கள்	வகுப்பறையில் கணிப்பீடுகளை திருப்திகரமாக நடத்துவதற்கு வளங்களை வழங்குதல்
கணிப்பீடுகளைப் பதிதல்	கணிப்பீடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன மற்றும் மாணவர் முன்னேற்றம் கண்காணிக்கப்பட்டுள்ளது என்பதை உறுதி செய்தல்
தவணைச் சோதனைகள் வருட இறுதிச் சோதனைகள்	அந்தந்த பாடவேளைகளில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய உள்ளடக்கங்களுடன் எவ்வெப் பாடவேளைகளில் போதனைகள் நடத்தப்படுதல் வேண்டும் என்பதைத் திட்டமிடுதலும் அறிவித்தலும்

பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடு 1.9:

அட்டவணை 1.5 இனை மேலும் இரண்டு பொறுப்புகளைச் சேர்த்துப் பூரணப்படுத்துக. பரீட்சிக்கப்பட்ட கலைத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதிலுள்ள பொறுப்புகளை நிறைவுசெய்வதில் அதிபர் தமது தலைமைத்துவத்தை எந்தளவுக்கு வெளிப்படுத்த வேண்டும்.

ஊ. கற்ற கலைத்திட்டம்

நான்கு கலைத்திட்டங்கள் முறையே: எழுதப்பட்ட, உதவப்பட்ட, கற்பிக்கப்பட்ட மற்றும் பரீட்சிக்கப்பட்ட கலைத்திட்டங்கள் மாணவரின் கற்றலை அடைய உதவுகின்றன. இவ்வாறான பாடசாலை அனுபவங்கள் பெறுமானங்கள், புலக்காட்சிகள் மற்றும் நடத்தைகளில் ஏற்படும் மாற்றங்களை குறிக்கும் வகையில் கற்றவை எவையென எடுத்துக்காட்டும். இவை பாடசாலை அனுபவங்களிலும் புலப்படும். எண்ணிய கலைத்திட்டத்திலிருந்து மாணவர் எதனை விளங்குகிறார், கற்கிறார் மற்றும் நிலைநிறுத்துகிறார் என விளங்குவதையும் உள்ளடக்கும். மாணவர்கள் கற்பவை மாணவர், ஆசிரியர் மற்றும் கலைத்திட்டத்திற்கேற்ப வேறுபடும். ஆயினும் கணிப்பீடும்

மதிப்பீடும், மாணவர் தமது வெற்றியைக் காண்பிப்பதற்கு முக்கியானது என்பதால், தாம் வகைசொல்ல வேண்டிய விடயங்களில் உணர்வுபூர்வமானதாக இருப்பர்.

அட்டவணை 1.6.

கற்ற கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் பாடசாலையின் தலைவர் என்றவகையில் அதிபரின் பொறுப்புகள்.

கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் அதிபர்களின் தலைமைத்துவப் பொறுப்புகள்	
பொறுப்புகள்	**எந்தளவுக்கு அதிபர்**
நேரசூசிகை	மாணவருக்குப் பொருந்தும் வகையில் நேரசூசிகையை ஒழுங்குப்படுத்துதல் மூலம் பாடசாலையில் கற்றலை அதிகரிப்பார்
தராதரமுள்ள ஆசிரியர்கள்	தரமான கற்றல் அனுபவங்களை வழங்குவதற்கு தராதரமுள்ள ஆசிரியர்களைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்வார்
மேற்பார்வை	தரமான கற்பித்தலுக்காக ஆசிரியரின் கற்பித்தல் கற்றலை பாடசாலையில் மேற்பார்வை செய்வதற்கான திட்டத்தை ஆயத்தஞ் செய்தல்
கணிப்பீடுகள்	மாணவர் தேர்ச்சி மட்டத்தைக் கணிப்பிடுவதற்கும் தேவையான அளவு கணிப்பீடுகளைச் செய்வதற்கும் வழிகாட்டல்களை வழங்குவார்.
தவணைச்சோதனையும் வருட இறுதி சோதனையும்	மாணவரின் கற்றல் முன்னெடுப்புகளைக் கணிப்பிடுவதற்குச் சோதனைகளை ஒழுங்கு செய்தலும் நடத்துதலும்.

பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடு 1.10:

அட்டவணை 1.6 இனை மேலும் இரண்டு பொறுப்புகளைச் சேர்த்துப் பூரணப்படுத்துக. கற்றுக்கொண்ட கலைத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதிலுள்ள பொறுப்புகளை நிறைவுசெய்வதில் அதிபர் தமது தலைமைத்துவத்தை எந்தளவுக்கு வெளிப்படுத்த வேண்டும்.

நிகழ்ச்சித் திட்டமொன்றின் மூலக்கூறுகள்

ஒரு பாடத்தொகுதியிலுள்ள கலைத்திட்டக் கூறுகளில் பல தனிவேறான அம்சங்களை இனங்காணலாம்: அவை பின்வருமாறு:

சுருக்கமான பகுப்பாய்வு கீழே தரப்பட்டுள்ளது.

அ. கலைத்திட்டக் கொள்கைகள்

கல்விச் சீர்த்திருத்தங்கள் வட்ட அடிப்படையில் நடைமுறைப்படுத்தப் படுகின்றன. ஏனெனில் எந்தவொரு சீர்திருத்தமும் நீடித்திருக்கப் போவதில்லை. சில நாடுகளிலே திட்டவட்டமான சீர்திருத்த வட்டங்கள் திட்டவட்டமான காலப்பகுதியுடன் கூடியவையாக உள்ளன. கலைத்திட்டக் கொள்கைகள் ஒரு தொகுதி விதிகளுடன் கூடியவை. நியதிகளைக் கொண்டவை. கலைத்திட்ட அபிவிருத்தி மற்றும் நடைமுறைப் படுத்தல்களைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் வழிகாட்டல் குறிப்புகளையும் கொண்டிருக்கும். இத்தகைய

கொள்கைகள் கல்வி முறைமைக்கான முழுக் கற்கைநெறிக்குமான பெரும்பாகக் கொள்கைகளாகவோ அல்லது ஒரு பாடத்தின் அலகுக்கான நுண்பாகக் கொள்கைகளாகவோ இருக்கலாம்.

ஆ. கலைத்திட்ட இலக்குகள்

கலைத்திட்ட இலக்குகள் எனப்படுபவை பொதுவான நீண்டகால கல்விசார் விளைவுகளாகும். இவை கலைத்திட்டத்தினூடாகப் பாடசாலை முறைமை அடைந்துகொள்ள எதிர்பார்ப்பவையாகும். இலக்குகள் குறிக்கோள்களிலும் பார்க்கப் பொதுப்படையாகக் கூறப்படுபவை. இலக்குகள் நீண்ட காலத்துக்குரியவை. அவை குறுங்கால விளைவுகள் அல்ல. கலைத்திட்ட இலக்குகள், பாடசாலை முறைமை அதன் கலைத்திட்டத்தினூடாக அடைந்துக்கொள்ள விரும்பும் விளைவுகளாகும். கலைத்திட்ட இலக்குகளிலிருந்து கல்விசார் இலக்குகளைக் கவனத்தில் கொள்வது முக்கியமானது. கல்விசார் இலக்குகள் நீண்டகால விளைவுகளாகும். பாடசாலை முறைமையில் முழுக் கல்விச் செயற்பாடுகள் ஊடாகப் பாடசாலைகள் நிறைவேற்ற எதிர்பார்க்கின்றன. இது கட்டுப்பாடுடன் கூடியதாக இருப்பதுடன் மாணவர் விருத்தி செய்ய வேண்டுமென நம்புகின்ற திறன்களின் வகைகளையும் கருதும் கலைத்திட்டக் கொள்கைகள் விதிகளை உருவாக்குகின்றன. இலக்குகள் அடைய வேண்டியவற்றை நிருணயிக்கின்றன.

இ. கள ஆய்வு

கள ஆய்வு என்பது ஒழுங்குபடுத்தப்பட்ட மற்றும் தெளிவாக வரையறுக்கப்பட்ட கற்றல் அனுவங்களின் தொகுதியாகும். இது பல வருடங்களுக்குத் தொடர்ந்து வழங்கப்படுகிறது. அவை கணிதம் விஞ்ஞானம் போன்ற படசாலைப் பாடங்கள் போன்றவை.

ஈ. நிகழ்ச்சித்திட்ட ஆய்வு

ஆய்வுப் பற்றிய நிகழ்ச்சித்திட்டம் என்பது, ஒரு குறிப்பிட்ட கற்கும் குழுவினருக்கு பாடசாலையால் வழங்கப்படும் கற்றல், அனுபவங்களின் தொகுதியாகும். இவை பொதுவாகப் பல ஆண்டு காலத்துக்கான பல ஆய்வுத்துறைகளைக் கொண்டிருக்கும்.

உ. கற்கை நெறி

கற்கைநெறியானது ஆய்வின் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் கற்கைத் துறைகள் இரண்டினதும் உபதொகுதியாகும். கற்கைத்துறையில் இடம்பெறும் ஒழுங்கமைக்கப்பட்ட கற்றல் அனுபவங்களின் தொகுதியாகவும் இது அமையும். வரையறுக்கப்பட்ட காலப்பகுதியில் (ஒருவருடம், ஒரு பருவம்) வழங்கப்படுவதுடன், இவற்றுக்கான கல்விசார் மதிப்பினை (Credit) மாணவர்கள் பெற்றுக்கொள்வர். கற்கைநெறி என்பது வழக்கமாக ஒரு தலைப்பாக, மற்றும் தரமட்டத்தில் அல்லது எண்சார்ந்த முறையில் குறிப்பிடப்படும், உதாரணம் தரம் 12 இரசாயனவியல், தரம் 13 பொருளாதாரம் அல்லது பாடசாலைத்

தலைமைத்துவ நிகழ்ச்சித் திட்டத்தில் SL201 – பாடசாலை முன்னேற்றத்துக்கும் மாற்றத்துக்கும் இட்டுச்செல்லல்.

ஊ. கற்கை அலகுகள்

கற்கை அலகுகள் கற்கை நெறியின் உபதொகுதியாகும். இது கற்கைநெறியின் பகுதியாக வழங்கப்படும் ஒழுங்கமைக்கப்பட்ட தொடர்புடைய கற்றல் அனுபவங்களின் தொகுதியாகும். இது சிறிது காலம் – சில நாட்கள் அல்லது வாரங்களே நீடிக்கும். ஆசிரியர்கள் அலகொன்றுக்கு ஆயத்தஞ் செய்வதில்லை. ஆனால் பாடம் பாடமாக ஆயத்தங்களை உள்வாங்குவதுடன் பாடங்களின் வரிசைநிலை சில ஆசிரியர்களின் கற்பித்தலுக்கான ஆயத்தங்களில் ஒரு அலகாக உருவாகும்.

எ. பாடங்கள்

பாடம் என்பது கற்றல் அனுபவங்களின் ஒரு தொகுதியாகும். அத்துடன் ஒரு பாடசாலையில் இது 30 தொடக்கம் 60 நிமிடங்கள் நீடிக்கும். ஒரு பாடமானது பொதுவாக சில தொகைக் குறிக்கோள்களில் கவனங் குவிக்கும். பாடம் ஓர் அலகின் பகுதியாகும். ஒரு பாடத்தை ஆயத்தஞ் செய்யும் போது முழு அலகு கவனத்திற் கொள்ளப்படும். இவ்வாறு செய்தல் அலகின் இணையும் இயல்பைப் பேணும்.

பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடு 1.11:

பாடசாலைக் கலைத்திட்டத்தில், இனங்காணப்பட்ட கலைத்திட்டம் பற்றி உதாரணங்கள் தந்து விபரிக்கப்பட்ட பல்வேறு உள்பொருளை இனங்காண்க.

கல்வித் தலைவரின் வகிபாகம்

கல்வித் தலைவரின் முக்கியமான வகிபாகங்களில் ஒன்று, கலைத்திட்ட அறிவை வழங்கும் பகுதிகள் பற்றி ஆசிரியர்களுக்கு விளக்குவதும் வழிகாட்டுதல் கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல், மற்றும் கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு வழிகாட்டுதல் ஆகும். இவை தரமான கற்றல் விளைவுகளை அடைந்துகொள்வதற்குரிய முக்கியமான பொறுப்புகளாகும். கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதிலுள்ள வரிசைநிலை அல்லது கட்டங்கள் விதந்துரைக்கப்பட்ட கலைத்திட்டத்தை மாணவர் கற்ற விடயங்களாக மாற்றுவதுடன் தரமான கற்றல் விளைவுகளைப் பெற்றுக் கொள்வதற்கான திறவுகோலையும் வழங்குகிறது.

'a' உபதலைப்பு 'b' யின் கீழ் தரப்பட்டுள்ள அட்டவணைகளில் 33 பொறுப்புகள் உள்ளன. கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் எந்தளவுக்கு அதிபர் உதவமுடியும். பின்வரும் பயிற்சியானது கல்விசார் தலைவர்கள் தமது பலத்தையும் முன்னேற்ற வேண்டிய பகுதிகளையும் கணிப்பிட உதவுகிறது.

பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடு 1.12:

இந்த மொடியூலின் b பிரிவில் தரப்பட்டுள்ள அட்டவணைகளிலுள்ள 33 பொறுப்புகளையும் ஆராய்க. உங்களால் நிறைவேற்றக்கூடிய 10 பொறுப்புகளை இனங்கண்டு அவை எவ்வாறு செய்யப்பட்டனவென விளக்குக.

பொறுப்புகள்	பொறுப்பு எவ்வாறு நிறைவு செய்யப்பட்டது
1.	
2.	
3.	
4.	
5.	
6.	
7.	
8.	
9.	
10.	

பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடு 1.13:

மொடியூலிலுள்ள பிரிவு b அட்டவணையில் தரப்பட்டுள்ள 33 பொறுப்புகளை ஆராய்க. அவற்றுள் அபிவிருத்தி அவசியமென நீங்கள் கருதும் 5 பொறுப்புகளை இனங்காண்க. அவற்றை நீங்கள் எவ்வாறு மேம்படுத்தலாம் என நினைக்கிறீர்கள்

பொறுப்புகள்	பொறுப்பை மேம்படுத்தும் உபாயம்
1.	
2.	
3.	
4.	
5.	

மொடியூல் 2	தேசிய கலைத்திட்டம்

குறிக்கோள்:



இந்த மொடியூலானது தேசிய பாடசாலைக் கலைத்திட்டம் தொடர்பாகத் தேசிய கல்வி ஆணைக்குழு முன்வைத்த தேசிய இலக்குகள் மற்றும் தேசிய தேர்ச்சிகளை வழங்குகிறது. பாடத்திட்டத்தின் அம்சங்களும் பாடசாலைக் கலைத்திட்டம் பற்றிய ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. இந்த மொடியூலை மாணவர்கள் ஏனைய பல நாடுகளுடன் ஒப்பிட்டு தேடல்களை மேற்கொள்ள வழிகாட்டலாம்.

கற்றல் விளைவுகள்:



மொடியூலைக் கற்று முடிக்கும்போது மாணவர் பின்வரும் ஆற்றலைப் பெறுவர்.

1. தேசிய இலக்குகளையும் தேர்ச்சிகளையும் கற்பித்தலுடன் ஒன்றிணைப்பதோடு பாடசாலையிலுள்ள ஆசிரியர்களுக்கு வழிகாட்டலையும் வழங்குவர்.

2. பாடத்திட்டம் மற்றும் ஆசிரியர் அறிவுரைப்புக் கைந்நூலிலுள்ள விடயங்களை எடுத்துக் காட்டுவதற்கும் அவற்றைப் பயன்படுத்துவர் மற்றும் ஆசரியர்களுக்கு வழிகாட்டுவர்.

3. பாடத்திட்டம் மற்றும் ஏனைய நாடுகளிலுள்ள தேசிய கடைத்திட்டங்களின் விசேட அம்சங்களை இனங்காண்பதுடன் அவற்றைத் தேசிய கலைத்திட்டத்துடன் ஒப்பிட்டு பலங்களையும் நலிவுகளையும் அறிந்துகொள்வர்.

மொடியூல் பற்றிய பொதுநோக்கு:

வாரம்	தலைப்பு/உள்ளடக்கம்	செயல்முறை	மாணவர்களின் கற்றல் பணிகள்
1	1. தேசிய இலக்குகளும் தேசிய தேர்ச்சிகளும் 2. தேசிய கலைத்திட்டம்	அறிமுகம் குழு வேலைகளும் கலந்துரையாடலும்	இலக்குகளையும் தேர்ச்சிகளையும் கற்றல்
2	3. பாடத்திட்டங்களும் ஆசிரியர் அறிவுரைப்புக் கைந்நூல்களும்	பாடத்திட்டங்களையும் ஆசிரியர் அறிவுரைப்புக் கைந்நூல்களையம் வழங்குதல் இணையத்தளங்களில் தேடுதலும் பாடத்திட்டம் மற்றும் ஆசிரியர் போதனைகள், மாணவர் சிறப்புத் தேர்ச்சி பெறும் பாடத்தின் முறையியல்கள் பற்றிய தகவல்களைத் திரட்டுதலும்.	பாடத்திட்டம் மற்றும் ஆசிரிய அறிவுரைப்புக் கைந்நூல்கள் பற்றியும் அதன் தொகுப்பு பற்றியும் குழுக் கலந்துரையாடல் பாடத்திட்டங்களை ஏனைய போதனைச் சாதனங்களும் அவற்றின் அமைப்பு வளங்களின் வகைகளையும் ஒப்பிடுவதுடன் சுருக்கமான அறிக்கையையும் தயாரித்தல்

தேசிய இலக்குகளும் தேசியத் தேர்ச்சிகளும்

1. தேசிய இலக்குகள்

a. தேசிய பிணைப்பு, தேசிய ஒருமைப்பாடு மற்றும் தேசிய ஐக்கியத்தின் ஊடாக தாய்நாட்டின் மீது பற்றும் அர்ப்பணிப்பும் கொண்ட இலங்கை பிரசையை விருத்தி செய்தல்.

b. பொறுமையையும் நல்லிணக்கத்தையும் மேம்படுத்தி இலங்கையின் பன்மைத்துவம் மற்றும் கலாசார பல்வகைமையை ஏற்று மானிட கௌரவத்தை மதித்தல்.

c. மாறும் உலகின் அறைகூவல்களுக்குத் துலங்கும் அதேநேரத்தில் தேசத்தின் மரபுகளின் பெருமைமிகு அம்சங்களை அங்கீகரித்துப் பாதுகாத்தல்.

d. சமூகநீதி மற்றும் சனநாயக வாழ்வியல் சார்ந்த விழுமியங்கள் நிறைந்த ஒரு சூழலை உருவாக்கி அதனைப் பேணுதல்.

e. மானிட விழுமியங்களை மதித்தலும் பேண்தகு அபிவிருத்தியின் அடிப்படையிலான வாழ்க்கைப் பாங்கினை மேம்படுத்துதலும்.

f. தனியாட்களின் உடல், உள மற்றும் மனவெழுச்சி சார்ந்த நலன்களை மேம்படுத்துதல். ஒன்றிணைந்த மற்றும் சமநிலையான ஆளுமைப் பண்புக் கூறுகளை உருவாக்குதலும் பேணுதலும்.

g. பொருளாதார அபிவிருத்திக்கும் பங்களிப்புச் செய்யக்கூடிய தனியாள் மற்றும் தேசத்தின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் பயனுள்ள பணிகளை ஆற்றக்கூடிய மனித வளத்தை விருத்திசெய்தல்.

h. மாற்றங்களுக்கு இணங்கி அவற்றை முகாமை செய்யக்கூடிய வகையிலும் துரித மாற்றங்கள், சிக்கல்கள் மற்றும் எதிர்பாராத சூழ்நிலைகளைச் சமாளிக்கக் கூடிய இயலளவை விருத்தி செய்யக்கூடிய வகையிலும் தனிநபர்களுக்குச் சக்தியூட்டல்.

i. உலக சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறக்கூடிய நவீன அறிவுக்கு உகந்தவாறு சுதந்திரமான உலக நோக்கினை உருவாக்கிப் பேணல்.

2. கல்விசார் இலக்குகள்

இலங்கையின் கல்வி இலக்குகளைப் பின்வருமாறு சுருக்கமாகக் கூறலாம்.

a. நாட்டின் கலாசாரம் மற்றும் சமயம்சார் பாரம்பரியங்களையும் சனநாயக மரபுகளையும் விருத்தி செய்தலும் விளங்கிக் கொள்ளுதலும் மற்றும் தேசிய கலாசாரத்திற்கு வெவ்வேறு இனக்குழுக்களின் பங்களிப்பினை மதித்தலும்.

b. சூழல் பற்றிய அடிப்படை விளக்கத்தையும் வாழ்க்கைக்கும் சமூகத்தின் தேவைக்கும் பொருந்தும் திறன்களையும் விருத்தி செய்தல்.

c. கலை, இலக்கியம் மற்றும் விஞ்ஞானத்தை மதித்தலை உருவாக்குதல்.

d. வெவ்வேறு இனக்குழுக்கள் மத்தியில் இசைவாக்கமுள்ள உறவுக்கு வாய்ப்பான மனப்பாங்கினை விருத்தி செய்தல்.

e. ஒழுக்கம், ஆன்மீகம் மற்றும் உடல்சார் விருத்தியை மேம்படுத்துதல்.

f. தேசிய அபிவிருத்திக்குரிய ஈடுபாட்டுடனான உணர்வைப் பதியவைத்தல்.

g. நாட்டின் மனித சக்தித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் தொழில்நுட்ப அறிவையும் தொழில்த்திறன்களையும் பெற்றுக்கொள்வதற்கான முறைமையொன்றினை விருத்திசெய்தலும் மேம்படுத்துதலும்.

h. முறைசார் மற்றும் முறையில் கல்வி நிகழ்ச்சிததிட்டங்கள் மூலம் வாழ்க்கை நீடித்த கல்வியையும் அறிவையும் புதுப்பித்து மேம்படுத்துதல்.

i. கல்வியைச் சனநாயகப்படுத்துவதை மேம்படுத்துதல்.

3. கல்விசார் குறிக்கோள்கள்

கல்வியின் பொதுக் குறிக்கோள்கள் தேசிய இலக்குகளுடன் நெருக்கமாக இணைந்து செல்ல வேண்டும். கல்வியியின் இலக்குகள் எடுத்துக்கூறிய தேசிய இலக்குகளை அடைய உதவவேண்டும்.

a. கல்வியைச் சனநாயகப்படுத்தலானது கல்வி வாய்ப்புகளில் உலகளாவிய மற்றும் சம வாய்ப்புகளை உறுதி செய்தல்.

b. தேசிய இலக்குகளைக் கல்விசார் இலக்குகளாகவும் குறிக்கோள்களாகவும் மாற்றுதல்

c. ஒவ்வொருவரினதும் ஆற்றலைக் கவனத்திற்கு கொண்ட கல்வி அடைவுக்கான வாய்ப்புகள்.

d. தனியாளின் சகல மற்றும் சமநிலை அபிவிருத்தி

e. சமூக, பொருளாதார, கலாசார, சமய மற்றும் அரசியல் குறிக்கோள்களை நிறைவுசெய்யும் கல்வியை வழங்குதல்

f. குடிசார் உணர்வுகளை விருத்தி செய்தலும் இயற்கைச் சூழல் தொடர்பான ஆழமான மற்றும் ஒத்திசைவான கவனமும்.

4. அடிப்படைத் தேர்ச்சிகள்

2007 ஆம் ஆண்டில் தேசிய கல்வி நிறுவகமானது கனிஷ்ட இடைநிலைக் கல்வி மட்டத்தில் தேர்ச்சியடிப்படைக் கலைத்திட்டத்தை அறிமுகம் செய்தது. இது கல்வியின் தராதரத்தை மேம்படுத்தும் நோக்கில் குறிப்பாக 21ஆம் நூற்றாண்டுக்குத் தேவையான திறன்களை வழங்கும் கல்வித் தேவைகளை நிறைவு செய்யும் நோக்கில் அமைந்தது.

தேசிய கல்வி ஆணைக்குழு (1992) கலைத்திட்டமானது கவனஞ் செலுத்த வேண்டிய பல தேர்ச்சிகளை இனங்கண்டது. தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை (2003) மேலும் அதனை விரிவுபடுத்தி, அத்தகைய இலக்குகளை அடைவதற்குத் தேவையான அத்தியாவசியமான இரண்டு மேலதிக தேர்ச்சிகளை இனங்கண்டுகொண்டது. தற்போதைய கலைத்திட்டம் பின்வரும் தேர்ச்சிகளில் கவனங் குவிக்கிறது.

- **நான்கு உபதொகுதிகளின் அடிப்படையிலான தொடர்பாடல் தேர்ச்சிகள், எழுத்தறிவு, எண்ணறிவு , சித்திரம் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தில் தேர்ச்சி.**
  - எழுத்தறிவு உள்ளடக்குபவை: கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், அர்த்தமுள்ள வாசிப்பு மற்றும் சரியாகவும் விளக்கமாகவும் எழுதுதல்.

- எண்ணறிவு உள்ளடக்குபவை: பொருள் இடம் மற்றும் காலத்திற்கான இலக்கங்களைப் பயன்படுத்துதல், எண்ணுதல், கணித்தல் மற்றும் முறைப்படி அளத்தல்.
- சித்திர அறிவு உள்ளடக்குபவை: கோடு, வடிவம் என்பவற்றை உணர்வுபூர்வமாக்குதல் விபரங்களை விளக்குதலும் பதிவு செய்தலும் கோடு, வடிவம் மற்றும் நிறம் ஆகியவற்றுடன் அறிவுறுத்தல்களையும் கருத்துக்களையும் வழங்குதல்

- **சுற்றாடல் தேர்ச்சிகள்**
  - சமூகச் சூழலோடு தொடர்பு: புரிந்துணர்வு, உணர்வுபூர்வம் மற்றும் திறன்கள் என்பன சமூகத்தின் உறுப்பினருடன் இணைக்கப்படுதல். சமூகஞ்சார் உறவுகள், தனிப்பட்ட ஒழுகலாறு பொதுவான மற்றும் சட்டபூர்வமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புகள் கடமைகளும் கடப்பாடுகளும்:
  - உயிரினச் சூழலுடனான தொடர்பு: புரிந்துணர்வு, உணர்வுபூர்வம் மற்றும் வாழும் உலகுடனான தொடர்பு, மனிதனும் சூழற்தொகுதியும், மலைகள், காடுகள், கடல்கள், நீர், காற்றும் வாழ்வும்.
  - பௌதீகச் சூழலுடனான தொடர்பு: புரிந்துணர்வு, உணர்வுபூர்வம், இடத்துடன் தொடர்புடைய திறன்கள், சக்தி, எரிபொருள், பொருள், சாதனங்கள், மற்றும் அவை மனித வாழ்க்கையுடன் கொண்டுள்ள தொடர்பு. உணவு, உடை, வீடு, சுகாதாரம், வசதி, சுவாசித்தல், தூக்கமும் ஓய்வும், விரயமும் கழிப்பொருட்களும்.

- **சமயம், ஒழுக்கம் தொடர்பான தேர்ச்சிகள்**

  விழுமியங்களையும் மனப்பாங்குகளையும் சேர்த்துக் கொள்ளுதல் தனியாட்களுக்கு அவசியமானது. அதன் காரணமாக, நன்னெறி, ஒழுக்கம், மற்றும் சமயஞ்சார் நடத்தை, சடங்குகள், நாளாந்த வாழ்க்கை நடைமுறைகள், பொருத்தமானவற்றைத் தெரிவுசெய்தல்.

- **விளையாட்டும் ஓய்வுநேரப் பயன்பாடும் தொடர்பான தேர்ச்சிகள்:**

  சந்தோசம், மகிழ்ச்சி, மனவெழுச்சி மற்றும் அதுபோன்ற மனித ஊக்கத்துடன் தொடர்புடைய தேர்ச்சிகள். இவை விளையாட்டு, தடகள விளையாட்டு என்பவற்றில் காணப்படும் என்பதுடன் ஓய்வுநேரமும் பலவகையானது. இவையும் ஒத்துழைப்பு, குழுவாக வேலை செய்தல், வாழ்க்கையிலும் வேலையிலும் ஆரோக்கியமான போட்டி முதலிய விழுமியங்களுடன் தொடர்பு கொண்டவை. அவ்வாறான செயற்பாடுகள் அழகியல், கலை, நாடகம், இலக்கியம், தேடுதல் ஆராய்ச்சி, மற்றும் மனித வாழ்விலுள்ள ஏனைய ஆக்கபூர்வமான வழிமுறைகள்.

- **கற்பதற்குக் கற்றலுடன் தொடர்புடைய தேர்ச்சிகள்**

  இத்தகைய தேர்ச்சிகள் துரிதமாக மாறும், சிக்கலான உலகில் கற்றலுடன் தொடர்பானவை. இங்கு கற்றலுக்குத் தொடர்ச்சியான இற்றைப்படுத்தல் தேவையானது.

- **ஆளுமை விருத்தியுடன் தொடர்புடைய தேர்ச்சிகள்**
  - பொதுத்திறன்களான ஆக்கத்திறன, விரிசிந்தனை, தொடங்குமாற்றல், தீர்மானம் மேற்கொள்ளல், பிரச்சினை தீர்த்தல், திறனாய்வு மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை குழுவாக வேலை, ஆளிடைத் தொடர்புகள், கண்டறிதலும் தேடுதலும்.
  - நேர்மை, சகிப்புத்தன்மை.

- **வேலையுலகுக்கு ஆயத்தஞ்செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்:**

  தொழில் தொடர்பான திறன்கள், அவர்களின் உள்ளார்ந்த ஆற்றலை உயர்நிலைப்படுத்துவதற்கும் அவற்றின் கொள்திறனை உறுதிப்படுத்துவதற்கும்
  - பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்பு
  - அவர்களது தொழில்சார் ஆர்வத்தையும் உளச்சார்பையும் பயன்படுத்துதல்
  - தமது திறன்களுக்கும் ஆற்றலுக்கும் பொருத்தமான தொழிலைத் தெரிவுசெய்தல்.
  - வெகுமதியளிக்கும் நீடித்து நிலவும் வாழ்க்கையில் ஈடுபடுதல்

2006 இலிருந்து, தேசிய கல்வி நிறுவகம் (NIE) பாடசாலைக் கலைத்திட்டத்தில் சீர்திருத்தங்களை மேற்கொண்டது. தேசிய கல்வி ஆணைக்குழுவின் (NEC) விதந்துரைகள் பின்வரும் குறிக்கோள்களுடன் தரம் 6-11 வரையுள்ள தரங்களுக்கான சீர்திருத்தங்களில் கவனத்தில் கொள்ளப்பட்டன.

- செயற்பாட்டு அடிப்படைக் கற்றலை ஊக்குவித்தல்
- அறிவைக் கட்டுருவாக்குவதில் மாணவருக்கு வசதிப்படுத்தல்
- உயர் ஒழுங்கிலான கல்விசார் ஆற்றலையும் திறன்களையும் விருத்திசெய்ய உதவுதல்
- மாணவரின் அபிவிருத்தியில் அறிகைசாரா அம்சங்களை வழங்குதல் .

தேசிய கலைத்திட்டம்

தேசிய கல்வி நிறுவகம் (NIE) தேசிய கல்வி நிறுவகச் சட்ட இலக்கம் 28,1985 இன்படி உருவாக்கப்பட்டது (NIE Act No. 28 of 1985). இது பாடத்திட்டத்தினை ஆயத்தஞ் செய்யும் பொறுப்பைக் கொண்டிருப்பதுடன் கல்வியமைச்சின் நெறிப்படுத்தலின் பேரில் கல்விச்

சாதனங்களையும் ஆயத்தஞ்செய்கிறது. தேசிய கல்வி நிறுவகமானது தேசிய இலக்குகளையும் தேர்ச்சிகளையும் கவனத்திற் கொண்டே பாடத்திட்டங்களையும் ஆசிரியர் அறிவுரைப்புக் கைந்நூல்களையும் விருத்தி செய்கிறது.

இலங்கைக் கலைத்திட்டச் செயல்முறைத் திட்டமானது வழங்கியுள்ள கலைத்திட்ட விபரக் குறிப்புகள், கலைத்திட்டத்தை ஆயத்தஞ் செய்வதற்கான அடிப்படை நெறிப்படுத்தல்களைக் கவனத்திலெடுக்கலாம். அது கூறுவதாவது,

- தேசிய கலைத்திட்டமானது, ஒவ்வொரு பிள்ளையும் தனித்தன்மையானது என்பதைக் கவனத்தில் கொண்டு வடிவமைக்கப்பட வேண்டும். பிள்ளைகள் மத்தியிலுள்ள வித்தியாசங்கள் பல. மிக வெளிப்படையான வேறுபாடுகளான வயது, பால், மற்றும் உடற்தோற்றம் என்பவற்றுக்கப்பால், பிள்ளையின் ஏனைய குணவியல்புகளான நுண்மதி, ஆர்வங்கள் ஆற்றல்கள், உளச்சார்புகள் மற்றும் ஊக்கம் ஆகியவற்றை கலைத்திட்டம் வடிவமைக்கும்போது கவனிக்க வேண்டும். அவர்கள் வெவ்வேறு சமுதாயங்கள் மற்றும் பின்புலங்களிலிருந்து வருகின்றனர் என்ற விடயத்தையும் கவனித்தல் வேண்டும்.

- கலைத்திட்டமானது பின்வரும் காரணிகளின் செல்வாக்கிற்கும் உட்படுகிறது.
  - சமூகத்தின் தொடர்ச்சியான மற்றும் மாற்றமுறும் தேவைகள்.
  - தனியாளின் தொடர்ச்சியான மற்றும் மாற்றமுறும் தேவைகள்
  - தேசிய கணிப்பீடுகளின் கவனத்துக்குட்படும் விடயங்கள் அடங்கலாக ஆராய்ச்சி செயற்பாடுகளிலிருந்துவரும் உள்ளிடுகைகள்.
  - கற்றல் பற்றிய புதிய கொள்கைகள் மற்றும் அறிவுபற்றிய மாற்றுமுறும் எண்ணக் கருக்களிலிருந்து வரும் உள்ளிடுகைகள்.

கலைத்திட்டச் செயல்முறையின் முதலாவதும் மிக முக்கியமானதுமான செயற்பாடு பாடவிடயத்தின் பரப்பினை இனங்காண்பதாகும். வெவ்வேறு பயனாளிக் குழக்களுடன் கலந்தாய்வு செய்வதன் மூலம் இதனைச் செய்யலாம். நாடுமுழுவதிலுமிருந்து ஆசிரியர் மாதிரியை தெரிந்தெடுத்து அவர்களோடு பேசுவது பயனுள்ளது. ஏனெனில் அவர்கள் மாணவர்களோடு நேரடியான ஈடுபாடுடையவர்களாகவும் மாணவர்கள் வளரும் வெவ்வேறு அமைவிடங்களோடு நெருங்கியவர்களாகவும் உள்ளனர். சமுதாயங்களிலுள்ள மக்களின் தேவைகள் மற்றம் அபிலாசைகளுடன் உணர்வுபூர்வமானவர்களாகவும் உள்ளனர். அவர்களில் பலர், சமூக மற்றும் பொருளாதார விடயங்களிலும் செல்வாக்குச் செலுத்துகின்றனர். இதன் வழியிலேயே சமுதாயம் நகரும். இச்செயல்முறையானது, கலைத்திட்டத்தின் உரிமையை, ஆசிரியர்கள் உளளுர்ப் பிரிவுகளை மிகவும் பொருத்தமாக, இலகுவாக இனங்காணும்போது (கலைத்திட்டத்தில் அவர்களுக்குள்ள உரிமையை உறுதிப்படுத்தும்:

பாட விடயத்தின் பரப்பு இனங்காணப்பட்டதும், பாடக் குழுவானது கலைத்திட்டச் செயன்முறையில் பின்வரும் விடயங்களைக் கவனித்துக் கொள்ளும்:

- கலைத்திட்டத்தின் உருவரைபையும் அமைப்பினையும் உருவாக்குதல்
- தலைப்புகளைத் தெரிவு செய்தல், வரிசைப்படுத்தல் மற்றும் வலையமைப்பு
- கணிப்பீடு மற்றும் மதிப்பீட்டு செயலொழுங்குகளையும் தராதரங்களையும் இனங்காணல்
- குழுவிலுள்ள உறுப்பினர்களின் பணிகளையும் குறிப்புப் பிரமாணங்களையம் தீர்மானித்தல்
- ஒவ்வொரு தலைப்பினையும் கற்பிப்பதற்குத் தேவையான ஆகக்குறைந்த சாதனங்களையும் ஏனைய வளங்களையும் இனங்காணல்.
- வெவ்வேறு மொழிகள், இனக்குழுக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் குழுக்களுடன் முன்சோதனையில் ஈடுபடுதல்
- வரைபுக் கலைத்திட்டத்தை ஆயத்தஞ் செய்தல்

கலைத்திட்டக் குழுவொன்று பாடத்திற்கான கலைத்திட்டத்தை ஆயத்தஞ் செய்யும். இந்த வரைபுக் கலைத்திடமானது ஆய்வுச் சபைக்குச் சமர்ப்பிக்கப்படும். வரைபுக் கலைத்திட்டம் தயார் செய்யப்பட்டதும் அது தேசிய கல்வி நிறுவகத்தின் கல்வி அலுவல்கள் சபையில் முன்வைக்கப்படும். கல்வி அலுவல்கள் சபைக்குச் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் அதனை மீளாய்வு செய்து திருத்தியத்தல் ஆய்வுச் சபையின் பொறுப்பாகும். அது ஏற்றுக்கொள்ளப்படும் போது, தேசிய கல்விச் சபையின் அமைதிக்காக வழங்கப்படும். தேசியக்கல்வி நிறுவகச் சபையின் அனுமதி பெறப்பட்டதும் வளச் சாதனங்கள் ஆயத்தஞ் செய்யப்படும். பாடநூல்கள், ஆசிரியர்கள் வழிகாட்டிகள், பாடசாலை மட்டக் கணிப்பீட்டுச் சாதனங்கள், சாதனங்கள் மற்றும் கட்புல – செவிப்புல சாதனங்கள் ஆகியன சபையினால் பாடத்திட்டம் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் மேற்கொள்ளப்படும்.

ஆசிரியர் வழிகாட்டிகள், கணிப்பீட்டுச் சாதனங்கள் மற்றும் ஏனைய உதவும் சாதனங்கள் ஆகியன தேசிய கல்வி நிறுவகத்தின் பொறுப்பாகும்.

மாணவருக்கான பாடநூலைத் தயாரித்தல் கல்வியமைச்சின் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் (EPD) பொறுப்பாகும்.

a. தேசிய கலைத்திட்டக் கொள்கை

கல்வி அமைச்சினாலும் (MOE) தேசிய கல்வி நிறுவகத்தாலும் (NIE) 2000 இல் வெளியிடப்பட்டுள்ள ஆவணமானது நாட்டிலுள்ள கலைத்திட்டத்தை அபிவிருத்தி செய்வோருக்கும் கல்வித் தொழில் செய்வோருக்குமான கொள்கைசார் வழிகாட்டலை வழங்குகிறது.

கல்வி அமைச்சும் தேசிய கல்வி நிறுவகமும் கலைத்திட்டத்தை பின்வருமாறு வரையறை செய்துள்ளது.

"கலைத்திட்டம் என்பது கருதிய கற்றல் விளைவுகளின் அமைப்பாக்கப்பட்ட தொடராகும்." ஆனால் மிகவும் பரந்த வரைவிலக்கணமொன்றை நடைமுறை சார்ந்த நோக்கில் வழங்குதற்கென அதனை "பாடசாலையில் வழங்கப்படும் கற்கைநெறியாகும். அது இலக்குகள், குறிக்கோள்கள் உள்ளடக்கம், கற்பித்தல் உபாயங்கள், மதிப்பீடு மற்றும் கற்றலை வசதிப்படுத்தும் அத்தியாவசியமான கற்றல் வளங்கள் மற்றும் ஒரு துறையைக் கற்பித்தல் என்பவற்றை உள்ளடக்கும்"

b. பிரதான கோட்பாடுகளும் கவனத்திற்குரியவையும்

i. கலைத்திட்டச் சட்டகம்

பரந்த கலைத்திட்டச் சட்டகமானது பின்வரும் தேவைகளுக்கு உதவவேண்டும்.

- கலாசார பன்மைத்தன்மை கொண்ட ஆனால் தேசிய ரீதியாக ஒன்றிணைந்த சமூகம்
- மேலெழுந்துவரும் பொருளாதாரம்: முயற்சியாண்மையை அபிவிருத்தி செய்வதன் மூலம் அதன் சவால்களை நிறைவேற்றுவதும், வாய்ப்புக்களைப் பயன்படுத்துதலும்
- சூழலின் அழத்தங்களால் முன்வைக்கப்படும் சவால்களை வளம் நிறைந்த தன்மையுடன் நிறைவேற்றுதல்
- சமுதாயம் பாடசாலையை ஒரு சமுதாய வளமாகப் பயன்படுத்துதல்
- மூப்படையும் சனத்தொகை போன்று சனத்தொகை மாற்றத்தால் எழும் சமூகம்
- புதிய தொழில்நுட்பவியலின் வளர்ச்சி ஊடுபரவல்
- தகவல்களை முகாமை செய்தல்: ஊடுபரவும் சர்வதேசச் செல்வாக்கை முகாமை செய்தல்
- வேறுபடும் வீடு மற்றும் சமுதாயச் சூழ்நிலைகளிலிருந்து கற்றல்
- பரீட்சை நோக்கிலான கற்றலுக்கு மாணவர் குழாம் உள்ளாதல்

ii. உள்ளடக்கம்

- பொதுக் கல்வியின் அடிப்படை என்ற வகையில் மனிதப் பண்புகள் சமூக விஞ்ஞானங்கள், பௌதீக, உயிரியல் விஞ்ஞானங்கள் மற்றும் கணிதம் ஆகிய கல்விசார் துறைகளுக்கு அழுத்தங் கொடுத்தல்.

- இனத்துவம், சமயம், மற்றும் பால்வகை அல்லது பொருளாதாரப் பின்தங்கலுக்கான அடிப்படைகள் இல்லை.
- தற்காலச் சூழமைவு எதிர்காலத் தேவைகள் என்பவற்றைத் தொலைநோக்காகக் கொண்ட தகுதி.

iii. உள்ளு;ர்ப் பின்பற்றலுக்கான ஏற்பாடுகள்

- மைய உள்ளடக்கமும் செயற்பாடுகளும் ஒன்றாக இருத்தல்
- உள்ளடக்கமும் செயற்பாடுகளும் எடுத்துக் காட்டப்பட்டுள்ள உள்ளு;ர்த் தேவைகளுக்கு ஏற்பச் சேர்த்துக் கொள்ளப்படலாம் அல்லது மாற்றியமைக்கப்படலாம்.

iv. மீளாய்வுக்கும் இற்றைப்படுத்தலுக்குமான ஏற்பாடுகள்

- அலகுகளில் முழுமையான செப்பனிடுதலாகவன்றி வட்ட அடிப்படையில் மீளாய்வும் இற்றைப்படுத்தலும்.
- உள்ளடக்கத்திலுள்ள நிரந்தரமான அம்சங்கள் மாறாதிருத்தல்

v. கற்றல் மகிழ்ச்சிகரமாக இருத்தல்

- கற்றல் மகிழ்ச்சிகரமான அனுபவமாவதற்கான ஏற்பாடுகள்.
- கலைத்திட்ட உள்ளடக்கமும் செற்பாடுகளும் மாணவரின் ஓய்வுக்கும் வாய்ப்பாக இருத்தல்.
- கற்றல் பற்றிய விளைவுகளை இனங்காணல், பாடசாலை மட்டக் கணிப்பீடு மற்றும் கூட்டுமதிப்பீட்டின் மூலம் மாணவர் கணிப்பீடு அமைதல்.
- வெவ்வேறு வகையான கற்பித்தல் - கற்றல் - அவை பயிற்சிகள், செயற்திட்டங்கள் மற்றும் ஒப்படைகளுடன் கூடியதாக இருத்தல்.
- கற்றல் தொடருரு அடிப்படையில் வழங்கப்படுதல். இது 'கற்றலுக்குக் கற்றல்' 'அறிவதற்குக் கற்றல்' ஒன்றுகூடி வாழக்கற்றல் மற்றும் வாழக்கற்றலுக்கு உதவுதல்.

C. பாடத்திட்டமும் ஆசிரியர் அறிவுரைப்புக் கைந்நூலும்

இலங்கைப் பாடசாலைக் கலைத்திட்டத்தின் பாடத்திட்டங்களைத் தேசிய கல்வி நிறுவகத்தில் இணையத்தளமான. www.nie.sch.lk இருந்து தரவிறக்கம் செய்யலாம் அல்லது பார்க்கலாம்.

பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடு 2.1:

மேற்கூறிய இணையத்தளத்திலிருந்து விஞ்ஞானப் பாடத்திட்டத்திற்கான அச்சுப்பிரதியைப் பெற்றுக்கொள்க. அதன் விசேட அம்சங்களை குறித்துக்கொள்வதுடன் அப்பாடத்திட்டத்திற்கான தொகுப்பின் பகுதிகளை பிரித்தறிக.

i. ஆசிரியர் அறிவுரைப்புக் கைந்நூல; (TIMs)

ஆசிரியர் அறிவுரைப்புக் கைந்நூல் விவரமாக உள்ளதோடு பாடசாலையில் ஆசிரியர்களுக்கும் போதனைத் தலைவர்களுக்கும் வழிகாட்டல்களை வழங்குகிறது.

தரம் 10 விஞ்ஞான ஆசிரியர் அறிவுரைப்புக் கைந்நூல் பற்றிய பகுப்பாய்வு:

தரம் 10 விஞ்ஞானத்திற்கான ஆசிரியர் அறிவுரைப்புக் கைந்நூலைப் பகுப்பாய்வு செய்யும்போது ஆசிரியர்களுக்கும் போதனைத் தலைவர்களுக்குமுரிய கற்றல் கற்பித்தல் செயல்முறைக்கான பின்வரும் பகுதிகளை அவதானிக்கலாம்.

1. **அறிமுகம்** – பாடசாலை விஞ்ஞானக் கலைத்திட்டத்திற்கான அடிப்படைகள்
2. **பாடத் தொகுதிக்கான குறிக்கோள்கள்:** தரம் 6-11
3. **விரிவான பாடத்திட்டம்**
   - தேர்ச்சி
   - தேர்ச்சி மட்டம்
   - உள்ளடக்கம்
   - காலம்
4. **பாடசாலைக் கொள்கைகளும் நிகழ்ச்சித் திட்டங்களும்**

   இதன்கீழ் ஆசிரியர்களுக்கும் போதனைத் தலைவர்களுக்கும் கலைத்திட்டத்தை முறையாக நடைமுறைப்படுத்துவதற்கான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன.
   - வாரத்திற்குரிய பாடவேளைகளின் தொகை.
   - செயற்பாட்டின் அடிப்படையிலான அணுகுமுறை.
   - கற்பித்தலுக்கான 5E மாதிரிகை.
   - பரிசோதனை வேலைகளை வினைத்திறனுடன் கூடிய வகையில் செய்வதற்கான இரண்டு இணைந்த பாடவேகைள்.
   - சமாந்தரத் தரங்களுக்குரிய ஆசிரியர்கள் எல்லோரும் கற்பித்தலுக்கான திட்டத்தைப் பொதுவாக ஆயத்தஞ் செய்தல்.
   - நடைமுறைப்படுத்துவதற்கும் தராதர உள்ளீடுகைளை வழங்குவதற்குமான போதனா தலைமைத்துவத்தை அதிபரும் பிரதி அதிபரும் வழங்குவதற்கு.

- ஒரு தரத்திலுள்ள சகல சமாந்தர வகுப்புகளிலும் பொதுவாக அச்சிட்ட சாதனங்களைப் பயன்படுத்துவதற்கு.
- உடனடி நடைமுறை (பயிற்சி) அனுபவங்கு;டாக எண்ணக்கருக்கள், கோட்பாடுகள் மற்றும் கொள்கைகளை உருவாக்குவதற்கு.
- பாடசாலை முகாமைத்துவக் குழுச்செயற்பாடுகளுக்கான சாதனங்களை வழங்குவதற்கு.
- தவணை இறுதி அல்லது வருட இறுதி பொருட்காட்சியில் மாணவர் தயாரித்த பொருட்களைக் காட்சிப்படுத்துவதற்கும் மேலும் அவர்களைத் தூண்டுவதற்கும்.
- விவாதம், சுவர்சசெய்திப் பத்திரிகை, சஞ்சிகைகள் பாடசாலைச் சங்கங்கள், விஞ்ஞான தினங்கள் மற்றும் விஞ்ஞானச் செயற்பாடுகள் போன்ற கலைத்திட்டச் செயற்பாடுகளில் மாணவர்கள் ஈடுபடுவதற்கு.

5. **கற்றல் கற்பித்தல் செயல்முறை**

கற்றல் - கற்பித்தல் செயல்முறையின் வெவ்வேறு கட்டங்கள் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் தரப்பட்டுள்ளன.

- அறிமுகம்
- பாடத்தொகுதிக்கு வேண்டிய தராதர உள்ளிடுகைகள்
- தேர்ச்சி
- தேர்ச்சி மட்டம்
- செயற்பாடு
- காலம்
- இச்செயற்பாட்டுக்கான தராதர உள்ளிடுகைகள்
- கற்றல் கற்பித்தல் செயல்முறைகள்
  - படிமுறை 1
  - படிமுறை 2
  - படிமுறை 3
- கணிப்பீட்டுக்கும் மதிப்பீட்டுக்குமான நியதிகள்
- குழுவாகத் தேடுதலுக்கான அறிவுறுத்தல்கள்

பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடு 2.2:

உங்கள் பாட வல்லுனரிடமிருந்து தரம் 10க்கான ஆசிரியர் அறிவுரைப்புக் கைந்நூலைத் தெரிவுசெய்து ஆராய்ந்து மேலே தரப்பட்டுள்ள தரம் 10 விஞ்ஞானத்துடன் ஒப்பிட்டு, அவ்விரு ஆசிரியர் அறிவுரைப்புக் கைந்நூல்களின் அமைப்புப் பற்றிய அறிக்கையை ஆயத்தஞ் செய்வதுடன் ஆசிரியர் அறிவுரைப்புக் கைநூலில் நீங்கள் அவதானித்த பலங்களையும் நலிவுகளையும் குறிப்பிடுக.

பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடு 2.3:

ஒரு பாடசாலை அதிபர் என்ற வகையில், உங்கள் பாடசாலையில் கற்பித்தல் மற்றும் கற்றலின் தராதரத்தை மேம்படுத்த உங்கள் சிறப்புத்தேர்ச்சிக்குரிய பாடம் தொடர்பான கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நீங்கள் எடுக்கும் முயற்சிகள் எவை?.

பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடு 2.4:

நீங்கள் சிறப்புத் தேர்ச்சிபெற்ற துறையில் இலங்கையின் பாடத்திட்டத்தை இன்னொரு நாட்டுடன் ஒப்பிட்டு, அவ்விரு பாடத்திட்டங்களிலுமுள்ள நல்ல அம்சங்களையும் திருப்திகரமற்ற அம்சங்களையும் எடுத்துக் காட்டுக.

பரித்துரைக்கப்பட்ட செயற்பாடு 2.4:

பின்வரும் உயிரியல் பாடத்திட்டம் தரப்பட்டுள்ள வலைத்தளதிலிருந்து பெறப்பட்டதாகும். இதனை இலங்கையின் சமாந்தரத் தரங்களுக்கான விஞ்ஞானப் பாடத்திட்டத்தின் கூறுகளுடன் ஒப்பிடுக.

உயர் பாடசாலைப் பாடத்திட்டம்
வலைத்தளம் - www.lyon.k12.us

பாடத்தொகுதி பாடத்திட்டம்: உயிரியல்
பாடநூல்: நீலத்திமிலங்கள் (*******)உயிரியல்:
தலைப்புகள்:

1.ஆய்வுகூடச் சாதனங்களும் ஆய்வுகூடத்தில் பாதுகாப்பும்
2.உயிரியல் இரசாயனம்
3. கல அமைப்பும் தொழிற்பாடும்
4. மரபுவழிப்பண்பியல்
5. பாகுபாடும் இனப்பிரிவும்
6. உயிரிகளின் பல்வகைமையும் அவற்றின் நடத்தைகளும்
7. சூழலியல்
8. காலப்போக்கிலான மாற்றங்கள்

தரங்கள்: தரங்கள் புள்ளிமுறைமையின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும். இது தரங்களை நிறைப்படுத்துவதற்கு இடமளிக்கிறது. திரள் தரங்களை (Cumilative Grades) தீர்மானிப்பதற்கு மாணவரால் பெறப்பட்ட மொத்தப் புள்ளிகள் அடையக்கூடிய சாத்தியமான மொத்தப் புள்ளிகளால் பிரிக்கப்படும்.

<u>உதாரணமாக:</u>

மாணவர் பெற்ற புள்ளி	மொத்தப் புள்ளி
90	100
20	25
25	25
135	150

135/150 = 90%

தரங்கள் புதிர்கள், வகுப்பு வேலைகள், ஆய்வுகூடம், வீட்டுவேலை, சோதனை மற்றும் செற்திட்டங்களை அடிப்படையாகக் கொண்டவை.

சாதனங்கள்:

பின்வருவன உங்களிடம் உள்ளனவா என்பதை உறுதி செய்துகொள்ளுங்கள்: கடதாசி மடிப்பு, நிறப்பென்சில், கத்தரிக்கோல், பசை, கடதாசி, பென்சில், பேனைகள், அடிமட்டம் மற்றும் விசேட செயற்திட்டத்துக்கான ஏனைய சாதனங்கள் விசேட செயற்திட்டங்கள் வழங்கப்படும்போது அதற்கான தனிப்பட்டியல் வழங்கப்படும்.

Make Up Policy:

- பணிகள் மாணவரின் பொறுப்பாகும். அத்துடன் இது வழக்கமான வகுப்பு அல்லாத நேரங்களில் செய்யப்படுதல் வேண்டும்.
- வேலைகள் ஆசிரியரின் விருப்பத்தின் பேரில் செய்யப்படுதல் வேண்டும்.
- விடுபட்ட வேலைகளுக்கான மாற்றுவேலைகள் ஒப்படைக்கலாம்.
- ஒப்படை வழங்கப்படும் நாளில் மாணவர் வராதிருந்தால், பாடசாலைக்கு மாணவர் வரும் நாளில் வகுப்பு ஆரம்பிக்கப்படும்போது கொடுக்கப்படுதல் வேண்டும்.

ஒரு நாள் வராமை: வராத நாளில் முன்னறிவிக்கப்பட்ட சோதனை வழங்கப்படுமாயின், அந்த மாணவர் திரும்பி வரும்போது விடுபட்ட சோதனையை எழுத வேண்டும் அல்லது ஆசிரியரின் விருப்பத்தின்படி, ஒருநாள் பாடசாலை நேரத்தின் பின்னர் எழுத வேண்டும். ஏனைய வேலைகள் இரண்டு பாடசாலை நாட்களில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

ஒரு நாளுக்குமேல் வராமலிருந்தால், சகல வேலைகளும் மூன்று பாடசாலை நாட்களுள் நிறைவு செய்யப்படுதல் வேண்டும்.

நீண்ட காலம் வராமை: ஆசிரியரின் வழிகாட்டலின்கீழ் வேலைகளைச் செய்துமுடிக்க மாணவர் நேர அட்டவணை ஒன்றைத் தயாரிக்க வேண்டும்:

குறிப்புப் புத்தகம் தயாரித்தல்

மாணவர் ஒவ்வொருவரும் மூன்று வளையங் கொண்ட கடதாசி மடிப்பு விஞ்ஞானக் குறிப்பு புத்தகத்தை வைத்திருத்தல் வேண்டும். (வாசநந-சபெ ியிநச கழடனநச ளஉநைஎந ழெவநடிழழம). அதன் ஒழுங்கு முறைகள் பின்வருமாறு:

முதலாவது பக்கம் - வகுப்புப் பாடத்திட்டம்
இரண்டாவது பக்கம் - தரத்துக்குரிய தாள் (ஆசிரியரால் வழங்கப்படும்)
மூன்றாவது பக்கம் - ஒப்படைத்தாள்

மடிப்பின் ஏனைய பகுதிகள் உங்கள் வீட்டு வேலைகள், வகுப்பு வேலை, குறிப்புகள், கையேடுகள், கற்றல் வழிகாட்டிகள், புதிர்கள் மற்றும் சோதனைகளைக் கொண்டிருக்கும்.

தரங்களைத் தீர்மானிப்பதில் துப்பரவு, ஒழுங்கு மற்றும் பூரணத்துவம் என்பனவும் பார்க்கப்படும். இவற்றுக்கு 100 புள்ளிகள் உண்டு, முக்கியமான ஒரு சோதனையைப் போல, இடைக்கால அல்லது காலாண்டு இறுதிக்கு அண்மையதாக இவை வழங்கப்படும்.

வீட்டுவேலைக் கொள்கை:

ஒப்படைக்கப்படும் சகல வீட்டுவேலைகளும் அடுத்த பாடசாலை நாளுக்கு உரியவை. வகுப்புவேலைகள் வகுப்பின் அன்றைய நாளுக்கு அல்லது அடுத்தநாளுக்கு உரியவை. (ஒப்படையின் நீளத்தைப் பொறுத்து இது அமையும்)

அறிக்கைகள் செயற்திட்டங்கள் மற்றும் ஏனைய விசேட ஒப்படைகளுக்கு உரிய திகதிகள், ஒப்படைகள் பற்றி அறிவிக்கப்படும் போது தீர்மானிக்கப்படும்.

வீட்டுவேலை மற்றும் வகுப்பு செயலொழுங்கு:

- ஒப்படைகள் யாவும் மாணவர் நிகழ்ச்சி நிரலிலும் விஞ்ஞானக் குறிப்புப் புத்தகத்திலும் அவற்றிற்குரிய திகதிகளுடன் எழுதப்படுதல் வேண்டும்.
- குறிப்புகள் எல்லாம் மாணவருடைய விஞ்ஞானக் குறிப்புப் புத்தகத்தில் எழுதப்படுதல் வேண்டும்.
- மாணவர்கள் வகுப்புக்குள் நுழையும்போது கூரான பென்சில்களுடன் வருதல் வேண்டும். அத்துடன் உதிரிகளையும் கொண்டுவருதல் வேண்டும். எழுதுகருவிகளை எப்பொழுது தொலைப்பீர்கள் எனத் தெரியாது.
- வகுப்பு முடியும்வரை சகல கழிவுகளையும் வைத்துக் கொள்ளுங்கள்
- ஒப்படைகளைத் தரும்பொழுது தயவுசெய்து அவற்றை உரியகூடையில் வைக்கவும்.

ஆசிரியர் அறிவுரைப்புக் கைந்நூல்

ஏனைய பல நாடுகளின் பாடத்திட்டங்களும் கலைத்திட்டங்களும்

மொடியூல் 3	தேசிய கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்

குறிக்கோள்:



இந்த மொடியூலானது பாடசாலையில் கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது பற்றிய விளக்கத்தை வழங்குகிறது. நடைமுறைப்படுத்தும் செயல்முறையில் பணியணியினரின் வகிபாகம் இனங்காணப்படுவதுடன் அவர்களின் வகிபாகங்களையும் கலைத்திட்டத்தினையும் வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்கு அறியச்செய்தல் வேண்டும். வெவ்வேறு பணியினரின் வகிபாகமும் பணியும், நேரசூசிகையைத் தயாரித்தல் மற்றும் முக்கியமான விடயங்களைக் கவனித்தல் வேண்டும். வெவ்வேறு பாடசாலைகளின் பணியணியினரின் வகிபாகங்களை ஒப்பிடுதல், அவர்கள் தமது நேரசூசிகளை எவ்வாறு தயாரிக்கின்றனர் என்பன கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது அதன் அடிப்படை நிலைமைகள் பற்றிய பொதுநோக்கினை பெற்றுக் கொள்வதற்காகக் கலந்துரையாடப்படும்.

கற்றல் விளைவுகள்:



மொடியூலைக் கற்று முடிக்கும்போது மாணவர்கள்

1. தமது பாடசாலைகளில் கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குப் பணியணியினருக்குரிய வகிபாகங்களையும் பணிகளையும் இனங்கண்டு ஆயத்தஞ்செய்வர்.
2. கலைத்திட்டத்தை வகுப்பறை மட்டத்தில் வழங்கப்பட்ட பாடத்திட்டம் மற்றும் ஆசிரியர் அறிவுரைப்பு கைந்நூல் என்பவற்றுக்கமைய நடைமுறைப்படுத்த உதவுதல்
3. கலைத்திட்டத்தின் தேவைக்குப் பொருந்தும் நேரசூசிகையும் அவற்றைச் சிறந்தமுறையில் நடைமுறைப்படுத்தலுக்கான ஆசிரியரின் தேவைகளையும் தயாரித்தல்

மொடியூல் பற்றிய பொதுநோக்கு:

வாரம்	தலைப்பு/உள்ளடக்கம்	செயல்முறை	மாணவர்களுடைய கற்றல் பணிகள்
1	1. கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் பணியணியினரின் வகிபாகமும் பணிகளும்	அறிமுகம் விரிவுரைகள் செயற்பாடுகள் குழுவேலைகளும் கலந்துரையாடலும் தனியாள் செயற்பாடுகள் பாடசாலை நிலைமைகளைக் கணிப்பிடுதல்	பாடசாலையிலுள்ள பணியினரின் வகிபாகங்களையும் பணிகளையும் ஆராய்தல் கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் அதிபரின் வகிபங்கினை ஆராய்தலும் ஒப்பிடுதலும் தலைமைத்துவப் பதவிகளை ஒப்படைத்தலும் கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் அவர்களின் வகிபாகமும்.
2	2. பாடசாலை நேரசூசியைத் தயாரித்தல் 3. பாடசாலைக் கலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப் படுவதை மதிப்பிடுதல்	விரிவுரைகள் குழுக் கலந்துரையாடல் சுற்றறிக்கைகளைக் கற்றல், பாடசாலைப் பயணம் நேரசூசிகையுடன் தொடர்புடைய செயற்பாடுகளை அவதானித்தலும் நேரசூசிகையைத் தயாரித்தலும் பாடசாலையில் நேரசூசிகையை நடைமுறைப்படுத்தலும் பின்னடைவுகளும்.	செவிமடுத்தல் நேரசூசிகை தயாரித்தலும் முக்கிய அம்சங்களை ஆராய்தலும் சுற்றறிக்கையையும் அதன் விளக்கங்களையும் கற்றல் நேரசூசிகை தயாரித்தலின்போது செய்யப்பட்ட படிமுறைகளைப் பயிற்சி செய்தல்.

கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் பணியணியினரின் வகிபாகங்களும் பணிகளும்.



பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடு 3.1:

ஒரு பாடசாலையில் ஒரு நாளில் பணியணியினரின் வகிபாகங்களையும் பணிகளையும் அவதானிப்பதற்கும் பாடசாலையில் கிடைக்கும் தகவல்களையும் பாடசாலையின் அதிபர் உட்படப் பணியணியினரின் அவதானித்த நடத்தைகளையும் பதிவதற்கு நீங்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். பதிவுசெய்யப்பட்ட தகவல்கள் அடுத்த அமர்வில் கலந்துரையாடலுக்கு உள்ளாக்கப்படும் என்பதைத் தயவுசெய்து கவனத்தில் கொள்க.

கல்விமுறைமையில் மிக முக்கியமான நிறுவனம் பாடசாலையாகும். நிறுவனம் என்பது மக்களின் சமூக அலகுகளில் ஒன்று. இது தேவையை அடையும் வகையில் முறைப்படி அமைக்கப்பட்டதும் முகாமை செய்யப்படுவதுமாகும் அல்லது தொடர்ச்சியான அடிப்படையில் கூட்டு இலக்குகளைப் பின்தொடர்நது செல்கிறது. சகல நிறுவனங்களும் முகாமைத்துவ அமைப்பினைக் கொண்டிருக்கும். அது தொழிற்பாடுகளுக்கும் பதவிநிலைகளுக்கும் இடையிலுள்ள தொடர்புகளைத் தீர்மானிக்கும். வகிபாகங்களையும் பொறுப்புக்களையும் அதிகாரங்களையும் பிரித்து பகிர்ந்தளித்து வரையறுக்கப்பட்ட பணிகளை மேற்கொள்கிறது. பாடசாலை போன்று நிறுவனங்கள் திறந்த முறைமைகளாகும். அவற்றின் எல்லைகளுக்கு அப்பாலுள்ள சூழலை அவை பாதிக்கின்றன மற்றும் அச்சூழலால் பாதிக்கப்படுகின்றன.

பாடசாலைக்கு முகாமைத்துவ அமைப்பொன்று உள்ளது. அவ்வமைப்பு தெளிவாக வரையறுக்கப்பட்ட வகிபாகங்கள், பொறுப்புகள் மற்றும் பணிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடு 3.2:

நீங்கள் பணியாற்றிய பாடசாலையில் அல்லது நீங்கள் நெருக்கமான தொடர்புகொண்டுள்ள பாடசாலையில் நடைமுறையிலுள்ள முகாமைத்துவ அமைப்பினை முகாமைத்துவப் பணியணியிரின் பதவிகளுடன் தருக.

1. வகிபாகங்களும் பணிகளும் பற்றிய வரைவிலக்கணம்

வகிபாகங்களையும் பணிகளையும் பின்வருமாறு வரையறுக்கலாம்:-

a. வகிபாகம் என்பது

"ஒரு குறிப்பிட்ட பதவிநிலையுடன் இணைந்த குறிப்பிடப்பட்ட அல்லது எதிர்பார்க்கப்படும் நடத்தை அல்லது ஒரு குழுவிலுள்ள அந்தஸ்து அல்லது நிறுவனத்தை வகிபாகமென வரையறுக்கலாம். சமூகவியல் துறையிலே வகிபாகம் என்பது உரிமைகள், கடப்பாடுகள் மற்றும் குறித்த சமூக அந்தஸ்துடன் இணைந்த எதிர்பார்க்கப்பட்ட நடத்தைக் கோலங்கள் என வரையறுக்கப்படுகிறது"

பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடு 3.3:

நூல்களையும் இணையத்தளங்களையும் வாசித்து ஒரு பாடசாலையின் பின்னணியில் வகிபாகம் என்ற சொல்லுக்குத் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களைச் சேகரித்துத் தொகுக்குக.

b. பணி என்பதன் வரைவிலக்கணம்

பணியென்பது "ஒப்படைக்கப்பட்ட ஒரு சிறு வேலை அல்லது ஒருவருடைய கடமைகளின் ஒரு பகுதியெனலாம். சிலர் ஒரு பணியை நேரத்துடன் இணைத்து நிறைவேற்றுவதுடன் அதனை வழக்கமாகக் குறிப்பிட்ட நேரத்தினுள் நிறைவேற்றப்படவென வழங்கப்பட்ட ஒரு வேலைக் கூறு" எனவும் வரையறுக்கப்படுகிறது.

பணியினை "இனங்காணத்தக்க ஒரு மிகச்சிறிய மற்றும் ஒரு வேலையின் சாத்தியமான கூறு என்றும் வரையறை செய்யலாம். இது ஒரு வேலையின் அலகாக இருப்பதுடன் ஒரு செயல்த்திட்டத்தில் பல கூறுகளுக்கிடையில் வேறுபாடுகளை ஏற்படுத்தும் வழிமுறையாகவும் உள்ளது. இது செயற்பாடு என்பதற்கான மாற்றுச் சொல்லாகவும் பயன்படும்" என்றும் வரைவிலக்கணம் தரப்படுகிறது.

பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடு 3.4:

பாடசாலை நிலைமையிலும் ஏனைய நிறுவனங்களிலும் பணி என்ற சொல்லுக்குத் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களை நூல்களிலும் இணையத்தளத்திலும் வாசித்து சேகரித்து தொகுத்துக்கொள்க. உங்களுடைய தற்போதைய உத்தியோகபூர்வ பதவிநிலையில், நீங்கள் வேலைசெய்யும் இடத்தில், முன்னுரிமையின் அடிப்படையில் பூர்த்திசெய்வதற்குரிய 5 பணிகளை இனங்காண்க.

2. அதிபரின் வகிபாகங்களும் பணிகளும்

பாடசாலைத் தலைவர்களின் வகிபங்குகள் தீவிரமடைந்துள்ளன.. ஏனெனில் நாடுகள் தமது கல்வி முறைமைகளை இன்றைய துரித தொழில்நுட்ப மாற்றம் பொருளாதார பூகோளமயமாக்கம், மற்றும் அதிகரித்த புலம்பெயர்வும் அசைவியக்கமும் கொண்ட உலகில் தொழிற்படுதற்கும் இளைஞர்களை ஆயத்தஞ்செய்ய வேண்டியுள்ளது. அவர்கள் ஆற்றவேண்டிய புதிய பணிகளில் ஒன்று பாடசாலை எல்லைகளுக்கு அப்பால் தமது சொந்தப் பாடசாலையின் வெற்றிக்காக மட்டுமன்றி முழு முறைமையின் வெற்றிக்கும் பணியாற்ற வேண்டியுள்ளது. நாடுகள் கல்விமுறைமையைச் சீர்திருத்தவும் மாணவர்களின் முடிவுகளை மேம்படுத்தவும், முயற்சிப்பதால் பாடசாலைத் தலைமைத்துவமானது கல்விக்கொள்கை நிகழ்ச்சிநிரலில் உயர்நிலையில் உள்ளது. இதன் விளைவாகக் கல்வியியலாளரும் கல்வி முகாமைத்துவ நிபுணர்களும் புத்தாக்கங்களுடன் கூடிய நடைமுறைகளில் பாடசாலை முறைமையில் பாடசாலைகளின் எதிர்பார்த்தத் விளைவுகளை அடைவதற்காக பயிற்சியை வழங்குவதற்கான வழிகளைத் தேடிவருகின்றனர்.

மாணவர் கற்றலை மேம்படுத்துவதில் மிகவும் வினைத்திறனுள்ள தலைமைத்துவ வகிபாகங்கள் எவை? வெவ்வேறு தலைமைத்துவப் பணிகளை ஒதுக்கீடு செய்தல் மற்றும் பகிர்தல் எவ்வாறு? விளைதிறனுள்ள தலைமைத்துவத்துக்கான சரியான திறன்களைப் பாடசாலைத் தலைவர்களிடத்தில் தற்பொழுதும் எதிர்காலத்திலும் உறுதி செய்வது எவ்வாறு? என்றவாறு உலகம் முழுவதிலுமுள்ள அரசாங்கங்கள் வினாக்களை எதிர்கொள்கின்றன.

பாடசாலைகளை முகாமைத்துவஞ் செய்வதில் முக்கியமான விடயமாகவுள்ள கல்விசார் தலைமைத்துவம் அதிகமாகக் கலந்துரையாடப்பட்டுள்ள விடயமாகும் என்பதுடன் அது பல கொள்கைகளுடன் முன்மொழியப்பட்டு வருகிறது. கலைத்திட்ட உள்ளடக்கம், பயனாளிகளுக்க வலுவூட்டுதல், மற்றும் சமுதாயத்தை உள்ளடக்கல், மாணவரின் கற்றல் விளைவுகளை மேம்படுத்துதல் என்பவை பாடசாலைகள் வெற்றிகளை அடைவதற்குரிய சில விடயங்களாகும். விளைத்திறனுள்ள தலைவர், அவர் ஒரு அதிபராக இருக்கலாம் அல்லது நிருவாகியாக அல்லது வகுப்பறை ஆசிரியராக இருக்கலாம். அவர் பாடசாலை முறைமையின் பணியிலக்குகளை கற்பித்தலுக்கும், கற்றலை வளம்படுத்துவதற்கும்

இளைஞர்களை அர்த்தமுள்ள வாழ்க்கை அனுபவங்களைப் பெற்றுக்கொள்ள ஆயத்தஞ் செய்வதற்கும் ஏற்றமுறையில் ஒழுங்கு செய்யவேண்டும். பாடசாலைகளும் இப்பொழுது சமூகத்தில் ஏனைய தொழிற்பாடுகளை செய்து வருகின்றன. அவை இளைஞர்களுக்குக் கல்வியூட்டும் பணியிலக்கினையும் அதன் கடப்பாடுகளையும் சமுதாயத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

கல்விசார் தலைமைத்துவமானது நிறுவனம் ஆசிரியர் மற்றும் மாணவரினது இலக்குகளையும் குறிக்கோள்களையும் வெற்றிகரமாக அடையும் வகையில் தொலைநோக்கினை உருவாக்கவும் நடைமுறைப்படுத்தவும் வலுவான தலைமைத்துவத்தனை வேண்டிநிற்கிறது. ஊக்கல், அபிவிருத்திக்கான உள்ளார்ந்த ஆற்றல், பொறுப்புகளை ஏற்றுக்கொள்வதற்கான கொள்தகைமை, நிறுவன இலக்குளை நோக்கி நடத்தைகளை நெறிப்படுத்தும் ஆயத்த நிலை எல்லாம் மக்களிடம் உள்ளன. மக்கள் இயல்பிலே உடன்பாடனவர்கள் அல்லர் அல்லது நிறுவனத்தின் தேவைகளை எதிர்ப்பவர்கள் அல்லர். அவர்கள் நிறுவனங்களின் அனுபவங்கள் வழிவந்தவர்கள். முகாமைத்துவத்தின் முக்கியமான பணி நிறுவனஞ்சார் நிபந்தனைகளையும் நடைமுறைப்படுத்தும் முறைகளையும் ஒழுங்கு செய்வதன் வாயிலாகவும் தமது சொந்த முயற்சிகளை நிறுவனத்தின் குறிக்கோள்கள் சார்ந்து நெறிப்படுத்துவதன் மூலமும் அடைந்து கொள்வதாகும். நம்பிக்கை, நேர்மை, தொடர்பாடல், திறந்ததன்மை, வெளிப்படையானதன்மை, பொறுப்பு, வகைசொல்லல் ஆகிய சில அம்சங்கள் தலைவர்களிடம் இருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றன.

பாடசாலைத் தலைமைத்துவமானது, செயல்முறையாகவும் ஆசிரியர், மாணவர், பெற்றோர் ஆகியோரது ஆற்றலையும் சக்தியையும் பொதுவான கல்வி இலக்குகளை அடைதல் நோக்கி நெறிப்படுத்துவதாகவும் உள்ளது.

பாடசாலைத் தலைமைத்துவம் என்பது கல்வி முறைமையில் நூற்றாண்டின் பிற்பகுதியில் பல்வேறு காரணங்களுக்காக கொண்டுவரப்பட்டது. மாணவரின் உயர்மட்ட அடைவுகளுக்கான கேள்விகள் பாடசாலைகள்மீது எழுந்தன. பாடசாலை மேம்பாடு மற்றும் சீர்த்திருத்தங்கள் எதிர்பார்க்கப்பட்டன. இவ்வாறான எதிர்பார்ப்புகள் பாடசாலை மட்டத்திலான வகைசொல்லலுடன் இணைந்துசென்றன. தற்போதைய நிலைமைகளைப் பேணுதல் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கவில்லை. நிருவாகம் மற்றும் முகாமைத்துவம் ஆகிய சொற்கள் கட்டுப்பாடு மற்றும் மேற்பார்யின் ஊடான உறுதித்தன்மையைக் குறிப்பிடுகிறது. தலைமைத்துவம் என்ற எண்ணக்கரு அனுகூலமானது ஏனெனில் அது இயங்கு தன்மையையும் சார்பான செயற்பாடுகளையும் எடுத்துக்கூறுகிறது. அதிபர் அல்லது பாடசாலைத் தலைவர் பொதுவாக பாடசாலையின் தலைவராக கருதப்படுகிறார். ஆயினும் பாடசாலைத் தலைமைத்துவம் என்பது முறைசார் தலைமைத்துவக் குழுக்களிலுள்ள உறுப்பினர்கள், பாடசாலையின் இலக்குகளுக்கு பங்களிப்புச் செய்யும் ஏனைய ஆட்கள் போன்றவர்களையும் உள்ளடக்கும். பாடசாலைத் தலைமைத்துவம் அல்லது கல்விசார் தலைமைத்துவமானது அண்மைய வருடங்களில் கல்விநிருவாகத்துக்கான மாற்றீடாக

பிரசித்திபெற்ற வேளையில், தலைமைத்துவம் என்பது விவாதத்துடன் கூடியவகையில் பாடசாலை வேலைகளில் பகுதித் தோற்றப்பாட்டையே எடுத்துக்காட்டுகிறது.

பாடசாலையின் பொது அம்சமாக, பாடசாலையின் கல்விசார் விளைவுகளில் முன்னேற்றங்களைக் காண்பவர்கள் தமது மாணவர்களின் முக்கியமான கல்விசார் தேவைகளை ஒழுங்குபடுத்தப்பட்ட வழிமுறையில் காண விரும்புகிறார்கள். பாடசாலைகளுடைய ஒழுங்கமைப்பும் தொழிற்படுமுறையும் ஆகிய வகிபாகங்களை வளர்ந்தோர் பாடசாலைகளில் ஏற்கிறார்கள் - உயர்தொழில் சார்ந்தோர் என்ன செய்கின்றனர் மற்றும் அவர்கள் என்ன செய்யவேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றனர்? இத்தகைய வகிபாகங்கள் நிருவாகிகள் என்பது தொடக்கம் ஆசிரியர்கள் வரையில் வேறுபடும்: அவர்களுடைய மையப் பொறுப்பு கற்பித்தலும் கற்றலுமாகும். உதவிப் பணியணியினர் பாடசாலை பாதுகாப்பாகவும் ஒழுங்காகவும் இருக்கவேண்டும் என்பதை உறுதிசெய்வதுடன், துணைநிலை மற்றும் விசேட சேவைகளையும் நிருவாக உதவிகளையும் வழங்குதல் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. வரலாற்று ரீதியாக, பாடசாலையின் இயக்கத்திற்கான முழுமையான பொறுப்புகள் தனி ஒருவரிடம் இருப்பதுடன் - அதிபர் - கடந்த நூற்றாண்டில் இவ்வகிபாகம் பெருமளவில் முகாமைத்துவஞ்சார் புலமைக்கு உரித்தாக்கப்பட்டுள்ளது.



பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடு 3.5:

நீங்கள் ஓர் அதிபர் என்ற வகையில் அல்லது பாடசாலை அதிபர் ஒருவரை அவதானித்து அதிபரின் வகிபாகத்திற்கான வரைவிலக்கணம் ஒன்று தருக.

a. அதிபர் - பாடசாலையின் தலைவர்

அதிபர்களின் தலைமைத்துவப் பண்புகள் அபிவிருத்திசார் செயல்முறைகளிலும் பாடசாலையின் உன்னதநிலையை அடைவதிலும் முக்கிய அம்சமாக விளங்குகிறது. பாடசாலையிலுள்ள தலைவர்களின் பிரதான குறிக்கோள் கற்றல் கற்பித்தலை முன்னேற்றுதலாகும். அதன் வாயிலாக மாணவர் அடைவும் மாணவர் சமுதாயமும் நாட்டின் பெறுமதிவாய்ந்த பயனுள்ள பிரசைகளாக நன்மைபெறுவர். இருந்தாலும் மேலே சொன்ன சகல செயற்பாடுகளும் நிறுவனஞ்சார் அபிவிருத்தி மற்றும் போதனா அபிவிருத்தி சார்ந்து நெறிப்படுத்தப்படுவதனால் மாணவர் அடைவுகள் உறுதிசெய்யப்படும்.

அதிபர் பாடசாலையின் தலைவர் என்ற வகையில் அவரிடம் எதிர்பார்க்கப்படும் சில தராதரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. பாடசாலைகள் முழுமையான உன்னதத்தை அடைவதற்கும் பாடசாலையின் நோக்கங்களை வெற்றிகரமாக அடைவதற்கும் இவை முக்கியமானவை.

- ஆக்கத்திறனுடன் கூடிய தலைமைத்துவம் பாடசாலையின் உன்னதத்தை அடைவதற்கு
- கற்கும் சமுதாயமொன்றை உருவாக்குதல் - கல்வி அபிவிருத்திக்காக
- தீர்மானம் மேற்கொள்ளல் வினைத்திறனுள்ள முகாமைத்துவத்திற்காக
- பாடசாலைத் திட்டமிடல் - வினைத்திறனை அடைவதற்கும் பாடசாலை அபிவிருத்திக்கும்
- சாதகமான கற்றலுக்கான கவிவுநிலையை உருவாக்குதல் - கற்பித்தல் மற்றும் கற்றலின் தராதரத்தினை அடைவதற்கு
- பாடசாலைக் கலைத்திடத்தை நடைமுறைப்படுத்துதல் - மாணவர் அபிவிருத்திக்காக
- மாணவர் அடைவினை மேம்படுத்துதல் - கலைத்திட்ட விளைவுகளைக் கட்டுப்படுத்துவதற்காக
- மனிதவள அபிவிருத்தி – மனித வளத்தின் சிறந்த பயன்பாட்டிற்காக
- பாடசாலையில் பதவியணியினரை அமர்த்துதல் - பாடசாலைச் செயற்பாடுகளை பயனுள்ளவிதத்தில் நடைமுறைப்படுத்துவதற்காக
- போதனா ஆளணியினரை பகிர்ந்தளித்தல் - வினைத்திறனுள்ள கற்பித்தல் கற்றலுக்காக
- பாடசாலைச் செயற்பாடுகளுக்கான நேர அட்டவணையாக்கம் - கற்றல் மற்றும் கற்பித்தலுக்காக நேரத்தைச் சிறப்பாகப் பயன்படுத்துவதற்காக
- பாடசாலை முகாமைத்துவத்திற்காக தொழில்நுட்பவியல் பிரயோகம் - திட்டமிடல் மற்றும் முகாமைத்துவத்தில் வினைத்திறனை அடைவதற்காக
- நிதிக் கணக்கீடும் வரவுசெலவுத் திட்டம் தயாரித்தலும் கல்விசார் வெளியீடுகளுக்காக நிதிசார் வளங்களை சிறப்பாகப் பயன்படுத்துவதற்காக
- பாடசாலைத் தொகுதியை முகாமைத்துவஞ் செய்தலும் பராமரித்தலும் - மாணவர் நட்புச் சூழலுக்காக
- பாடசாலையும் சமூகமும் - நிறுவன அபிவிருத்திக்காகத் தொடர்புகளை உருவாக்குதல்
- பதவியணியினர் மற்றும் மாணவர்களில் சட்டரீதியான உரிமைகளும் பொறுப்புகளும் நெறியாள்கையைப் பெறுவதற்காக

அதிபர் நிருவாக மற்றும் கல்விசார் தலைவராக இருப்பதால் பாடசாலையில் முக்கியமான வகிபாகத்தை ஏற்கிறார். அவருடைய தலைமைத்துவ வகிபாகமானது பாடசாலை முழுவதையையும் அடக்குகிறது. ஒரு பாடசாலை அதிபரின் தலைமைத்துவத்தின் கீழ் வெவ்வேறு தலைமைத்துவ வகிபாகங்கள் ஏனைய பங்காளிகளுடன் அவர்களது பதவிநிலை மற்றும் அதிகாரநிலை என்பவற்றுடன் இணைந்துள்ளது. பல வெற்றிகரமான நிறுவனங்களுள் பகிரப்பட்ட தலைத்துவமானது நடைமுறையில் பின்பற்றப்படுகிறது. பெரிய பாடசாலைகள் இயல்பாகவே மிகவும் சிக்கலானதுடன் பாடசாலை முகாமைத்துவத்திற்காக

பணிகளைப் பகிர்தலானது பாடசாலை அதிபரின் முழுமையான வழிகாட்டலின்கீழ் அத்தியாவசியமானது.

மின்ஸ்பேர்க் என்பாருடைய முகாமைத்துவ வகிபாகங்கள்

மின்ஸ்பேர்க் 10 முகாமைத்துவ வகிபாகங்களை முன்வைத்துள்ளார். அவை நடத்தைகளின் தொகுதிகள் அல்லது வணிகச் சூழலுக்கான வகிபாகங்களாகும். அவற்றினை கல்விமுறைமையிலும் விசேடமாக பாடசாலைப் பின்னணியில் பிரயோகிக்க முடியும். 10 வகிபாகங்களில் ஒவ்வொன்றும் வித்தியாசமானவை செயற்முறைகளுடன் பொருந்தும். அவை பாடசாலை முறைமையோடும் பொருந்தும். அத்தகைய 10 வகிபாகங்களை 3 வகையாகப் பாகுபடுத்தலாம். அவையாவன தகவல்சார், ஆளிடை மற்றும் தீர்மானஞ்சார் வகிபாகங்களாகும்.

மின்ஸ்பேர்க்கின் கொள்கையைக் கவனத்திற் கொண்ட வகிபாகங்களின் வகைகளும் பாடசாலை அதிபருடன் தொடர்புடைய பணிகளும் அட்டவணை 3.1 இல் முன்வைக்கப்பட்டது போல பாடசாலைப் பின்னணிக்குப் பொதுமைப்படுத்தப்பட்டுள்ளது.

அட்டவணை 3.1

மின்ஸ்பேர்க் கூறியதன்படி அதிபர் ஒருவரின் வகிபாகங்களும் பணிகளும்

வகை	வகிபாகம்	பணி
தகவல்சார்	கண்காணிப்பவர்	கல்வித்திணைக்களம், அமைச்சுகள் மற்றும் ஏனைய பொருத்தமான கல்விசார் நிறுவனங்களிலிருந்து தகவல்களைத் தேடுதலும் திரட்டுதலும் கல்விசார் நூல்கள், ஆராய்ச்சிகள் மற்றும் அறிக்கைகளைப் படித்தல், ஆசிரியர், அறிவுரைப்புக் கைந்நூல், மாணவர் பாடநூல்கள் மற்றும் ஏனைய கல்விசார் சாதனங்களை தவல்களையும் புத்திமதியையும் வழங்குவதற்காக கற்றல். ஆசிரியர், பாடசாலை பிரதி அதிபர்கள் மற்றும் பிரிவுத்தலைவர்கள், பெற்றோர், பழைய மாணவர், நலன் விரும்பிகள் மற்றும் கல்வி அதிகாரிகள் போன்றோருடன் ஆளிடைத் தொடர்புகளைப் பேணுதல்
	பரப்புபவர்	ஏனையவர்களுக்குத் தகவலை அனுப்புவர் - பிரதி அதிபர்கள், பிரிவுத்தலைவர்கள் மற்றும் ஆசிரியர்கள், பதவியணியினருக்கும் மாணவர்களுக்கும் தகவல்சார் புத்திமதி வழங்குதல், வெளியேயுள்ள முகவர்களுடன் தொடர்புகளை உருவாக்குதல் கல்வித்திணைக்களத்திலும் அமைச்சிலும்

வகை	வகிபாகம்	பணி
		பாடசாலையைப் பிரதிநிதித்துவம் செய்தல்
	பேச்சாளர்	செயற்பாடுகளில் பங்கேற்றலும் பாடசாலையின் பேச்சாளராக இருத்தலும்
ஆளிடை	உருவகத் தலைவர்	பாடசாலையின் தலைவர் என்ற வகையில் விழாக்களையும் குறியீட்டுக் கடமைகளையும் நிறைவேற்றுதல், விருந்தினரை வரவேற்றல், பாடசாலை விடயங்கள் பற்றிய கலந்துரையாடலுக்குத் தலைமைவகித்தல்.
	தலைவர்	பிரதி அதிபர்கள், பிரிவுத் தலைவர்கள் , ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர் பழைய மாணவர் ஆகியோரை நெறிப்படுத்துதலும் ஊக்குவித்தலும். பிரதி அதிபர்கள் பிரிவுத்தலைவர்கள் மற்றும் ஆசிரியர்களைப் பயிற்றுவித்தலும் புத்திமதி கூறலும். மாணவருக்குப் புத்திமதி கூறுதலும் வழிகாட்டுதலும். பாடசாலைச் செயற்பாடுகள் பற்றிப் பெற்றோர், பழைய மாணவர் மற்றும் சமுதாய உறுப்பினர்களுக்கு புத்திமதி கூறுதல்.
	இணைப்பாளர்	பாடசாலையின் பிரிவுகளிலிருந்து தகவலைப் பெறுவதற்கு தகவல் இணைப்புகளைப் பேணுதல், பாடசாலையின் வெவ்வேறு தரங்கள் மற்றும் கற்பிக்கப்படும் சகல பாடங்கள் பற்றிய தகல் பெறுதல். நிறுவனத்துக்கு அப்பால் ஏனைய நிறுவனங்களுடனும் சமுதாயத்துடனும் தகவல் இணைப்பைப் பேணுதல்.
தீர்மானஞ்சார்	முயற்சியாளர்	பாடசாலையின் அபிவிருத்திக்காக பாடசாலையில் புதிய செயற்திட்டங்களை ஆரம்பித்தல். பாடசாலையின் நன்மைகருதி கிடைக்கின்ற வாய்ப்புகளை இனங்காணுதல், பாடசாலையில் அபிவிருத்திக்கான துறைகளை இனங்காணுதல், திட்டமிடலுக்கு நடவடிக்கை எடுத்தலும் அவற்றை நடைமுறைப் படுத்துதலும்.
	குழப்பங்களைக் கையாள்பவர்	நெருக்கடிகளின்போது சரிசெய்யும் நடவடிக்கைகளை எடுத்தல், பதவியணியினர், மாணவர், மற்றும் வெளியாருடன் உள்ள பிணக்குகளைத் தீர்த்தல், வெளியே நிகழும் மாற்றங்களுக்கு இசைவாதல்
	வளங்களை ஒதுக்குபவர்	பாடசாலையில் யார் வளங்களைப் பெறுகிறார் எனத் தீர்மானித்தல், பாடசாலைக்கு அவசியமான பல அட்டவணைகளைத் தயாரித்தல், இதில் பராமரிப்புக்குத் தேவையான காலாண்டு அறிக்கைகளையும் வருடாந்தம் வரவுசெலவுத் திட்டத்தையும் தயாரித்தல், பாடசாலைக்குத் தேவையான வளங்கள் பற்றிய முன்னுரிமைகளை உருவாக்குதல்.
	பேரம்பேசுபவர்	வெளி முகவர்கள் மற்றும் விநியோகத்தர்களுடன் பேரம்பேசும் போது பாடசாலையைப் பிரதிநிதித்துவம் செய்தல். பொதுவாக பாடசாலையின் விருப்பங்களைப் பாதுகாத்தல்.

1. கண்காணித்தல் வகிபாகம்

ஒரு பாடசாலையின் முகாமைத்துவத்தில் கண்காணித்தல் முக்கிய வகிபாகத்தை வகிக்கிறது. கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது, அது நேரம் மற்றும் உள்ளடக்கத்துடன் கட்டுண்டு இருப்பதால் முக்கிய பங்கு வகிக்கிறது. பாடசாலையில் கண்காணிப்புச் செய்வதற்கு எவ்வெத்துறைகளில் கண்காணிப்புத் தேவைப்படுகிறது, அத்துறைகளைக் கண்காணிக்கப் பொருத்தமான கட்டங்கள் இனங்காணப்பட்டு இடம்பெறும் முறைமை விருத்திசெய்யப்படும்.

பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடு 3.6:

நீங்கள் ஓர் அதிபர் அல்லது உங்களை ஒரு அதிபராகக் கருதிக்கொண்டு கண்காணிப்புத் தேவைப்படும் 5 துறைகளை முன்னுரிமை ஒழுங்கில் கல்வி அபிவிருத்திக்கென இனக்கண்டு கொள்க.

1.
2.
3.
4.
5.

நீங்கள் இனங்கண்ட மற்றும் உத்தேசித்துள்ள உயர் முன்னுரிமைக்கான துறைகளைக் கண்காணிப்பதற்கான கட்டங்களை ஆயத்தஞ் செய்க.

2. பரப்புபவரின் வகிபாகம்:

பதவியணியின், பெற்றோர், வெளி முகவர்கள் ஆகியோருக்கு அதிபர் தகவல்களைப் பரப்புதல் வேண்டும் என்றும் எதிர்பார்ப்புகள் ஆசிரியர், மாணவர் மற்றும் பெற்றோர் மத்தியில் உண்டு. கல்வி நிறுவனமாக இருப்பதனால், கல்விசார் தகவல்கள், பாடத்திட்டங்கள், ஆசிரியர் வழிகாட்டி, மாணவர் பாடநூல் போன்ற உதவும் சாதனங்களை விளைதிறனுடன் கூடிய கலைத்திட்ட அமுலாக்கத்திற்கான கற்பித்தல்- கற்றலுக்காக பரப்பப்படுதல் வேண்டும். பதவியினருக்குச் சுற்றறிக்கைகளையும் முகாமைத்துவத் தகவல்களையும் முகாமைத்துவத்தின் வெவ்வேறு நிலைகளில் உள்ளவர்களுக்கு முகாமைத்துவம வழங்குதல் வேண்டும். ஒரு பாடசாலை தகவல்களை வெளியே பரப்புவதும் முக்கியமானது ஏனெனில் பாடசாலையானது பெற்றோர், நலன்விரும்பிகள், மற்றும் வலயப் பணிமனை, மாகாணக் கல்வித் திணைக்களம், கல்வியமைச்சு, மற்றும் கல்வியில் ஆர்வமுள்ள ஏனைய நிறுவனங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய பாரிய

சமுதாயமாகும். அத்துடன் கலைத்திட்ட நடைமுறைப்படுத்தலின் முன்னேற்றங்களையும் கணிப்பிடுதல் வேண்டும்.

பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடு 3.7:

பாடசாலையின் அதிபர் என்ற வகையில் கற்பித்தல் மற்றும் கற்றல் சாதனங்களை ஆசிரியருக்கு எடுத்துக்கூ;வதற்கு நீங்கள் இனங்காணும் கட்டங்களையும் செயற்பாடுகளையும் கூறுக.

கட்டங்கள்	செயற்பாடுகள்
1.	
2.	
3.	
4.	
5.	

3. பேச்சாளரின் வகிபாகம்

அதிபர் நிறுவனத்தின் தலைவராக இருப்பதனால் அந்நிறுவனத்தின் பேச்சாளர் என்ற முக்கிய வகிபாகத்தை ஏற்கவேண்டும். அவர் தகவல்களை மாணவர், பெற்றோர் மற்றும் சமுதாயம் வரையில் தொடர்பாடல் செய்யவேண்டும். தொடர்பாடல் வழியே தெளிவான தகவல் பாய்ச்சலானது பல்வேறு வழிமுறைகளில் ஒழுங்கு செய்யப்படலாம்: பதவியணியினரும் மாணவர் மற்றும் பெற்றோருக்கும் வெவ்வேறு கூட்டங்களில் பேசலாம் அல்லது எழுத்துமூல ஆவணங்கள் மூலம் தொடர்பாடலாம். கற்பித்தல் மூலம் கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல் என்பதனால் விளையும் விளைவு கற்றலாகும். கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தத் தேவையான சாதனங்களும் வழிகாட்டும் முறையியல்களும் வழங்களைப் பயன்படுத்துதலும் பதவியணியினருடன் தொடர்பாடல் செய்யப்படுவதுடன், அதிபர் பேச்சாளராக முதன்மை பெறவேண்டும்.

பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடு 3.8:

அதிபர் நிறுவனத்தின் தலைவர் என்ற வகையில், தகவல்களைத் தொடர்பாடுவதற்காக பாடசாலையின் முதன்மைப் பேச்சாளராக இருத்தல் வேண்டும். பாடசாலையின் வினைத்திறன்மிக்க பேச்சாளராக விளங்குவதற்குரிய, ஆயத்தநிலைச் செயற்பாடுகளைப் பட்டியலிடுக.

1.
2.
3.
4.
5.

4. உருவகத்தலைவரின் வகிபாகம்

ஒரு பாடசாலை அதிபருக்கு உத்தியோக பூர்வமானதும் சமுதாய ரீதியானதுமான ஏற்புடமை நிறுவனத்தின் உருவகத்தலைவர் என்ற வகையில் உண்டு. பாடசாலை செயலூக்கத்துடன் கூடிய தனியாட்களைக் கொண்ட பாரிய குழுவாக விளங்குவதால், பரிசளிப்பு, விளையாட்டுப் போட்டி, பெற்றோருடனான கூட்டம், பழைய மாணவருடனான கூட்டம் போன்ற பல பொதுச் செயற்பாடுகளைக் கொண்ட வருடாந்த நாட்காட்டி இருத்தல் வேண்டும். அங்கு அதிபர் உருவகத் தலைவராக இருத்தல் வேண்டும்.

பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடு 3.9:

பரிசளிப்பு விழாபோன்ற வருடாந்த நிகழ்வொன்றில் பாடசாலையின் சிறந்த உருவகத் தலைவராக விளங்குவதற்கு, நல்ல உருவகத் தலைவராக அங்கீகாரம் பெறுவதற்கு, அதிபர் ஒருவர் செய்யவேண்டிய ஆயத்தநிலைச் செயற்பாடுகளைப் பட்டியலிடுக.

1.
2
3.
4.
5.

5. தலைவர் என்ற வகிபாகம்.

நியமிக்கப்பட்ட அதிபர், பாடசாலையின் அதிபர் என்ற உத்தியோகபூர்வ அதிகாரத்தைக் கொண்டவர். உத்தியோகம் சார்ந்த ஏற்புடைமை மட்டும் நிறுவனத்திலுள்ள மக்கள் குழுவின் தலைவராக இருப்பதற்குப் போதாது. நிறுவனத்தின் உறுப்பினர்களும் உங்களைத் தலைவராக ஏற்றுக்கொள்ள வேண்டும். மேலும் தலைவராக விளங்குவதற்கும் சிறந்த முறையில் வினையாற்றுவதற்கும் தலைமைத்துவத் திறன்கள் வலுவூட்டப்படுதல் வேண்டும்.

பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடு 3.10:

,இதுவோர் சுயகணிப்பீட்டுப் பயிற்சியாகும்.

உங்களிடமுள்ள தலைமைத்துவத் திறன்களைப் பட்டியலிடுக.

1.
2.
3.
4.
5.

பாடசாலையின் தலைவர் என்ற வகையில் செய்யக்கூடாத விடயங்களை அல்லது செயற்பாடுகளைப் பட்டியலிடுக.

1.
2.
3.
4.
5.

6. இணைப்பாளர் வகிபாகம்

பாடசாலை பல பயனாளிகளுடன் ஈடுபடுகின்ற நிறுவனம் என்பதனால் பாடசாலையின் தலைவர் பாடசாலைக்குள் உள்ள தமது பங்குதாரருடனும் வெளியேயுள்ள நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளும் இணைப்புகளை ஏற்படுத்துதல் வேண்டும். மிகமுக்கியமான இணைப்புச் செயற்பாடு என்னவெனில் கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போதுள்ள கற்பித்தல் கற்றல் செயற்பாடாகும். பாடசாலையின் தலைவர் தமது பிரதிஅதிபர் (கல்வி சார்) பிரிவுத்தலைவர்களுடன் இணைப்பை ஏற்படுத்திக் கற்றல் -கற்பித்தல் செயற்முறைகளின் இணைப்பாளராகவும், தாம் பெற்றுக்கொள்கின்ற தகவல்களை முன்னேற்றங்களைக் கணிப்பிடும் நோக்கில் பகுப்பாய்வு செய்தல் வேண்டும்.

கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது, பாடசாலையின் தலைவர் வலயக் காரியாலயம், மாகாணத் திணைக்களம், கல்வியமைச்சு ஆகியவற்றுடன் இணைப்பை ஏற்படுத்தி தகவல்களைப் பரிமாறுதல், என்பவற்றுடன் வலயக் கல்விப் பணிமனையிலுள்ள சேவைக்கால ஆலோசகர்களின் உதவியை பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட பயிற்சிக்கென பெறலாம்.

பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடு 3.11:

அதிபர் ஒருவருக்கு பாடசாலையில் இணைப்பாளர் என்ற வகிபாகம் உண்டு. பாடசாலையில் கற்பித்தல் கற்றல் செயல்முறையினை மேற்பார்வை செய்வதற்கான வினைத்திறனுள்ள இணைப்பின் 5 சாதகமான விடயங்களை இனங்காண்க.

1.
2.
3.
4.
5.

7. முயற்சியாண்மை வகிபாகம்

முயற்சியாண்மையாளர் என்பவர் புதியமுயற்சி, துணிவான செயல் அல்லது கருத்துக்களை கொண்டிருக்கும் ஒருவராவார். அத்துடன் உள்ளார்ந்த ஆபத்து மற்றும் விளைவுகளுக்கும் வகை சொல்லக் கூடியவராக இருப்பார். பாடசாலை அதிபர்கள் முயற்சியாண்மை சார்ந்த இத்தகைய ஊக்கத்தை, பாடசாலை முகாமைத்துவம் சார்ந்து கொண்டிருப்பதால், முழுமையான நலன்களுக்கு பாரிய பங்களிப்பினைச் செய்யக்கூடிய ஆற்றலைக் கொண்டிருக்கிறார். அவர்களுடைய பாடசாலைகளின் அபிவிருத்தியும் வளர்ச்சியும் மற்றும் அவ்வாறு செய்தல் கல்விசார் நிலைமாற்றத்தை அடையும். தலைமைத்துவம் மற்றும் முகாமைத்துவத் திறன்கள் முயற்சியாண்மை வெற்றிக்கான முக்கிய வெற்றிக்காரணிகளாகும். உடன்பாடான மாற்றங்கள் அபிவிருத்தியை ஏற்படுத்தும். பாடசாலையில் புதிய செயற்திட்டங்களைத் தொடங்குதல் பாடசாலையின் வெற்றிக்கு உதவும். பாடசாலையின் சிறப்புக்காகக் கிடைக்கின்ற வாய்ப்புகளை இனங்காணும் முயற்சிகள் அதிபரில் தங்சார்ந்த திட்டங்களுக்குப் பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்தலும் அவற்றை நடைமுறைப்படுத்துவதும் பாடசாலைத் தலைவரின் முயற்சியாண்மைசார் ஆற்றலில் தங்கியுள்ளது.

பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடு 3.12:

உங்களுடைய முயற்சியாண்மைசார் ஆற்றலை வெளிப்படுத்துவதற்கு நீங்கள் மேற்கொண்ட இரண்டு செயற்பாடுகளை இனங்காண்க.

1.

2.

இந்த இரண்டு செயற்பாடுகளின் விளைவாக உங்கள் பாடசாலையில் ஏற்பட்டுள்ள அபிவிருத்திகள் எவையெனக் குறிப்பிடுக.

1.

2.

3.

4.

5.

8. குழப்பத்தைக் கையாள்பவர் வகிபாகம்

பாடசாலை என்னும் நிறுவனத்திலே பலவிதமான செயற்பாடுகளில் பெருந்தொகையான வர்கள் ஊக்கத்துடன் பங்கேற்கிறார்கள். ஆசிரியர்கள் , மாணவர்கள், பெற்றோர், பழைய மாணவர்கள் , நலன்விரும்பிகள் திணைக்களங்கள் மற்றும் அமைச்சுகளைச் சேர்ந்த நிருவாகிகள் ஆகியோர் பாடசாலையோடு கிட்டிய வகையில் ஊடாடுகின்றனர். ஈடுபாடுகாட்டுகின்ற ஆளுமைகள் பல வகைப்பட்டவர்கள், பாடசாலை அதிபர்கள் நிறுவனத்தின் தலைவராக இருக்கின்றமையால், அவர் குழப்பங்களைக் கையாள்பவராகவும் பிணக்குகளைத் தீர்ப்பவர்களாகவும் விளங்குதல் வேண்டும். தொகையினடிப்படையில் பார்க்கும் போது மாணவர்களே அதிகம். பெற்றோர்கள் இடையிடையே பாடசாலைக்கு வருவார்கள். ஆனால் அவர்கள் ஒன்றுசேரும்போது வல்லமைமிக்க சக்தியாக உருவாகின்றனர். மாணவர், பிரதி அதிபர்கள், தர இணைப்பார்கள் , பாட இணைப்பாளர்கள் மற்றும் அதிபர்களுடன் அடிக்கடி ஊடாடுபவர்கள் ஆசிரியர்களே. குழப்பங்கள், கவனமாற்றங்கள், கட்டுப்பாடின்மை என்பவை பாடசாலையிலே நெருக்கடி நிலைமைகளுக்கு இட்டுச்செல்லும். பாடசாலையின் தலைவர் இந்நிலைமைகளைத் தீர்ப்பதற்கு அல்லது பரிகாரம் தேடுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். சில சந்தர்ப்பங்களிலே அதிபர் பதவியணியினர் மத்தியிலுள்ள பிணக்குகளையும தீர்க்க வேண்டும். கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது, ஆசரியர்களுக்குப் பாடங்களை ஒப்படைத்தல், சில நேரங்களில் ஆசிரியர்களுக்கு தரங்களை ஒப்படைத்தல் மற்றும் நேரசூசியை தயாரிப்பதில் கூட உடன் பாடின்மைகள் எழுகின்றன. அவ்வாறான குழப்பங்களை எதிர்பார்ப்பதும் அவற்றைத் தந்திரமாகக் கையாளுதலும் அதிபரின் வகிபாகத்தில் உள்ளன.

பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடு 3.13:

சாதாரண பாடசாலையொன்றில் மாணவர் கட்டுப்பாடு பொதுவானதொரு சவாலாகும். சில பாடசாலைகளிலே மாணவருக்கான ஒழுக்கக்கோவைகள் உள்ளன. ஓர் அதிபர் என்ற வகையில, உங்கள் பாடசாடலையில் ஒழுக்கம் சார்ந்த பிரச்சினைகளைக் குறைக்க நீங்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளைப் பட்டியற்படுத்துக.

1.

2.

3.

4.

5.

9. வளங்களை ஒதுக்குபவர் என்னும் வகிபாகம்.

பாடசாலைகளுக்கு அதிகமான வளங்கள் அவற்றின் கற்றல் கற்பித்தல் செயல்முறைகளுக்கும் இணைக் கலைத்திட்டச் செயற்பாடுகளுக்கும் தேவைப்படுகின்றன. ஒரு பாடசாலையில், பாடசாலையின் தலைவர் வள ஒதுக்கீடுகள் பற்றித் தீர்மானிக்கிறார். வளங்களைப் பெற்றுக்கொள்ளுதல், வளங்களை ஒதுக்கீடு செய்தல், வளங்களைக் கவனமாகப் பயன்படுத்துதல் கற்பித்தல், கற்றல் செயற்முறையின் அபிவிருத்திக்கான வளங்களை வழங்குவதில் தாக்கம் மற்றும், இத்தகைய வளங்களை வழங்குவதன் விளைவாக நிறுவனத்தில் ஏற்படும் அபிவிருத்தி ஆகிய யாவும் அதிபரின் வகிபாகத்தில் தங்கியுள்ளன. நிதி வளங்கள், மனித வளங்கள், பௌதீக வசதிகள் மற்றும் வரவு செலவுத்திட்ட ஏற்பாடுகள் மற்றும் அவற்றைக் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் பராமரித்தலுக்குத் தேவையான ஆவணப்படுத்தல் பாடசாலைத் தலைவரின் செயற்பாடுகளில் சிலவாகும்.

பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடு 3.14:

பாடசாலையில் வளங்களை ஒதுக்கீடு செய்யவேண்டுமென உங்களால் எதிர்பார்க்கப்படும் 6 துறைகளை முதன்மை ஒழுங்கில் பட்டியலிடுக.

1.
2.
3.
4.
5.

மேலே பட்டியல் படுத்தப்பட்ட துறைகளை இனங்கண்டு, பாடசாலையில் வளங்களை வழங்குவதன் பாதிப்புகள் எவ்வாறுள்ளனவெனக் கணிப்பிடப்பட்டுகிறது என்பதை விளக்குக.

10. பேரம் பேசுபவர் என்னும் வகிபாகம்

கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு, ஒரு பாடசாலைக்கு மனித வளங்கள், பௌதிக மற்றும் நிதி வளங்கள் தேவை. பாடசாலையின் அதிபர், கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான வளங்களைப் பெற்றுக்கொள்வதற்குப் கல்வி அதிகாரிகளுடன் பேரம்பேசுதல் வேண்டும். பாடசாலையின் தலைவர் என்ற வகையில் அதிபர் பல கூட்டங்களிலே பாடசாலையைப் பிரதிநிதித்துவம் செய்யவேண்டும். பாடசாலைக்கு நிதியைப் பெற்றுக்கொள்வதிலும் ஆசிரியர்களை ஆயத்தஞ் செய்வதற்கும் பாடசாலையின் தலைவர் பாடசாலையைப் பிரதிநிதித்துவம் செய்வதுடன், பாடசாலையின் தேவைகளை நிறைவு செய்வதற்காகவும் தொடர்புடைய அதிகாரிகளுடன் பேரம்பேசுதல் வேண்டும். பாடசாலைக்கான கொள்வனவு செய்யும்போது, அதிபர் பாடசாலைக்கு சிக்கனமானவையாக இருக்கும் வகையில் சிறந்தவற்றை இனங்கண்டு செலவு தொடர்பாக பேரம்பேசுதல் வேண்டும்.

பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடு 3.15:

அநேகமான விடயங்களில் பாடசாலையின் அதிபர், பாடசாலையின் ஒழுங்கான தொழிற்பாட்டுக்கெனத் தேவையான பதவியணியினரைப் பெற்றுக் கொள்வதற்கெனப், பாடசாலையைப் பிரதிநிதித்துவம் செய்யவேண்டும். தேவையான பதவியணியினரைப் பெற்றுக்கொள்வதற்கு, பாடசாலையைப் பிரதிநிதித்துவம் செய்வதற்கு முன்னர் பாடசாலையின் அதிபர் எடுக்கவேண்டிய ஆயத்த நடவடிக்கைகளைத் தீர்மானிக்குக.

1.
2.
3.
4.
5.

அதிபருடைய தலைமைத்துவ வகிபாகம் பணிகளும்

தலைமைத்துவம் தொடர்பாக முக்கியமானது என்னவெனில் ஒப்படைக்கப்பட்ட பணிகளைப் பூர்த்தி செய்வதாகும. தலைவர் என்ற வகையில், பணிகளை அடைவதற்கான சிறந்த முறைகளை அறிவதும் நிறுவனத்தினால் அடையப்பட வேண்டிய இலக்குகளுடன் ஒன்றிணைப்பதும் தலைவரைப் பொறுத்தது

ஒரு நிறுவனத்தில் பணிகளை நிறைவேற்றுவதில் மூன்று வகையான தேவைகளைக் கவனத்தில் கொள்ள வேண்டும். அவையாவன

- நிறுவனஞ்சார் தேவைகள்
- குழுக்களின் தேவைகள் மற்றும்
- தனியாள்த் தேவைகள்

இருப்பினும், நிறுவனத்தின் தேவைகளை ஒவ்வொரு தனியாளுடைய தேவைகளுடன் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும் என்பதுடன் அத்தேவைகளை ஒன்றிணைக்கும் பொழுது தலைவரை மக்கள் சார்பானவராகக் கருதுதல் வேண்டும். பணிகளை நிறைவேற்றுவதற்கு மக்கள் சார்பாகவும் பணிசார்பாகவும் அணுகுமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறானதொரு ஒன்றிணைந்த அணுகுமுறையானது பாடசாலை போன்ற நிறுவனத்தின் நோக்கங்களை அடைவதில் வெற்றிக்கு இடமளித்தல் வேண்டும்.

1. பாடசாலைப் பின்னணியில் பணிகளை நிறைவேற்றுவதற்கான வழிகாட்டல்கள்

பாடசாலையின் கற்பித்தல் கற்றல் செயல்முறைகளும் இணைக் கலைத்திட்டச் செயற்பாடுகளும், பாடசாலையின் கல்விச் செயற்பாட்டில் மையமாக விளங்குகின்றன. பணிகள் செயற்பாடுகளாகும். அவை பாடசாலைப் பின்னணியில் தனியாகவோ அல்லது குழுவாகவோ நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

ஒரே தொகுதிப் பணிகளை மேற்கொள்ளும் வெவ்வேறு குழுவினரைப் பாடசாலை முறைமையில் இனங்காணலாம். கூட்டுறவு முறையில் கற்பிக்கும் செயல்முறையை குழுவாக நிகழ்த்தலாம்.

பாடசாலைத் திட்டத்தை ஆயத்தஞ் செய்யும் வேளையில் நிறைவேற்ற வேண்டிய செயற்பாடுகளை இனங்காணும்போது அவை குழுக்களாக்கப்படலாம்.

பாடசாலையின் கற்பித்தல் கற்றல் செயல்முறைகளைக் கவனத்திற் கொள்ளும்போது அவை பின்வரும் குழுக்களை உள்ளடக்கும் :

- ஒரு தரத்திற்குரிய (grade) பாட ஆசிரியர்கள்
- ஒரு தரத்திற்குரிய சகல ஆசிரியர்கள்

- கலைப்பிரிவிலுள்ள சகல சிரேஷ்ட இடைநிலை ஆசிரியர்கள்
- வர்த்தகப் பிரிவிலுள்ள சகல சிரேட்ட இடைநிலை ஆசிரியர்கள்
- விஞ்ஞானப் பிரிவிலுள்ள சகல சிரேட்ட இடைநிலை ஆசிரியர்கள்
- ஆரம்பப்பிரிவிலுள்ள சகல ஆசிரியர்களும்

பாடசாலையின் இணைக்கலைத்திட்டச் செயற்பாடுகளுக்குரிய குழுக்கள் பின்வருவோரை உள்ளடக்கும் :

- விளையாட்டுச் செயற்பாடுகளுக்குப் பொறுப்பான ஆசிரியர்கள்
- கழகங்களுக்குப் பொறுப்பான ஆசிரியர்கள்

.இரண்டு பாடசாலைகள் ஒரேவிதமாக இருக்கமுடியாது. பாடசாலைகள் பல வளங்களை - மனித, பௌதீக மற்றும் நிதிவளங்கள் - கொண்டுள்ளன. ஆயினும் ஏதாவதொரு முறைமையையும் சகல பாடசாலைகளுக்கும் பொதுமைப்படுத்துவது சாத்தியமற்றது. பொதுவாக சகல பாடசாலைகளிலும், பாடசாலையின் முன்னேற்றத்திற்காக அதன் தலைவர் பணிகளைச் செய்தெடுக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

2. பாடசாலைப் பின்னணியில் பணிகளைச் செய்தல்

பின்வரும் வழிகாட்டல்கள், ஓர் அதிபருர் பாடசாலையில் குழுக்கள் அல்லது தனியாட்கள் மூலம் பணிகளைச் செய்தெடுப்பதற்கு முன்மொழியப்படுகின்றன. இவை பாடசாலைத் தலைவரின் தலைமைத்துவ ஆற்றலை உறுதிசெய்யும். மேலே தரப்பட்டுள்ள பதவிநிலைகளில் அல்லது குழுக்களில் உள்ள தனியாட்களுக்கு பின்வருவனவற்றைப் பிரயோகிக்கலாம். உதாரணம்: ஒரு தரத்திலுள்ள ஒரு பாடத்திற்கான ஆசிரியர் குழு.

பாடசாலையின் அதிபர், பிரதி அதிபர், பிரிவுத் தலைவர், தர இணைப்பாளர், பாட இணைப்பாளர் ஆகியோர் ஒப்படைக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்காகப் பின்வரும் வழிகாட்டல்களை பின்பற்றலாம்.

வழிகாட்டல்கள் கீழே தரப்படுகின்றன:

i. **வேலையைத் திட்டமிடல்**

- பணியை வரையறை செய்தல்
- தகவல் வழங்குதல்
- அடையவேண்டிய இலக்குகளை வரையறை செய்தல்
- திட்டமொன்றைத் தயாரித்தல்

ii. குழுவுக்கு எடுத்துரைத்தல்

- இலக்குகளையும் திட்டத்தையும் பற்றிக் குழுவுக்குக் கூறுதல்
- திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஆற்றவேண்டிய பட்டியலையும் கட்டங்களையும் குழுக்களைக் கொண்டு தயாரிக்கச் செய்தல்
- ஒவ்வொருவரும் என்ன செய்யவேண்டும் என்பதை உறுதி செய்தல்
- யார் எதனை எப்போது செய்கிறார் என்னும் விபரங்களைக் குறிப்பிடுதல்
- குழுவின் பலத்தினை ஒழுங்குசெய்தல்

iii. செயலாற்ற உதவுதல்

- குழுக்கள் பணியை மேற்கொள்ள இடமளித்தல்
- உதவி வழங்குதல்
- தெளிவுபடுத்துதல்
- ஆர்வங்காட்டுதலும், வேலையைத் தொடர இடமளித்தலும்

iv. ஆதரவு வழங்குதல்

- ஒவ்வொரு உறுப்பினரதும் தனிப்பட்ட பங்களிப்பினை அங்கீகரித்தல்
- குழு மற்றும் தனியாள் வினையாற்றலை ஊக்குவித்தல்
- தேவையானவிடத்துக் கட்டுப்பாடு
- குழுவுணர்வை உருவாக்குதல்
- ஆதரவு தெரிவிப்பதன்மூலம் பதட்டத்தைத் தணித்தல்
- குழுக்களில் இடம்பெறும் உடன்பாடின்மைகளுக்கு இணக்கங்காணல்.

v. கட்டுப்படுத்தலும் பருவரீதியாக மீளாய்வு செய்தலும்

- இயலுமானவிடத்து தனியாள் மற்றும் குழுவின் தராதரங்களை வரையறை செய்தல்
- வேலையின் தராதரத்தினை பருவ அடிப்படையில் சரிபார்த்தல்
- நிறுவனத்தின் இலக்குகளையும் குறிக்கோள்களையும் அவைதற்காகச் செய்யப்படும் செயற்பாடுகளை உறுதிசெய்தல்

vi. பின்னூட்டல் மற்றும் தகவலை வழங்கல்

- குழுவுக்குப் புதிய தகவலை வழங்குவதன் மூலம் பணிகளையும் திட்டத்தையும் மேலும் விளக்குதல்
- தனியாட்களும் குழுக்களும் தமது இலக்குகளை எவ்வளவு தூரம் அடைந்துள்ளனர் என்பதை அறியத்தருதல்

- பணியை நோக்கிய செயலை மேம்படுத்துவதற்கு குழுவுடன் இணைந்து மீளாய்வு செய்தல்

vii. பருவரீதியாக மதிப்பீடுதலும் இற்றைப்படுத்தலும்

- புதிய கருத்துக்களை பெற்றுக்கொள்ளல் அல்லது வழங்குதல்
- புதிய முறைகளை பிரேரித்தலும் நடைமுறைப்படுத்துதலும்
- தனியாள் மற்றும் குழுவின் வினையாற்றலை மதிப்பிடுதல்
- உறுப்பினர்களின் சுயமதிப்பீட்டுக்கு உதவுதல்
- தனியாட்களும் குழுக்களும் நிறுவன இலக்குகளை அடைவதன் மூலம் தமது சொந்த இலக்குகளை அடைதல்



Figure 3.1. *பணி நிறைவேற்று வட்டம்*

3. பாடசாலைப் பின்னணியில் பணிகளைச் செய்தெடுப்பதற்குரிய மக்கள்சார் அணுகுமுறை

பாடசாலையின் அபிவிருத்திக்காகப் பணிகளை நிறைவேற்றும்போது, உறுப்பினர்களின் தேவைகள் கவனத்தில் எடுக்கப்படுதல் வேண்டும். இந்த அணுகு முறையானது ஏதாவது நிறுவனத்தில் பணிகளைச் செய்தெடுப்பதற்குரிய மக்கள்சார் அணுகுமுறையென அழைக்கப்படுகிறது.

மக்கள்சார் அணுகுமுறையின் முக்கிய அம்சங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன:

- உங்கள் பதவியணியினரை ஒவ்வொருவராக அறிதல்

- அவர்களுடைய தேவைகள் எவை அவர்களுடைய ஆர்வம் மற்றும் அவர்களை ஊக்குவிப்பவை எவையெனக் கண்டுகொள்ளல்
- பலம் மற்றும் நலிவுகளைப் பகுப்பாய்வு செய்தல். பலங்களைப் பயன்படுத்த வாய்ப்புகளை வழங்குதலும் நலிவுகளை இழிவளவாக்க உதவுதலும்
- உயர்மட்டத்தில் பலத்தைப் பயன்படுத்த வாய்ப்புகளை வழங்குதல். ஆனால் அதனைக் கூடுதலாகச் செய்யக்கூடாது
- நலிவானவர்களை அவர்களுடைய துறைகளில் மேம்படுத்துவதற்கு, உதவக்கூடியவர்களுடன் கூட்டாக வேலைசெய்ய வழிகாட்டலாம்.
- சிறந்த வினையாற்றல்களுக்கு உடனடியாக அங்கீகாரம் வழங்குதல்
- உறுப்பினர்கள் தமக்குரிய வெகுமதிகளை பெறுகின்றமையை உறுதிசெய்தல்
- பொதுவிடத்தில் புகழ்தலும் தனிப்பட்டமுறையில் நலிவுகளைச் சுட்டிக்காட்டுதலும்
- பாடசாலையின் வெற்றியை வெளிப்படையாக அறிவிப்பதன் மூலம் உறுப்பினர் ஆர்வத்தை உயிரோட்டமுள்ளதாக்குதல்
- தனிப்பட்ட உறுப்பினர் அல்லது குழுக்கள் சிறந்த கருத்துக்களையும் நடைமுறைகளையும் வழங்குவதன் மூலம் உற்சாகப்படுத்தவும்.
- தகவலின் ஆதாரமாக விளங்குதல்.

a. பணி நிறைவேற்றுவட்டம் - கற்கும் சமுதாயம் ஒன்றை உருவாக்கும் பணி

கலைத்திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துதல் கற்கும் சமுதாயம் ஒன்றுக்குப் பாடசாலையை இட்டுச் செல்லும். கற்கும் சமுதாயத்தை உருவாக்கும் பணிக்கு பணி நிறைவேற்று வட்டத்தினைப் பிரயோகிக்கும் கட்டங்கள் கீழே தரப்பபட்டுள்ளன.

அட்டவணை 3.2.

கற்கும் சமுதாயமொன்றை உருவாக்கும் பணிகள்

1	பணியைத் திட்டமிடல்	
	பணியை வரையறை செய்தல் தகவல் வழங்குதல் அடையவேண்டிய இலக்குகளை வரையறை செய்தல் செயற்படும் திட்டத்தை தயாரித்தல்	பணி: கற்கும் சமுதாயத்தை உருவாக்குதல் கற்கும் சமுதாயத்தை உருவாக்க வேண்டுவது ஏன்? கற்கும் சமுதாயம் என்பது என்ன? கற்கும் சமுதாயத்தை ஊக்குவிப்பது எவ்வாறு? முழுப்பாடசாலையும் ஒரு கற்கும் சமுதாயம் பாடம் மற்றும் தரரீதியான குழுக்கள் பாடசாலை மாணவர்களின் கற்றலை மேம்படுத்தல் கூட்டுறவுக் கற்பித்தலும் கற்றலும் கற்பித்தல் கற்றலுக்கான வளங்கள் கற்றலை மேம்படுத்துவதற்கான திட்டத்தை பாடம்

		மற்றும் தரரீதியான ஆயத்தம்
2	குழுவுக்கு விளக்கமளித்தல்	
	நோக்கங்கள் மற்றும் திட்டம் பற்றி விளக்குதல் குழுவின் பட்டியலைத் தயாரித்தல், திட்டத்தை நிறைவேற்றும் பொழுது செய்யவேண்டிய கட்டங்களைத் தயாரித்தல் ஒவ்வொருவரும் செய்யவேண்டியவற்றை அறிந்துள்ளனர் என்பதை உறுதி செய்தல் யார் எதனை எங்கே எப்பொழுது செய்கிறார் என்ற விபரங்களைக் குறிப்பிடுதல் குழுவின் பலத்தினை ஒழுங்கு செய்தல்	முழுமையான திட்டம்: பாடரீதியானதும் தரரீதியானதும் பதவியணியினருக்கு வழங்குதல், நோக்கங்களை விளக்குதல். பாடசாலையில் கற்கும் சமுதாயத்தை உருவாக்குதல் குழுவாக திட்டத்தை ஆராய்ந்து கலந்துரையாடி, பதவியணியினரால் செய்யப்பட வேண்டிய கட்டங்களை ஆயத்தஞ் செய்தல் தேவைப்படும்போது தெளிவான விளக்கத்தைப் பெறுதலும் திட்டத்தை விளக்கிக் கொள்ளலும் ஒவ்வொருவரிடமும் அவர்கள் திட்டத்தை விளக்கிக் கொண்டார்களாவென கேளுங்கள். தேவையான விளக்கங்களையும் பின்னூட்டல்களையும் வழங்குக. அவர்கள் உடன்பாடுகள் உரியவர்களுக்குப் பணிகளை ஒப்படையுங்கள், செய்யப்படவேண்டியவை பற்றியும் எங்கே எப்போது ஏற்புடைய கோட்டியாக வேலை செய்ய ஒழுங்கமைக்குக.
3	வினையாற்ற உதவுதல்	
	பணிகளை மேற்கொள்ள கோட்டிகளுக்கு இடமளித்தல் உதவியை வழங்குக. தொடர்ந்து செய்ய ஏற்ற விளக்கங்களை வழங்குக. ஆர்வம் காட்டுக மற்றும் வேலை தொடர்ந்து செல்ல இடமளித்தல்	சகல தகவல்களும் அறிவுறுத்தல்களும் வழங்கிக் கொண்டதும், ஒப்படைத்த பணியை செய்ய குழுவுக்கு இடமளியுங்கள். தேவைப்படும்போது உதவியையும் வழிகாட்டலையும் வழங்குவதற்குத் தேவையான போதனை ஆளணியினரை வழங்குக. அதிபரும் ஏனைய வளக்குழுவும் பணியை மேற்கொள்ளும்போது விளக்கம் வேண்டுமாயின் அவற்றைக் கிடைக்கச் செய்தல் அதிபர் மற்றும் வளக்குழுவின் ஆர்வம், பணிகளைச் செய்ய ஊக்குவிப்பதாக இருக்க வேண்டும்.
4	ஆதரவு வழங்குதல்	
	ஒவ்வொரு உறுப்பினரதும் தனிப்பட்ட பங்களிப்பை அங்கீகரித்தல் தனியாள் மற்றும் குழு வினையாற்றுகையை ஊக்குவித்தல் குழு உணர்வை உருவாக்க தேவையானபோது கட்டுப்பாடு	ஒவ்வொரு உறுப்பினரதும் பங்களிப்பை அங்கீகரித்தல் குழுவைத் தூண்டுதலும் சிறப்பாக வினையாற்றுதலும் முக்கியமானது. பணிகளை நிறைவேற்றியெடுப்பதில் அதிபர் மக்கள் நோக்குடையவராக இருத்தல் தனியாட்களையும் குழுக்களையும் பணிகளை நிறைவேற்றச் செய்வதில் ஊக்கல் பிரதான வகிபாகத்தைக் கொண்டுள்ளது என்பதால்

	மகிழ்ச்சியை காட்டுவதன் மூலம் பதட்டத்திலிருந்து விடுபடுதல் குழுக்களில் உள்ள உடன்பாடின்மைகளுக்கு இணக்கங்காணுதல்	தொடர்ச்சியான ஊக்கல் அவசியமானது. நிறுவனரீதியான அபிவிருத்திக்கும் பணிகளைச் செய்தெடுப்பதற்கும் கட்டுப்பாடு அவசியம். அன்றேல் கட்டுப்பாடின்மை முன்னேற்றத்தை தடுத்துவிடும் பதட்டம் முன்னேற்றத்தைத் தடுக்கும் மகிழ்ச்சியும் ஒத்துச்செல்லும் பங்குதாரர்கள் ஒப்படைத்த பணியைச் செய்ய உதவும். பணிகளைக் குழுவாகச் செய்யும் போது உடன்பாடின்மைகள் எழும். பரஸ்பர புரிந்துணர்வும் ஒருவருக்கொருவர் மதிப்பு வழங்குவதும் உடன்பாடின்மைகளை தடுத்து உடன்பாட்டுக்கு வர உதவும்.
5	**அவ்வப்போது நிகழும் கட்டுப்பாடும் மீளாய்வும்**	
	சாத்தியமான வேளைகளில் தனியாள் மற்றும் குழுத் தராதரங்களை வரையறுத்தல் வேலையின் தரத்தை அவ்வப்போது சரிபார்த்தல் செய்யப்படும் செயற்பாடுகள் யாவும் இலக்குகளையும் நோக்கங்களையும் அடைவுக்காகவென உறுதிப்படுத்துதல்	பணிகளைச் செய்வதற்குத் தராதரம் அவசியமானது. ஆகவே விளையாற்றலின் தரத்தைக் கணிப்பிடலாம். பணியைச் செய்கின்ற தனியாள் மற்றும் குழுவுக்கு எதிர்பார்க்கப்படும் தராதரம் கூறப்பட வேண்டும். அவ்வப்போது சரிபார்த்தல் எவ்வாறு பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன மற்றும் வினையாற்றப்பட்டுள்ளனவென அறிதல் முக்கியமானது. எனவே பணிகளும் செயற்பாடுகளும் நிறுவனத்தின் முழுமையான இலக்குகளையும் நோக்கங்களையும் சார்ந்து நிறைவேற்றப்படும் எனலாம்.
6	**பின்னூட்டலையும் தகவலையும் வழங்குதல்**	
	பணிகளை மேலும் தெளிவுப்படுத்துவதுடன் குழுக்களுக்குப் புதிய தகவல்களை வழங்குவதன் மூலம் திட்டமிடல் தனியாள் மற்றும் குழு இலக்குகளை அவர்கள் எவ்வளவு தூரம் அடைந்துள்ளனர் என உறுப்பினர்களுக்கு அறிவித்தல். பணியை நோக்கிய செயல்களின் முன்னேற்றத்தைக் குழுவுடன் சேர்த்து மீளாய்வு செய்தல்.	பணிகள் தொடர்பாக வினையாற்றுவதற்கு, அவை பற்றிய தெளிவை மேலும் பெறுக்குவதற்கு அதிகமான தகவல்களைத் தனியாட்களுக்கும் குழுக்களுக்கும் வழங்கப்படுதல் வேண்டும். அநேகமான சந்தர்ப்பங்களில் சகல தகவல்களையும் வழங்கமுடியாது. தகவலை அளவளவாக கொடுப்பது, நிறைவேற்றப்பட வேண்டிய பணிக்கான தகவலை ஞாபகத்தில் வைத்திருக்க உதவும். திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு அதிபரும் வளவாளரும், ஒப்படைக்கப்பட்ட பணிகளின் வினையாற்றலில் தளியாள் மற்றும் குழுக்களின் முன்னேற்றத்தை எடுத்துக் கூறலாம். ஒவ்வொரு பணியின் முன்னேற்றம் பற்றியும் மீளாய்வு செய்தல் முக்கியமானதுடன் நிலைமையைக் கணிப்பிட்டு எதிர்காலத்தில் செயற்பாடுகளை மேம்படுத்தும் நடவடிக்கை எடுத்தல்.
7	**அவ்வப்போது மதிப்பீடு செய்தலும் இற்றைப்படுத்தலும்**	

	புதிய கருத்துக்களை பெறுதல் அல்லது வழங்குதல் புதிய முறைகளை முன்வைத்தலும் நடைமுறைப்படுத்தலும் குழு மற்றும் தனியாள் வினையாற்றலை மதிப்பிடுதல் உறுப்பினரின் சுய மதிப்பீட்டுக்கு உதவுதல் தனியாளும் குழுவும் நிறுவன இலக்கினை அடைவதன் மூலம் தமது இலக்கினை அடைதல்.	புதிய கருத்துக்களை வளவாளர்கள் அல்லது ஆசிரியர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளல். இவை பணிகளைச் செய்ய உதவும். புதிய புத்தாக்க முறைகள் பிரேரிக்கப்படும்போது, அல்லது இனங்காணப்பட்டால், அவற்றை உத்தேசப் பணிகளிலிருந்து சிறந்த அடைவுகளைப் பெற உபயோகிக்கலாம். குழுக்களுக்கும் மற்றும் தனியாட்களுக்கும் ஒப்படைக்கப்பட்ட பணிகளின் வினையாற்றலை மதிப்பிடுவதற்கு முறையியல்களையும் நியதிகளையும் கொண்டிருத்தல். சுய மதிப்பீட்டுக்கான நியதிகளையும் கொண்டிருத்தல்.

பாடசாலையின் பகிர்ந்தளிக்கப்பட்ட தலைமைத்துவப் பதவிகள்

இலங்கையின் பாடசாலை முறைமையிலுள்ள சில தலைமைத்துவப் பதவிகள் அதிபரால் அதிகாரத்துடன் கூடிய வகையில் பகிர்ந்தளிக்கப்படக் கூடியவை கீழே தரப்பட்டுள்ளன.

1. பிரதி அதிபர்கள்

பிரதி அதிபர்கள் பாடசாலை வகைக்கேற்ப நியமிக்கப்படுகிறார்கள். IAB மற்றும் IC பாடசாலைகள் இரண்டு பிரதி அதிபர்களையும் ஏனையவை ஒருவரையும் கொண்டிருக்கும் .

a. பிரதி அதிபர் (நிருவாகமும் நிதியும்)

1AB மற்றும் 1C பாடசாலைகளிலும் சில வகைப் பாடசாலைகளிலும் இரண்டு பிரதி அதிபர்கள் நியமிக்கப்படுகிறார்கள். ஒரு பிரதி அதிபர் நிருவாகம் மற்றும் நிதிக்கு உள்ளார்.

பிரதி அதிபர் (நிருவாகமும் நிதியும்) ஒப்படைக்கப்பட்ட பணிகள் பின்வருமாறு.

i. **நிருவாக மற்றும் நிதிசார் பொறுப்புகளில் அதிபருக்கு உதவுதலும் ஆசிரியருக்கும் மாணவருக்குமான ஆதரவுச் சேவைகளும்.**

ii. **நிதி முகாமைத்துவத்தில் அதிபருக்கு உதவுதல்**

வருமானம்:

- பாடசாலை அபிவிருத்திச் சபையின் நிதிசார் செயற்பாடுகள்
- பாடசாலை வசதிக் கட்டணங்கள்
- விடுதிக் கட்டணம்

- விளையாட்டு மற்றும்
- தராதர உள்ளிடுகள்
- கணினிக் கற்கை நிலைய நிதி

செலவு:

- நூலகம், விளையாட்டு மற்றும் ஏனைய விளையாட்டுக்குரிய செலவுகள்
- நாளாந்த வேலையாட்கள் மற்றும் சிற்றூழியருக்கான செலவுகள்
- பாடசாலைக்கான கொள்வனவு (விளையாட்டுக்கான பொருட்கள், காகிதாதிகள், சாதனங்கள்.

iii. சகல பொருட்களையும் கட்டிட வசதிகளையும் பராமரித்தல்

பதிவேடுகளைப் பராமரித்தல்

- பதிவேட்டுப் பராமரிப்பு
- ஆய்வுகூடப் பதிவேடுகள்
- ஏனைய பிரிவுகளுக்குரிய பதிவேடுகள்
- விடுதி வசதிகளைப் பராமரித்தல்
- ஆய்வுகூடம், கணனிக் கற்றல் நிலையம் மற்றும் தொழில்நுட்பப் பிரிவுகளுக்குரியவற்றைப் பராமரித்தல்.

iv. பின்வரும் விடயங்களில் அதிபருக்கு உதவுதல்:

- மாணவரைச் சேர்த்தல்
- பதவியணியினர் மற்றும் மாணவரின் வரவு
- ஆசிரியர் மற்றும் ஏனைய வகைப் பதவியணியினரின் விடுமுறை
- ஆசிரியரின் சம்பளமும் ஏனைய பதிவேடுகளையும் பராமரித்தல்
- அலுவலகப் பராமரிப்பும் தரவுவங்கிப் பராமரிப்பும்
- அமைச்சு, கல்வித் திணைக்களம், வலயக் கல்வி அலுவலகம் மற்றும் ஏனைய வெளிநிலை முகவர்களுடன் தொடர்புகள்
- மாணவர் மற்றும் ஆசிரியரின் வரவு இடாப்பு பராமரிப்பு

v. பாதுகாப்பு ஆளணியினர் மற்றும் உதவிப் பதவியணியாளர் ஆகியோருக்கு கடமைகளை ஒப்படைத்தலும் அவர்களுடைய மேற்பார்வையும்

vi. மாணவர் மற்றும் ஆசிரியரின் ஒழுக்கக் கட்டுப்பாடு

- ஒழுக்கக் கட்டுப்பாட்டுக் குழுக்களின் தலைவர்
- மாணவர் தலைவர், குழுவின் தலைவர்

- கல்விக்கும் தொழில் வழிகாட்டல் பிரிவு நிலையத்துக்கும் வழிகாட்டலை வழங்குதல்

vii. கட்டிட மேற்பார்வையைக் கவனித்தல், புகையிரத ஆணைப் பத்திரம் வழங்குதலும், பதிவேடுகளைப் பேணுதலும், தொலைபேசி, மின்சாரம் மற்றும் நீர் விநியோகம் மற்றும் அவற்றுக்கான பற்றுச்சீட்டுக்களுக்கான கட்டணங்களைச் செலுத்துதலும் அபிவிருத்தி திட்டத்தை ஆயத்தஞ் செய்தல் மற்றும் வருடாந்த அமுலாக்கல் திட்டம் ஆகியவற்றைத் தயாரிப்பதற்கு அதிபருக்கு உதவதல்

பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடு 3.16:

பிரதி அதிபரின் (நிருவாகமும் நிதியும்) பணிகள் மேலே தரப்பட்டுள்ளன. அப்பணிகளை ஆராய்ந்து, பாடசாலையின் கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதனை பிரதி அதிபர் எவ்வாறு மேம்படுத்தலாமென விளக்குக.

b. பிரதி அதிபர் (கல்வித் தராதர அபிவிருத்தி)

பிரதி அதிபரின் (கல்வித் தராதர அபிவிருத்தி) பணிகளாவன:

i. பாடசாலையில் கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஒழுங்கமைப்பு, நெறியாள்கை மற்றும் மேற்பார்வை என்பவற்றுக்கு அதிபருக்கு உதவுதல்

- கல்விசார் பதவியணியினரின் நேரசூரிகையைத் தயாரித்தல்
- பாடங்கள், தரங்கள் மற்றும் பிரிவுகளுக்கு ஆசிரியர்களை நியமித்தல்
- பாடசாலையில் கற்பித்தல் கற்றலை மேற்பார்வை செய்தல்.
- ஆசிரியர்களின் தவணைக்கான திட்டங்கள், வாராந்த மற்றும் நாளாந்தக் கற்பித்தல் குறிப்புகளை அனுமதித்தலும் பதிவேடுகளைப் பேணுதலும்.
- கற்பித்தல் பதவியணியினரை மேற்பார்வை செய்தல் .
- வகுப்பறையில் செய்யப்படும் வேலையை மேற்பார்வை செய்தல்.
- ஆசிரியரைக் கணிப்பிடுதல்.
- பாடசாலை மட்டக் கணிப்பீடுகளின் மேற்பார்வையும் பதிவேடுகளைப் பேணுதலும்.
- பாடசாலையின் உள்ளகப் பரீட்சைகளையும் சோதனைகளையும் ஒழுங்குப்படுத்துதல்.

- வெளியகப் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்களை ஆயத்தஞ்செய்தலும் அனுப்புதலும்.
- பரீட்சை முடிவுகளைப் பகுப்பாய்வு செய்தலும் பாடசாலை முடிவுகளிலுள்ள நலிவுகளை வெற்றி கொள்ளப் பரிகார நடவடிக்கைகளை அமுலாக்கலும்.
- இணைக் கலைத்திட்டச் செயற்பாடுகளை ஒழுங்கமைத்தலும் மேற்பார்வை செய்தலும்
- பிரிவுத் தலைவர்கள், தரஇணைப்பாளர்கள் மற்றும் பாட இணைப்பாளர்களுக்குப் புத்திமதி கூறுதல்.

ii. கல்விசார் வழிகாட்டல் மற்றும் தொழில் வழிகாட்டல் போன்ற விசேட நிலையங்களை ஒழுங்கமைத்தலும் அவற்றின் செயற்பாடுகளுக்கு நெறிப்படுத்தல் வழங்குதலும்.

iii. கழகங்கள் மற்றும் சங்கங்களை ஒழுங்கமைத்தல், நெறிப்படுத்துதல், மற்றும் மேற்பார்வை செய்தல்.

iv. பரிசளிப்பு விழா, சமய விழாக்கள், கலாசாரச் செயற்பாடுகள் மற்றும் பாடசாலையால் தீர்மானிக்கப்பட்ட ஏனைய விசேட செயற்பாடுகள் போன்ற பாடசாலையின் விசேட செயற்பாடுகளை ஒழுங்குசெய்தல்

v. சான்றிதழ் வழங்குதல், கல்விசார் விடயங்களில் வெளியக முகவர்களுடன் அதிபர்களுடன் இணைந்து தொடர்பு கொள்ளல்.

vi. அபிவிருத்தித் திட்டம், வருடாந்த அமுலாக்கல்த் திட்டம் என்பவற்றைத் தயாரிப்பதில் அதிபருக்கு உதவுதல்.

vii. அதிபர் ஏனைய பிரதி அதிபர்கள், பிரிவுத் தலைவர்களுடன் இணைந்து பாடசாலைக்குரிய வருடாந்த நாட்காட்டியைத் தயாரித்தல்.

viii. மாணவருக்குப் புலமைப் பரிசில் மற்றும், ஏனைய பரிசில்களை வழங்க அதிபருக்கு உதவுதல்.

பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடு 3.17:

கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தப்படுவதற்கு ஆதரவளிக்கும் பணிகளை இனங்காணுதலும் பிரதி அதிபரின் (கல்விசார்) நேரம் மற்றும் உள்ளடக்கத்துடன் இணைந்த பணிகளைச் செய்ய பிரதி அதிபர் பாடசாலையில் பயன்படுத்துவதற்கான வருடாந்தத் திட்டத்தைத் தயாரித்தல்.

c. உதவி அதிபர் - ஆரம்பப் பிரிவு

பாடசாலையின் வகை, மற்றும் மாணவர் தொகை என்பவற்றைப் பொறுத்து, பாடசாலையின் ஆரம்பப்பிரிவின் தலைவர் நியமிக்கப்படலாம். பெரிய பாடசாலைகளிலே ஆரம்பப் பிரிவின் தலைவர், அதன் தலைவர் அல்லது சில நேரங்களில் ஆரம்பப் பிரிவின் உதவி அதிபர்

என அழைக்கப்படுகிறார். சிலவேளைகளில் அப்பதவி தலைமை ஆசிரியர் எனவும் அழைக்கப்படும். சிறிய பாடசாலையொன்றில் ஓர் ஆசிரியர் அப்பிரிவின் தலைவராகச் செயற்படுகிறார்.

பின்வரும் பணிகள் ஒப்படைக்கப்படுகின்றன.

i. இப்பிரிவில் அதிபரைப் பிரதிநிதித்துவம் செய்தல்

ii. கல்விசார் பதவியணியினரை மேற்பார்வை செய்தல்

iii. உதவிப் பதவியணியினரை மேற்பார்வைசெய்தல்

iv. கல்விசார் செயற்பாடுகளை ஒழுங்குப்படுத்துதலும் மேற்பார்வை செய்தலும்

- தவணை மற்றும் வாராந்த பாடத்திட்டங்கள் மற்றும் குறிப்புகளுக்கான அறிவுறுத்தல்களை வழங்குதல்
- கற்பித்தல் கற்றல் செயல்முறைகளை மேற்பார்வை செய்தல்
- ஆரம்பப் பிரிவுக்குரிய பதிவேடுகளைப் பேணுதல்
- ஆரம்பப் பிரிவின் கல்வி அபிவிருத்திக்கான கல்விச் செயற்பாடுகளை ஒழுங்கமைத்தலும் நடைமுறைப்படுத்தலும்.

v. நிதி முகாமைத்துவம் (சில பாடசாலைகளில் பாடசாலையின் தலைவரைப் பொறுத்துள்ளது)

- வசதிக்கட்டணத்தையும் பாடசாலை அபிவிருத்திச் சபைக்கான நிதியையும் திரட்டுவதை ஒழுங்குசெய்தல்
- வைப்பிலிடப்பட்ட பணத்தை மேற்பார்வை செய்தல்
- நிதிச் செலவுக்கான மதிப்பீடுகளைத் தயாரித்தலும் அதிபரிடம் அனுமதி பெறுதலும்

vi. பாடசாலை மற்றும் மாணவரின் பாதுகாப்புச் செயற்பாடுகளை ஒழுங்கு செய்தல்

பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடு 3.18:

கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நன்கு உதவும் 5 பணிகளைத் தெரிவு செய்து முன்னுரிமையின் அடிப்படையில் அவற்றை ஒழுங்கு செய்க அவற்றை அவ்வொழுங்கில் ஏன் தெரிவு செய்யப்பட்டுள்ளது என்பதை விளக்குக.

2. பிரிவுத் தலைவர்கள்

பிரிவுத் தலைவர்கள் பாடசாலையின் வகைக்கேற்பத் தெரிவு செய்யப்படுகின்றனர். IAB வகையில் கலை மற்றும் வர்த்தகப் பிரிவுக்கு மேலாக விஞ்ஞானப் பிரிவுள்ளது. IC வகைப்

பாடசாலைகளில் விஞ்ஞானப் பிரிவு இல்லை. வகை 2 பாடசாலைகளில் தரம் 11 வரையும், அத்துடன் அங்கு சிரேட்ட இடைநிலைப் பிரிவுத் தலைவர் இல்லை.

வகை 3 பாடசாலையில் ஆரம்பநிலை அதிபர் உள்ளார்.

- ஆரம்பப்பிரிவு
- கனிட்ட இடைநிலைப் பிரிவு
- சிரேட்ட இடைநிலைப் பிரிவு (கலை)
- சிரேட்ட இடைநிலைப்பிரிவு (வர்த்தகம்)
- சிரேட்ட இடைநிலைப் பிரிவு (விஞ்ஞானம்)

பிரிவுத்தலைவர்கள் நிறைவேற்ற வேண்டிய சில பொதுவான பணிகள் கீழே தரப்பட்டுள்ளன.

i. பிரிவினை முகாமைத்துவம் செய்வதில் அதிபருக்குப் பொறுப்பாக இருத்தல்
ii. பிரிவின் ஒழுக்கக் கட்டுப்பாட்டினைப் பேணுவதற்குப் பொறுப்பாக இருத்தல்
iii. பிரிவுக்குரிய நேரசூசிகையைத் தயாரிப்பதற்கு பிரதி அதிபருக்கு (கல்வி) உதவுதல்
iv. தவணைக்குரிய பாடத்திட்டம், பாடக்குறிப்பு, கற்பித்தல் கற்றலை மேற்பார்வை செய்தல் மற்றும் பிரிவிலுள்ள பதவியணியினருக்கு வழிகாட்டல் வழங்குதல்
v. பதவியணியினரின் கல்விச் செயற்பாடுகளுக்கான பதிவேடுகளைப் பேணுதலும் பிரிவின் கல்வி மேம்பாட்டுக்கான தராதரங்களைப் பேணுவதற்குரிய வழிகாட்டலைக் கண்காணித்தலும்
vi. பிரிவுக்குரிய கல்விசார் பதவியணியினரின் கற்பித்தலைக் கணிப்பீடு செய்தல்
vii. பிரிவுக்குரிய வருடாந்த நாட்காட்டி தயாரித்தல்
viii. பிரிவுக்குரிய தவணை மற்றும் இறுதிச் சோதனைகளை ஒழுங்கு செய்தல்
ix. பாடசாலை மட்டக் கணிப்பீட்டினை நடத்துதலும் பதிவேடுகளைப் பேணுதலும் மேற்பார்வையும்
x. பிரிவின் கற்பித்தல் கற்றல் செயல்முறையின் மேம்பாட்டுக்கு உதவுதல்
xi. கட்டடிடங்கள், ஆய்வுகூடங்கள் என்பவற்றுடன் பிரிவிலுள்ள ஏனைய வளங்களைப் பராமரித்தலை மேற்பார்வை செய்தல்.
xii. பிரிவுக்குரிய பெற்றோர் ஆசிரியர் கூட்டங்களை ஒழுங்கு செய்தல்
xiii. பிரிவுக்குரிய மாணவர்களை அனுமதிப்பதில் அதிபருக்கு உதவுதல்
xiv. மாணவர் மற்றும் ஆசிரியருக்கான நாளாந்தக் கூட்டங்களை ஒழுங்குசெய்தலும் பிரிவுக்கான கூட்டங்களை ஒழுங்கு செய்தலும்
xv. ஆசிரியர்களின் பதில் செயற்பாடுகளை ஒழுங்குசெய்தலும் மேற்பார்வை செய்தலும்

xvi. பாடசாலையின் இணைக் கலைத்திட்டச் செயற்பாடுகளை, அவற்றில் மாணவர்கள் பொருத்தமாகப் மாணவர்கள் பங்குபற்றிக் கூடிய விதத்தில் ஒழுங்கு செய்தல்

xvii. வசதிக்கட்டணச் சேர்ப்பு மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சபைக்குரிய கட்டணங்களை சேர்த்தல் ஆகியவற்றை ஒழுங்கு செய்தலும் மேற்பார்வை செய்தலும்.

பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடு 3.19:

கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு உதவும் 5 பணிகளைத் தெரிவு செய்க. அவற்றை முதன்மை ஒழுங்கில் வரிசைப்படுத்துக. அவற்றை அவ்வொழுங்கில் தெரிவு செய்தமை ஏனென விளக்குக.

3. ஆசிரியர் - போதனா தலைவராக

பாடசாலையில் மிகமுக்கியமான வகிபங்குகள், பாடசாலையின் போதனா தலைவர் என்றவகையில், ஆசரியரால் வினையாற்றப்படுகிறது. அவர்கள் பாடசாலையில் மேற்கொள்வதற்கெனக் கடப்பாடுகளும் பொறுப்புகளும் பணிகளும் உள்ளன.

ஆசிரியர்கள் சிலர் வகுப்புக்குப் பொறுப்பாக உள்ளனர். சிலர் மாணவர்களுக்குக் கற்பிக்கும் பணியை மட்டும் கொண்டுள்ளனர். நிறுவனத்தின் வெற்றியானது, பாடசாலையில் மாணவருக்கு வழங்கும் போதனையின் தரத்தில் தங்கியுள்ளது.

பாடசாலையின் போதனா தலைவர் ஆசிரியரே. அவர்களுக்கு கடப்பாடுகளுக்கும் பொறுப்புக்குமுரிய பணிகள் மட்டுமன்றி, பாடசாலையில் செய்ய வேண்டிய சேவைகளின் வகைகளும் உள்ளன.

i. ஒவ்வொரு ஆசிரியரும், ஏனைய ஆசிரியர்களுடன் சேர்ந்து போதனையின் தராதரத்தை அதிகரிக்கும் கடப்பாடு உள்ளது.

ii. ஒவ்வொரு ஆசிரியரும் பாடசாலையின் கலாசாரத்தை விளங்க முயற்சிக்கும் பொறுப்பும் அதனை மேம்படுத்தும் பொறுப்பும் உடையவர்.

iii. ஒவ்வொரு ஆசிரியருக்கும் தலைமைத்துவ வகிபாகம் உள்ளது – அது ஆசிரியரின் தொழில் கட்டத்திற்கேற்ப வேறுபடும்.

iv. ஒவ்வொரு ஆசிரியரும் பூகோளக் கல்வி மற்றும் தொழில்சார் எழுவினாக்கள் பற்றிக் கூடுதலான அறிவுடையவர்களாகும் பொறுப்புடையவர்.

v. ஒவ்வொரு ஆசிரியருக்கும் அடுத்த சந்ததியிலுள்ள ஆசிரியர்களின் தராதரத்தை உருவமைக்கும் பொறுப்புண்டு.

vi. ஆளுமை வளர்ச்சி தலைமைத்துவம் மற்றும் கற்கக் கற்றல் என்னும் விடயங்களில் மாணவரின் தராதரத்தை உருவமைப்பதன் மூலம் எதிர்கால உலகினை உருவமைக்கும் பொறுப்பு ஒவ்வொரு ஆசிரியருக்கும் உள்ளது.

ஆசிரியர் கற்பிக்கும்போது மாணவருக்கான போதனா வகிபாகம் மற்றும் வழிகாட்டல் வகிபாகம் ஆகியன ஆசிரியர்களுக்கு உண்டு. வகுப்புக்குப் பொறுப்பாகவுள்ள ஆசிரியர்களுக்கு போதனை மற்றும் வழிகாட்டல் என்பவற்றுக்கு மேலாக முகாமைத்துவ வகிபாகமும் உண்டு.
பாடத்திட்டத்தை ஆராய்தல், ஆசிரியர் வழிகாட்டி, கற்பித்தலுக்கென ஒப்படைக்கப்பட்ட தரங்களுக்குரிய பாடநூல்களில் குறிப்பிட்டவற்றை ஆராய்தல்.

பாடத்திட்டத்தை மூன்று தவணைகளுக்கெனப் பிரித்துத் தவணைக்கான திட்டத்தைத் தயாரித்தல், பாடத்தைக் கற்பித்தலுக்கான தவணைக்குரிய திட்டத்தைத் தயாரித்தல், மற்றும் அவ்வாறு தயாரிக்கப்பட்ட பாடக்குறிப்புகளைத் தயாரித்தல், இவை ஒவ்வொரு பாடத்துக்குமான பல பாடவேளையை அடிப்படையாகக் கொண்டு இனங்காணப்பட்ட பகுதிகளைக் கற்பிக்க உதவும்.

செயற்பாட்டுப் பத்திரங்கள், விளக்கமளித்தல் முறையில் வகுப்பில் செயற்பாடுகளை நடத்துவதற்கு ஆசிரியரால் அல்லது மாணவர் குழுவினர் ஆயத்தஞ் செய்தல். அவ்வாறு செய்வதற்குத் தேவையானவற்றைக் கிடைக்கச் செய்தல்.

பாடசாலை மட்டக் கணிப்பீடுகளை நடத்துவதற்குத் தேவையான ஆவணங்களைத் தயாரித்தல். ஒவ்வொரு மாணவரையும் தனிப்பட்ட முறையில் அவர்களுடைய பலங்கள், நலிவுகள் பற்றிய அறிவுடையவராக இருத்தல்.

ஒவ்வொரு மாணவர் பற்றிய தரவு சேகரித்தலும் அவற்றை பெற்றோர் ஆசிரியர் கூட்டத்தில் பெற்றோருடன் கலந்துரையாடுதலும்.

மாணவர்கள் தமது ஆளுமையை மேம்படுத்தவும் தலைமைத்துவப் பண்புகளை விருத்தி செய்வதற்கும் அவசியமேற்படும் போது வழிகாட்டல் வழங்குதல்.

ஆசிரியரின் முகாமைத்துவ வகிபாகங்கள்

- வகுப்பிலுள்ள மாணவர்கள் எல்லோருக்கும் பொறுப்பாக இருத்தல்
- பாடசாலையை ஆரம்பிப்பதற்கு முன்னர் பின்வரும் விடயங்கள் கவனிக்கப்படுதல் வேண்டும்.
  - வகுப்பறைச் சுத்தம்
  - மாணவர் சுத்தம்
  - வகுப்பறையில் வரவு இடாப்பு மற்றும் வகுப்பறைப் பதிவுப் புத்தகம் இருத்தல்

- காலைக் கூட்டத்துக்குச் செல்லும்போது மாணவர்களை மேற்பார்வை செய்தல்
- தாமதித்து வருவோரைக் கவனித்தல்
- காலைக் கூட்டத்துக்கு மாணவர்கள் ஒழுங்காகச் செல்லுதலும் கூட்டத்தின் பின்னர் ஒழுங்காக வகுப்பறைக்குத் திரும்பிச் செல்லுதலும்.

- முதலாவது பாட முடிவில் வரவு இடாப்பு அடையாளமிடுதலும் முதல்நாள் வராதவர்களைக் கவனித்தலும்
- மாணவரின் சுத்தம், அவர்களது உடை மற்றும் புத்தகம் முதலியவற்றை மாதத்துக்கு ஒருதடவையேனும் கவனித்தல்
- வகுப்பறையில் தளபாடங்களுக்குப் பொறுப்பாக இருத்தல்
- வகுப்பறை அறிவித்தல் பலகையைப் பராமரித்தலும் அதனை மாணவர் கட்டுரைகள் மாணவருக்குத் தேவையான கல்விசார் தகவல்கள் ஆகியவற்றைக் கொண்டு இற்றைப்படுத்துதலும்.
- பாடசாலை மட்டக் கணிப்பீடு, தவணை முடிவு, வருட இறுதிச் சோதனைகளை ஒழுங்குசெய்தலும் நடத்துதலும், முறைப்படி பதிவேடுகளைப் பேணுதலும் மற்றும் மாணவர் முன்னேற்ற அறிக்கை தயாரித்தலும்
- வகுப்பில் மாணவரின் ஒழுக்கக் கட்டுப்பாடுகளைக் கவனித்தல்
- அபிவிருத்திக்கு உதவி தேவைப்படும் மாணவரை இனங்காணுதல், இவ்வாறு இனங்கண்ட மாணவரின் மேம்பாட்டுக்குரிய பரிகார நடவடிக்கைகளை ஒழுங்கு செய்தல்.
- வகுப்புக்கான தலைவர் மற்றும் பிரதி வகுப்புத் தலைவர் ஆகியோரை நியமிப்பதற்கு ஒழுங்குசெய்தலும் அவர்கள் தலைவர்களாகச் செயலாற்ற உதவுதலும்.

பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடு 3.20:

ஆசிரியர் ஒரு போதனா தலைவர் என்ற வகையில் அவருடைய பணிகளையும் பாடசாலையில் அவர் ஏற்கின்ற வகிபாகங்களையும் ஆராய்தல் மிகவும் முக்கியமானது.

பாடசாலையின் அதிபர் என்ற வகையில், ஆசிரியர் ஒருவர் போதனைத் தலைவராகச் செயற்படுதற்கு வசதியளிக்க கூடிய 5 விடயங்களைத் தெரிவுசெய்க. ஒவ்வொரு விடயத்திலும் எவ்வாறு வசதியளிக்கலாம் என்பதை விளக்குக. குறைந்தது 3 வாக்கியங்கள் எழுதுக.

பாடசாலை நேர சூசிகையைத் தயாரித்தல்

பாடசாலையில் முக்கியமான பணிகளில் ஒன்று நேரசூசிகை தயாரித்தலாகும். இது நேரப் பயன்பாட்டுக்கும் மாணவரின் கல்விசார் விளைவுகளை அடைவதற்கும் ஆளணியினருக்கும் வழிகாட்டலை வழங்குகிறது. கல்வி நிறுவனமொன்றின் நேர சூசிகையைத் தயாரித்தலானது மிகவும் சலிப்பூட்டும், சிக்கலான மற்றும் அதிக நேரமெடுக்கும் செயல்முறையாகும். மனித மற்றும் நேரவளங்கள் கவனமாக ஆயத்தஞ் செய்யப்பட்டால், பாடசாலையில் வினைத்திறன் நிலவுவதோடு மாணவர் சிறந்த முறையில் வினையாற்றுவதற்கான தராதரமான கல்விசார் உள்ளிடுகைகள் கிடைப்பதனால் அவை பாடசாலையை வெற்றிக்கு இட்டுச் செல்லும் ஆசிரியர் போதாமை, பாட ஆசிரியர் போதாமை மற்றும் ஆசிரியர் இடமாற்றம் என்பவை நேரசூசிகை தயாரிப்பதற்குத் தடையாகவும் குழப்பம் விளைவிப்பதாகவும் இருக்கும். ஆனாலும் கள நிலைமைகளையும் யதார்த்தத்தையும் புரிந்துகொண்டு அதற்கேற்ப பாடசாலையில் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

சிறிய பாடசாலைகளிலே நேரசூசிகை தயாரித்தலானது ஒப்பீட்டளவில் எளிதாக இருக்கும். ஓரளவு பெரிய இடைநிலைப் பாடசாலைகளில் இது மிகவும் சிக்கலானது.

பாடசாலையின் திட்டத்தில் பல பாடங்கள், செயற்பாடுகள் மற்றும் வகுப்பறைகளிடையிலான நாளாந்த நேரப் பகிர்வு எடுத்துக் காட்டப்படுவதனையே பாடசாலை நேரசூசிகை என்கிறோம். பாடசாலையின் முழுமையான குறிக்கோள், அது எவ்வாறு தொழிற்படுகிறது என்பதைப் பாடசாலை நேரசூசிகையிலிருந்து அறியலாம். இது பாடசாலையில் பின்பற்றப்படுகிற முழுக் கல்விசார் நிகழ்ச்சித்திட்டத்தை எடுத்துக்காட்டுகிறது. இது முறைப்படியாகவும் முன்னாயத்தஞ் செய்யப்பட்ட திட்டமாகவும் கற்றல் மற்றும் செயற்பாடுகளில் ஈடுபடுகிறது. இது பாடசாலை வேலைகள் ஒவ்வொரு வகுப்புக்குமான செயற்பாட்டின் வகை, பாடவேளைகளின் தொகையும் நீளமும், காலைக் கூட்டங்களின் ஒழுங்குகள், பாடசாலைச் சங்கச் செயற்பாடுகள் மாணவருக்கான நூலகம் மற்றும் ஓய்வு நேரங்களுக் ஆசிரியர் ரீதியிலான பாடப் பகிர்வு, ஆகியவற்றுக்கான நாளாந்த நேரத்தினையும் எடுத்துக்காட்டுகிறது. இது நாளாந்த வேலையின் சுருக்கமாகும். இது பின்வருவனவற்றைக் குறிப்பிடுகிறது.

- நாளொன்றின் தொடக்கமும் முடிவும்
- ஒவ்வொரு பாடவேளையின் தொடக்கமும் முடிவும்
- பாடங்களும் செயற்பாடுகளும்
- ஒவ்வொரு வகுப்புக்குரிய சங்கக் கூட்டங்கள் நடந்த நாட்கள்
- ஒவ்வொரு வகுப்புக்குமான பொறுப்பாசிரியர்கள்
- ஒவ்வொரு வகுப்பிலும் ஒவ்வொரு பாடத்துக்கும் பொறுப்பான ஆசிரியர்
- ஒவ்வொரு வகுப்பும் உள்ள அறையும் செயற்பாடுகளுக்காகக் கூடும் அறையும்
- இடைவேளைக்கான நேரம், நீளம் மற்றும் தொகை

நேரசூசிகையானது பாடசாலையின் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு நேரத்தையும் மனித வளத்தையும் பயன்படுத்துவது எவ்வாறு என்பதைத் தீர்மானிக்கிறது. இது பாடசாலையின் தலைமைத்துவத்தின் தேர்ச்சியையும் எடுத்துக்காட்டுகிறது.

1. நேரசூசிகையொன்றில் காணப்பட வேண்டிய முக்கியமான அம்சங்கள்

பாடசாலையில் கலைத்திட்டத்தை முறைப்படியாகவும் காலத்திற்கேற்பவும் வினைத்திறனுள்ள வகையில் நடைமுறைப்படுத்துவதற்கு நேரசூசிகை மிகவும் முக்கியமானதாகும்.

பாடசாலைக்கு ஒரு முறைமையை வழங்குகிறது.
நேரசூசிகை முறைப்படி வேலையை உறுதி செய்வதுடன் பாடசாலையில் மோதல்கள் ஒழுங்கீனங்கள் மற்றும் குழப்பங்களைத் தவிர்க்கிறது. மறுபுறத்தில் நேரசூசிகை தவறான முறையில் தயாரிக்கப்பட்டிருந்தால் பாடசாலையில் மோதல்கள் நிகழ்வதோடு குழப்பங்களும் ஒழுங்கீனங்களும் இடம்பெறும் இது தலைமைத்துவத்தினதும் முகாமைத்துவத்தினதும் வினைத்திறன் குன்றியமைக்கான அடையாளமாகும். நேரசூசிகையானது வேலை, இடம் மற்றும் காலம் என்பவற்றை ஒவ்வொருவருக்கும் ஒப்படைக்கிறது.

நேரம் மற்றும் சக்தி விரயத்தைத் தடுக்கிறது.
இது வெவ்வேறு செயற்பாடுகளிடையில் சரியான நேரப்பகிர்வை உருவாக்குவதுடன் ஒரு நேரத்தில் ஒரு விடயத்தில் ஒவ்வொருவருடைய சக்தியையும் கவனத்தையும் நெறிப்படுத்துகிறது. அந்தவகையில் அதிகூடிய நன்மைகள் பெறப்படுகின்றன.

ஒவ்வொரு பாடம் அல்லது செயற்பாட்டில் உரிய கவனத்தை உறுதி செய்கிறது.
எந்தவொரு விடயமும் அலட்சியம் செய்யப்படுவதில்லை மற்றும் எந்தவொரு விடயமும் உரியதல்லாத நேரத்தை எடுப்பதுமில்லை. இது பாடத்தின் இயல்பு அல்லது செயற்பாட்டின் இயல்பினை கருத்திற்கொண்டு செய்யப்படுகிறது.

பாடசாலையின் தடங்கலற்ற மற்றும் ஒழுங்கான வேலை செய்தலை உறுதிசெய்கிறது
ஒவ்வொரு விடயமும் முன்கூட்டியே திட்டமிடப்படுகிறது மற்றும் அறிவிக்கப்படுகிறது. ஆசிரியரும் மாணவரும் செய்ய வேண்டியவற்றை அறிவர். சரியாக ஒழுங்கு செய்யப்படிருந்தால் கடமையில் அசட்டை மறுபடியும் முயற்சித்தல் மற்றும் உருப்படிகளையும் செயற்பாடுகளையும் திரும்பச் திரும்பச் செய்தல் என்பது இருக்காது.

வினைத்திறனை உறுதி செய்தல்:

நேரசூசிகையானது சரியான ஒருவரை சரியான நேரத்தில் சரியான முறையில் இடம்பெறச் செய்கிறது. அதனால் காலதாமதம் இல்லை. தளர்ச்சி அல்லது விரயம் இல்லை. ஆசிரியர்கள் மத்தியில் வேலைப் பகிர்வில் சமநிலை உறுதி செய்யப்படுகிறது. பொருத்தமற்ற அல்லது சரியில்லாத ஏதாவது பகிர்வினைக் கண்டு கொள்ளலாம். அத்துடன் இலகுவாகச் சரிபார்க்கலாம். அத்தகைய வேலைப் பகிர்வு ஆசிரியருக்கு இலகுவாக இருக்கலாம் அன்றேல் மிகவும் சுமையாக இருக்கலாம்.

வேலைப் பகிர்வில் விவேகத்தை உறுதி செய்தல்

ஆசிரியர்களுக்கு அவர்கள் நன்கு பயிற்சிபெற்ற, மிகவும் பரீட்சயமுள்ள மற்றும் ஆர்வமுள்ள பாடங்களும் செயற்பாடுகளும் ஒப்படைக்கப்படுகின்றன. ஒழுங்கான மற்றும் சமமான முன்னேற்றத்தை உறுதி செய்கிறது. பல பாடங்களையும் செயற்பாடுகளையும் அவற்றின் முக்கியத்துவம் மற்றும் இயல்பின் அடிப்படையில் சரியாகப் பகிர்ந்தளிக்கும் போது, ஒழுங்கானதும் சமநிலையானதுமான முன்னேற்றத்திற்கு வழிகோலுகிறது.

ஒழுங்கம் மற்றும் நன்னெறிசார்ந்த பெறுமானங்களை விருத்தி செய்கிறது.

ஒழுங்குமுறைமை, நேரந்தவறாமை, நோக்கத்தில் உறுதித்தன்மை, ஒழுங்குநிலை மற்றும் பொறுப்புணர்வு போன்ற பழக்கவழக்கங்களை ஒவ்வொருவரும் பெற்றுக்கொள்ள உதவுகிறது. இது வேலைசார்ந்து முறைப்படியான, நோக்குடைய மற்றும் நேர்மையான மனப்பாங்கினை விருத்திசெய்கிறது.

ஒழுக்கக் கட்டுப்பாட்டை பேணுவதற்கு உதவுகிறது:

மாணவர்கள் பயன்பெறத்தக்க விதத்தில் விரும்பிய செயற்பாடுகளில் ஈடுபட உதவுகிறது. மாணவர்கள் வீணாகக் காலங்கழிக்காமல், ஒழுக்கமற்ற செயற்பாடுகளில் ஈடுபடாமல் வைத்திருக்கிறது. சிறந்ததொரு நேரசூசிகையானது ஒழுக்கக் கட்டுப்பாட்டைப் பேணுவதற்கான கருவியாகவும் இருப்பதோடு ஒழுக்கமற்ற விடயங்களில் ஈடுபட இடமளிப்பதில்லை.

மாணவர்களில் தேவைக்கேற்ப வேலைகளை சீர்செய்ய உதவுகிறது:

பாடசாலையொன்றில் வேலை மாணவரின் உடலியலில் மற்றும் உளவியல் தேவைகளுக்கேற்பத் திட்டமிடப்படுகிறது. சீர்செய்யப்படுகிறது. உளச் சுத்தம், களைப்பு, வெறுப்பு, ஊக்கம், ஆர்வம் மற்றும் கடினத்தன்மை ஆகிய பிரச்சினைகளுக்கு நன்கு சிந்திக்கப்பட்ட நேரசூசிகையில் உரிய கவனம் கொடுக்கப்படுகிறது.

உளவியல் சார்ந்த எண்ணங்களைத் திருப்தி செய்கிறது:

இது ஆசிரியர்களுக்குத் தூண்டுதலளிப்பதுடன் பாடசாலை செல்வதன் நோக்கத்தையும், நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றியும் திருப்தியைத் தருகிறது. இது கற்றலில் சந்தோசத்தையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்துகிறது. ஆசிரியருக்கு ஆசிரியர், பாடவேளைக்குப் பாடவேளை, பாடத்துக்குப் பாடம், இடத்துக்கு இடம் மற்றும் செயற்பாட்டுக்குச் செயற்பாடு

என்பவற்றுக்குரிய மாற்றங்களைச் சீர்செய்வதுடன் கற்றலுக்கான புதிய ஊக்குவிப்பு, தூண்டுதல், உந்துதல் என்ற விதத்தில் திட்டமிடப்படுகிறது.

முன்னேற்றகரமான திட்டமிடலுக்கு நெறிப்படுத்துகிறது. நேரசூசிகையானது ஆசிரியர்களையும் மாணவர்களையும் பல செயற்பாடுகளை ஏற்கனவே ஆயத்தஞ்செய்யவும் ஒப்படைக்கப்பட்ட வேலையைப் பூர்த்திசெய்யவும் வைக்கிறது.

2. நேரசூசிகையை ஆயத்தஞ் செய்வதில் கவனிக்க வேண்டிய கோட்பாடுகள்

பாடசாலைக்கான நேரசூசிகையைத் தயாரிக்கும் போது மனதில் கொள்ளவேண்டிய கோட்பாடுகள் சில பின்வருமாறு இவை தராதரமான நேரசூசிகையைத் தயாரிக்க உதவும்.

பாடசாலை வகை: இலங்கையிலுள்ள பாடசாலைகள் வகைப்படுத்தப் பட்டுள்ளவிதம்:

வகை 1AB - கலை, வர்த்தகம், மற்றும் விஞ்ஞானப் பிரிவுகள் உள்ள பாடசாலைகள்

வகை 1C - கலை மற்றும் வர்த்தகப் பிரிவுகள் உள்ள பாடசாலைகள். அப்பாடசாலைகளில் விஞ்ஞானப் பிரிவுகள் இல்லை

வகை 2 - தரம் 11 வகுப்புகளைக் கொண்டுள்ள பாடசாலைகள்

வகை 3 - தரம் 5 வரை வகுப்புகளைக் கொண்டுள்ள பாடசாலைகள் இவை ஆரம்பப் பாடசாலைகளெனவும் அழைக்கப்படுகின்றன.

நகரப் பிரதேசங்களிலும் கிராமப்புறங்களிலும் பாடசாலைகள் அமைந்துள்ளன. சில பாடசாலைகளில் ஆண்கள் மட்டும் சில பாடசாலைகளில் பெண்கள் மட்டும் உள்ளனர். சில கலவன் பாடசாலைகளாக உள்ளன. பாடசாலை வகைக்கான மேற்கூறிய காரணிகள் மற்றும் பாடசாலைக்குரிய குறிப்பிட்ட காரணிகள் என்பனவும் நேரசூசிகையை ஆயத்தஞ் செய்யும் போது கவனிக்கப்பட வேண்டும்.

பின்பற்ற வேண்டிய ஒழுங்கு விதிகள்: பொதுவாக கல்வியமைச்சு பாடசாலை நாட்காட்டி, பாடசாலை நாட்களின் காலம், மற்றும் வெவ்வேறு தரங்களுக்குரிய வெவ்வேறு பாடங்களுக்கு ஒதுக்கப்பட்ட பாடவேளைகளுக்குரிய வழிகாட்டல்களை வழங்குகிறது. கல்வியமைச்சு வழங்கிய வழிகாட்டல்களைப் பின்பற்றுவது கட்டாயமானது.

நேர ஒதுக்கீடு: ஒவ்வொரு பாடத்துக்கும் அல்லது செயற்பாட்டுக்கும் உரிய காலம் பாடசாலை தொடங்கும் நேரம், முடிவடையும் நேரம் மற்றும் மாணவர்களுக்கும் வழங்கப்படும் இடைவேளை உட்பட நாட்களுக்குரிய பாடவேளை ஆகியவற்றில் தங்கியுள்ளது. நாளொன்றுக்கு 8 பாடவேளைகளும் ஒரு பாடவேளைக்கான நேரம் 40 நிமிடங்களும் என்பது நாட்டிலுள்ள பாடசாலைகளின் நடைமுறையாகும்.

நெகிழ்ச்சித் தன்மை: பாடங்களில் நெகிழ்ச்சித் தன்மை உயர்நிலை வகுப்புகளில் விசேடமாக தரம் 6 தொடக்கம் சில விடயங்களில் உண்டு. தரம் 6-9 இலுள்ள மாணவர்களுக்கு அழகியல் பாடங்களில் தெரிவுண்டு. தரங்கள் 10-11 இல் மையப் பாடங்கள் ஏனைய பாடங்களில் 3 தொகுதிகள் உள்ளன. அங்கு மாணவர் தெரிவுக்கான நெகிழ்ச்சி உள்ளது. இத்தகைய நெகிழ்ச்சித்தமையானது மாணவரின் உளச்சார்ப்புக்கும் விருப்பத்துக்கும் ஏற்றவகையில் பாடங்களைத் தெரிவு செய்ய இடமளிக்கிறது. பல விருப்பத் தெரிவுகள் நேர சூசிகை தயாரித்தலைச் சிக்கலுக்குள்ளாகுகிறது.

பாடங்களின் சார்பளவு முக்கியமும் கடினத்தன்மையும் முக்கியமான பாடங்களுக்கு அதிக நேரம் வாரந்தம் நிரந்தரமாக ஒதுக்கப்படுகிறது. இத்தகைய முக்கியமான பாடங்கள் சமூக, பொருளாதார மற்றும் கலாசார ரீதியாக முக்கியமானவை. ஒப்பீட்டளவில் கடினமான பாடங்களும் கவனத்துக்குள்ளாதல் வேண்டும். நாளின் தொடக்கத்தில் மாணவர்கள் எவ்வித சோர்வுமற்ற நிலையில் இருக்கும்போது கடினமான பாடங்களைக் கற்பித்தல் வேண்டும்.

களைப்பைத் தவிர்த்தல்: ஒருவருக்குக் களைப்பு உண்டானால், அவர் வேலைசெய்ய விரும்பமாட்டார். கவனத்தைக் குலைத்தல், வேலைசெய்ய ஆயத்தமின்மை, சரியானதன்மையின்மை, சுய கட்டுப்பாடு மற்றும் குறைந்த வினையாற்றல் என்பன களைப்பின் விளைவுகள் எனலாம்.

மாணவர்கள் பாடசாலையில் விரைவாகக் களைப்படைந்து விடுகின்றனர்.

- பாடசாலை நாளும் குறுகியதாக இருத்தல் வேண்டும். அத்துடன் மாணவரின் கவனத்தை ஈர்க்கும் வகையில் பாடவேளையும குறுகியதாக இருத்தல் வேண்டும்.
- செறிவான மற்றும் இலகுவான மாற்றங்களைச் செய்தல். மிகக் செறிவாகப் பாடங்களையும் செயற்பாடுகளையும் தொடர்ச்சியாகச் செய்வதிலும் பார்க்க மாணவர்களுக்குத் தூண்டுதலளிக்கும்
- கடினமான பாடங்களை இயன்றளவுக்கு நாளின் தொடக்கத்தில் நடத்துதல் வேண்டும். கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய சில பாடங்கள் கடினமானவை என அழைக்கப்படலாம்.

பலவகையானதை வழங்குதல்: களைப்பினையும் சோர்வினையும் விடுவிப்பதற்கு பலவகையானவை அவசியமாகும். இதனைப் பாடசாலையிலுள்ள அடிக்கடி மாறும் தெரிவுகள் மூலம் அடையலாம். மாறும் தெரிவுள் பல உள்ளன. பாடத்தில் மாற்றம், அறையில் மாற்றம், ஆசிரியர் மாற்றம், தோரணை மாற்றம், செயற்பாட்டின் இயல்பிலுள்ள மாற்றம் முதலிய வகையில் மாற்றங்கள் இருக்கலாம். கடினமான மற்றும் இலகுவான பாடங்களை மாறிமாறி வழங்குதல் வேண்டும். தொடர்ச்சியாக கொள்கையையோ மற்றும் தொடர்ச்சியாக பயிற்சிகளையோ வழங்காமல் கொள்கையையும் பயிற்சியும் மாறிமாறியமைத்தல் வேண்டும்.

மனித மற்றும் பௌதீக வளங்களின் கிடைக்கக்கூடிய நிலை: மனித மற்றும் பௌதிக வளங்கள் முக்கியமானவை என்பதுடன் நேரசூசிகையைத் தயாரிப்பதில் வினைத்திறனுடன் கூடிய வகையில் பயன்படுத்தப்படுதல் வேண்டும். நேரசூசிகையை அமுல்படுத்துவதற்கு போதியளவு பதவியணியினர் அவசியமானவர். பதவியணியினரில் பற்றாக்குறை காணப்படுதல் பாடசாலை முகாமைத்துவத்தைச் சிரமங்களுக்கு உள்ளாக்கும். பதவியணியினர் மேலதிகமாக இருத்தலும் அவர்கள் மத்தியில் திருப்தியின்மைக்கு இட்டுச் செல்லும் என்பதுடன் மனிதவள விரயமுமாகும். விளைதிறனுள்ள கற்பித்தலுக்கு பௌதிக வசதிகளான ஆய்வுகூடங்கள், பல்லூடக அறைகள், கணினி வசதிகள், சாதனங்கள் மற்றும் ஏனைய கற்பித்தல் உதவிச் சாதனங்களும் முக்கியமானவை.

மாணவர் மற்றும் ஆசிரியரின் நலன்கள்: முகாமைத்துவமானது ஆசிரியர் மற்றும் மாணவர் ஆகிய இருசாராருக்கும் நலன்களை வழங்குவதில் நெருக்கமாகச் செயற்படுதல் வேண்டும். இவை ஆசிரியரின் சிறந்த வினையாற்றுதலுக்கும் மாணவரின் கற்றலுக்கும் உதவும்.

ஆசிரியருக்குப் பொருத்தமான ஒப்படை: ஒவ்வொரு ஆசிரியரதும் தகைமைக்கேற்ற வகையில் பாடங்கள் வழங்கப்படுவதுடன் வினையாற்றும் ஆற்றலும் பாடசாலையினால் சீர்தூக்கிப் பார்க்கப்படுதல் வேண்டும். ஒப்படைகளை ஆசிரியர் விரும்புலும் ஏற்றுக்கொள்ளுதலும் அவசியமானது.

ஆர்வமுள்ள நிகழ்ச்சித்திட்டங்களை வைத்திருத்தல்: பாடசாலை ஒரு சமுதாயம் மாணவர்களுக்கு ஊக்கலை வழங்குவதற்கு பாடசாலையின் கற்றல் கற்பித்தலுக்கு மேலாக ஆர்வமுள்ள நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் வேண்டும். கலைநிகழ்ச்சிகள், விளையாட்டுப் போட்டி, பரிசுத் தினங்கள், நடனம் மற்றும் சங்கீத நிகழ்ச்சிகள் போன்ற நிகழ்ச்சிகள் மாணவரைத் தூண்டுவதுடன், மாணவரின் விருத்திக்கு தேவையான சமூகம் சார்ந்த திறன்களையும் வழங்கும்.

விளையாட்டும் ஓய்வும்: விளையாட்டுகளுடன் கூடிய உடற்கல்வியும் பலவகையான விளையாட்டுகளும் வகுப்பறைக்கு அப்பால் மாணவர்களை ஈர்ப்பதுடன் வேறுபாடுகளற்ற தன்மையையும் தவிர்க்கலாம். நாளின் நடுப்பகுதியில் வழங்கப்படும் இடைவேளையானது மாணவரின் பதட்டங்களை இலகுபடுத்துவதற்கான வாய்ப்புகளை வழங்குவதுடன் மகிழ்ச்சியையும் தருகிறது.

முகாமை செய்யக்கூடிய வகுப்புப் பருமன்: போதனைச் செயல்முறைகளை முகாமைத்துவஞ் செய்வதில் வகுப்பின் பருமன் முக்கியமானது. பிரசித்திபெற்ற நகரப் பாடசாலைகளில் பெரிய வகுப்புகள் உள்ளன. சமாந்தர வகுப்புகளில் மாணவர்களைச் சமமாகப் பகிர்தல் ஆலோசனைக்குரியதாகும்.

ஆசிரியருக்குப் பாடவேளை விடுவிப்பு: ஆசியருக்கு விடுவிக்கப்பட்ட பாடவேளைகள் ஓய்வுநேரத்தினை வழங்குவதுடன் வினைத்திறனை அதிகரிக்கவும் உதவுகிறது. அத்துடன் அவர்கள் தாமாகவே களைப்பை நீக்கி உற்சாகத்தைப பெறுவதுடன் மாணவருடைய பயிற்சிப் புத்தகங்களைப் பார்வையிடவும் பாடவேளைகளுக்கான ஆயத்தங்களைச் செய்யவும் உதவும். வாரம் முழுவதிலும் விடுவிக்கப்பட்ட பாடவேளைகளைப் பகிர்ந்தளித்தலானது. ஒருநாளில் பல விடுவிக்கப்பட்ட பாடவேளைகளைக் கொண்டிருப்பதிலும் பார்க்கச் சிறந்தது.

ஆசிரியரின் உடன்பாடு: ஆசிரியருக்கான வேலையை ஒதுக்கீடு செய்வதற்கு முன்னர் ஆசிரியருடன் ஆலோசித்தல் புத்திசாலித்தனமானது. பாடங்கள், வகுப்பு மற்றும் ஒரு வாரத்துக்கான பாடவேளைகளைப் பகிர்தல் என்பனபற்றி ஆசிரியருடன் கலந்துரையாடி உறுதிசெய்தல் நல்ல விளைவுகளைத் தரும்.

3. இலங்கை பாடசாலைகளில் நேரசூசிகை தயாரித்தல்

i. ஆரம்பத் தரங்கள் (1 – 5)

ஆரம்பவட்டம் மூன்று முதன்மை நிலைகளுடன் கூடியது.

முதன்மைநிலை 1: தரங்கள் 1,2
முதன்மைநிலை 2:தரங்கள் 3,4
முதன்மைநிலை3:தரம்5

ஆரம்பத் தரங்களுக்கான நேரஒதுக்கீடு அட்டவணை 3.3இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 3.3.
ஆரம்பத் தரங்களுக்கான நேர ஒதுக்கீடு

பாடங்கள்	வாரத்துக்குரிய மணித்தியாலங்கள்		
	முதன்மை நிலை 1	முதன்மை நிலை 2	முதன்மை நிலை 3
தாய்மொழி	5	5	5
கணிதம்	3h 30m	5	5
சுற்றாடல் தொடர்பான செயற்பாடுகள்	3h 30m	6	7h 30m
இரண்டாவது தேசிய மொழி	30m	1	1
சமயம்	1h 15m	2	3
ஆங்கிலம்	-	3	3h 30m
உடல்சார் செயற்பாடுகள்	1h 40m	1h 15m	1
மாணவர் விருப்புக்கேற்ற செயற்பாடுகள்	-	-	30m
இணைக்கலைத் திட்டச் செயற்பாடுகள்	30m	30m	30m

ii. இடைநிலைத் தரங்கள் (6 – 11)

வெவ்வேறு பாடங்களுக்குரிய பாடவேளைகளை ஒதுக்குவதற்குரிய வழிகாட்டல்களைக் கல்வியமைச்சு வழங்கியுள்ளது. 2011 ஆண்டின்படி பாடங்களை ஒதுக்கீடு செய்தல் தொடர்பான கல்வியமைச்சின் சுற்றுநிரூபம் வழங்கப்பட்டுள்ளது.

கல்வியமைச்சானது இடைநிலையில் வெவ்வேறு தரங்களுக்குரிய பாடங்களுக்கான பாடவேளைகளை ஒதுக்கீடு செய்தல் தொடர்பான சுற்றுநிரூபத்தை வழங்குகிறது.

குறிப்பு: இந்த மொடியூலைத் தயாரிக்கும்போது பின்வரும் சுற்றுநிரூபங்கள் செல்லுபடியானவை. தொடர்ந்துவரும் மாற்றங்கள் கவனத்திற் கொள்ளப்படுதல் வேண்டும்.

சுற்றுநிரூப இல. 2006/09 2006.03.07 இடை நிலையில் 6-11 கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துதலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களும்

சுற்றுநிரூப இல:2007.03.07 இன் 2007/06

சுற்றுநிரூப இல:2008.09.15 இன் 2008/12 (1)

இத்தகைய சுற்றுநிரூபங்கள் தரங்கள் 6-9 மற்றும் தரங்கள் 10 மற்றும் 11 ஆகியவற்றுக்கான வெவ்வேறு பாடங்களுக்கான ஒதுக்கீடுகள் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 3.4.

தரங்கள் 6-9க்கான பாட ஒதுக்கீடு

இல.	பாடம்	வாராந்தம் பாடவேளை			
		தரம் 6	தரம் 7	தரம் 8	தரம் 9
01	சமயம்	2	2	2	2
02	சிங்கள மொழியும் இலககியமும் தமிழ் மொழியும் இலக்கியமும்	5	5	5	5
03	ஆங்கிலம்	5	5	5	5
04	கணிதம்	5	5	5	5
05	விஞ்ஞானம்	5	5	5	5
06	வரலாறு	2	2	2	2
07	புவியியல்	2	2	2	2
08	வாழ்க்கைத் தேர்ச்சியும் குடியுரிமைக் கல்வியும்	2	2	2	2
09	அழகியல் கல்வி	3	3	3	3
10	பரிசோதனையும் தொழில்நுட்பத் திறன்களும்	3	3	3	3
11	சுகாதாரமும் உடற்கல்வியும்	2	2	2	2
12	சிங்களம் தமிழ் இரண்டாம் மொழி	2	2	2	2
13	நூலகம்	1	1	1	1
	ஒதுக்கப்படாத பாடங்கள்	1	1	1	1
	மொத்தம்	40	40	40	40

iii. சிரேட்ட இடைநிலைத் தரங்கள் (10 மற்றும் 11)

10 மற்றும் 11 ஆம் தரங்களில் பாடப் பகிர்வானது ஆரம்பத் தரங்களிலும் பார்க்கச் சிக்கலானது. மையப் பாடங்கள் 6 உள்ளன. அவற்றுக்கு மாணவர்கள் எல்லோரும் தோற்ற வேண்டும். மூன்று பாடத் தொகுதிகளிலிருந்து மாணவர்கள் ஒவ்வொரு பாடத்தைத் தெரிவுசெய்து மொத்தமாக 9 பாடங்கள் கற்க வேண்டும்.

மையப்பாடங்கள்

- சமயம்
- சிங்கள மொழியும் இலக்கியமும், தமிழ் மொழியும் இலக்கியமும்
- கணிதம்
- ஆங்கிலம்
- வரலாறு
- விஞ்ஞானம்

முதலாவது பாடத் தொகுதி

இத்தொகுதியிலிருந்து ஒரு பாடம் தெரிவு செய்யப்படுதல் வேண்டும்

- புவியியல்
- குடியுரிமைக் கல்வி
- முயற்சியாண்மைக் கல்வி
- மரபு மொழிகளும் நவீனமொழிகளும்
- பாளி, சமஸ்கிருதம், பிரெஞ்சு, ஹிந்தி, யப்பானிய, அரபு மொழிகள்
- சிங்களமும் தமிழும் இரண்டாம் மொழியாக

இரண்டாவது பாடத்தொகுதி

- சங்கீதம் (கீழைத்தேய, மேலைத்தேய, கர்நாடகம்)
- சித்திரம்
- நடனம் (உள்நாட்டு, பரதம்)
- நாடகமும் அரங்கியலும் (சிங்களம், தமிழ், ஆங்கிலம்)
- இலக்கிய நயம் (சிங்களம், தமிழ், ஆங்கிலம்)

மூன்றாவது பாடத்தொகுதி

- தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்
- விவசாயமும் உணவுத் தொழில்நுட்பவியலும்
- மீன்பிடியும் உணவுத் தொழில்நுட்பவியலும்

- வடிவமைப்பும் தொழில்நுட்பவியலும்
- சித்திரமும் கைவினையும்
- மனைப் பொருளியல்
- தட்டச்சும் சுருக்கெழுத்தும்
- சுகாதாரமும் உடற்கல்வியும்
- தொடர்பாடலும் ஊடகக் கல்வியும்

அட்டவணை 3.5
தரங்கள் 10-11 இற்கான பாட ஒதுக்கீடு

இல.	பாடம்	வாரத்துக்கான பாவேளை	
		தரம் 10	தரம் 11
01	சமயம்	2	2
02	சிங்களமொழியும் இலக்கியமும் தமிழ்மொழியும் இலக்கியமும்	5	5
03	கணிதம்	6	6
04	ஆங்கிலம்	5	5
05	வரலாறு	3	3
06	விஞ்ஞானம்	6	6
07	முதலாவது பாடத்தொகுதியிலிருந்து பாடம்	3	3
08	இரண்டாவது பாடத்தொகுதியிலிருந்து பாடம்	3	3
09	மூன்றாவது பாடத்தொகுதியிலிருந்து பாடம்	3	3
10	நூலகம்	1	1
	ஒதுக்கப்படாத பாடங்கள்	3	3
	மொத்தம்	40	40

3. நேரசூசிகை தயாரித்தல் : அடிப்படைப் படிமுறைகள்

தகவல் திரட்டுதலும் மனித மற்றும் பௌதிகத் தேவை பற்றிய கணிப்பீடும் நேரசூசிகை தயாரிப்பதற்கு முன்னமுள்ள அடிப்படைத் தேவைகளாகும். தரங்கள் 6-9 கவனத்திற்கு கொண்டு பின்வரும் உதாரணங்கள் தரப்படுகின்றன. அதனை ஏனைய தரங்களுக்கும் விரிவுப்படுத்தலாம்.

- பாடரீதியான பதவியணித் தேவை.

அந்ததந்தந் தரங்களுக்கான பதவியணியினர் தேவையைக் கணிப்பிடுதல் வேண்டும். ஆரம்பப் பிரிவுக்குரிய சட்டகமொன்றைத் தயாரித்தலும் 12-13க்குரியவற்றைத் தயாரித்தலும் ஓரளவு இலகுவானது. 6-9 தரங்களில் 3 சமாந்தர வகுப்புகள் உள்ள பாடசாலைக்குரிய அமைப்பு இங்கு உதாரணமாகத் தரப்படுகிறது.

அட்டவணை 3.6

பிரிவுக்கான பாடங்களுக்குரிய பாடவேளைகள்

இல.	பாடம்	வாரந்தப் பாடவேளை												மொத்தம்
		தரம் 6			தரம 7			தரம 8			தரம 9			
		A	B	C	A	B	C	A	B	C	A	B	C	
01	சமயம்	2	2	2	2	2	2	2	2	2	2	2	2	24
02	சிங்களமொழியும் இலக்கியமும் தமிழ்மொழியும் இலக்கியமும்	5	5	5	5	5	5	5	5	5	5	5	5	60
03	ஆங்கிலம்	5	5	5	5	5	5	5	5	5	5	5	5	60
04	கணிதம்	5	5	5	5	5	5	5	5	5	5	5	5	60
05	விஞ்ஞானம்	5	5	5	5	5	5	5	5	5	5	5	5	60
06	வரலாறு	2	2	2	2	2	2	2	2	2	2	2	2	24
07	புவியியல்	2	2	2	2	2	2	2	2	2	2	2	2	24
08	வாழ்க்கைத் திறனும் குடியுரிமைக் கல்வியும்	2	2	2	2	2	2	2	2	2	2	2	2	24
09	அழகியல் பாடம்	3	3	3	3	3	3	3	3	3	3	3	3	36
10	பரிசோதனையும் தொழிநுட்பக் கல்வியும்	3	3	3	3	3	3	3	3	3	3	3	3	36
11	சுகாதாரமும் உடற்கல்வியும்	2	2	2	2	2	2	2	2	2	2	2	2	24
12	சிங்களம் தமிழ் இரண்டாம் மொழி	2	2	2	2	2	2	2	2	2	2	2	2	24
13	நூலகம்	1	1	1	1	1	1	1	1	1	1	1	1	12
	ஒதுக்கப்படாத பாடவேளை	1	1	1	1	1	1	1	1	1	1	1	1	12
	மொத்தம்	40	40	40	40	40	40	40	40	40	40	40	40	

அட்டவணை 3.7
பிரிவுக்கான ஆசிரியர் தேவை

இல.	பாடம்	வகுப்புகளின் தொகை	மொத்தம்	ஆகக்குறைந்த ஆசிரியர் தொகை	
01	சமயம்	12	24		
02	சிங்களமொழியும் இலக்கியமும் தமிழ்மொழியும் இலக்கியமும்	12	60		
03	ஆங்கிலம்	12	60		
04	கணிதம்	12	60		
05	விஞ்ஞானம்	12	60		
06	வரலாறு	12	24		
07	புவியியல்	12	24		
08	வாழ்க்கைத் திறனும் குடியுரிமைக் கல்வியும்	12	24		

09	அழகியல் பாடம்	12	36		
10	பரிசோதனையும் தொழிநுட்பக் கல்வியும்	12	24		
11	சுகாதாரமும் உடற்கல்வியும்	12	24		
12	சிங்களம் தமிழ் இரண்டாம் மொழி	12	24		
13	நூலகம்	12	12		
	ஒதுக்கப்படாத பாடவேளை	12	12		
	மொத்தம்				

பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடு 3.21:

மேலேயுள்ள அட்டவணையிலுள்ள பிரிவுக்குத் தேவையான குறைந்தளவு ஆசிரியர் தொகையைக் கணிக்குக. உங்கள் பாடசாலை நேரசூசிகையை நீங்கள் தயாரிக்கின்றீர்களாயின் உங்களது அவதானிப்பினைத் தருக.
அத்துடன், இப்பாடசாலையின் ஆசிரியர் சிக்கனத்துக்கான உத்தேச உபாயங்களையும் தருக.

a. நேரசூசிகை தயாரிப்பதற்கன ஆசிரியர் விபரங்கள்

பாடசாலையின் மனிதவளங்களை உச்சிநிலையில் பயன்படுத்துவதற்கு ஆசிரியர் விபரங்கள் பெற்றப்பட வேண்டும். பின்வரும் விபரங்கள், முழுமையான ஆற்றலுடன் ஆசிரியர்களைப் பயன்படுத்தும் நேரசூசிகையை உருவாக்குவதற்கும் ஆசிரியர் வேண்டுதல்களையும் தேவைகளையும் பெறுவதற்கு உதவும்.

- ஆசிரியரின் தகமைகள்
- பிரதான சிறப்புத் தேர்ச்சிக்கான பாடம்
- ஆசிரியர் கற்பிக்க விரும்பும் துணைப் பாடங்கள்
- ஆசிரியர் உதவுவிரும்பும் இணைக்கலைத்திட்டச் செயற்பாடுகள்.

ஆசிரியர் விருப்பங்களைப் பெறுவதற்குப் பின்வரும் அமைப்பினைப் பயன்படுத்தலாம்.

பாடசாலை நேரசூசிகையைத் தயாரித்தல்
ஆசிரியர் பற்றிய விபரங்கள்

..... வித்தியாலயம்

1. ஆசிரியரின் பெயர் :

.....

2. கல்வித் தகைமைகள்

கல்வித் தகைமைகள்	பிரதான பாடங்கள்	துணைப்பாடங்கள்
1. 2. 3. 4.		

3. கற்பிக்க விரும்பும் பாடங்கள்

விருப்புப் பாடம்	தர விருப்பம்	
	முதல் விருப்பு	இரண்டாம் விருப்பு
1ளவ		
2னெ		
3சன		
4வா		

4. இணைக்கலைத்திட்டச் செயற்பாடுகளில் விருப்புக்குரிய பொறுப்புகள்
   1.
   2.
   3.

..... திகதி:

.....
ஆசிரியர் ஒப்பம்

பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடு 3.22:

பின்வரும் நேரசூசிகை தயாரிக்கும் செயற்பாட்டினை நடத்துவதற்கும் பார்வையிடுவதற்கும் அடுத்த பாடசாலையை நிறுவனங்கள் தீர்மானித்துள்ள அட்டவணைகளைத் தயாரித்தல்:

1. பிரிவு 6-11 க்கான பாடங்களுக்கான பாடவேளைகள்
2. பிரிவு 6-11க்கான ஆசிரியர் தேவைகள்

நேரசூசிகை தயாரிப்பதற்கான ஆசிரியர் விருப்ப விபரங்களை பெறுவதற்கு மேலே தரப்பட்டுள்ளது போல அமைப்பொன்றைத் தயாரிப்பதுடன், ஒரு பெரிய பாடசாலையாக இருந்தால் ஏறக்குறைய 10மூ ஆசிரியர்களுடன் நிருவகிக்கலாம். நீங்கள் அவதானித்த முக்கியமான பலங்களையும் நலிவுகளையும் எடுத்துக்காட்டுவதுடன் அந்நலிவுகளை வெற்றிக்கொள்வதற்கான பரிகாரச் செயற்பாடுகளையும் முன் வைக்குக.

b. பாடசாலை நேரசூசிகையைத் தயாரிக்கும் படிமுறைகள்

பின்வருவன பாடசாலை நேரசூசிகையைத் தயாரிப்பதற்கென வழங்கப்படும் அடிப்படைப் படிமுறைகள்.



உரு 3.2. *பாடசாலை நேரசூசிகையைத் தயாரிக்கும் படிமுறைகள்*

C. பதில் நேரசூசிகையைத் தயாரித்தல்

ஆசிரியர்கள் பல்வேறு காரணங்களுக்காக வராமல் இருக்கிறார்கள். தனிப்பட்ட மற்றும் கல்வி அதிகாரிகளால் ஒப்படைக்கப்பட்ட உத்தியோகபூர்வ கடமைகளைக் கவனிக்க அல்லது பயிற்சி நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக இருக்கலாம். ஆசிரியர்கள் வராமல் இருக்கும்போது ஆசிரியரின் அந்நாளுக்குரிய வகுப்பு வெறுமனே கழிவதுடன் அதன் விளைவாக பாடசாலையில் ஒழுக்கக் கட்டுப்பாடின்மை உருவாகும். மாணவரின் கற்பித்தல் நேரம் இழக்கப்படுவதுடன் கற்றலும் பாதிக்கப்படும்.

இதனைத் தீர்ப்பதற்கு பாடசாலை அதிபர் பதில் நேரசூசிகையை அந்த நேரத்தில் பாடங்கள் எதுவுமின்றி இருக்கும் ஆசிரியரின் துணையுடன் மாணவரை ஈடுபடுத்துவதற்கெனத் தயாரிக்கலாம். இதனையே பதில் நேரசூசிகை என்கின்றனர். மற்றும் குறித்த நாளுக்கெனத் தயாரிக்கப்படும் தற்காலிக நேரசூசிகையும் பதில் நேரசூசிகை என அழைக்கப்படுகிறது. பாடசாலையில் பதில் வேலைகளை வைத்திருப்பதில் நன்மைகளும் தீமைகளும் உள்ளன.

நன்மைகள் என்றவகையில் மாணவர்கள் கட்டுப்பாட்டில் இருப்பர். ஆசிரியரின் அவதானத்திற்குள்ளாவர், மாணவர்கள் ஈடுபடுவதற்குச் சில பயிற்சிகளை வழங்கலாம். வினா-விடை நிகழ்ச்சித்திட்டங்கள், விவாதங்கள், ஆசிரியர் வழங்கும் ஏனைய வேலைகளைச் செய்தல் மற்றும் வராமல் இருக்கும் ஆசிரியர் மாணவர் ஈடுபடுவதைக் கவனிக்கவெனப் பாடசாலைக்கு அனுப்பும் வேலையை பதில் ஆசிரியர் ஆக்கபூர்வமான முறையில் கவனிக்கலாம்.

தீமைகள் என்ற வகையில் பதில்வேலை ஒப்படைக்கப்பட்ட ஆசிரியர் பக்கம் அநேகம் உள்ளன. அவர் நேரசூசிகையிலுள்ள பாடவேளை ஒன்றை இழக்கிறார். ஆசிரியரின் ஆயத்தம், பயிற்சிகளைத் திருத்துதல், கற்றலில் அதிக வேலைப்பழுவின் பின்னரான ஓய்வின்மை என்பன களைப்பை ஏற்படுத்தலாம். சுருக்கமாக கூறுவதானால், ஓர் ஆசிரியரின் வரவின்மையானது, பாடசாலைக்கு வந்திருந்த இன்னொரு ஆசிரியருக்கு மேலதிக வேலையை வழங்குவதாக முடிந்துவிடும்.

பதில் நேரசூசிகையைத் தயாரிப்பதற்கான குறிப்புகள் பாடசாலை நேரசூசிகையை தயாரித்தவுடன், வாரத்தில் 5 நாட்களும் நாளின் 8 பாடவேளைகளிலும் ஓய்வாக இருக்கும் சகல ஆசிரியர்களுக்குரிய அட்டவணையொன்றைத் தயாரித்தல் வேண்டும். அது பின்வரும் அமைப்புடன் கூடியதாக இருக்கலாம். 5 நாட்களிலும் முதலாம் மற்றும் இரண்டாம் பாடவேளைகளை கவனத்திற் கொண்டு ஓர் உதாரணம் கீழே தரப்பட்டுள்ளது. இதனை ஏனைய பாடங்களுக்கும் பின்பற்றலாம்.

அட்டவணை 3.8

பதில் நேரசூசிகைக்கு உதாரணம்.

பாடவேளை	ஒய்வாக இருக்கும் ஆசிரியர் இலக்கம் அல்லது முதல் எழுத்துக்கள்				
	திங்கள்	செவ்வாய்	புதன்	வியாழன்	வெள்ளி
1	5,8,11,30,32, 40, 50	2,3,5,10,13,34, 40	3,5,6,12,15,18, 19,20	4,5,6,11,13,14, 15,18,30	2,3,6,9,11,12 34,36
2	2,3,5,10,13, 40	5,8,11,30,32, 40, 50	2,3,6,9,11,12 34,36	3,5,6,12,15,18, 19,20	4,5,6,11,13,, 15,18,30

பொதுவாக பதில் கடமையை முதலாவது பாடவேளையில், வருகையின்மை பற்றி முன்னரே அறிவித்தாலொழிய வழங்கக்கூடாது. பெரும்பாலான ஆசிரியர்கள் தம்மால் பாடசாலைக்கு வரமுடியாமை பற்றி அன்றைய தினமே அறிவிக்கின்றனர். மேலே தரப்பட்டுள்ள அட்டவணையானது, ஆசிரியரின்றி இருக்கும் வகுப்புகளுக்கு ஆசிரியர்களை அனுப்புவதற்கு உதவும். குறித்த நாளில் வராமல் இருக்கும் ஆசிரியர்களின் தொகைபற்றிய குறிப்பும் எடுக்கப்படுதல் வேண்டும். ஏனெனில், வகுப்புகளை ஒப்படைத்தல் நிருவாகத்துக்கு உதவாது.

பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடு 3.23:

உங்கள் பாடசாலையில் பதில் வேலைக்கான நேரசூசிகையொன்றை 5 வேலை நாட்களுக்கான ஒரு நாளுக்குரிய 8 பாடவேளைகளுக்கும் ஆசிரியர் இலக்கம் அல்லது ஆசிரியரின் முதலெழுத்தைப் பயன்படுத்தித் தயாரிக்குக. நாளுக்குரிய பதில் நேரசூசிகையை தயாரிப்பதற்கு அதனைப் பயன்படுத்துக. இந்நேரசூசிகையைப் பயன்படுத்துவதிலுள்ள நன்மைகளையும் குறைபாடுகளையும் தீர்மானிக்குக.

பாடசாலைக் கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் பற்றிய மதிப்பீடு

பாடசாலையில் கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் பற்றிய மதிப்பீட்டுக்கான பின்வரும் தராதரங்களை குறிக்காட்டிகள் மற்றும் நியதிகளை அமைச்சு முன்மொழிந்துள்ளது.

1. தரமிடு அளவுகோல்

குறிக்காட்டிகளுக்கெனத் தரப்பட்டுள்ள ஒவ்வொரு நியதிக்குரிய மதிப்பீட்டுச் செயல்முறைக்குப் பயன்படுத்தக்கூடிய தரமிடு அளவுகோல் பின்வருமாறு

5 – உன்னதம் 4 – மிகநன்று 3 – நன்று 2 – சாதாரணம் 1 – விருத்தி செய்யவேண்டும்

தராதரம் 1	தேசிய இலக்குகள் மற்றும் தேர்ச்சிகளை நிறைவுசெய்வதற்குத் தேசிய கலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்					
குறிகாட்டி 1.1	நியதிகள்	5	4	3	2	1
தேசிய இலக்குகளை அடைவதற்கான கற்பமித்தல் கற்றல் செயல்முறைகள் திட்டமிடப்பட்டுள்ளது	தேசிய இலக்கொன்பைப் பற்றி பதவியணியினர் அறிவர்					
	தேசிய இலக்குகளை வெளிப்படுத்தினர்					
	இலக்குகளை அடைவதற்கான செயல்திட்டங்கள் திடடமிடப்பட்டுள்ளன					
	இலக்குகளை மதிப்பிடுதற்கு ஆசிரியரை நெறிப்படுத்துதல்					
	மீள்நோக்குச் செயல்முறைமைய நடைமுறைப்படுத்துதல்					
வழிகாட்டி 1.2	நியதிகள்					
அடிப்படைத் தேர்ச்சிகளை விருத்தி செய்வதற்கான கற்பித்தல் கற்றல் செயல்முறைகள் திட்டமிடப்பட்டுள்ளன.	ஏழு அடிப்படைத் தேர்ச்சிகளை ஆசிரியர்கள் அறியச்செய்தல்					
	மாணவரின் தேர்ச்சி அபிவிருத்திக்கான பாட ஆசிரியர்கள் பாடத்தைத் திட்டமிட உதவியமை					
	தேர்ச்சிகளை அடைவதற்கு கற்றல் குறிக்கோள்களைப் பகுப்பாய்வு செய்தல்					
	தேர்ச்சிகளை அடைவதற்கு கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்					
	பாடத்திற்குரிய தலைவர்கள் மேலே கூறியவற்றைத் தொடர்ச்சியாகக் கண்காணித்தல்					
குறிகாட்டி 1.3	நியதிகள்					
தேசிய பொதுக் குறிக்கோள்களையும் அடிப்படைத் தேர்ச்சிகளையும் உருவாக்குவதற்கு	தொடர்பாடல் தேர்ச்சிகளை உறுதி செய்வதற்குச் செயற்படுதல்					
	ஆளுமை விருத்திக்காகச் செயற்பாடுகளைத் திட்டமிடுதல்					

கலைத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படுகிறது.	சமயம் மற்றும் ஒழுக்க விருத்திக்கான நிகழ்ச்சித் திட்டங்கள்					
	விளையாட்டு மற்றும் ஓய்வு நேரப் பயன்பாட்டுக்குப் பயிற்றுவித்தல்					
	கற்பதற்குக் கற்றல் பற்றிய எண்ணக்கருவை உறுதிசெய்யும் வழிமுறைகள்.					
	சுற்றாடல்சார் தேர்ச்சிகளை விருத்திச் செய்யும் சந்தர்ப்பத்தை வழங்குதல்					
	வேலையுலகுக்கு ஆயத்தப்படுத்தும் செயற்பாடுகளைத் திட்டமிடுதல்					

தராதரம் 2						
குறிகாட்டி 2.1	நியதிகள்	5	4	3	2	1
அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிகளும் கணிப்பீட்டுச் செயல்முறைகளும்	தரம் 1 மாணவரை இனங்காண்பதற்கு நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்					
	தரம் 1 மாணவர் நிகழ்ச்சித்திட்டத்தை இனங்கண்டு கற்றல் - கற்பித்தல் செயல்முறையை திட்டமிடுதற்குப் பயன்படுத்துதல்					
	முதலாவது முதல்நிலையில் 40 அத்தியவசிய கற்றல் தேர்ச்சிகளில் சகல மாணவரும் தேர்ச்சிபெறச் செய்யும் கடப்பாடு					
	2வது முதல்நிலையில் 52 அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகளில் சகல மாணவரையும் தேர்ச்சிபெறச் செய்யும் கடப்பாடு.					
	3வது முதல்நிலையில் 55 அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிகளில் சகல மாணவரையும் தேர்ச்சிமுயுறச் செய்யும் கடப்பாடு					
குறிகாட்டி 2.2	நியதிகள்					
முதல்நிலையில்உள்ள ஒரு தேர்ச்சியை அடுத்த முதல் நிலைக்கான நுழைவுத் தேர்ச்சியாகக் கருதுதல்	அடுத்த முதல்நிலைக்கான அத்தியாவசிய தேர்ச்சிக்கான தகவலை வழங்குவதற்குரிய ஆசிரியர் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்					
	தகவலின் அடிப்படையில் கற்றல் செயல்முறையைத் திட்டமிடல்					
	நடத்தைக் கோலங்களைப் பேணுவதற்கு ஒவ்வொரு மாணவர் பற்றிய சிறுகுறிப்புகளும் பதிவுகளும்.					
	மாணவர் தொடர்பாகப் பேணப்படும் அறிக்கைகள் பற்றிப் பெற்றோருக்கு விழிப்பூட்டுதல்					
	மாணவர் முன்னேற்றக் கணிப்பீடு ஒரு தொடருறு செயற்பாடாக இருத்தல்					
குறிகாட்டி 2.3	நியதிகள்					
ஆரம்பப் பிரிவில் கற்பித்தல் கற்றல் செயல்முறைகள்	ஒரு முதல்நிலைக்கான பொறுப்பு ஒரு ஆசிரியருக்கு வழங்கப்பட வேண்டும்					
	முதல் நிலை 1இன் திட்டமிட்ட விளையாட்டுக்கான நிறை கூடுதலாகவும் மேசை வேலைக்கான நிறை குறைவாகவும் கற்பித்தல் - கற்றல் செயல் முறை திட்டமிடலில் இருத்தல்					

	முதல்நிலை இரண்டிற்கு மேலேயுள்ள நியதி 3இனை ஒப்பிட்டுச் சமநிலையான செயல்பாடுகளை மேற்கொள்ளல்					
	முதல் நிலை 3இல் திட்டமிட்ட விளையாட்டுச் செயற்பாடுகளுக்கு குறைந்த நிறைப்படுத்தலும்					
	கற்பித்தல் - கற்றலைத் திட்டமிடல் மேசை வேலைக்குக் கூடுதலான நிறையும் கண்காணிப்புப் பதிவேடுகளைப் பேணுதல்					
குறிகாட்டி 2.4	**நியதி**					
ஆரம்பப்பிரிவின் கற்றல் சூழல்	முதல்நிலை 1 மற்மறும் 2 இலுள்ள மாணவர்கள் பயன்படுத்துவதற்கு வாய்ப்பளிக்கும் விதத்தில் கரும்பலகையைப் பொருத்துதல்					
	வேலை மேசை மற்றும் சாதனங்களை வடிவமைத்தலுக்கு மாணவருக்குக் கூடுதலான வாய்ப்பை வழங்குதல்					
	முதல்நிலை 1 மற்றும் 2 இல் விளையாடும் பகுதியை அர்த்தமுள்ள விதத்தில் பயன்படுத்துதல்					
	சுற்றாடல் தொடர்பான செயற்பாடுகளில் தரம் 1 மற்றும் தரம் 2 இலுள்ள மாணவர்கள் தரம் 5 மற்றும் 6 மாணவருடன் வேலைசெய்தல்					
	வகுப்பறையில் சுற்றாடல் நாட்காட்டியைக் காட்சிக்கு வைத்தல்.					
குறிகாட்டி 2.5	**நியதி**					
விசேட நிகழ்ச்சித் திட்டங்கள்	இணைக் கலைத்திட்டச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமொன்றை ஆயத்தப்படுத்துதல்					
	முதல்நிலை 3ற்கான வகுப்புத் தெரிவுக்குரிய செயற்பாடுகளை நடத்துதல்					
	வெவ்வேறு முதல்நிலைகளுக்குப் பொருத்தமான உடல்சார் சுகாதாரச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துதல்					
	ஆரம்பப் பாடசாலை செல்லல் பூர்த்தியாகும் வரை சகல மாணவரையும் தங்கியிருக்கச் செய்தல்					
	விசேட தேவையுடைய மாணவரைஇனங்கண்டு அவர்களுக்குத் தேவையான நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல்					
	பரிசோதனைமுறைக் கற்பித்தலில் ஈடுபடுதலும் மாணவரின் பலம் மற்றும் சிரமங்களை இனங்காணுதலும்					

தராதரம் 3						
குறிகாட்டி 3.1	நியதிகள்	5	4	3	2	1
வருடாந்தக் கலைத்திட்டம் திட்டமிடப்படுகிறது	பிரிவுத்தலைவர்கள் மற்றும் பாடத் தலைவர்களுடன் சேர்ந்து திட்டமிடல்					
	ஐந்தாண்டு அபிவிருத்தித் திட்ட இலக்குகளுடன் வருடாந்தக் கலைத்திட்டத்தை இணைத்தல்					
	வருடாந்த நடைப்படுத்தும் திட்டத்துக்குப் பொருந்துதல்					
	கணிப்பீடு மற்றும் கண்காணிப்புச் செயற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.					
	அதிபர் திட்டத்தை அங்கீகரித்துள்ளார்.					
குறிகாட்டி 3.2	நியதிகள்					
தராதர உள்ளீடுகளைப் பயன்படுத்துதல்	கற்பித்தலை வினைதிறனுடையதாக ஆக்குதற்கு ஆசிரியர்களின் கவனத்தை தராதர உள்ளிடுகைகளை பயன்படுத்துவதின்பால் ஈர்த்தல்					
	பெற்றப்பட்ட தராதர உள்ளீடுகளை பிரிக்கப்பட்ட பாடங்களுக்கும் பிரிவுகளுக்குமென ஒதுக்கீடு செய்தல்					
	வழங்கப்பட்ட தராதர உள்ளிடுகையின் தொகையை ஆசிரியர் அறியச் செய்தல்					
	தராதர உள்ளிடுகைகளைப் பெற்றுக் கொள்வதில் முகாமைத்துவத்தால் வழங்கப்பட்ட வசதிகள்					
	பிரிவுகளுக்கும் பாடங்களுக்கும் ஒதுக்கப்பட்ட நிதியை பாட அபிவிருத்திக்குப் பயன்படுத்தியமை.					

தராதரம் 4	கற்பித்தல் கற்றல் செயல்முறைக்கு அவசியமான கற்றல் வளங்கள் பேணப்படுகிறது.					
குறிகாட்டி 4.1	நியதிகள்	5	4	3	2	1
ஆசிரியர் அறிவுரைப்புக் கைந்நூல் (வுஐஆளு) மற்றும் பாடத்திட்டங்கள்	சகல பாடங்களுக்குமான ஆசிரியர் அறிவுரைப்புக் கைநூல்களையும் பாடத்திட்டத்தையும் ஆசிரியர்களுக்கு வழங்குதல்					
	பெறப்பட்ட ஆசிரியர் அறிவுரைப்புக் கைந்நூல்களையும் பாடத்திட்டங்களையும் நூலகத்தில் பதிவு செய்திருத்தல்					
	ஆ அ கைந்நூல் மற்றும் பாடத்திட்டங்களை ஆசிரியர்களுக்கு வழங்கம் முறையியல்					
	குறைபாடுகளைக் கணிப்பிட எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கையும்					
	ஆசிரியர் இடமாற்றம் செய்யப்படுகிற போது வழங்கப்பட்டவற்றைப் பெற்றுக் கொள்ளல்					
குறிகாட்டி 4.2	நியதிகள்					
மாணவர் பாடநூல்கள்	போதியளவு பாடநூல்களையும் / செயல்நூல்களையும் மாணவருக்கு விநியோகத்தல்					

	ஓர் ஆசிரியருக்கு ஒப்படைக்கப்பட்ட பாடநாள் பொறுப்பு					
	இலவச பாடநூல் பகிர்ந்தளித்தல் மற்றும் அவற்றின் பயன்பாடு தொடர்பான கலாசாரத்தைக் கட்டியெழுப்புதல்					
	பாடசாலைக்கான பாடநூல் பற்றாக் குறை பற்றிய கணிப்பீடு					
	பாவனைக்கு உதவாத நூல்களை அகற்றுவதற்கான நிகழ்ச்சித் திட்டம்					
குறிகாட்டி 4.3	நியதிகள்					
கற்றல் வளங்கள்	வகுப்பு மட்டங்களுக்கு பொருத்தமான கற்றல் சாதனங்களை இனங்காணுதலும் சேமித்து வைத்தலும்					
	சாதனங்களைச் சரியாகப் பயன்படுத்துவதற்கான காரணிகள்					
	இலகுவாகக் கிடைக்கக்கூடிய இடத்தில் சேமித்து வைத்தல்					
	பார்க்கக் கூடிய இடத்தில் வளங்களைக் காட்சிப்படுத்துதல்					
	பாதுகாப்பான பயன்பாட்டில் கவனஞ் செலுத்துதல்					
குறிகாட்டி 4.4	நியதிகள்					
கணினிப் பயன்பாடு	வழங்கப்பட்ட கணினியைப் பயன்படுத்துதல்					
	கூடுதலான தொகை மாணவர்கள் பயன்படுத்துவதற்கான நேரசூசியை வைத்திருத்தல்					
	கற்பித்தல் கற்றலுக்கான கருவியாகக் கணினியைப் பயன்படுத்துதல்					
	வழங்கப்பட்ட மென்பொருட்களைப் பயன்படுத்துதல்					
	கணினிப் பயன்பாட்டுக்கென பொதுவான அறிவுறுத்தல் தொகுதியை வைத்திருத்தல்					
குறிகாட்டி 4.5	நியதிகள்					
இணையத்தள வசதிகள்	இணையத்தள வசதிகளை வினைத்திறன் மிக்க முறையில் பயன்படுத்துதல்					
	அதிகூடிய வினைத்திறனுடன் பயன்படுத்துதல்					
	இணையத்தளத்தைப் பயன்படுத்துவதில் மாணவர்கள் ஆற்றல் உள்ளவர்					
	இணையத்தளத்தை ஆசிரியர் பயன்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டம்					
	இணையத்தளத்திலிருந்து ஆசிரியரும் மாணவரும் புதிய அறிவைப் பெறுவதற்கான வாய்ப்புகளை அவதானித்தல்					

தராதரம் 5	குறித்துக் கூறப்பட்ட கலைத்திட்டம் பற்றிய கற்பித்தல் கற்றல் செயல்முறைகளை தராதர ரீதியாக நடைமுறைப்படுத்துதல்					
குறிகாட்டி 5.1	நியதிகள்	5	4	3	2	1
கலைத்திட்டச் சாதனைங்களை	ஆயத்தநிலைக் குறிப்புகளின் (Tim) பாடக் குறிப்பு, பாடநூல், செயற்பாட்டுத் திட்டம் பயன்பாடு.					
	விளைதிறனுடைய கற்றல் குறிக்கோளுக்கான ஒப்படைகளைத் தயாரித்தல்					
	பாடநூலுக்கு மேலாக வளங்களைப் பயன்படுத்துதல்					
	முறைப்படியான கற்றல் சூழலைக் கொண்டிருத்தலும் வகுப்பறையை ஒழுங்கமைத்தலும்					
	கலைத்திட்டத்தினால் இலக்கு வைக்கப்பட்ட குறிக்கோள்களை அடைவதற்கு வளவாளரின் உதவி கிடைத்தல்					
குறிகாட்டி 5.2	நியதிகள்					
ஊடகத்துடன் மாணவர் பங்குபற்றல்	மாணவர் மையக், கற்றல் செயல்முறையை மதித்தல்					
	ஊக்கத்துடன் கூடிய மாணவர் பங்கேற்றலை வழிப்படுத்துதல்					
	பொருட்காட்சி.'.மாணவர் செயற்பாடுகளில் மாணவர் ஈடுபாடு					
	மாணவர் அறிவின் முகாமைத்துவப் பதவி					
	மாணவரின் அறிவுப் பரிமாற்றம்					
குறிகாட்டி 5.3	நியதிகள்					
செயலூக்கமுடன் ஆசிரியர் பங்கேற்பு	ஆசிரியர்கள் தரவட்டத்தில் தன்னார்வத்துடன் பங்கேற்பர்					
	கலைத்திட்ட திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் தொடர்பான பிரச்சினைகளைக் கலந்துரையாடுவர், அறிக்கை செய்வர்					
	தொடர்புடைய பிரச்சினைகளை முன்னுரிமைப்படுத்தி அவற்றைத் தீர்க்க முற்படுவர்					
	தராதர வட்டம் பற்றித் தொடர்ச்சியாக அறிக்கைகளைப் பேணுவர்					
	தராதர வட்டத்தை ஊக்குவிக்கும் படிமுறைகள்					

தராதரம் 6	கற்பதற்குக் கற்றலுக்கான தேர்ச்சிகளை அடைவதற்குக் கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவர்					
குறிகாட்டி 6.1	நியதிகள்	5	4	3	2	1
வினைத்தமிறனுள்ள கற்றல் வளப் பயன்பாடு	பயனள்ள கற்றல் வளங்களைச் சேகரிப்பர்					
	தேவைக்கேற்றவாறு கற்றல் தொகுதிகள் ஆயத்தஞ் செய்யப்படும்					
	தகவலைத் தொடர்ச்சியாகச் சேரிப்பதற்கான முறையியல்கள்					
	சுவர் பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் பராமரிப்பர்					
	மின்னியல் முறைகள் கிடைக்குமாயின் பயன்படுத்துவர்					
குறிகாட்டி 6.2	நியதிகள்					
வகுப்பறை நூலகங்களின் பயன்பாடு	நூகலத்திற்கென வழங்கப்பட்டுள்ள பாடவேளைகளின் பயன்பாட்டுக்கான முறையியல்கள்					
	வகுப்பறை நூலகத்தில் போதிய நூல்களை வைத்திருத்தல்					
	நூலக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்					
	நூலகத்திலிருந்து தகவலைத் திரட்டும் மாணவர்களின் காரணிகள்					
குறிகாட்டி 6.3	நியதிகள்					
செயற்திட்டச் செயற்பாடுகள்	மாணவர் தேர்ச்சிகள் பற்றிய செயற்திட்ட அடிப்படைகளை நடைமுறைப்படுத்துதல்					
	செயற்திட்டங்களில் அநேகமான மாணவர் பங்குபற்றுதல்					
	செயற்திட்ட அறிக்கைகளை ஒழுங்காகப் பேணுதல்					
	செயற்திட்டங்களால் கிடைக்கும் நன்மைகளை அதிகரித்தல்					
	செயற்திட்ட அறிக்கைகளை முன்வைத்தலும் மதித்தலும்					
குறிகாட்டி 6.4	நியதிகள்					
மாணவரைப் புலன் விசாரணைகளுக்கு நெறிப்படுத்துதல்	அவதானத்துடன் இணைந்த சுய கற்றல் உபாயங்களுக்கு மாணவரை நெறிப்படுத்துதல்					
	களப் பயணங்களை ஒழுங்கு செய்தல்					
	வகுப்பறை மட்டத்தில் ஆக்கத்திறன் செயற்பாடுகளைக் காட்சிப்படுத்தும் பலகைகள்					
	கணித ஆய்வு கூடம் மொழி ஆய்வு கூடம் அல்லது ஏனைய பாட அபிவிருத்தி பிரிவுகளில் மாணவர் பங்குபற்றல்					
	ஒப்படைகள் மற்றும் செயற்திட்டம் பற்றிய வேலைத்தாள்கள் மூலம் கற்றலை நெறிப்படுத்துதலை					
குறிகாட்டி 6.5	நியதிகள்					
வெவ்வேறு திறன்களின் வகைகளை விருத்தி செய்தல்	விவாதம் மற்றும் பேச்சுப் போட்டிகள்					
	புதிய ஆக்கங்கள்					
	பாட அபிவிருத்திக்கான பொருட்காட்சி, சித்திரம், கைவினைச் செயற்திட்டங்கள் (தரமட்டத்தில்)					
	கதம்பங்கள்					
	நாடகம், வாய் மற்றும் கருவிசார் போட்டிகள்					

தராதரம் 7						
குறிகாட்டி 7.1	நியதிகள்	5	4	3	2	1
மாணவரின் பாடசாலை மட்டக் கணிப்பீட்டுச் செயல்முறைகள்	பாடசாலை மட்டக் கணிப்பீட்டுச் செயற்பாடுகளை இற்றைப்படுத்தல்					
	மாணவர் தேர்ச்சிப் பதிவுப் புத்தகங்களை இற்றைப்படுத்துதல்					
	கணிப்பீட்டு மதிப்பெண்களை முறைப்படி அறிவித்தல்					
	மாணவர் அடைவு மட்டங்களைப் பகுப்பாய்வு செய்தல்					
	சகல மாணவரதும் அபிவிருத்திக்காக கணிப்பீட்டு மதிப்பெண்களைப் பயன்படுத்துதல்					
குறிகாட்டி 7.2	நியதிகள்					
கற்பித்தல் கற்றல் செயல்முறையினை மதிப்பிடுதல்	குறிப்பான உள்ளக மதிப்பீட்டு ஒழுங்குமுறைகளைப் பின்பற்றுவர்					
	உள்ளக மதிப்பீட்டு அறிக்கைகளைப் பேணுவர்					
	போதியளவு மதிப்பீட்டாளர்					
	ஆசிரியர் போதியளவு மதிப்பிடப்படுவர்					
	மேற்பார்வை நிகழ்ச்சித்திட்டமானது அதிபரின் மேற்பார்வைக்கு உட்பட்டது.					
குறிக்காட்டி 7.3	நியதிகள்					
மாணவர் பின்னூட்டல் நிகழ்ச்சித்திட்டம்	கற்கும் பாடங்களின் பலம் மற்றும் சிரமங்களை அறிதல்					
	சமாந்தர தரங்களில் குறைவாக வினையாற்றும் மாணவரை இனங்காணல்					
	உயர்அடைவு மட்டங்களை அடைந்தோரின் அடைவுகளில் தலையீடு					
	இனங்காணப்பட்ட குறைபாடுகளுக்கென நடைமுறைப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தைத் தயாரித்தல்					
	பின்னூட்டல் நிகழ்ச்சித் திட்டத்தால் நன்மையடைந்த மாணவர் தொகை					
குறிகாட்டி 7.4	நியதிகள்					
விசேட தேவையுள்ள பிள்ளைகள்	விசேட கல்வித் தேவையுள்ள மாணவர்களை இனங்காணல்					
	சாதாரண வகுப்பறைகளிலுள்ள விசேட கல்வித் தேவையுள்ள மாணவர்களுக்கு வசதிகளை வழங்குதல்					
	இம்மாணவர்கள் பற்றிப் பெற்றோருக்கு விழிப்பூட்டல்					
	உள்ளடக்கல் கல்வி நிகழ்ச்சித் திட்டத்தில் இத்தகைய மாணவரின் விசேட ஆற்றல் அவிவிருத்தி பற்றித் தொடர்ச்சியான முன்னேற்ற அறிக்கைகளைப் பேணுதல்.					
	விசேட கல்விப் பிரிவொன்றைக் கவர்ச்சிகரமாக, பொருத்தமான இடத்தில் பராமதிரித்தல்.					

குறிகாட்டி 7.5	நியதிகள்					
ஆசிரியர் பின்னூட்டல்	சகல ஆசிரியர்களதும் முன்னேற்றத்தை ஒவ்வொரு தவணையும் அறிக்கை செய்தல் (பாட அலகுகளாய்ப் பூர்த்தி செய்தல்)					
	மேலே இனங்காணப்பட்டவற்றிலுள்ள பலன்களை மதித்தல்					
	இனங்காணப்பட்டுள்ள பிரச்சினைகளைக் குறைக்க நடவடிக்கை எடுத்தல்					
	வலய, கோட்ட மற்றும் சேவைக் கால ஆலோசகர்களின் உதவியைப் பெறுதல்					
	சுயதொழில்சார் விருத்தியை மதித்தல்.					
குறிகாட்டி7.6	நியதிகள்					
ஆசிரியர் வகிபாகத்தைக் கணிப்பிடுதல்	பாடசாலை வரவுக் குறிக்காட்டி (பாடசாலைக்கு நேரத்துக்கு வருதலும் போதலும் வகுப்பில் உரிய நேரத்தில் இருத்தல் முழு நேரமும் வகுப்பில் இருத்தல்)					
	கற்பித்தலுக்கு ஆயத்தஞ் செய்தல்					
	பரீட்சை முடிவுகள்					
	இணைக் கலைத்திட்டச் செயற்பாடுகளில் ஈடுபாடு					
	ஒவ்வொரு ஆசிரியரதும் கற்பித்தல் மற்றும் கற்றலுக்கான அறிக்கைகளைப் பேணுதல்.					
	மதிப்பீட்டு அறிக்கை					
	மதிப்பிடப்பட்ட தராதரங்களின் தொகை					
	மதிப்பிடப்பட்ட குறிகாட்டிகளின் தொகை					
	பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகள்					

மொடியூல் 4	தராதரமுள்ள கற்பித்தல் மற்றும் கற்றலை விருத்தி செய்தல்

குறிக்கோள்:

இந்த மொடியூலானது கற்பித்தல் கற்றல் செயல்முறையையும் கற்பித்தல் கற்றல் செயல்முறையை விளக்கிக் கொள்வதற்கான சட்டகத்தையும் பற்றிய முழுமையான நோக்கினை வழங்குகிறது. அத்துடன் மாணவர் மைய வகுப்பறைச் சூழலில் பயன்படுத்தப்படும் வெவ்வேறு கற்பித்தல் -கற்றலுக்கு மாணவரைத் திசைமுகப்படுத்துகிறது.

கற்றல் விளைவுகள்:

மொடியூலினைக் கற்று முடிக்கும்போது மாணவர்

1. கற்றல் மற்றும் கற்பித்தல் செயல்முறையின் இயல்பினைக் கலந்துரையாடுவர்
2. குறிப்பிட்ட பாடம் அல்லது தலைப்புக்கு வெவ்வேறு கற்பித்தல் - கற்றல் முறைகளைப் பிரயோகிப்பர்
3. குறிப்பிட்ட விடயம் அல்லது பாடத்திற்குப் பிரயோகித்த பல கற்பித்தல் கற்றல் முறைகளைச் செய்து காட்டுவர்.

மொடியூல் பற்றியநோக்கு

வாரம்	தலைப்பு/உள்ளடக்கம்	செயல்முறை	மாணவரின் கற்றல் பணி
1	1. கற்பித்தல் மற்றும் கற்றலை விளங்கிக் கொள்ளல் 2. கற்பித்தல் - கற்றல் செயல் முறையைத் திட்டமிடல் 3. நேரடிப் போதனைமுறைகள் 4. நேரில் போதனை முறைகள்	விரிவுரை மற்றும் குழுக் கலந்துரையாடல் சிந்தி – சோடி சேர்- பகிர்ந்து கொள் விரிவுரை	கற்பித்தல் - கற்றல் செயல்முறையைக் கலந்துரையாடல் கற்பித்தல் - கற்றல் முறைகள் மீதான கற்பித்தல் செய்து காட்டல்

2	5. இடைவினைப் போதனை 6. அனுபவஞ்சார் கற்றல்	விரிவுரை	கற்பித்தல் - கற்றல் முறைகளில் செய்துகாட்டல்
3	7. சுதந்திரமான கற்கை 8. வசதிப்படுத்தும் திறன்கள்	விரிவுரை	கற்பித்தல் கற்றல் முறைகளில் செய்துகாட்டல்

கற்றல் மற்றும் கற்பித்தல் என்றால் என்ன?

கற்றல் மற்றும் கற்பித்தல் ஆகிய இரு சொற்களையும் வரையறை செய்வது கடினம், இக்கைநூலில் நாங்கள் சில வரைவிலக்கணங்களை முன்வைத்துள்ளோம் அவற்றை விளங்கிக் கொள்வதும் இலகுவானது.

1. கற்றல் என்பது என்ன?

கற்றலுக்கான பல வரைவிலக்கணங்கள் கீழே தரப்பட்டுள்ளன. வெவ்வேறு ஆட்கள் அதனை எவ்வாறு வரையறை செய்துள்ளனர் என்பதனை விளங்கிக் கொள்ளலாம்.

- அனுபவங்களின் விளைவாக நடத்தையில் ஏற்படும் மாற்றம் (ர்யபபயசனஇ 1963)
- அறிவை அல்லது புலமையை பெற்றுக் கொள்ளும் செயல்முறை (முழெறடநளஇ 1998)
- ஒரு செயல்முறையினால் நடத்தை மாற்றமடைகிறது, வடிவமைக்கப்படுகிறது அல்லது கட்டுப்படுத்தப்படுகிறது.
- அனுபவத்தின் காரணமாக, நடத்தையில் சார்பளவில் ஏற்படும் நிரந்தரமான மாற்றமாகும். இது எங்களால் அவதானிக்கக்கூடிய புறவயமான நடத்தை மாற்றத்தைக் கருதுகிறது. (Keith Rutledge, 2003).
- புதிய நடத்தையை வெளிப்படுத்தும் ஆற்றுதலுக்கான அறிவைப் பெறுதலும் ஆற்றலை விருத்தி செய்தலும்
- அனுபவம் அல்லது பயிற்சியின் விளைவாக நடத்தையில் உண்டாகும் மாற்றம்.
- கற்றல் என்பது புதிய அறிவு, நடத்தைகள், திறன்கள், பெறுமானங்கள் விருப்பங்கள், புரிந்துணர்வு, என்பவற்றை பெற்றுக்கொள்ளுதல். மற்றும் வெவ்வேறு வகையான தகவல்களைத் தொகுத்தலில் ஈடுபடுதலும், கற்றலுக்கான ஆற்றல் மனிதன், விலங்கு மற்றும் சில மொழிகளால் பெற்றுக்கொள்ளப்படுகின்றன. காலப்போக்கில் ஏற்படும் முன்னேற்றமானது கற்றல் வளையியைத் தொடர்ந்தமையும்.
- தனிப்பட்ட அறிவைக் கட்டுருவாக்கும் செய்யும் பயிற்சியாகும். இது கற்பவரை உளரீதியாக உடன்பாடானவராக இல்லாமல் செயலூக்கம் உள்ளவராக்கும்.
- அறிவை அல்லது திறனைப் பெற்றுக்கொள்ளல். இது உள்ளே நிகழ்வதுடன் மூளையில் மாற்றம் ஏற்படுதற்கும் வழிகோலும்.

வெப்ஸ்ரர் அகராதியானது கற்றல் என்பதை "ஒருவர் கற்கும் செயல் அல்லது அனுபவம், போதனை அல்லது கற்கையால் பெறப்படும் திறன் பற்றிய அறிவு: அனுபவத்தினால் நடத்தைப் போக்கில் உண்டாகும் சீராக்கம்" என வயைறை செய்துள்ளது.

கற்றல் என்பது அநேகமாக நடத்தையில் உண்டாகும் மாற்றமென வரையறை செய்யப்படுகிறது. (Birkenholz, 1999,) இவை கல்வியிலிருந்து வருவிக்கப்பட்ட மக்கள் நடைமுறைப்படுத்தும் அறிவு, திறன்கள் மற்றும் பயிற்சிகளால் வெளிப்படுத்துப்படுகிறது.

பல ஆண்டுகாலமாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட மேலேயுள்ள வரைவிலக்கணங்கள் குறிப்பிடுவது என்னவெனில்.

> *"கற்றல் என்பது புதிய அறிவு, திறன்கள் அல்லது பெறுமானங்களைப் பெற்றுக் கொள்ளும் செயல்முறையாகும். அவை சில வகையான நடத்தை மாற்றங்களால் எடுத்துக்காட்டப்படும். "*

கல்வியாளர் ஒருவரின் கண்ணோட்டத்தில் கற்றலானது தனியாட்களுக்கு கற்றல் செயல்முறையின் மூலம் உதவுதலுடன் ஈடுபடுகிறதுடன் நாம் செய்யும் விடயங்கள் அனைத்தையும் கற்றல் உள்ளடக்குகிறது. இறுதி விளைவு என்ற வகையில் கற்றல் என்பது புதிதாகக் கண்ட தகவல்களைப் பெறும்போதும் அவற்றினை தமது வாழ்க்கையில் சேர்க்கும் போதும் நிகழ்கிறது.

2. கற்பித்தல் என்றால் என்ன?

அவ்வாறே பலர் கற்பித்தலையும் வித்தியாசமான முறையில் வரையறை செய்வர். சிலர் கற்பித்தலை ஒரு கலையாகப் பார்க்கும் போது ஏனையோர் அதனை ஒரு விஞ்ஞானமாகவும் கூறுவதுடன், அதனை கூறுகளைப் பகுதிகளாகப் பகுப்பாய்வு செய்வதற்கும் முற்படுகின்றனர். ஆயினும், ஏனையவர் அதனை தாம் அவதானித்ததுபோலவும் அது பற்றித் தாம் உணர்பவற்றையும் விபரிப்பர். இவற்றிலிருந்து தோன்றுவது என்னவெனில், ஒவ்வொரு வரைவிலக்கணமும், ஒவ்வொருவரும் அது பற்றிக் கருதுவற்றை வலியுறுத்துகின்றது.

கற்றல் மற்றும் கற்பித்தல் செயல்முறையில் நிபுணத்துவம் வாய்ந்த உளவியலாளர் கூட கற்பித்தல் பற்றி வெவ்வேறு எண்ணக்கருக்கள் உள்ளன என்னும் கருத்துடையவர்கள். நிபந்தனைப்படுத்துதலை வலியுறுத்தும் உளவியலாளர்கள், ஆசிரியர் மாணவரை நிபந்தனைப்படுத்துவதற்குரிய செயலாகக் கற்பித்தலை வரையறை செய்கின்றனர். எனவே, மாணவர்கள் தமது சூழலிலுள்ள பல்வேறு தூண்டிகளுக்குச் சரியான பதிற்குறிகளைக் காட்டுவர். மறுபுறத்தில் தனியாட்கள் அர்த்தத்தைத் தனிப்பட்ட முறையில் கண்டுபிடித்தல் எனப் பார்ப்பதும் உண்டு, இவ்விடயமானது கற்பவர்கள் தமது நோக்கங்களையும் பிரச்சினைகளையும் வரையறை செய்வதுடன் ஈடுபடும் ஒழுங்கு முறையென்பதை

வலியுறுத்துகிறது. அதேவேளையில், தமது நோக்கத்தை அடைவதற்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குமான சோதனைத் திட்டத்தை உருவாக்குதற்கான வாய்ப்பினை வழங்குதல் என்றும் கூறலாம்.

ஆகவே, கற்பித்தல் என்பது வெவ்வேறு ஆட்கள் வெவ்வேறு விடயங்களைக் கருதுகின்றனர் எனப் பொருள்கொள்வது சான்றாகின்றது. ஆயினும் கொன்சாலெஸ் மற்றும் ஜெயசேன (2009) ஆகியோர் சுட்டிக்காட்டியதுபோல, செயல்முறையைப் பகுப்பாய்வு செய்தலானது ஆசிரியரால் தொடக்கி வைக்கப்பட்ட ஆசிரியர் - மாணவர் உறவு என விபரிக்கப்படுகிறது. இவ்வரைவிலக்கணமானது உண்மையிலே மிகவும் எளிமையானதாகத் தோன்றுவதுடன், பல சிக்கலான பணிகளுடன் தொடர்புபடுவதுடன், கற்பவரின் விருப்பத்துடன் உள்ளது எனவும் சான்று பகருகிறது. இத்தகைய நோக்கில், கற்றலானது சில வடிவிலான அறிவு, அகக்காட்சி, பெறுமானங்கள் மற்றும் திறன்களைக் கற்பவர்களுக்கு வழங்குதல் என்பதை உள்ளடக்குவதுடன் இதன் காரணமாக அவன் அல்லது அவள் 'வாழ்தலை பரிமாற்றுதல்' என்பதை அறியகூடிய வினைதிறனுடன் வினையாற்றமுடியும். இந்நோக்கிலே, பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

> *"கற்பித்தல் என்பது இயலக்கூடிய உயர்மட்டத்திலான தனிப்பட்ட போதுமான தன்மைகளை அடைவதை மேம்படுத்துவதற்கான முயற்சியுடன் நன்கறிந்த மனித நடத்தை பற்றிய கோட்பாடுகளை பிரயோகித்தலாம்".*

மேற்கூறிய கூற்றானது, கற்பித்தல் ஆசிரியருக்கும் மாணவருக்கும் இடையிலான ஒப்பந்தம் என்பதைத் தெளிவுபடுத்துகிறது. இதன்மூலம் ஆசிரியர்களும் மாணவர்களும் ஒரு உடன்பாட்டுடன் சில தனியான கடப்பாடுகளை ஒருவருக்கொருவர் கொண்டுள்ளனர் என்பது எடுத்துக்காட்டுப்படுகிறது. அதேவேளையில் ஆசிரியர் தமது சிறப்புச் செயலை கற்பித்தலுக்கு வழங்கும் அதேவேளையில், கற்பவரிடமிருந்தும் அதேவிடயத்தை எதிர்பார்க்கின்றனர். ஆகவே கற்பித்தல் என்பது கடினமான வேலை எனக் கூறமுடியும் என்பதுடன் ஒவ்வொரு வகுப்பும் ஆசிரியர் வினையாற்றலை அடைதல் வேண்டும். ஆயினும் பரந்த சூழமைவில் புத்திசாலித்தமான ஆசிரியர் மாணவர் போல இருப்பதுடன், இருதிசை கொண்டுதம் சவாலுக்குரியதுமான ஆசிரியர் - மாணவர் உறவைப் பேணுவர்.

கற்பித்தல் மற்றும் போதனைச் செயல்முறை



உரு4.1. *கற்பித்தல் மற்றும் போதனைச் செயல்முறைகள்*
(Adapted from Gonzales &Jayasena, 2009)

Dick, Carey and Carey (2001, in Gonzales &Jayasena, 2009) ஆகியோர் கற்பித்தல் செயல்முறைக்கான 5 கூறுகளை விபரித்துள்ளனர். அவையாவன.

1. முன்போதனைச் செயற்பாடுகள்

முன்போதனைச் செயற்பாடுகள் 3 பிரதான செயற்பாடுகளை உள்ளடக்கும் அவையாவன.

a. **கற்பவரை ஊக்குவித்தல்.** இங்கு கற்பவர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். கற்பவரை ஊக்குவிக்கவும் பாடத்தின் பொருத்தப்பாட்டினை உருவாக்கவும் மாணவர் நம்பிக்கையை உருவாக்குவதற்காகத் திட்டமிடப்பட்டவற்றுடன் இணைந்தவாறு தீர்மானிக்கப்பட வேண்டும் என்பதுடன் கற்பவரின் திருப்தியையும் உறுதிசெய்தல் வேண்டும்.

b. **குறிக்கோள் கற்றல் விளைவுகளை வரையறை செய்தல் :** இது எதிர்பார்க்கும் விடயத்தைக் கற்பவர்கள் விளங்கிக்கொள்ள உதவும். திறன் தேர்ச்சி ஆகியவற்றுடன் நிபந்தனைகளையும் கற்றல் விளைவுக்கான அத்தியவசியமான நியதிகளையும் இனங்காணுதல் முக்கியமானது.

c. **நுழைவு நடத்தைகளை விபரித்தல் அல்லது கணிப்பிடுதல்:** மாணவர்கள் எங்கேயிருத்தல் வேண்டுமென அறியும் பொருட்டு அவர்கள் எங்கே ஆரம்பிக்கின்றனர் என்பதை அறிதல் அவசியமானது. வழக்கமாக முறையில் அடிப்படையில், மாணவர் பற்றி நாம் கொண்டிருக்கும் அறிவை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகிறது. சில வேளைகளில், முறையில் ஆய்ந்தறி கணிப்பீடுகளை சில வினாக்களை வீனவுவதன்மூலம் அல்லது சில சந்தர்ப்பத்தில் முன்சோதனையை நடத்துவதன்மூலம் இத்தேவையைப் பூர்த்தி செய்யலாம். மேலும் இவ்வாறான செயல்முறைகள், அறிவானது முன்னறிவுடன் எவ்வாறு பொருந்துகிறது எனக் கற்பவர்கள் கண்டறிய ஆரம்பிக்கின்றனர். இங்கு உயர் ஒழுங்கிலான சிந்தனையைத் தொடங்குவதுடன் கற்பவர்கள் புதிய சாதனங்களை விளங்கிக் கொள்ளவும் நிலைநிறுத்தவும் உதவுகிறது.

2. உள்ளடக்கத்தை முன்வைத்தல்

கற்பித்தல் செயல்முறையின் இரண்டாவது கட்டம் உள்ளடக்கத்தை முன்வைத்தலாகும். இந்தக் கட்டத்தில் ஓர் ஆசிரியர் 3 செயற்பாடுகளில் ஈடுபடவேண்டும். அவையாவன.

a. **போதனைசார் வரிசைக்கிரமம்.** புதிய தகவலுக்குரிய பகுதிகள் ஒவ்வொன்றும் முன்னைய துண்டுகளிலிருந்து கொங்கிறீட் சுவரிலுள்ள துண்டங்கள் போலக் கட்டியெழுப்பப்படுதல் வேண்டும். ஆகவே, பாடமானது முதலில் எளிமையான எண்ணக்கருக்களை அடிப்படையாகக் கொண்டு பெரிய அகக்காட்சியை அடையும் வகையில் திட்டமிடப்படுதல் வேண்டும்.

b. **உள்ளடக்கம்** இவ்விடத்திலே முன்வைத்தல் நுட்பங்கள் மற்றும் அதற்கு எடுக்கும் நேரம் என்பன பற்றிய தீர்மானங்கள் எடுக்கப்படுதல் வேண்டும்.

c. **உதாரணங்களும் உதாரணம் அல்லாதவையும்.** நீங்கள் முன்வைக்க முயற்சிக்கும் விடயம் பற்றிய உதாரணங்களும் உதாரணம் அல்லாதவையும் உதவியாக இருக்கும் சிலவேளைகளில் உதாரணம் அல்லாதவையும் உதவியாக இருக்கும். அத்தகைய உதாரணங்கள் உடன்பாடான இடமாற்றச் செயல்முறைக்கும் உதவும்

3. கற்பவர் பங்கேற்றல்

கற்பித்தல் செயல்முறையின் இக்கட்டமானது மாணவர் பங்குபற்றலையும் உள்ளடக்கும். இதுவே கற்பித்தலின் "இருதயம்" ஆகும். இங்கு மாணவர்கள் பயிற்சி மற்றும் ஆசிரியரின் பின்னூட்டல் மூலம் அறிவையும் திறன்களையும் பெற்றுக்கொள்வர். இக்கட்டத்திற்கான மூலக்கூறுகள் பின்வருமாறு:

a. **பயிற்சி:** பயிற்சி மற்றும் பின்னூட்டல் ஆகியன கற்பித்தல் - கற்றல் செயல்முறையின் இரண்டு முக்கியமான விடயங்களாகும். பிரயோகமும் பயிற்சியும் மாணவரின் ஞாபகத்தைப் பெரிதும் அதிகரிக்கும். பாத்திரமேற்று நடித்தல், சாதனங்களை பிரயோகிக்கும் பயிற்சிகள், கலந்துரையாடல் மற்றும் முன்னய அனுபவங்கள் பற்றி சிந்தனைகளின் போது கற்பவரின் வாழ்க்கையில் பிரயோகிக்கக்கூடிய சாதனங்கள் என்பவை பயிற்சிக்கான உதாரணங்களாகும். இடமாற்றமானது நிலைமை சார்ந்தது என்பதுடன் பல உதாரணங்களும், சந்தர்ப்பங்களும் கற்பவர் பயன்படுத்தக்கூடிய புதிய தகவல்களுக்கு இடமாற்றத்தைப் பிரயோகிப்பதற்குத் தேவைப்படுகின்றன.

b. **பின்னூட்டல்:** பின்னூட்டல் என்பது அடிப்படையில் விளைவினைப்பற்றிய அறிவாகும். கற்கும் ஒருவர்க்கு பயிற்சி அமர்வுகளில் புதிய தகவல்கள் சரியான முறையில் பிரயோகிக்கப்படுகிறது எனச் சொல்லப்படுதல் வேண்டும். உடனடியாக வழங்கப்படும் பின்னூட்டல் மாணவர்களின் சுய கணிப்பீட்டுக்கும் சுயதிருத்தங்களுக்கும் இடமளிக்கும். இவை கற்றல் செயல்முறையை கட்டுப்பாட்டில் வைத்திருக்க கற்பவர்க்கு உதவுவதால் அவர் நம்பிக்கையையும் திருப்தியையும் உறுதிப்படுத்த வழிகோலும்.

4. கணிப்பீடு

கணிப்பீடானது ஒவ்வொரு ஆசிரியரினதும் போதனைச் செயற்பாட்டில் முக்கியமான பகுதியாகும். வகுப்பறைப் போதனையிலும் கற்றலிலும் இது முக்கியமான வகிபங்கினை வகிக்கிறது (jones & tanner, 2008; murray, 2006; stiggins, 2002; 2008). கோன்சலஸ் மற்றும் புர்கான் (2012), ஆகியோரின்படி கல்விக் கொள்கை உருவாக்குவோர் மற்றும் வகைசொல்லல் (மாணவர்கள் எவ்வளவுதூரம் நன்றாகக் கற்றுள்ளார்கள்) மற்றும் போதனையில் (உயர் மட்டக் கற்றலை எவ்வாறு மேம்படுத்துவது) ஈடுபடுவோர்க்கும் முக்கியமானது. (bennet&gitomer, 2009; danielson, 2008; vardar, 2010). போதனைச் செயல்முறையில் கணிப்பீடானது மூன்று முக்கியமான விடயங்களில் ஈடுபடுகிறது அவையாவன:

a. **நுழைவு நடத்தைக் கணிப்பீடு.** இதனை மாணவர் பற்றி ஆசிரியர் ஏற்கனவே கொண்டிருக்கும் அறிவிலிருந்து அல்லது வகுப்பு ஆரம்பிக்கும்போது தொடக்கத்தில் வினவப்படும் வினாக்கள் சிலவற்றுடன் முறையில் ரீதியாக மேற்கொள்ளலாம்.

b. **முன்சோதனை.** இதனைத் தேவைப்படுமாயின் அல்லது கற்பவர்கள் புதியவர்களாக இருந்தால் பயன்படுத்தமுடியும்.

c. **பிற்சோதனை.** இதனை திட்டமிடல் செயற்முறையின்போது, கற்றலின் எதனை எவ்வாறு அளவிடலாம் என்பதை அறிந்து அவை உள்ளடக்கத்தை முன்வைக்கும் கூறுகளின் செல்வாக்குக்கு உள்ளாகின்றன எனக் கொண்டு தீர்மானிக்கப்படுதல்

வேண்டும். கணிப்பிட வேண்டிய நான்கு விடயங்களாக திருப்தி, கற்றல், பிரயோகம் மற்றும் தாக்கம் என்பவற்றைக் கூறலாம். திருப்தியானது, மாணவர் கற்றலில் மகிழ்ச்சி கண்டுள்ளனராவெனத் தீர்மானிக்கின்ற வேளையில் கற்றலானது மாணவர்கள் சாதனங்களைக் கற்றுள்ளனரா என்பதைக் குறிப்பிடும். பிரயோகமானது மாணவர்கள் சாதனங்களைப் பிரயோகிக்கின்றனரா எனவும் அதன் தாக்கமானது தனிஆளில் அல்லது நிறுவனத்தில் காணப்படும் இறுதி விளைவைக் காட்டும்.

5. செயற்பாடுகள் வழியே தொடர்தல்

போதனைசார் அல்லது கற்பித்தல் செயல்முறையானது கற்றல் செயல்முறை பற்றிய கணிப்பீட்டையும் மதிப்பீட்டையும் மேற்கொள்ளும்போதே நிறைவுபெறும். இது இன்னும் கற்பவர்க்கு என்னும் விடயத்தின் கீழே விளக்கப்பட்டுள்ள மேலும் இரு செயற்பாடுகளால் உதவி வழங்குவதன் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

a. நிலைநிறுத்துவதற்கான ஞாபக சாதனங்கள்

ஞாபகஞ் செய்யவேண்டிய விடயங்களை நீண்டகால ஞாபகத்தில் வைத்திருப்பதற்கு பலமுறை திரும்பச் செய்தல் தேவைப்படுகிறது. பொதுவான ஒரு கருவியாக, மீள அழைப்பதற்கு உதவும் சாதனமாக நினைவுக்குறிப்பைப் பயன்படுத்துதல் அல்லது அவர்கள் ஏற்கனவே அறிந்த விடயங்களுடன் தொடர்புகளை உருவாக்கிக்கொள்ள உதவலாம். இதனை ஒத்ததன்மைகளைப் பயன்படுத்துவதன் மூலம் அல்லது தொடர்புடைய விடயங்களைத் தொகுதியாக இணைத்தல் மூலம் செய்யலாம். அதேவேளையில் விடயங்களை அவ்வப்போது மீளவலியுறுத்துதலும் அவசியமானது. இதன்மூலம் கற்றவற்றை புதிதாகப் பேணலாம். பின்தொடர்ந்து கற்றவற்றை புதிதாகப் பேணலாம். பின்தொடர் செயற்பாடுகளைத் திட்டமிடுதல் இதனைச் சாத்தியப்படுத்தும். பயிற்சிகள் மேலும் வினைத்திறனுள்ள விதத்தில் சாடைகளுக்கு வலுவூட்டும் அல்லது முன்னர் கற்றவற்றை ஒழுங்குபடுத்த உதவும்.

கற்றல் இடமாற்றம் பற்றிய கவனங்கள்.

கற்பவர்கள் தாம் கற்ற விடயங்களைப் புதிய சூழமைவுச் சந்தர்ப்பங்களுக்கு ஏற்ற வகையில் மாற்ற உதவுதல் முக்கியமானது. கற்பவர் சூழமைவு குறித்த வழிமுறைகளில் கற்பதனால் ஏனைய சந்தர்ப்பங்களில் அவற்றைப் பயன்படுத்த உதவிகள் தேவைப்படும். கற்றல் சூழல் அண்மியதாக இருத்தல் யதார்த்த உலகிலுள்ள தகவல்களைப் பயன்படுத்த உதவும். இடமாற்றமும் பூரணமாக அமையும். கற்பவர் இளையவராக இருக்கும் பொழுது தகவல்களைப் பலவழிமுறைகளில் பயன்படுத்துவதும் முக்கியமானது.

பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடு 4.1:

சிந்தி, சோடிசேர், பகிர்ந்துக்கொள்

1. கற்பித்தலை விபரிக்கும் அல்லது வரையறை செய்யும் 5 வாக்கியங்கள் எழுதுங்கள்.அத்துடன் கற்றலை விபரிக்கும் அல்லது வரையறை செய்யும் 5 வாக்கியங்கள் எழுதுங்கள்.
2. ஒரு பங்காளியை அல்லது வகுப்புத் தோழரை சேர்த்துக் கொண்டு நீங்கள் எழுதியவற்றைப் பகிர்ந்துகொள்ளுங்கள். பின்னர் உங்கள் பங்காளி எழுதியவற்றையும் பகிர்ந்துகொள்ளும்படி கேளுங்கள்.
3. கற்பித்தல் மற்றும் கற்றலை வரையறை செய்வதில் அல்லது விபரித்தலில் உள்ள ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் பார்த்து ஒப்பிடுதல்.
4. ஒன்றாகச் சேர்த்து கற்றல் கற்பித்தலுக்கான உங்கள் சொந்த வரைவிலக்கணத்தை உருவாக்குவதுடன் அதனை வகுப்பிலுள்ள ஏனைய உறுப்பினர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

கற்பித்தல் - கற்றல் சட்டகத்தை விளங்கிக்கொள்ளல்



உரு 4.2. *கற்பித்தல் - கற்றலை விளக்கிக்கொள்வதற்கான சட்டகம்;.*
(Gonzales &Jayasena, 2009)

கொன்சாலெஸ் மற்றும் ஜயசேன (2009) ஆகியோர் கற்பித்தல் மற்றும் கற்றலின் சிக்கலை விளக்கிக்கொள்வதற்கும் மதிப்பிடுதற்குமுரிய எளிமையான வழிமுறைகளை

வழங்கியுள்ளனர். இச்சட்டகமானது கற்பித்தல் மற்றும் கற்றலின் இயல்புகளை விளங்கி மற்றும் உருவிலே தரப்பட்டுள்ள மட்டங்களுக்கு இடையேயும், அவற்றுள்ளும் உள்ள தொடர்புகளில் தெளிவுபெறுதல், இந்த மாதிரிகையிலே பயன்படுத்தப்பட்டுள்ள சொற்களின் வரைவிலக்கணங்கள் ஆகியவற்றை வழங்கியுள்ளது.

1. கற்பித்தல் - கற்றல் சட்டகம்



உரு 4.3. *கற்பித்தல் - கற்றல் சட்டகம்* (Gonzales &Jayasena, 2009)

கற்பித்தல் - கற்றல் சட்டகமானது கற்பித்தல் கற்றல் அணுகுமுறைகளில் மாதிரிகைகள் தொடக்கம், பரந்த உபாயம், முறை மற்றும் கற்பித்தல் திறன் வரையுள்ள மட்டங்களை இனங்காண்கிறது: விளக்குகிறது. இது விசேட கற்பித்தல் நடத்தையையும் ஒரு நுட்பத்தையும் முன்வைக்கிறது. ஒவ்வொரு மட்டத்திலும் கற்பித்தலின் விஞ்ஞானம் கலை ஆகிய இரண்டினையும் அபிவிருத்தி செய்வதற்கான ஆற்றல்கள் உள்ளன.

இடைநிலைக்கல்வி நவீனமையமாக்கல் Gonzales and Jayasena (2009) செயற்திட்டம் தொடர்பாக தயாரிக்கப்பட்ட நூல்களான "புத்தாக்கக் கற்பித்தல்" – கற்பித்தல் கற்றல் முறைகளுக்கான ஓர் ஆசிரியர் கைந்நூல் ஆசிரியர் மற்றும் கல்வியாளரால் தவறாக கருதப்பட்ட எண்ணக்கருக்களை வரையறைசெய்ய முயற்சித்துள்ளன. உரு 4.3 இல்

தரப்பட்டுள்ள கற்பித்தல் கற்றல் சட்டகத்தை நீங்கள் விளங்கிக்கொள்வதற்கப் பின்வரும் சொற்கள் உதவும்.

a. கற்பித்தல் - கற்றல் மாதிரிகைகள்

கற்பித்தல் -கற்றல் மாதிரிகைகள்– கற்பித்தல் - கற்றல் பயிற்சியின் பரந்த நிலைகளைப் பிரதிநிதித்துவம் செய்வதுடன் கற்பித்தல் மற்றும் கற்றலுக்கான தத்துவார்த்த மற்றும் கொள்கைசார்ந்த திசைமுகப்படுத்தலையும் முன்வைக்கின்றன. கற்பித்தல் உபாயங்கள், முறைகள் திறன்கள் மற்றும் குறித்த போதனை வலியுறுத்தலுக்கான மாணவர் செயற்பாடுகள் என்பவற்றைத் தெரிவு செய்வதற்கு மாதிரிகைகள் பயன்படுத்தப்படுகின்றன. இக்கைந்நூலில் நாம் பயன்படுத்திய மாதிரிகைளாவன அறிகைசார், நடத்தைசார் மற்றும் கட்டுருவாக்க மாதிரிகைகள் என்பனவாகும். சில ஆசிரியர்களும் கல்வியியலாளர்களும் கற்பித்தல் கற்றல் மாதிரிகைகளை கற்பித்தல் - கற்றல் கொள்கைகளாகவே கருதுகின்றனர்.

b. கற்பித்தல் - கற்றல் உபாயங்கள்

கற்பித்தல் - கற்றல் உபாயங்கள் - கற்றல் விளைவுகளைத் துணிகின்றன. ஒவ்வொரு மாதிரிகையிலும் பல உபாயங்கள் பயன்படுத்தப்படலாம். பரந்தளவில் கற்பித்தல் கற்றல் உபாயங்கள் ஆசிரியர்மைய மற்றும் மாணவர்மைய உபாயங்கள் என இருவகைட்படுத்தப்படுகின்றன. ஆயினும் உபாயங்களை மேலும் வகைப்படுத்தலாம். நேர் அல்லது ஆசிரியர் - மைய, நேரில் அல்லது மாணவர் மைய, இடைவினைத்தாக்க, அனுபவங்சார் மற்றும் சுதந்திரமான உபாயங்கள் என வகைப்படுத்தலாம். சில ஆசிரியர்கள் கற்பித்தல் கற்றல் உபாயங்களை கற்பித்தல் கற்றல் செயல்முறைகள் எனவும் கருதுவர்.

c. கற்பித்தல் - கற்றல் முறைகள்

கற்பித்தல் - கற்றல் முறைகள் கற்றல் சூழலை உருவாக்குவதற்கும், பாடத்தின்போது எமது மாணவர்கள் ஈடுபடவேண்டிய செயற்பாடுகளைக் கண்டறிவதற்கும் பயன்படுகிறது. குறித்த முறையொன்று குறிப்பிட்ட சில உபாயங்களுடன் இணைந்திருக்கின்ற வேளையில் சில முறைகள் பல வகையான உபாயங்களில் இடம்பெறலாம். கற்பித்தல் முறைகளுக்கு உதாரணம், விசாரணை அடிப்படை, கூட்டுறவுசார், பிரச்சினை அடிப்படைக் கற்றல், 5E முறை, விடய ஆய்வு, விரிவுரை, பாவனை, விவாதம் முதலியன.

d. கற்பித்தல் திறன்கள்

கற்பித்தல் திறன்கள் மிகக் குறிப்பான போதனை மற்றும் கற்பித்தல் திறன்களாகும். இவை கற்பித்தல் நுட்பங்களான வினாக்கேட்டல், கலந்துரையாடல், நெறிப்படுத்தலை வழங்குதல், விளக்குதல் மற்றும் செய்துகாட்டல் என்பவற்றை

உள்ளடக்கும். மேலும் திட்டமிடல், அமைப்பாக்கல், கவனங்குவித்தல். முகாமை செய்தல், ஆகியவற்றையும் இவை உள்ளடக்கும்.

பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடு 4.2:

கற்பித்தல் - கற்றல் சட்டகம் பற்றி இரண்டு பக்கங்கொண்ட மறுதாக்கப் பத்திரம் எழுதுக. அத்துடன் இச்சட்டகத்தினை ஒரு தலைப்புக்கு அல்லது ஒரு பாடத்திற்கு எவ்வளவுக்குப் பிரயோகிக்கலாமென எடுத்துக் காட்டுக.

கற்பித்தல் - கற்றல் மாதிரிகைகள்

கல்விசார் இலக்கியங்களிலே மூன்று பல்வேறுபட்ட பரந்த கற்பித்தல் மாதிரிகைகள் உள்ளன. ஆயினும் இக்கைநூலில் 3 கற்பித்தல் - கற்றல் மாதிரிகைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு வரையறுக்கப்பட்டுள்ளன.



உரு 4.4. கற்பித்தல் - கற்றல் மாதிரிகைகள; (Gonzales &Jayasena, 2009)

1. அறிகைசார் மாதிரி

இம்மாதிரிகையானது தகவலைப் பெற்றுக் கொள்ளல், பாண்டித்தியம் மற்றும் நிரற்படுத்தல் ஆகியவற்றுக்கு அழுத்தங் கொடுக்கிறது. கற்பித்தலும் கற்றலும் பதிய அகக்காட்சியைப் பெறுதல் அல்லது புதியவற்றை மாற்றுதலூடாக அனுபவங்களை அங்கீகரித்தலுடன்

ஈடுபடுகிறது. இதன் முக்கிய அம்சம் என்னவெனில் அர்த்தமுள்ள கற்றல் சூழலை உருவாக்குதலாகும்.

2. நடத்தைசார் மாதிரி

இத்தகைய கற்பித்தல் கற்றல் மாதிரிகையானது ஸ்கின்னரின் கொள்கையிலும் தொழில் நிபந்தனைப்பாட்டு எண்ணக்கருவிலும் தங்கியுள்ளது. கற்பித்தல் கற்றலானது தூண்டி மற்றும் துலங்கலுக்கு இடையில் இணைப்பை உருவாக்குதல் மூலம் நிகழ்கிறது. இது கற்பவரில் காணக்கூடிய நடத்தை மாற்றங்களில் கவனங் குவிப்பதுடன் அவன் அல்லது அவளது சொந்த சுய எண்ணக்கருவுடன் ஒருசீர்த் தன்மையுடையதாக இருத்தல் வேண்டும். இதனுடைய அடிப்படை தூண்டிக் கட்டுப்பாடு மீளவலியுறுத்தல் கொள்கையாக இருப்பதன் விளைவாக, கற்பித்தலின் கற்றலின் நடத்தைசார் மாதிரிகையானது கற்றல் பணிகளும் நடத்தைகளும் பல சிறு வரிசைக் கிரமமான தொடர்களாகப் பிரிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.

3. கட்டுவாக்க மாதிரிகை

கட்டுருவாக்கம் கற்றல் பற்றியதொரு தத்துவமாகும். புதிய விடயங்கள் பற்றிய புரிந்துணர்வினை மாணவர்கள் கட்டியெழுப்ப வேண்டிய தேவையை முன்வைக்கிறது. கற்றல் அல்லது அறிகையானது "உளக் கட்டுவாக்கத்தின்" விளைவு என்பதை எடுத்துக் காட்டும் அடிப்படையிலான கற்பித்த மற்றும் கற்றல் மாதிரிகையாகும். இம்மாதிரிகையிலே கற்றலானது தனிப்பட்ட அறிவு செயலூக்கமுள்ள கற்பவரால் கட்டுருவாக்கம் செய்யப்படுவதன் காரணமாக நிகழ்கிறது. அவர் கருத்துகளுக்கு இடையிலான முரண்பாடுகளைத் தீர்ப்பதுடன் கொள்கைசார் விளக்கங்கள் மீதும் பிரதிபலிக்கிறார்.
கட்டுருவாக்கமானது கண்டறிமுறைக் கற்றல் என்னுஞ் சிந்தனையை அடிப்படையாகக் கொண்டது. இங்கு ஆசிரியர் ஒரு வழிகாட்டியாக அல்லது வழங்கப்பட்டுள்ள ஒரு சட்டகத்தினுள் இருந்து தேடலுக்கு வசதிப்படுத்தும் பயிற்றுவிப்பாளராகத் தொழிற்படுகிறார். கட்டுருவாக்க ஆசிரியர் பிரச்சினைகளை உருவாக்கி, தேடலைக் கண்காணித்து, மாணவர் விசாரணையை வழிப்படுத்தி புதிய சிந்தனைக் கோலங்களை மேம்படுத்துகிறார்.

கற்பித்தல் - கற்றல் உபாயங்கள்

கொன்சாலெஸும் ஜயசேனவும் (2009) முன்னர் வரையறை செய்ததுபோல, கற்பித்தல் - கற்றல் உபாயங்கள், கற்றல் குறிக்கோள்களை அடைவதற்கு நீங்கள் மேற்கொள்ளும் அணுகுமுறைகளைத் தீர்மானிக்கின்றன. கற்பித்தல், கற்றல் உபாயம் ஒன்றைத் தெரிவுசெய்தல் என்பது ஒரு பெரிய தீரமானமாகும். கற்பித்தல் உபாயங்கள் தொடர்பாக எடுக்கப்படும் தீர்மானமானது கலைத்திட்டம், மாணவரின் முன்னைய அனுபவங்களும் அறிவும், கற்பவரின் ஆர்வங்கள், மாணவரின் கற்றல் பாங்குகள், கற்பவரின் அபிவிருத்திசார் நிலைகள் என்பவற்றில் கவனங் குவித்தல் வேண்டும். அத்தகைய

தீர்மானம் மேற்கொள்ளலும் மாணவரின் கணிப்பீடுகளில் தங்கியிருப்பதுடன் அவை கற்றல் விளைவுகள், செயல்முறைகளுடன் இணைக்கப்படுதலும் வேண்டும்.

கற்பித்தல் - கற்றல் உபாயங்கள் பற்றிய வகைப்படுத்தல்கள் உள்ளனவாயினும் அவற்றிடையேயுள்ள வேறுபாடுகள் எப்பொழுதும் தெளிவானவையல்ல. உதாரணமாக நீங்கள் முன்வைத்த தகவல்களின் முக்கியத்துவத்தைத் தீர்மானிப்பதற்கு (மாணவர் மைய உபாயம்) விசாரணை அடிப்படை மற்றும் பிரச்சினை தீர்த்தல் முறைகளைப் பயன்படுத்தும்போது விரிவுரை முறையின் மூலமும் (ஆசிரியர் மைய உபாயம்) தகவலை வழங்கலாம். உரு 4.2 இல் முன்வைக்கப்பட்டுள்ள கற்பித்தல் மற்றும் கற்றல் பற்றிய ஐந்து உபாயங்கள் இங்கு வரையறை செய்யப்பட்டுக் கலந்துரையாடப்பட்டுள்ளன.

1. நேரடிப் போதனை அல்லது ஆசிரியர் - நெறிப்படுத்திய உபாயம்.

நேரடிப் போதனை உபாயமானது ஆசிரியர் மைய உபாயம் எனவும் அழைக்கப்படுகிறது. இது உயர்மட்டத்தில் ஆசிரியர் நெறிப்படுத்துவதாக இருப்பதுடன் அதிகளவில் பயன்படுத்தப்படுவதுமாகும். இம்முறையானது தகவல்களை வழங்குவதற்கம் படிப்படியாகத் திறன்களை விருத்தி செய்வதற்கும் வினைதிறனுள்ள உபாயமாகும். ஏனைய கற்பித்தல் முறைகளை அறிமுகம் செய்வதற்கும் இந்த உபாயம் சிறந்தது. அல்லது செயலூக்கமுடன் ஈடுபடும் மாணவர்களின் அறிவுக் கட்டுருவாக்கத்திற்கும் சிறந்தது. இந்த உபாயமானது விரிவுரை, வினாக்கேட்டல், புறத்தூண்டல் கற்பித்தல், பயிற்சியும் பழக்குதலும் மற்றும் செய்துகாட்டல் போன்ற முறைகளையும் உள்ளடக்குகிறது.

இந்த உபாயத்தினைத் திட்டமிடுதலும் பயன்படுத்துதலும் இலகுவானதாகக் கருதப்படுகின்ற போதிலும் அது தோற்றமளிப்பதிலும் பார்க்க மிகச் சிக்கலானது.

2. நேரில் போதனை அல்லது மாணவர் மைய உபாயம்,

நேரடிக் கற்பித்தல் - கற்றல் உபாயத்துக்கு வேறுபட்ட விதத்தில் நேரில் போதனை மாணவர் மையமாக அமைவதுடன், இவ்விரு உபாயங்களும் ஒன்றையொன்று ஈடுசெய்வதாக உள்ளன. விசாரணை, தொகுத்தறிதல், பிரச்சினை தீர்த்தல், தீரமானம் மேற்கொள்ளல் மற்றும் கண்டறிதல் ஆகிய பதங்கள் நேரில் போதனை அல்லது மாணவர் மையக் கற்பித்தல் ஆகியவற்றை விபரிப்பதற்கு மாற்றீடாகப் பயன்படுத்துகின்றன.

நேரில் போதனை முறைக்கான உதாரணங்கள் விரிவுப்படுத்தப்பட்ட 5ரு அல்லது 7ரு பிரதிபலித்தல் கலந்துரையாடல், எண்ணக்கரு உருவாக்கம், எண்ணக்கரு அடைவு மூடிய ஒழுங்குவிதி, பிரச்சினை தீர்த்தல் மற்றும் வழிகாட்டப்பட்ட விசாரணை என்பவற்றை உள்ளடக்கும்.

முாணவர்மைய உபாயமானது, அவதானிப்பு, ஆராய்தல், தரவிலிருந்து அனுமானங்களை மேற்கொள்ளுதல் அல்லது கருதுகோள் உருவாக்கம் என்பவற்றை வேண்டி நிற்கிறது. இது மாணவரின் ஆர்வம் மற்றும் தேடும் ஆர்வங்களைத் தூண்டுகிறது. மேலும் அவர்கள் மாற்றீடுகளை உருவாக்கவும் அல்லது பிரச்சினைகளைத் தீர்த்தலுக்கும் ஊக்குவிக்கிறது. அத்துடன் ஆக்கத்திறன் மற்றும் ஆளிடைத் தொடர்புகளையும் ஆற்றல்களையும் விருத்தி செய்ய உதவுகிறது.

இந்த உபாயத்திலே, நீங்கள் ஓர் ஆசிரியர் என்ற வகையில் விரிவுரையாளர் நெறிப்படுத்துனர் என்பதிலிருந்து வசதிப்படுத்துபவர், ஆதரவாளர் மற்றும் வளவாளர் என்பவற்றுக்கு மாறுகின்றீர்கள்.

3. அனுபவஞ்சார் கற்றல் உபாயங்கள்

அனுபவஞ்சார் கற்றல் தொகுத்தறிதல், மாணவர் மைய மற்றும் செயற்பாடு திசைமுகப்படுத்தப்பட்ட உபாயமாகும். இந்த உபாயத்திலே நீங்கள் மாணவர்களைத் தமது தனிப்பட்ட அல்லது தனியாள் அனுபவங்களை ஏனைய சந்தர்ப்பங்களில் கற்றலைப் பிரயோகிப்பதற்கான திட்டங்களை உருவாக்கும் பொழுது பிரதிபலிக்க ஊக்குவிக்கலாம். வினைதிறனுள்ள அனுபவஞ்சார் கற்றலில் இது முக்கியமான காரணியாகும்.

pfeiffer and jones (1979)இ ஆகியோர் கூறியபடி அனுபவஞ்சார் கற்றலானது கற்பவர்கள் பின்வரும் விடயங்களில் ஈடுபடும்பொழுது நிகழ்கிறது.

- செயற்பாடுகளில் பங்கேற்றல்
- கற்றல் மற்றும் உணர்வுகளைத் தெளிவுப்படுத்தும் செயற்பாடுகளை திறனாய்வு ரீதியாகப் பார்க்கும்பொழுது
- அத்தகைய பகுப்பாய்வுகளிலிருந்து பயனுள்ள அகக்காட்சிகளை எடுக்கும்பொழுது மற்றும்
- புதிய சந்தர்ப்பங்களில் வேலை செய்வதற்குக் கற்றலை உபயோகித்தல்.

அனுபவஞ்சார் உபாயமானது அனுபவஞ்சார் கொள்கையையும் வரைவில் பங்கேற்றல் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டது. (kolb & fry, 1975; mccaferry, 1986). இது உண்மையில் மாணவர் மைய உபாயம் என்பதுடன் மீள்பார்சை செயல்முறை பிரதிபலித்தல் மற்றும் கற்றவற்றை பிரயோகித்தல் ஆகியவற்றினால் வரும் அனுபவங்களுடன் ஈடுபாடுடையது. அனுபவஞ்சார் கற்றலின் வலியுறுத்தல் கற்றல் செயல்முறைகளில் உள்ளதேயொழிய விளைவில் அல்ல.
ஓர் ஆசிரியர் என்ற வகையில் நீங்கள் அனுபவஞ்சார் கற்றலை வகுப்பறைக்கு உள்ளும் வெளியிலும் பயன்படுத்தலாம்.

உதாரணமாக, வகுப்பறையிலே மாணவர்கள் ஓர் ஆஸ்பத்திரியில் ஒரு நோயாளியையும் ஒரு டாக்டரும் உள்ள காட்சியொன்றை உருவாக்கலாம். வகுப்பறைக்கு வெளியில் ஒரு ஆஸ்பத்திரிக்கு சென்று மருத்துவ ஆய்தறிதல் எவ்வாறு மேற்கொள்ளப்படுகிறது என்பதை அவதானிக்கலாம். அவர்கள் ஒரு களப்பயணத்தை நடத்தலாம் அல்லது ஓர் அபிப்பிராய அளவீட்டினை நடத்தலாம். அனுபவஞ்சார் கற்றலானது பலவகையான வளங்களைப் பயன்படுத்துகிறது.

எல்லாவற்றிலும் மேலாக இந்த உபாயத்தினைச் சகல சந்தர்ப்பங்களிலும் பயன்படுத்த முடியாது. அதற்கான காரணங்கள் சில பின்வருமாறு:

- மாணவர் பாதுகாப்பில் கவனஞ்சலெுத்துதல்
- மாணவர் பக்கமுள்ள நிதிசார் மட்டுப்பாடுகள்
- ஆசிரியர் மற்றும் மாணவருக்குக் கிடைக்கக்கூடிய நேரக் குறைவு

அனுபவஞ்சார் கற்றலின் பலம் என்றவகையில் அதன் வட்டத்தின் பூரணத்துவத்தைக் குறிப்பிடலாம். அது நான்கு கட்டங்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு கட்டமும் முக்கியமானது அல்லது ஒன்றையொன்று தொடர்கிறது. Mccaffery (1986) என்பார் கூறியதன்படி அந்நான்கு கட்டங்களும் பின்வருமாறு:

a. ***அனுபவம்:*** அனுபவக் கட்டமானது தொடக்கநிலைச் செயற்பாடாகும். இதுவே வட்டத்தின் தரவு உற்பத்தியாகும் பகுதியாகும். இக்கட்டமானது மாணவர் ஒன்றைச் செய்ய அல்லது அனுபவம் பெறக்கூடிய வகையில் அமைப்பாக்கப்பட்டுள்ளது.

b. ***செயல்முறை:*** இக்கட்டத்தில் அனுபவக் கட்டத்தின்போது மாணவர் பொறுப்பேற்ற செயற்பாடுகளில் பிரதிபலித்தல் வேண்டும்.

c. ***பொதுமையாக்கம்*** இக்காலக்கட்டத்தில் மாணவர்கள் முடிவுகளை உருவாக்குவதுடன் பொதுமையாக்கும் வட்டத்தின் முதலிரு கட்டங்களிலிருந்து வருவிக்கவும் அல்லது உருவாக்கவும் இடமளிக்கிறது. ஆசிரியர் என்ற வகையில் மாணவர் முடிவுகளை எடுக்க உதவவேண்டும். அவற்றை பொதுவாகவோ அல்லது கொள்கை ரீதியாகவோ "யதார்த்த வாழ்க்கையில்" பிரயோகிக்க உதவலாம்.

d. ***பிரயோகம்.*** மாணவர்கள் பொதுமையாக்கத்தினை உருவாக்கிய பின்னர் அவர்களை பிரயோகக் கட்டத்திற்குச் செல்ல வழிகாட்டுதல் வேண்டும். முன்னைய கட்டத்தில் அகக்காட்சி பெறல் மற்றும் அடைந்துகொள்ளப்பட்ட முடிவுகளின்படி எதிர்கால வினைத்திறனுடன் கூடிய நடத்தைக்குரிய திட்டங்களை விருத்திசெய்வதன் மூலம் மாணவர்கள் தமது வாழ்க்கையில் கற்றுக்கொண்டவற்றை உள்ளடக்க ஆரம்பிக்கலாம்.

4. சுதந்திரமான கற்கை உபாயம்

இக்கைநூல் சுதந்திரமான கற்கை ஒவ்வொரு மாணவரினதும் தொடங்கும் முயற்சி சுய தங்கல், மற்றும் சுய முன்னேற்றத்தின் விருத்தியை மேம்படுத்தும் நோக்கத்துடன்கூடிய வகையில் வழங்கப்படும் கற்பித்தல் - கற்றல் முறைகள் பலவற்றைக் கருதுகிறது. சுதந்திரமான கற்கையை இருக்கின்ற வேளையில், இதனை மாணவரால் அல்லது ஆசிரியரால் ஆரம்பிக்கப்படலாம். இங்கு குவிமையம் என்னவெனில் வகுப்பாசிரியரின் வழிகாட்டல் அல்லது மேற்பார்வையின் கீழ் சுதந்திரமான கற்கை திட்டமிடப்படும். மேலும் சுதந்திரமான கற்கையானது இன்னொரு மாணவருடன் பங்குதாரராகக் கற்றல் அல்லது கூட்டாகக் கற்கும் குழுவின் பகுதியாகவும் இருக்கலாம்.

சுதந்திரமான கற்கை மாணவர் வேலைகளைச் சுயமாகச் செய்ய ஊக்கவிப்பதுடன், தமது கற்றலை திட்டமிடவும் நிதானமாகச் செயற்படவும் இடமளிக்கிறது. இவ்வுபாயமானது ஏனைய உபாயங்களுடன் இணைந்த வகையிலும் பயன்படுத்தப்படக் கூடியதாக அல்லது முழு அலகுக்குமான தனிக் கற்றல் கற்பித்தல் உபாயமாகவும் பயன்படுத்தலாம். இந்த உபாயத்தைப் பயன்படுத்தும் போது கவனத்தில் கொள்ளவேண்டிய மிக வெளிப்படையான காரணியாக ஓர் ஆசிரியர் தமது மாணவரின் முதிர்ச்சி மற்றும் சுதந்திரம் பற்றிக் கொண்டிருக்கும் அறிவாகும். அவ்வாறே, சதந்திரமான கற்றலுக்குரிய இன்னொரு முக்கிய காரணியாக கற்றல் வளங்களின் போதுமான தன்மையைக் குறிப்பிடலாம். மாணவருக்கு உதவ விரும்பும் ஆசிரியர் சுதந்திரமான கற்பவராக விளங்குவதுடன் தமது ஆற்றல் விருத்திக்கு ஆதரவளிக்க வேண்டியிருப்பதுடன் தகவலைப் பெறும் வாய்ப்பும் அவற்றைக் கையாளும் வாய்பும் உடையவராக இருப்பர். மாணவர்கள் ஏலவே கொண்டிருக்கும் ஆற்றலைக் கணிப்பிடுவதும் ஆசிரியருக்கு முக்கியமானது. இத்தகைய ஆற்றல்கள் வகுப்பில் அல்லது ஏதாவதொரு மாணவர் குழுவுக்குள் வேறுபடும். விசேட திறன்களும் ஆற்றல்களும் தனிப்பட்ட மாணவரின் கொள்தகைமைக்கு ஏற்றவகையில் ஒப்படைகளில் சேர்க்கப்படலாம்.

5. இடைத்தாக்கத்துடனான போதனை உபாயம்.

இடைத்தாக்கத்துடனான போதனை கூடியளவில் கலந்துரையாடல் மற்றும் பங்குபற்றுனரிடையில் பகிர்ந்துகொள்ளல் என்பவற்றின்மீது தங்கியுள்ளது. Seman and felleming (1989) ஆகியோர் கூறுவது என்னவெனில் கலந்துரையாடலும் பகிர்தலும் கற்பவர்கள் தமது "கருத்துக்கள், அனுபவங்கள், அகக்காட்சி மற்றும் ஆசிரியர் அறிவு அல்லது சகபாடிக் கற்போர் ஆகியவற்றில் பிரதிபலிப்பதற்கான வாய்ப்புகளை வழங்குதல் மற்றும் சிந்தனை மற்றும் உணர்வுகளில் மாற்றுவழிமுறைகளைப் பிறப்பித்தல் என்பவற்றை முன்வைக்கிறது (119) மாணவர்கள் சமூகஞ்சார்ந்த திறன்களை விருத்தி செய்வதற்கு, தமது சிந்தனைகளை ஒழுங்கமைப்பதற்கு மற்றும் பகுத்தறிவுடன் கூடிய வாதங்களை தமது சகபாடிகள் மற்றும் ஆசிரியர்களிடமிருந்து கற்றுக்கொள்ளலாம்.

இடைத்தாக்கத்துடன் கூடிய கற்றல் உபாயமானது பலவகையான குழுவாக்கங்களுக்கும் இடைத்தாக்க முறைகளுக்கும் இடமளிக்கிறது. இவை முழு வகுப்புக் கலந்துரையாடல், சிறுகுழுக்கலந்துரையாடல் அல்லது செயற்திட்டங்கள் அல்லது மாணவர் சோடிகள் அல்லது ஒப்படைகளில் ஒன்றுசேர்ந்து மூவராக வேலை செய்தல் என்பவற்றை உள்ளடக்கும். இந்த உபாயத்தைப் பயன்படுத்துவதற்கு ஆசிரியர் தலைப்பு, கலந்துரையாடலுக்கான நேரம் குழுவின் கூட்டும் பருமனும் மற்றும் அறிக்கை செய்தல்

அல்லது நுட்பங்களை பகிர்தல் என்பவற்றின் எல்லைகளை வரையறுத்துக் கொள்வது முக்கியமானது. இடைத்தாக்கத்துடன் கூடிய போதனைக்கு நுணுக்கமான அவதானம், செவிமடுத்தல், ஆளிடை மற்றும் இடையீட்டு தாக்கத்துடன்கூடிய போதனை உபாயத்தின் வெற்றி மற்றும் அதன் முறைகள் வகுப்பு அல்லது குழுவை அமைத்தல் மற்றும் அதன் இயக்கத்தை விருத்திசெய்தலில் ஆசிரியருக்குள்ள புலமையின்மீது அதிகளவில் தங்கியுள்ளது.

கற்பித்தல் - கற்றல் முறைகள்

கற்பித்தல் கற்றல் முறைகள் ஆசிரியர்களால் கற்பித்தல் சூழலை உருவாக்குவதற்கும், பாடநேரத்தின்போது மாணவர் ஈடுபடும் செயற்பாடுகளின் இயல்பினைக் குறிப்பிடுதற்கும் பயன்படுத்தப்படுகிறது. குறிப்பிட்ட முறைகள் குறித்த உபாயங்களுடன் இணைந்திருக்கும் வேளையில், சில முறைகள் பலவகைப்பட்ட உபாயங்களில் காணப்படுகின்றன.

கற்பித்தல் மற்றும் கற்றல் உபாயங்கள் ஓர் ஆசிரியர் கற்பித்தல் - கற்றல் முறைகள் பற்றிய தீர்மானங்களை மேற்கொள்ள உதவுகிறது. ஆசிரியர் மிகப்பொருத்தமான கற்பித்தல் கற்றல் உபாயங்களைக் கட்டாயம் தீர்மானித்து அல்லது தெரிவுசெய்து கொண்டு எந்தமுறையை பயன்படுத்த வேண்டுமெனத் தீர்மானிக்கலாம். கற்பித்தல் கற்றல் முறைகள் உபாயங்களைப் பொறுத்தவரையில் எப்பொழுதும் தெளிவானவையல்ல. இக்கைந்நூலானது கற்பித்தல் கற்றல் உபாயங்களின்படி பலமுறைகளை வகைப்படுத்தி முன்வைக்கிறது. கீழேயுள்ள உரு இங்கு முன்வைக்கப்பட்டுள்ள ஐந்து உபாயங்களுடன் தொடர்புடைய முறைகளை எடுத்துக் காட்டுவது கவனிக்கத்தக்கது. இவ்வரைபடத்தில் தோன்றும் முறைகள் எல்லாம் உதாரணங்கள் மட்டுமே என்பதுடன் சகல கற்பித்தல் கற்றல் முறைகளில் உள்ளடங்கும் என்பதில்லை. இவ்வாறான முறைகள் யாவும் Gonzales and Jayasena (2009) ஆகியோர் தயாரித்த நூலில் நன்கு விளக்கப்பட்டுள்ளன.



உரு 4.5. *கற்பித்தல் கற்றல் உபாயங்களால் ஒழுங்கமைக்கப்பட்ட கற்பித்தல்- கற்றல் முறையியலின் மாதிரி வரைபடம்;* (Gonzales &Jayasena, 2009)

அத்தியாவசியமான கற்பித்தல் மற்றும் வசதிப்படுத்தும் திறன்கள்

கற்பித்தலும் வசதிப்படுத்தும் திறன்களும் கற்பித்தல் நடத்தையின் மிகக் குறிப்பான வகையாகும். இத்தகைய திறன்கள் மொத்தக் கற்பித்தல் செயல்முறையின் பகுதியாக அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது. ஒழுங்குமுறைசார்ந்த நோக்கங்களுக்கும் மாணவர்களுக்கான பொருத்தமான கற்பித்தல் அனுபவங்களை அமைப்பதற்கும் இவை அத்தியாவசியமானவையும் தவிர்க்கமுடியாதவையும் ஆகும். ஒவ்வொரு ஆசிரியருக்கும் அவர்களது திறன்களைக் கூர்மையாக்குவதற்கும் விருத்திச் செய்வதற்கும் அத்துடன் அவை வகுப்பறையில் வினைத்திறனுடையதாக செயல்படுத்துவதற்கும் முக்கியமானது.

பல கற்பித்தல் திறன்களும் வசதிப்படுத்தும் திறன்களும் உள்ளன. அவற்றுள் சில எளிமையானவை சில பரந்தவை மற்றும் ஏனையவை சிக்கலானவை. இவற்றுள் எந்தவொரு திறனைப் பயன்படுத்துதல் என்பது கலைத்திட்டம், மாணவர் மற்றும் கற்கைத் தொகுதியின் பண்புகள் முக்கியமாக கற்பித்தல் கற்றல் முறைகளில் தங்கியுள்ளது.

இக்கைந்நூல் வாயிலாக இரண்டு திறன்களை ஆசிரியர்கள் வரையறை செய்யவேண்டும்: விருத்திசெய்ய வேண்டும். அவை விளக்குதல், செய்து காட்டல் மற்றும்

வினாக்கேட்டலாகும். இவ்விரு திறன்களும் வகுப்பறையில் பயன்படுத்தப்பட்ட கற்பித்தல் கற்றல் முறைகளுக்கும் இன்றியமையாதவை.

1. விளக்குதலும் செய்துகாட்டலும்

ஓர் ஆசிரியர் எப்பொழுதும் சில விடயங்களை முழு வகுப்புக்கும், ஒரு சிறிய குழுவுக்கு அல்லது தனியாள் ஒருவருக்கு விளக்கமளிக்க மற்றும் செய்துகாட்ட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறார். மாணவர்களுக்கு எப்பொழுதும் கற்றல் வளச் சாதனமொன்றினால் வழங்கப்படாத எண்ணக்கரு பற்றிய மேலதிக விளக்கம் தேவைப்படலாம். மாணவர்களுக்கும் செயல்முறையை அல்லது செயலொழுங்கை விளக்கிக்கொள்ளும் முகமாகச் செய்துகாட்டல் தேவைப்படுகிறது.

a. விளக்கும் திறன்

மாணவருடைய விளக்கத்தை ஆழப்படுத்தும் நோக்கில் ஆசிரியர் ஓர் எண்ணக்கருவை அல்லது ஒழுங்குமுறையை விளக்குதல் வேண்டும். அத்துடன் பொதுமையாக்கத்தைக் கிரகித்துக்கொள்ள உதவுதல் வேண்டும். ஒரு ஆசிரியருடைய விளக்கும் திறனுக்கு வரைவிலக்கணத்தை எளிமையாக்குதல், மற்றும் உதாரணங்களும் விளக்கப்படங்களும் தேவைப்படுகின்றன. ஒரு விளக்கமானது பின்வருவனவற்றைச் செய்து காட்டலாமெனப் பரிந்துரைக்கிறது.

- ஒரு காரணி மற்றும் விளைவு தொடர்பாக பலூன் ஒன்றில் காற்றடைக்கும்போது ஏற்படும் விளைவைக் காட்டுதல்.
- ஒரு விதி *அல்*லது சட்டத்தினால் ஆளப்படும் செயல் ஒரு பெயர்ச்சொல்லை எடுத்துக் காட்டுதல்
- *ஓர்* ஒழுங்குமுறை அல்லது செயல்முறை – கணிதச் சமன்பாடு ஒன்றைத் தீர்க்கும் நடைமுறையைக் காட்டுதல்
- *ஒரு செயற்*பாடு அல்லது செயலின் நோக்கம் நுண்ணிய பொருட்களைப் பார்ப்பதற்கு நுணுக்குக் காட்டியைப் பயன்படுத்துதலைக் காட்டுதல்

b. செய்துகாட்டும் திறன்

செய்துகாட்டல் திறனானது அறிதல் பற்றியும் மற்றும் செய்யக்கூடியதாக இருத்தலுக்கும் இடையில் இணைப்பை வழங்குகிறது. செய்துகாட்டும் திறனை விருத்திசெய்தல் ஓர் ஆசிரியருக்கு இன்றியமையாதது. ஏனெனில், பெருமளவான மாணவர் கற்றல் அவதானித்தல் ஊடாக அல்லது ஏனையவர்களைப் போலச் செய்தல் மூலம் நிகழ்கிறது. Arenas (1988) என்பாருடைய ஆய்வு எடுத்துக்காட்டுவது என்னவெனில் செய்துகாட்டல் சரியானதாக இருக்குமெனில் கற்பவர்கள் அவற்றைத் தெளிவாகப் பார்க்கக்கூடியதாகவும் விளங்கிக் கொள்ளக்கூடியதாகவும் இருத்தல்

வேண்டும். செய்துகாட்டல் நடைபெறும்போது சுருக்கமான விளக்கங்களும் கலந்துரையாடலும் நிகழுமானால் கற்றல் வினைத்திறனுடையதாக இருக்கும்.

2. வினாக் கேட்டல்

கற்பித்தலில் உள்ள இன்னொரு அத்தியாவசியமான திறன் வினாக்கேட்டலாகும்.. வினாக்கேட்டல் எந்தவொரு கற்றல் கற்பித்தல் செயல்முறைக்கும் முக்கியமானது. வகுப்பறையில் வினாக்கேட்டல் கோட்பாட்டை பயன்படுத்தும்போது,

- வினாக்களைப் பரவலாகக் கேட்கும்போது மாணவர் பங்கேற்பு உயர்மட்டத்தில் இருக்கும்
- பொருத்தமான விதத்தில் கீழ் மற்றும் உயர் மட்ட அறிகைசார் வினாக்கள் கலந்து பயன்படுத்தப்படுகிறது.
- மாணவரின் புரிந்துணர்வு அதிகரிக்கிறது
- மாணவரின் சிந்தனை தூண்டப்படும், விரிவுபடுத்தப்படும்.
- பின்னூட்டலும் பொருத்தமாகவும் மீளவலியுறுத்தலும் இடம்பெறுகிறது.
- மாணவரின் திறனாய்வுச் சிந்தனை முனைப்படையும்
- மாணவரின் ஆக்கத்திறன் வளர்க்கப்படுகிறது.

சிறந்த வினாக்கள் கவனமாகத் திட்டமிடபடபடுதல் வேண்டும். தெளிவாகக் கூறப்பட வேண்டும். மற்றும் விசேட குறிக்கோள்களை அடையும் வகையில் குறிப்பாக இருத்தல் வேண்டும். ஆசிரியர் வினாக் கேட்டல் நுட்பங்களை அறிந்துகொள்வதும் அத்தியவசியமானது. வினாக்களுக்கான நேரம் மற்றும் வினாக்களின் மட்டங்களை விளங்கிக்கொள்வதும் அவசியமானது. வினாக்கேட்டலும் அதற்குப் பதிற்குறிகாட்டுதலும் வெவ்வேறு கலாசாரங்களால் வெவ்வேறு முறையில் பார்க்கப்படும் என்பதையும் ஆசிரியர் விளங்கிக்கொள்ள வேண்டும். ஆசிரியர் மாணவரின் கலாசாரத் தேவைகளில் உணர்வுபூர்வமாக இருப்பதுடன் வினாக்கேட்டலின்போது, தமது கலாசார ரீதியான கண்ணோட்டங்கள் மாணவர்மீது ஏற்படுத்தும் பாதிப்புகளை அறிந்திருத்தல் வேண்டும். மேலும், நேரடியான வினாக்களைக் கேட்டல் சகல மாணவருக்கும் பொருந்தும் நுட்பமாக இருக்காது என்பதையும் ஆசிரியர் அறிந்துகொள்ள வேண்டும்.

வினாக்கேட்டல் போதனை மற்றும் கணிப்பீட்டின் நன்கு வரையறுக்கப்பட்ட நோக்கங்களை அடையும் நோக்குடன் கூடியதாகப் பயன்படுதத்ப்படுதல் வேண்டும். புளூம் என்பவரின் பகுப்பியலில் சிந்தனையின் பாகுபாடுகள் சிக்கல்த்தன்மையின் மட்டங்களுக்கு ஏற்ப ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. ஆசிரியர்கள் புளூமின் பகுப்பாய்வினை கவனத்தில் கொள்ளவேண்டும். ஏனெனில், இது மாணவர்களும் ஆசிரியரும் பலவகைப்பட்ட சிந்தனைகளைக் கற்கவும் பயிற்சி செய்யவும் வாய்ப்புகளை வழங்குவதுடன் பல்வேறு வகையான வினாக்களுக்கும் சிந்தனைக்கும் உரிய எளிமையான அமைப்பையும் வழங்குகிறது. ஒரு தனிப்பாடத்திலேயே

ஓர் ஆசிரியர் வினாக்களின் மட்டத்தை வேறுபடுத்தலாம். கீழ் மற்றும் உயர்மட்ட அறிகைசார் வினாக்கள்.

a. கீழ் மட்ட வினாக்கள்

பகுப்பியலில் இடம்பெறும் ஞாபகம், விளக்கம் மற்றும் கீழ்மட்டப் பிரயோகம் ஆகியவை கீழ்மட்ட வினாக்கள் எனப்படும். கீழ்மட்ட வினாக்களின் பயன்பாடு பின்வருவனவற்றிற்கும் பொருத்தமானவை.

- மாணவரின் ஆயத்தம் மற்றும் கிரகித்தலை மதிப்பிடுதல்
- மாணவரின் பலம் மற்றும் பலவீனங்களை ஆய்ந்தறிதல்
- உள்ளடக்கத்தை மீள்நோக்குதல் மற்றும் அல்லது சுருக்கிக் கூறுதல்.

b. உயர்மட்ட வினாக்கள்

உயர்மட்ட வினாக்கள் பிரயோகம், பகுப்பு மதிப்பீடு அல்லது ஆக்கத்திறன்கள் என்பவற்றை கருதும். பகுப்பியலின் உயர்மட்டத்திலுள்ள வினாக்கள் வழக்கமாகப் பின்வரும் விடயங்களுக்குப் பொருத்தமானவை.

- மாணவர்களை ஆழமாகவும் திறனாய்வு ரீதியாகவும் சிந்திக்க ஊக்குவித்தல்
- பிரச்சினை தீர்த்தல்
- கலந்துரையாடலை ஊக்குவித்தல்
- மாணவர்கள் தாமாகத் தகவல்களைத் தேடத் தூண்டுதல்.

அட்டவணை 5.1

புளூமின் பகுப்பியலிலுள்ள மாதிரி வினாக்கள்; (pohl, 2000)

சிந்தனை - திறன்கள் மட்டம்	மாதிரி வினாக்கள்
ஞாபகம்	• பின்னர் நடந்தது என்ன? • எவ்வளவு.....? • என்ன.....? • அது என்ன.....? • பெயர்கூற முடியுமா.....? • வரைவிலக்கணம் காண்க.....? • பின்னர் நடந்தவை பற்றி விபரிக்குக. • சரி அல்லது பிழை எது.....?
விளக்கம்	• ஏனென விளக்க முடியுமா? • உங்கள் ெ சாந்த மொழியில் எழுத முடியுமா? • எவ்வாறு விளக்குவீர்? • சுருக்கமான குறிப்பு எழுத முடியுமா? • அடுத்து நடந்திருந்தால் என்ன நினைக்கிறீர்? • நீர் என்ன நினைக்கிறீர்? • முக்கியமான கருத்து என்ன? • தெளிவாகக் கூற முடியுமா? • விளக்க முடியுமா? • அவ்வழிமுறையில் ஒவ்வொருவரும் செயற்படமுடியுமா?

சிந்தனை - திறன்கள் மட்டம்	மாதிரி வினாக்கள்
பிரயோகம்	• இன்னொரு சந்தர்ப்பத்தை அறிவீரா? • குணவியல்புகளின்படி குழுவாக்க முடியுமா? • நீங்கள் மாற்ற வேண்டிய காரணிகளள் எவை? • என்ன வினாக்கனைக் கேட்டிருப்பீர்கள்? • தரப்பட்டுள்ள தரவிலிருந்து அறிவுறுத்தல்கள் சிலவற்றை உருவாக்க முடியமா?
பகுப்பு	• எந்த நிகழ்ச்சி நடந்திருக்கக் கூடாது? • நடந்திருந்தால், முடிவு என்னவாக இருக்கும்? • எவ்வாறு...? ஒத்திருக்கும்..? • இன்னொரு சாத்தியமான முடிவாக எதனைக் காண்கிறீர்கள்? • ஏன் மாற்றங்கள் நிகழ்கின்றன? • என்ன எப்போது நிகழ்ந்திருக்க வேண்டுமென விளக்க முடியுமா? • பிரச்சினைகளில் சில யாவை? • வேறுபடுத்த முடியுமா? • பின்னணியிலுள்ள ஊக்கிகள் யாவை? • திருப்பு முனை எதுவாக இருந்தது? • அதனுடனான பிரச்சினை என்ன?
மதிப்பீடு	• சிறந்த தீர்வு உள்ளதா? • பெறுமானத்தை மதிப்பிடும். அது பற்றி என்ன நினைக்கிறீர்? • உமது நிலையை பாதுகாக்க முடியுமா? • எவ்வாறு கையாள்கிறீர்? • எத்தகைய மாற்றங்களை விதந்துரைப்பீர்? • நம்புகிறீரா? எவ்வாறு உணர்கிறீர்? • எவ்வளவு வினைத்திறனுடையது? • விளைவுகள் எவை? • செல்வாக்கு என்ன? • நன்மை தீமைகள் யாவை? • மாற்று வழிகள் யாவை? • நன்மை பெறுபவர் யார்? இழப்பவர் யார்?
ஆக்கம்	• வடிவமைக்க முடியுமா? • சாத்தியமான முடிவைக் காணமுடியுமா? • சகல வளங்களும் இருந்தால், எவ்வாறு கையாள்வீர்? • உங்கள் சொந்த வழியை ஏன் வகுக்க முடியாது? • என்ன நேரும்? • எவ்வளவு வழிகளால் முடியும் • புதிய மற்றும் வழக்கத்துக்கு மாறான பயன்பாடுகளை உருவாக்க முடியுமா? • முன்மொழிவொன்றினை விருத்தி செய்ய முடியுமா?

3. திட்டமிடல்

ஆசிரியர்களிடத்தில் இருக்கவேண்டிய இன்னொரு அத்தியாவசியமான திறன் திட்டமிடல் திறனாகும். வினைதிறனுள்ள திட்டமிடல் வெற்றிகரமான கற்பித்தலுக்கு அடிப்படையாகும். திட்டமிடலானது இலக்குகள், குறிக்கோள்கள் அல்லது குறிப்பிட்ட கற்பித்தல் - கற்றல் சந்தரப்பங்களின் விளைவுகள் என்பவற்றோடு ஆரம்பிக்கப்படுகிறது. அத்தகைய இலக்குகளை அடையும் வழிமுறைகளை உள்ளடக்குகிறது மற்றும் போதனையினால் அடையப்பட்டுள்ள அடைவினைக் கணிப்பிடுவதற்கும் மதிப்பிடுவதற்குமான வினைதிறனுள் ஒழுங்குமுறைகளுடன் முடிவடைகிறது.

சிறந்த திட்டமிடல் உங்கள் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் ஆற்லைக் கொண்டுள்ளது என்பதை எப்பொழுதும் மனதில் கொள்ளவேண்டும். மற்றும் உங்கள் பாடத்தினை நிறைவேற்றுவதில் காப்பினை உணரச்செய்யும்.

a. திட்டத்தின் வகைகள்

வகுப்பின் முதலாவது வாரத்தில் பல வகையான திட்டங்களுடன் ஆசிரியர் மாணவரை அணுகவேண்டுமெனப் பரிந்துரைக்கப்படுகிறது. திட்டமிடல் அடிப்படை வகைகள் வருடம் அல்லது பருவத்துக்கான நீண்டகாலத் திட்டங்கள், பாரிய திட்டத்தின் வேலைகளோடு தொடர்புடைய அலகுகளின் திட்டங்கள் நாளாந்த வேலைக்கான திட்டங்கள் என்பவற்றை உள்ளடக்கும். இவை யாவும் கல்வியின் பிரதான நோக்கங்களைப் பூர்த்திசெய்ய உதவுகின்றன.

b. திட்டமிடலின் நோக்கம்

திட்டமிடலின் பிரதான நோக்கம் பின்வருவனவற்றை உள்ளடக்கும்.

- மாணவர்களுக்கு குறிக்கோள்களைத் தெளிவுபடுத்துதல்
- தனியாள் வேறுபாடுகளுக்கான ஏற்பாடுகள்
- ஆர்வத்தைத் தூண்டும் வழிமுறைகளை விருத்திசெய்தல்
- தர்க்கரீதியான போதனா தொடர்ச்சியை வழங்குதல்
- நெகிழ்ச்சித் தன்மைக்குரிய ஏற்பாடுகள்
- ஆசிரியர் நம்பிக்கையோடு கற்பிக்க உதவுதல்

c. திட்டமிடல் மூலகங்கள்

திட்டங்களில் பின்வரும் மூலகங்கள் உள்ளடக்கப்படுகின்றன.

- குறிக்கோள் அல்லது விளைவுகள் பற்றிய கூற்றுகள் எதனைக் கற்பிக்க வேண்டும், எத்தகைய விளைவுகளை அடைதல் வேண்டுமென மாணவர் கற்றல் சார்பாக எடுத்துக் காட்டப்பட்டவற்றைத் தெளிவாகக் காட்டுகிறது.
- செயற்பாடுகள் பற்றிய கூற்று: தர்க்கரீதியான படிப்படியான போதனையின் வரிசைக் கிரமம், தேவையான மாற்றங்கள் மற்றும் பொருத்தமாக விருத்திசெய்யப்பட்ட முடிவு.

- பயன்படுத்தப்படுவுள்ள சாதனங்களின் பட்டியல்
- கணிப்பீடு: ஆகக்குறைந்தது இரண்டு வகையான கணிப்பீடுகள், மாணவர் கற்றல் பற்றிய கணிப்பீடு, கற்பித்தல் ஒழுங்குமுறைகள் பற்றிய கணிப்பீடு.

4. போதனையை முகாமை செய்தல்

போதனையை முகாமைசெய்தல் கற்பித்தல் - கற்றல் செயல்முறையின் முக்கியமான பகுதியாகும். வினைத்திறன்மிக்க வகுப்பறை முகாமைத்துவம் போதனைச் செயல்முறைக்கான உங்கள் கவனத்தை வெளிப்படுத்துகிறது. பணியை மிகவும் வினைத்திறன் கூடிய விதத்தில் மேற்கொள்வது உங்கள் வினைத்திறனில் தங்கியுள்ளது. ஆகவே, வகுப்பறை மற்றும் போதனை முகாமைத்துவமானது மாணவருடைய கற்றலில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இது மாணவரின் கற்கும் வினைத்திறனை அதிகரிக்கிறது. கற்றல் குறிக்கோள்களை மாணவர்கள் பூர்த்திசெய்தலானது வகுப்பறை முகாமைத்துவத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. வகுப்பறையில் போதனையை முகாமை செய்தல் எப்பொழுதும் முக்கிய கவனத்திற்குரியது. ஏனெனில் அது ஒன்றுக்கு மேற்பட்ட பின்வரும் திறன்களுடன் ஈடுபடுகிறது.

- கற்பித்தல் கற்றல் சூழலை உருவாக்குதல்
- கற்பித்தல் - கற்றல் செயற்பாட்டில் மாணவரின் ஈடுபாட்டைப் பேணுகிறது.
- வினைதிறனுள்ள ஒழுக்கக் கட்டுப்பாட்டினை உருவாக்குகிறது. மற்றும்
- மாணவரின் விரும்பிய கற்றல் விளைவுகளை உறுதி செய்கிறது.

இவ்விடத்தில் வகுப்பறை முகாமைத்துவமும் வகுப்பறை ஒழுக்கக்கட்டுபாடு தொடர்பாகவும் கூறவேண்டும். நாங்கள் வகுப்பறை முகாமைத்துவத்தைக் குறுகிய நோக்கில் ஆராயக் கூடாது. McNell மற்றும் Wilse (1990) ஆகியோரின்படி முகாமைத்துவம் ஒரு பரந்த எண்ணக்கருவாகும். அது பொதுவாக நெறிப்படுத்தப்படும்போது, ஒழுக்கக் கட்டுப்பாடு என்ற எண்ணக்கரு மாணவரின் தவறான நடத்தைகளின்போது ஆசிரியர் துலங்கும் சூழமைவில் பயன்படுத்தப்படுகிறது. மாணவர்கள் அதிகூடிய அறிவு, மனப்பாங்கு மற்றும் திறன்களைப் பெற்றுக் கொள்ள உதவுவது இதன் இறுதிக் குறிக்கோளாகும்.

பரிந்துரைதுரைக்கப்பட்ட செயற்பாடு 4.3:

1. குறிப்பிட்ட தரம் அல்லது வகுப்பு மட்டத்தில் கற்பிக்க விரும்பும் ஒரு தலைப்பினை அல்லது பாடத்தினை இனங்காண்க.
2. ஒரு பாடத்திட்டத்தை ஆயத்தஞ்செய்க. மற்றும் பாடத்தின் முடிவில் நீங்கள் அடைந்துகொள்ள விரும்பும் கற்றல் விளைவுகளையும் எழுதுக.
3. கற்பித்தல் முறையொன்றைத் தெரிவுசெய்க. இதனை வகுப்பறையிலுள்ள உறுப்பினர்களுக்குச் செய்துகாட்டுக.
4. நீங்கள் தெரிவுசெய்த தலைப்புக்குரிய கற்பித்தல் முறையைப் பயன்படுத்தும்போது நீங்கள் பெற்றுக்கொண்ட அனுபவங்கள்பற்றி ஒரு பக்கங்கொண்ட பிரதிபலிப்பை எழுதுக.

மொடியூல் 5	கணிப்பீடும் மதிப்பீடும்

குறிக்கோள்கள்:

இந்த மொடியூலானது பாடசாலை முறைமையில் பின்பற்றப்படும் கணிப்பீடு மற்றும் மதிப்பீட்டு ஒழுங்குமுறைகள், கணிப்பீட்டின் சிறப்புகள் என்பவற்றை விளங்கிக்கொள்ளவும் மற்றும் பாடசாலை மட்டக் கணிப்பீட்டில் மாணவரின் அறிகைத்திறன்களுக்கு மேலாக உள இயக்க மற்றும் மனவெழுச்சித் திறன்களைக் கணிப்பிடுவதற்கு பாடசாலை மட்டத்தில் அமுல்படுத்தப்படும் கணிப்பீடு அமைப்பு மற்றும் கூட்டு கணிப்பீட்டினையும் மதிப்பீட்டினையும் நடைமுறைப்படுத்துவதில் தலைமைத்துவத்தின் வகிபாகத்தினையும் என்பவற்றை எடுத்துக்காட்டுகிறது.

கற்றல் விளைவுகள்:

இந்த மொடியூலின் முடிவிலே மாணவர்கள் பின்வருவம் விடயங்களில் ஆற்றலைப் பெறுவர்:

1. பாடசாலை முறையில் நடைமுறைப்படுத்தப்படும் பலவேறு கணிப்பீட்டு மற்றும் மதிப்பீட்டுச் செயல்முறைகளைக் கலந்துரையாடுவர்.
2. தமது பாடசாலைகளிலுள்ள வகுப்பறைகளில் பாடசாடலை மட்டக் கணிபீட்டினைப் பிரயோகிப்பதுடன் ஆசிரியர்களுக்கு வழிகாட்டலையும் வழங்குவர்.
3. பாடசாலையில் பாடசாலை மட்டக் கணிப்பீடு மற்றும் கூட்டு மதிப்பீடுகளை நடைமுறைப்படுத்தும் தலைவர் என்ற வகையில் ஆசிரியர்கள் தமது வகிபாகத்தை விளங்கிக்கொண்டு தமது பாடசாலைகளில் வெற்றிக்கு இட்டுச்செல்லும் உபாயங்களை விருத்தி செய்வர்.

மொடியூல் பற்றிய நோக்கு:

வாரம்	தலைப்பு / உள்ளடக்கம்	செயல்முறை	மாணவரின் கற்றல் பணிகள்
1	1. புளுமின் திருத்தியமைக்கப்பட்ட கற்றல் விளைவுகளின் பகுப்பாய்வு 2. ஹொவாட் காட்ணரின் பல்நிலை நுண்மதிக் கொள்கை	விரிவுரை, குழுக் கலந்துரையாடல் தனியாள் ஆயத்தம்	சோதனைகளை ஆயத்தஞ் செய்யும் செயல்முறைகளைக் கலந்துரையாடுதல் மற்றும் வழிகாட்டல் செயல்முறையாக மாணவரின் நுண்மதி வகைகளை இனங்காண்பதற்கான சாதனங்களை ஆயத்தஞ் செய்தல்
2 மற்றும் 3	3. கணிப்பீடும் மதிப்பீடும் 4. பாடசாலை மட்டக் கணிப்பீடு 5. பாடசாலைகளில் கூட்டு மதிப்பீடு	விரிவுரையும் கலந்துரையாடலும் சாதனங்கள்ளை மீளாய்வு செய்தல் பாடசாலை அவதானம் பாடசாடலை அவதானம் பாடசாலை அவதானம் பற்றிய கலந்துரையாடல்	கணிப்பீடு மற்றும் மதிப்பீட்டை ஆராய்தல் பாடசாலையிலுள்ள முறைமைக்கான SBA யின் சிறப்புகள; SBA யின் வழிமுறைகள் SBA யை ஆயத்தஞ் செய்தல், வகுப்பறையில் பயன்படுத்துவதற்கான கணிப்பீட்டுத் தாள்கள் G.C.E. O/L மற்றும் A/L இல் வழிகாட்டுதற்கான சிறந்த நடைமுறைகள்
4	6. பாடசாலைகளில் SBA யை நடைமுறைப்படுத்துவதில் கல்விசார் தலைவர்களின் வகிபாகம் 7. பாடசாலையின் வெற்றியில் கணிப்பீடும் மதிப்பீடும்	கலந்துரையாடல் பாடசாலை அவதானமும் செயல்முறைகள் பற்றிய பின்னூட்டலும் கலந்துரையாடல் பாடசாலையிலிருந்து தரவு சேகரித்தல்	SBA யை பாடசாலைப் பின்னணியில் நடைமுறைப்படுத்துவதில் கல்விசார் தலைவரின் வகிபாகத்தைத் தயாரித்தல் பாடசாலையில் வெவ்வேறு மட்டங்களில் SBA ஆவணப்படுத்தல் களை அவதானித்தல் சிறந்த முடிவுகளைப் பெறுவதற்கான ஒழுங்கு விதிகளை விருத்தி செய்தலும் பாடசாலையின் வெற்றியை எடுத்துக் காட்டுவதற்கு முடிவுகளைப் பகுப்பாய்வு செய்தலும்.

கற்றல் விளைவுகள் பற்றிய பு;மின் திருத்தியமைக்கப்பட்ட பகுப்பியல்

புளு;மின் பகுப்பியலானது நேரப் பரீட்சிப்புடன் இணைந்தது. அதன் நீண்ட வரலாறும் பிரசித்தியும் காரணமாக, சுருக்கப்பட்டுள்ளது, விரிவுப்படுத்தப்பட்டுள்ளது மற்றும் பல்வேறு வழிமுறைகளிலே மீள்விளக்கமளிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் 2001 ஆம் ஆண்டின் திருத்தம் பல சிறிய ஆனால் உண்மையில் முக்கியமான மாற்றங்களை உள்ளடக்குகிறது. ஆயினும் மாற்றங்கள் மூன்று பரந்த வகைகளாக நிகழ்ந்துள்ளன. 1. சொல்லியல், 2. அமைப்பு மற்றும் 3. அழுத்திச் சொல்லல்.

1. சொல்லியல் சார் மாற்றங்கள்

மூலம் மற்றும் திருத்தியமைக்கப்பட்ட கருத்து (எநசளழைெ) இடையிலான மாற்றங்கள் மனதிலிருக்கக்கூடிய மிக வெளிப்படையான வேறுபாடுகள் எங்களில் பலரை மயக்கமடையச் செய்கின்றன. புளுமினுடைய 6 பிரதான வகைகள் அடிப்படையில் பெயரிலிருந்து வினை வடிவமாக மாறியுள்ளன. மேலும் மூலத்தின் கீழ்நிலையிலுள்ள அறிவானது மீள்பெயரிடப்பட்டு ஞாபகப்படுத்தலாக வந்துள்ளது. இறுதியாக, கிரகித்தல் விளங்குதல் என்றும் தொகுப்பு ஆக்குதல் என்றும் ஒவ்வொரு வகையாலும் சிந்தனையின் இயல்பினை சிறந்த முறையில் பிரதிபலிக்கும் முகமாக விபரிக்கப்பட்டுள்ளது.

மூலம்பகுப்பியல் திருத்தியமைக்கப்பட்ட பகுப்பியல்



உரு 5.1. *புளுமின் மூல மற்றும் திருத்தியமைக்கப்பட்ட பகுப்பியல்*

(Based on Pohl, 2000, *Learning to think, thinking to learn*

2. திருத்தி அமைக்கப்பட்ட பு;மின் பகுப்பியல் பற்றிய வரைவிலக்கணம்

Anderson and Krathwohl (2001) ஆகியயோர் திருத்தியமைக்கப்பட்ட புளுமின் பகுப்பியலுக்கான புதிய சொற்களைப் பின்வருமாறு வரையறை செய்துள்ளனர்.

a. ஞாபகப்படுத்தல்

- ஞாபகப்படுத்தல் பற்றிய (மிகக்குறைந்த அறிகை மட்டம்) (கற்றல் நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்கள் எமது மாணவர்கள் குறிப்பான தகவல்களை மீள அழைத்தலைக் கருதுகிறது. இது மாணவர்கள் தகவல்களை மீளஅழைக்க அல்லது ஞாபகப்படுத்த முடியுமா என்னும் வினாவுக்கு விடைதருகிறது. ஞாபகப்படுத்தல் நிலையில் எழுதப்பட்ட அல்லது கணிப்பிடப்பட்ட கற்றல் இலக்குகளுக்குப் பொருத்தமான வினைச் சொற்களுக்கு உதாரணமாக

•

வரையறைசெய்பவர்	*இடைவெளிநிரப்புவர்*	*இனங்காண்பர்*	*பெயரிடுவர்*
பட்டியல்படுத்துபவர்	*குறிப்பிடுவர்*	*பொருத்துவர்*	*மனனஞ்செய்வர்*
	மீள அழைப்பர்		
பெயரிடுபவர்	*பிரதி பண்ணுவர்*	*கூறுவர்*	*கூறுவர்*
கீழ்க்கோடிடுவர்		*மீளக் கூறுவர்*	

b. விளங்கிக்கொள்பவர்

- விளங்கிக்கொள்ளல் மட்டத்தில் எழுதப்பட்ட மற்றும் கணிப்பிடப்பட்ட கற்றல் நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களை உயர்மட்ட உள ஆற்றலாக இருந்தாலும் எமது மாணவருக்கு கீழ்நிலையிலான ஞாபகப்படுத்தல் தேவைப்படுகிறது. இது "மாணவர்கள் கருத்துகளை அல்லது எண்ணக்கருக்களை விளக்குவார்களா? என்னும் வினாவுக்கு விடை தருகிறது.

விளங்கிக்கொள்ளல் மட்டத்தல் எழுதப்பட்ட மற்றும் கணிப்பிடப்பட்ட கற்றல் நோக்கங்களுக்குப் பொருத்தமான வினைச் சொற்களுக்கு உதாரணங்கள்:

வகைப்படுத்துவர்	*விபரிப்பர்*	*கலந்துரையாடுவர்*	*விளக்குவர்*
அங்கீகரிப்பர்	*அறிக்கைப்படுத்துவர்*	*தெரிவு செய்வர்*	*மாற்றுவர்*
பொழிப்புரை கூறுவர்	*மாற்றுவர்*	*விளக்கமளிப்பர்*	*ஒழுங்கில் வைப்பர்*
தமது சொற்களில் மீளக்கூறுவர்	*மீளஎழுதுவர்*	*சுருங்கக்கூறுவர்*	

c. பிரயோகித்தல்

- பிரயோகித்தல் மட்டத்தியில் எழுதப்பட்ட மற்றும் கணிப்பிடப்பட்ட கற்றல் நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்கள் எமது மாணவர்கள் தகவல்களை பயன்படுத்துவதை எதிர்பார்க்கிறது.

  இது மாணவர்கள் புதிய வழிமுறையில் தகவல்களைப் பயன்படுததுவார்களா? என்ற வினாவுக்குரிய துலங்கலாக அமையும்.

- **பிரயோக மட்டத்தில் எழுதப்பட்ட மற்றும் கணிப்பிடப்பட்ட கற்றல் நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களுக்குப் பொருந்தும் வினைச்சொற்களுக்கு உதாரணம்.**

•

தெரிவுசெய்பவர்	*செய்துகாட்டுவர்*	*நடித்துக் காட்டுவர்*	*அமர்த்துவர்*
விளங்கிக்கூறுவர்	*விளக்கமளிப்பர்*	*இயங்குவர்*	*அட்டவணைப் படுத்துவர்*
வடிவமைப்பர்	*தீர்ப்பர்*	*பயன்படுத்துவர்*	*எழுதுவர்*
கணிப்பர்	*அமைப்பர்*	*தீர்மானிப்பர்*	*கண்டுபிடிப்பர்*
உதாரணம் தருவர்	*உருவாக்குவர்*	*காட்டுவர்*	*விதியொன்று கூறுவர்*

d. பகுப்பாய்வு

- பகுப்பாய்வு மட்டத்தில் எழுதப்பட்ட மற்றும் கணிப்பீடு செய்யப்பட்ட கற்றல் நோக்கங்களும் குறிக்கோள்களும் தகவல்களைக் கூறுகளாகப் பிரிந்து தொடர்புகளை விளக்குதல் எமது மாணவர்களுக்குத் தேவைப்படுகிறது. இது பல்வேறு பகுதிகளுக்கிடையில் பேதங்களைக் காணமுடியுமா? என்னும் வினாவுக்கு விடை தருகிறது.
- பகுப்பாய்தல் மட்டத்தில் எழுதப்பட்ட மற்றும் கணிப்பிட்ட கற்றல் நோக்கங்களுக்குப் பொருத்தமான வினைச் சொற்களுக்கு உதாரணங்கள்

பகுப்பாய்வர்	*வகைப்படுத்தவர்*	*பாகுபடுத்துவர்*	*ஒப்பிடுவர்*
வேறுபடுத்துவர்	*வாதிடுவர்*	*உய்த்தறிவர்*	*ஆய்ந்தறிவர்*
வரைவர்	*வேறுபடுத்துவர்*	*குறிப்பிடுவர்*	*பாகுபடுத்துவர்*
பரிசீலிப்பர்	*அனுமானிப்பர்*	*வினவுவர்*	*பேதங்காண்பர்*
விமர்சிப்பர்	*பரிசோதிப்பர்*		*சோதிப்பர்*

e. மதிப்பிடுதல்

- மதிப்பிடுதல் மட்டத்தில் எழுதப்பட்ட மற்றும் கணிப்பீடு செய்யப்பட்ட கற்றல் நோக்கங்களும் குறிக்கோள்களும் சாதனங்கள் அல்லது முறைகள் பற்றி எமது மாணவர்கள் தீர்ப்புகளை மேற்கொள்வதை எதிர்பார்க்கிறது.

- மதிப்பிடுதல் மட்டத்தில் எழுதப்பட்ட மற்றும் கணிப்பீடு செய்யப்பட்ட கற்றல் குறிக்கோள்களுக்கு பொருத்தமான வினைச் சொற்களுக்கு உதாரணங்கள்.

மதிப்பிடுவர்	*தெரிவுசெய்வர்*	*ஒப்பிடுவர்*	*முடிவுக்கு வருவர்*
தீர்மானிப்பர்	*நியாயப்படுத்துவர்*	*மதிப்பிடுவர்*	*அபிப்பிராயம்*
தீர்ப்பு		*முதன்மைப்படுத்துவர்*	*கூறுவர்*
வழங்குவர்		*உதவுவர்*	*வரிசைப்படுத்துவர்*
தரமிடுவர்			*பெறுமானங்காண்பர்*

f. ஆக்குதல்

- ஆக்குதல் மட்டத்தில் எழுதப்பட்ட மற்றும் கணிப்பிடப்பட்ட கற்றல் நோக்கங்கள் மற்றும் குறிக்கோளுக்கு எமது மாணவர்கள் புதிய கருத்துக்களைப் பிறப்பிக்க வேண்டிய தேவையுண்டு. இம்மட்டமானது மாணவர்கள் ஒரு நிலைக்குவர அல்லது தீர்மானத்தை நியாயப்படுத்த முடியுமா? என்னும் வினாவுக்கு விடைதருகிறது?
- ஆக்குதல் மட்டத்தில் எழுதப்பட்டுள்ள மற்றும் கணிப்பிடப்பட்டுள்ள கற்றல் நோக்கங்களுக்குப் பொருத்தமான வினைச் சொற்களுக்கான உதாரணங்கள்

மாற்றுவர்	*இணைப்பர்*	*தொகுப்பர்*	*அமைப்பர்*
உருவாக்குவர்	*வடிவமைப்பர்*	*வழக்கமல்லாத*	*உருவாக்குவர்*
பிறப்பிப்பர்	*கண்டுபிடிப்பர்*	*வற்றை காண்பர்*	*திட்டமிடுவர்*
எதிர்கூறுவர்	*அங்கீகரிப்பர்*	*புதிதாக*	*மீள ஒழுங்குபடுத்துவர்*
மீள அமைப்பர்	*காண்பர்*	*உருவாக்குவர்*	*பரிந்துரைப்பர்.*
		தயாரிப்பர்	
		திருத்தியமைப்பர்	
		எழுதுவர்	

3. அமைப்பில் மாற்றங்கள்

புளூமின் பகுப்பியலின் மூலம் தொடர்பான எமது வெளிப்பாடு படிமுறை ஒழுங்கிலான அறிகைத் திறன்கள் பற்றிய ஒருபரிமாண அட்டவணையாகும். ஆயினும், திருத்தியமைக்கப்பட்ட பகுப்பியலின் மாற்றங்களில் ஒன்றாக இருபரிமாண அட்டவணையில் அறிமுகத்தைக் கொள்ளலாம். இது அறிவுப் பரிமாணம் என அழைக்கப்படுவதுடன் எமது மாணவரிடமிருந்து எதிர்பார்க்கப்படும் அறிவின் வகை அறிகைச் செயல்முறைகள் என அழைக்கப்படுகிறது.

இவ்வாறான அமைப்பு மாற்றங்கள் அடிப்படையில் பதியத்தக்கனவாகக் காணப்பட்டாலும் அதன் பின்னர் சில கல்வியியளாலரும் அறிஞரும் அவற்றைப் பரிசீலனை செய்துள்ளனர், அவை தர்க்கரீதியானவையாகக் கருதப்படுகின்றன. விளைவுகளை உள்ளடக்குதல் திருத்தியமைக்கப்பட்ட பகுப்பில் அவற்றினை இருபரிமாண வடிவில் எடுத்துக்கொள்கின்றன. இவ்வாறான இருபரிமாணப் பகுப்பியலானது போதனைகளை மேம்படுத்த எமக்கு உதவ முடியும் என்பதுடன் எமது பாடங்களும் கணிப்பீடுகளும் ஒன்றோடொன்று இணைந்துள்ளமையை உறுதிசெய்கிறது. மிகமுக்கியமாக எமது பாடங்கள் அறிசைசார்ந்து வளமானதாக மாறுவதுடன், எந்தவொரு போதனைச் சந்தர்ப்பங்களையும் நாம் தவறவிடவேண்டியதில்லை.

கீழேயுள்ள தாயத்தில் எடுத்துக் காட்டியது போல, அறிவு மற்றும் அறிகைசார் செயல்முறைகளின் இடைவெட்டு இருபத்துநான்கு தனிப்பட்ட கலங்களை உருவாக்குகிறது. இடதுபக்கத்திலுள்ள அறிவுப் பரிமாணமானது நான்கு மட்டங்களாகத் தொகுக்கப்பட்டுள்ளதுடன் அவை உண்மை, எண்ணக்கரு, ஒழுங்குவிதிகள் மற்றும் அதீத அறிகை என வரையறுக்கப்படுள்ளன. சட்டகத்தின் மேற்பகுதியிலுள்ள அறிகைச் செயல்முறை பரிமாணமானது ஆறு மட்டங்களைக் கொண்டிருக்கின்றன அவை ஞாபகம், விளக்கம், பிரயோகம், பகுப்பாய்வு, மதிப்பீடு மற்றும் ஆக்கம் என்பவையாகும்.

a. அறிவுப் பரிமாணம் பின்வருமாறு வரையறுக்கப்பட்டுள்ளது.

i. உண்மைசார் அறிவு:

இவ்வகையான அறிவு குறிப்பிட்ட நெறி அல்லது பாடப்பரப்பில் தேர்ச்சியைக் காட்டுவதற்குத் தேவையான தகவல்களில் கவனஞ் செலுத்துகிறது. இந்த வகையான அறிவுக்கான சில உதாரணங்களாக சொற்களஞ்சியம், குறியீடுகள் மற்றும் சூத்திரங்களை உள்ளடக்கும்.

ii. எண்ணக்கருசார் அறிவு

இவ்வகையான அறிவு பாரிய அமைப்பொன்றினுள் உள்ள அடிப்படைத் தகவல்கள் பற்றிய இணைப்புகளில் கவனஞ் செலுத்துகிறது. இவ்வகையான அறிவுக்குரிய உதாரணங்கள் கொள்கைசார் கருத்துக்களை காலரீதியாக அல்லது வகைகளாக ஒழுங்குசெய்தலை உள்ளடக்கும்.

iii. ஒழுங்குமுறைசார் அறிவு:

இவ்வகையான அறிவு அமுலாக்கம் அல்லது செயற்படுத்துதல் கற்றுக்கொண்ட சாதனங்கள் மீது கவனஞ் செலுத்துகிறது. இந்த வகையான அறிவு பாடங்குறித்த திறன்கள் மற்றும் நுட்பங்களை உள்ளடக்கும். விசாரணை முறைகள், மிகவும் குறிப்பான அல்லது திட்டவட்டமான திறன்கள், கணக்குகள் நுட்பங்கள் மற்றும் குறிபப்ான முறைகளை உள்ளடக்கும்.

iv. அதீத அறிகைசார் அறிவு

இவ்வகையான அறிவானது அறிகை பற்றிய விளக்கம் மற்றும் ஒருவருடைய அறிகைச் செயல்முறைகளில் மீது கவனஞ்செலுத்துகிறது. இவ்வகையான அறிவுக்குச் சில உதாரணங்களாக கற்பவருக்குச் சிறப்பாகப் பயன்படும் விதத்தில் தகவல்களை எவ்வாறு எடுத்துக் கூறுதல் அல்லது அறிக்கை எழுதுதல் மற்றும் வகுப்பில் தகவல்களை முன்வைத்தலுக்கான பலம் மற்றும் பலவீனங்கள் பற்றிய அவர்களுடைய புரிந்துணர்வு ஆகியவற்றை உள்ளடக்கும். திருத்தியமைக்கப்பட்ட புளுமின் பகுப்பியல் பற்றிய புதிய இருபரிமாண அமைப்பானது, நான்கு அறிவுப் பரிமாண மட்டங்கள் ஒவ்வொன்றையும் மேலும் மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட வகைகளாகப் பிரிக்கலாமெனப் பரிந்துரைக்கிறது (உதாரணம்: உண்மைசார், சொல்லியல் பற்றிய அறிவு, குறிப்பான விபரம் மற்றும் சொல்லியல்பற்றிய அறிவு, குறிப்பான விபரம் மற்றும் மூலகங்கள் பற்றிய அறிவு) அறிகைச் செயல்முறைப் பரிமாண மட்டங்களைக் குறைந்தது மூன்றில் இருந்து கூடியது எட்டு உப பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

இருபரிமாண அட்டவணையின் மாதிரி சில வினைச் சொற்கள் கொண்ட உதாரணங்களுடன் ஒவ்வொரு கூட்டிலும் கீழே முன்வைக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 5.1.

திருத்தியமைக்கப்பட்ட புளுமின் பகுப்பியலின் இருபரிமாண அமைப்பு.

அறிவுப் பரிமாணம்	அறிகைசார் செயல்முறைப் பரிமாணம்					
	ஞாபகம்	விளக்கம்	பிரயோகம்	பகுப்பு	மதிப்பீடு	ஆக்கம்
உண்மைசார்	பட்டியலிடுவர்	சுருக்கிக் கூறுவர்	வகைப்படுத்துவர்	ஒழுங்குப்படுத்துவர்	வரிசைப்படுத்துவர்	இணைத்துக் காட்டுவர்
எண்ணக்கருசார்	விபரிப்பர்	விளக்குவர்	பரிசோதிப்பர்	விளக்குவர்	கணிப்பர்	திட்டமிடுவர்
ஒழுங்குமுறைசார்	அட்டவணைப் படுத்துவர்	எதிர்வுகூறுவர்	கணிப்பர்	வேறுபிரித்துக் காட்டுவர்	முடித்துவைப்பர்	தொகுப்பர்
அதீத அறிகை சார்	பொருத்தமான பயன்பாடு	நிறைவேற்றுவர்	அமைப்பர்	அடைந்துகொள்வர்	செயற்படுவர்	அடைந்து கொள்வர்

அட்டவணை 5.1 இல் முன்வைக்கப்பட்டுள்ள அமைப்பிலுள்ள மாற்றங்கள் தராதரங்கள் மற்றும் கல்விசார் இலக்குகள் குறிக்கோள்கள் மற்றும் விளைவுகள் செயற்பாடுகள் என்பவற்றுக்கு இடையிலான ஒழுங்கினை தெளிவான சுருக்கமான காட்சிசார் பிரதிநிதித்துவமாக வழங்குகின்றன.

4. அழுத்திக் கூறுவதில் உள்ள மாற்றங்கள்

திருத்தியமைக்கப்பட்ட புளுமின் பகுப்பியலிலுள்ள மூன்றாவது மாற்றம் அழுத்திக்கூறுதல் மீதானதாகும். புளுமின் பகுப்பியல் எதிர்பாராத விதமாக எண்ணற்ற குழுக்களால் பயன்படுத்தப்படுகிறது என்பதோடு அவரது குழு எண்ணக்கருவாக்கஞ் செய்யும்போது

இதுபற்றி கவனத்தில் கொள்ளவில்லை. எமது கற்றல் நோக்கங்களை எழுதவும் கணிப்பிடவும் உதவும் சிறந்த வளமாக நாம் இப்பொழுதும் நம்புகிறோம். பகுப்பியலின் பரவலான பயன்பாட்டைக் கவனத்தில் கொள்ளும் திருத்தியமைக்கப்பட்ட பாடபேதம் கூடுதலான பிரயோகத்தன்மை கொண்டதாக உருவாக்கப்பட்டதுடன் பரந்த பயன்பாட்டுக்கும் உட்படுகிறது. இருப்பினும் "கலைத்திடத்தைத் திட்டமிடல்" போதனை விநியோகம் மற்றும் கணிப்பீட்டுக்கான மிகவும் யதார்த்த பூர்வமான கருவியாகவும் உள்ளதென்பது வலியுறுத்தப்படுகிறது"

பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடு 5.1:

உங்கள் பாடசாலையில் நீங்கள் சிறப்புத்தேர்ச்சி பெற்ற குறிப்பிட்ட தரத்துக்குரிய பாடத்துக்கான 3 வினாக்களை தெரிவுசெய்யுங்கள். வினாக்களை சோதனையைத் திருத்தியமைக்கப்பட்ட புளூமின் பகுப்பியலின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்து, எந்தக் கற்றல் நோக்கங்கள் அல்லது விளைவுகள் கணிப்பிடப்பட்டுள்ளன என்பதைக் குறிப்பிடும் விடயத்திறன் அட்டவணை ஒன்றை தயாரிக்குக.

ஹொவாட் காட்ணரின் பல்நிலை நுண்மதிக் கொள்கை.

1. நுண்மதிகளைப் பயன்படுத்திக் கற்பித்தல் மற்றும் கற்றலுக்கான பல்நிலை வழிமுறைகள்

பிள்ளைகள் பல்வேறு வழிமுறைகளில் கற்கிறார்கள். அவர்களிடம் வித்தியாசமான கற்பித்தல் பாங்குகள் உள்ளன. அவர்களிடமுள்ள குறிப்பிட்ட வலுவுள்ள நுண்மதிகளோடு இவை தொடர்புபடுகின்றன. சில பிள்ளைகள் வாசிப்பு மற்றும் குறிப்பெடுத்தல் மூலம் திறம்படக் கற்கிறார்கள். ஏனையவர்கள் காட்சி, திறன்கள், உடலசைவுகள் மூலம் இசைசார் ஒத்திசைவுச் செயற்பாடுகள்மூலம் கற்கிறார்கள். சிலர் பிரச்சினைகள் அடிப்படையில் தனிப்பட்ட முறையில் வேலைசெய்ய விரும்புகின்ற வேளையில் ஏனையோர் தீர்வுகளைக் காண்பதற்கு இடைத்தாக்கமுறுவர்.

பேராசிரியர் ஹொவாட் காட்ணர் ஹாவாட் பல்கலைக்கழகத்திலுள்ள அறிகை உளவியலாளர். அவர் தமது நூலான "உளத்தின் சட்டகம் பல்நிலை நுண்மதிக் கொள்கையில்" ஒரு மனிதன் ஆகக்குறைந்தது ஏழு நுண்மதிகளைக் கொண்டுள்ளான் எனக் கூறியுள்ளார்.

ஹொவாட் காட்ணர் எடுத்துக்காட்டியுள்ளவாறு ஏழு நுண்மதிகளும் பின்வருமாறு:

a. சொல் சார் / மொழியியல் நுண்மதி

b. தர்க்க ரீதியான / கணித நுண்மதி

c. காட்சி / இடஞ்சார் நுண்மதி

d. சங்கீத / ஒத்திசைவுசார் நுண்மதி

e. உடல் / தசைசார் நுண்மதி

f. ஆளிடை நுண்மதி

g. ஆளுள் நுண்மதி

2. ஏழு நுண்மதிகளின் விரிவான பண்புக் கூறுகள்

i. சொல்சார் ∴மொழியியல் நுண்மதி பண்புக்கூறுகள்	
• செவிமடுக்க, வாசிக்க, எழுது விரும்புதல் • இலகுவாக எழுத்துக்கூட்டுதல் • சிறந்த வாதிடுபவர் • சிறந்த பேச்சாளர் • சிறந்த ஞாபகசக்தி	எழுதப்பட்ட மற்றும் பேச்சுச் சொற்கள் மூலம் சிந்தனையும் கற்றலும்

ii. தர்க்கரீதியான ∴கணித நுண்மதிப் பண்புக் கூறுகள்	
• எண்ணுதலில் மகிழ்ச்சி • ஒழுங்கான முறையில் குறிப்பெடுக்க விருப்பம் • கணித பிரச்சினைகளைத் தீர்த்தலில் விருப்பம் • ஒழுங்குக்குட்படுத்தப்பட்ட விதத்தில் இருக்கும் விருப்பம்	உய்த்தறி சிந்தனை இலக்கங்களுடன் ஈடுபடுதல் கருத்துநிலைக் கோலங்களை விரும்புதல்

iii. காட்சிசார் ∴இடஞ்சார் நுண்மதிப் பண்புக்கூறுகள்	
• கலை, வரைதல் ஓவியம் மற்றும் சிற்பம் போன்றவற்றின் பண்புகளில் விரும்பம் • படங்கள், அட்டவணைகள் மற்றும் வரைபடங்களை இலகுவில் வாசித்தல் • சிறந்த நிற உணர்வு • படங்களுடன் ஞாபகப்படுத்தல் • உளப் பிம்பங்களை உருவாக்குதல்	பிம்பங்களையும் படங்களையும் பார்த்துச் சிந்தித்தல்

iv. சங்கீதம் ∴ஒத்திசைவுசார் நுணமதிப் பண்புக்கூறுகள்	
• தாளம், சுருதி முதலியவற்றுக்கு உணர்வு பூர்வமாக இருத்தல் • சங்கீதத்தில் மனவெழுச்சிசார் சக்திக்கு உணர்வுபூர்வமாதல் • இசையோடு இலகுவில் கற்பர் • இயற்கையிலுள்ள வித்தியாசமான சத்தங்களுக்கு உணர்வுபூர்வமாதல்	ஒத்திசைவு மற்றும் திரும்பவும் கூறுதல் மூலம் கற்பர்

எ. உடல் /தசைநார் நுண்மதிப் பண்புக்கூறுகள்	
• அசைதல் மூலம் கற்றல் • தொடுகையை விரும்புதல் • செயற்பட விரும்புதல் • கற்றல் செயல்முறைகளில் பங்கு பற்றுவதன் மூலம் கற்பர்	உடலசைவுடன் விளையாட்டு என்பவற்றின் மூலம் இலகுவில் கற்பர்.

vi. ஆளிடை நுண்மதமிப் பண்புக் கூறுகள்	
• நன்கு கலந்து பழகுவர் • பல நண்பர் இருப்பர் • குழச் செயல்பாடுகளில் மகிழ்வர் • எப்பொழுதும் ஒத்துழைக்க விரும்புவர் • சமூக நிலைமைகளை இலகுவில் விளங்குவர்	குழுக்களாக இலகுவில் கற்பர் ஏனையோருடன் இலகுவில் உறவுகளை விருத்திசெய்வர்

4. ஹொவாட் காட்ணரின் பல்நிலை நுண்மதிக் கொள்கையைக் கற்பித்தல் மற்றும் கற்றலுக்குப் பயன்படுத்துதல்

மாணவர்கள் தாம் நுண்மதியுடையவராவென விளங்கிக்கொள்ளத் தொடங்குகின்றனர். காட்ணருடைய நோக்கில், கற்றல் என்பது சமூக மற்றும் உளவியல் செயற்முறையாகும். மாணவர்கள் தமது சொந்தப் பல்நிலை நுண்மதிகளின் சமநிலையை மாணவர்கள் விளங்கிக் கொள்ளும்போது

- அவர்கள் தமது கற்றலை முகாமைச் செய்தல் தொடங்குகிறார்கள்
- தமது தனியாள் பலத்தினை மதிக்கிறார்கள்.

ஆசிரியர் ஒருவர் மாணவர்களின் நுண்மதி எத்தகையது மற்றும் தமது நுண்மதி எத்தகையதென விளங்குவர். எந்த மாணவன் ஆளிடை நுண்மதியில் வலுவான ஆற்றலுடையவனென அறியும்போது, உதாரணமாக ஏனையவர்களில் அந்த வலுவை வளர்ப்பதற்குரிய வாய்ப்புகளை உருவாக்க உதவலாம். ஆயினும், பல்நிலை நுண்மதிக் கொள்கையானது, ஆசிரியர்கள் தமது மாணவர்களுக்கான புதிய IQ போன்ற அடையாளம் (Labels) வழங்கும் நோக்கத்தைக் கொண்டதல்ல.

விளங்கிக்கொள்ளல் பற்றிய மாணவர் அணுகுமுறை வித்தியாசமான கோணத்தில் அமைகிறது. மரம் என்றால் என்ன? என்ற பிரச்சினை விஞ்ஞான ரீதியான, கவிதைசார்ந்த கலைசார்ந்த, இசைசார்ந்த, மற்றும் புவியியல் சார்ந்த பிரவேசங்களைக் கொண்டுள்ளன.

விசேட குறிப்புகள், செயலடைக்கோவைகள், அல்லது செய்துகாட்டல் என்பவற்றின் மூலம் கிரகித்தலை வெளிப்படுத்தும் மாணவர்கள் அடைவுபற்றிய யதார்த்தநிலை விளக்குதலைப்

பெறுகின்றனர். ஒரு நியாயவாதி ஆராய்ச்சி மற்றும் வாதத்திறனூடாக ஒரு வழக்கினை வெல்லுதல் சோதனையில் சித்தியடைவதிலும் பார்க்க மேலானது.

மாணவர்கள் சமநிலையுடைய ஒருவராக மாறும்போது அவர்கள் தமது கலாசாரத்தின் உறுப்பினராகத் தொழிற்படமுடியும். நுண்மதியைக் கற்பிக்கும் வகுப்பறைச் செயற்பாடுகள், வாழ்க்கையின் அத்தியாசியமான வினாக்கள் பற்றி ஆழமாக விளங்கிக்கொள்வதை வளர்க்கிறது. இத்தகைய வினாக்கள் நாம் எங்கிருந்து வருகிறோம்? உலகம் எதனால் உருவாக்கப்பட்டது? மனிதர்கள் அடைந்து கொண்டவை என்ன? நாம் எதனை அடைய முடியும்? சிறந்த வாழ்க்கைக்கு எவ்வாறு வழிகோலமுடியும்? என்றவாறு அமையலாம்.

நுண்மதியானது ஒவ்வொரு தனியாளும் பாரிய அல்லது குறைந்த அளவில் பெற்றுக்கொள்ளும் தனிப்பொதுக் கொள்ளளவு என்னும் பரந்த கருத்துக்குக் காட்ணர் சவால்விடுகின்றார். வளமான சான்றுகளுடன் பல நுண்மதிகள் இடம்பெறுதல் ஒவ்வொரு ஆளிலும் தனித்துவமான அறிகைசார் தோற்றப்பாடும் விளையுமென காட்ணர் உறுதிப்படுத்துகிறார்.

5. வகுப்பறையில் பிரயோகிக்கும் போது பல்நிலை நுண்மதி

காண்டரின் பலநிலை நுண்மதியானது வகுப்பறைப் போதனை தொடர்பாக ஆசிரியர்களில் பல தார்ப்பரியங்களை கொண்டுள்ளன. இக்கொள்கையானது ஒரு சமுதாயத்தில் சிறந்த முறையில் செயற்படுவதற்குத் தேவையானவை என ஏழு நுண்மதிகள் குறிப்பிடபடுகின்றன. ஆகவே ஆசிரியர்கள் சகல நுண்திகளும் சமமான முக்கியமுடையவை எனச் சிந்திக்க வேண்டும். இது மரபுரீதியான கல்விமுறைமையோடு பெரிதும்வேறுபடுவதுடன் சொல்சார் மற்றும் கணிதரீதியான நுண்மதிகளின் அபிவிருத்தியிலும் பயன்பாட்டிலும் வலுவான அழுத்தங்களை கொடுக்கிறது. எனவே பல்நிலை நுண்மதிக் கொள்கையானது கல்வியாளர்கள் பரந்த ஆற்றல்களையும் திறன்களையும் அங்கீகரித்து கற்பிக்க வேண்டுமென உணர்த்துகிறது.

இன்னொரு தார்ப்பரியம் என்னவெனில், ஆசிரியர்கள் நுண்திகளில் அநேகமானவற்றை அல்லது எல்லாவற்றையும் ஈடுபடுத்தக் கூடியவாறு சாதனங்ளை அமைத்துக்கொள்ள வேண்டும். உதாரணமாக, புரட்சிகரமான போர்கள் பற்றிக் கற்பிக்கும்போது, ஓர் ஆசிரியர் மாணவர்களுக்கு போர்ப் படங்களைக் காட்டமுடியும். புரட்சிகரமான போர்ப் பாடல்களை இசைத்துக் காட்டலாம். சுதந்திரப் பிரகடனப் பாடல்களை நடித்துக் காட்ட ஒழுங்கு செய்யலாம். மற்றும் அக்காலத்து வாழ்க்கை பறறிய நாவலொன்றை மாணவர்கள் வாசிக்கச் செய்யலாம். இந்தவகையான அறிக்கைகள் மாணவர்களின் கற்றலுக்குத் தூண்டுதலளிப்பதாக மட்டுமன்றி, ஆசிரியரும் பல வழிமுறைகளில் அதே சாதனங்கள் பற்றி மீளவலியுறுத்துவதற்கும் இடமளிக்கிறது. நுண்மதிகளின் பரந்த தன்மைகளைத் தூண்டுதல்மூலம் கற்பித்தலானது பாடவிடயத்தில் ஆழமான விளக்கம்பெற வசதியளிக்கிறது.

ஒவ்வொருவரும் ஏழு நுண்மதியுடன் கூடியவர்களாகப் பிறக்கின்றனர். இருந்தபோதிலும் எல்லா மாணவர்களும் வெவ்வேறாக விருத்தி செய்யப்பட்ட நுண்மதித் தொகுதிகளுடன் வகுப்பறைகளுக்கு வருகின்றனர். இதன்பொருள் என்னவெனில் ஒவ்வொரு பிள்ளையும் தமக்கென பிரத்தியேகமான அறிவாற்றல் வலுவுடன் கூடியவர்களாகவும் நலிவுத் தன்மையுடையவர்களாகவும் உள்ளனர் என்பதாகும். தகவல்களைக் குறிப்பிட்ட விதத்தில் முன்வைக்கும்போது, அவற்றை மாணவர்கள் எவ்வாறு இலகுவாக (அல்லது கடினமாக) கற்கலாமென இத்தொகுதிகள் திர்மானிக்கின்றன. இதனையே கற்றல் பாங்குகள் என அழைக்கிறோம். கற்றல் பாங்குகள் பலவற்றை ஒரு வகுப்பறையில் காணமுடியும். வகுப்பறையில் காணப்படும் கற்றல் பாங்குகள் அனைத்தையும் ஒவ்வொரு பாடத்திலும் இடம்பெறச் செய்வது கடினமானதும் நடைமுறைச் சாத்தியமற்றதுமாகும். இருந்தபோதிலும் ஓர் ஆசிரியர், மாணவரிடத்தில் மிகக்கூடுதலாக விருத்தியடைந்த நுண்மதிகளை பயன்படுத்தி அவர்கள் குறைவாகக் கற்கும் பாடங்களை விளங்கிக்கொள்ள உதவலாம். உதாரணமாக, புரட்சிப் போர் ஒன்றினை அதில் என்ன நடந்தது என்பதைக் கொண்ட பாடலை உருவாக்குவதன் மூலம் கற்பதற்கு விசேடமான சங்கீத நுண்மதியைப் பரிந்துரைக்கலாம்.

6. கூடுதலாக யதார்த்த நிலைக் கணிப்பீட்டை நோக்கி

சகல கல்வி முறைமையும் கணிதம் சார்ந்த மற்றும் மொழியியல் சார்ந்த நுண்மதிகளை விருத்திசெய்வதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றன. காட்னரின் பல்நிலை நுண்மதிக் கொள்கையை ஆதரிப்போர் இத்தகைய வலியுறுத்தல் நியாயமற்றது என்பர். பிள்ளைகளின் சங்கீதஞ்சார் நுண்மதி கூடுதலாக விருத்தியடைந்துள்ளது. உதாரணமாக மீத்திறன் நிகழ்ச்சித்திட்டங்களில் கவனிக்கப்படாமல் இருக்கலாம் அல்லது ஒரு விசேட கல்வி வகுப்பில் இடம்பெறலாம். ஏனெனில், அவற்றுக்கு கணித அல்லது மொழிக்குரிய மதிப்பெண்கள் தேவைப்படுவதில்லை. ஆசிரியர்கள் தமது மாணவரின் கற்றலைக் கணிப்பிடுவதற்கு, மாணவரின் பலம் மற்றும் பலவீனங்களைப் பற்றிய சரியான பார்வைகளை வழங்கும் வழிமுறைகளைத் தேடுதல் வேண்டும். பிள்ளைகள் ஒரே வழிமுறையில் கற்பதில்லை என்பதால் கணிப்பீட்டினை ஒரே பாணியில் நடத்தமுடியாது. ஆகவே, ஆசிரியர் ஒவ்வொரு மாணவருக்கும் "நுண்மதித் தோற்றப்பாட்டினை" உருவாக்குதல் முக்கியமானது. மாணவர் எவ்வாறு கற்கின்றனர் என அறிதல், பிள்ளையின் முன்னேற்றத்தைச் சரியாகக் கணிப்பிட உதவும் தனியாள் மையமான மதிப்பீட்டு நடைமுறைகள் ஓர் ஆசிரியர் எவ்வாறு கற்பிக்க வேண்டும் மற்றும் எவ்வாறு தகவலை முன்வைக்க வேண்டும் என்ற முக்கியமான தீர்மானங்களை மேற்கொள்ள இடமளிக்கிறது. மரபுரீதியான சோதனைகளான பலவுள் தெரிவு, குறுவிடைகள், கட்டுரைகள் என்பனவற்றில் முன்னர் தீர்மானித்த முறையில் மாணவர் தமது அறிவை வெளிப்படுத்த வேண்டியுள்ளது. காட்னர் கொள்கை ஆதரவாளர்கள் கணிப்பீடுக்கான சிறந்த அணுகுமுறையாக மாணவர்கள் விடயங்களைப் பல்வேறு நுண்மதிகளைப் பயன்படுத்தித் தமது வழிமுறையில் விளக்குவதற்கு இடமளிக்க வேண்டும் என்கின்றனர். கணிப்பீட்டு முறைகள்,

மாணவர் செயலடைவுக் கோவை, சுதந்திரமான செயற்திட்டம், மாணவர் நாட்குறிப்பேடு, மற்றும் ஆக்கத்திறன் பணிகளை ஒப்படைகள் என்பவற்றை உள்ளடக்குதல் வேண்டும்.

பாடசாலைகள் எப்பொழுதும் மாணவரிடத்தில் தன்னம்பிக்கையையும் நிறைவேற்றும் உணர்வையும் விருத்திசெய்ய உதவுதல் வேண்டும். காட்ணரின் பல்நிலை நுண்மதிக் கொள்கையானது மாணவரின் வெவ்வேறு ஆற்றல்களையும் திறமைகளையும் அங்கீகரிப்பதற்கான கொள்கைசார் அடிப்படைகளை வழங்குகிறது. இக்கொள்கையானது மாணவர்கள் சொல்சார்ந்து அல்லது கணிதரீதியாக மீத்திறனற்றவர்களாக இருக்கும்பொழுது ஏனைய துறைகளான சங்கீதம், இடஞ்சார் தொடர்புகள் அல்லது ஆளிடை அறிவு போன்ற ஏனைய துறைகளில் சிறப்பறிவுடையவராக இருக்கலாம். இந்த முறையில் கற்றலை அணுகுதலும் கணிப்பிடுதலும் பலதரப்பட்ட மாணவர்களும் வகுப்பறைக் கற்றலில் வெற்றிகரமாகப் பங்குபற்றுவதற்கு இடமளிக்கிறது.

பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடு 5.2:

உங்கள் பாடசாலையில் வகுப்புகளில் கவனஞ்செலுத்தாதவர்களெனக் காணப்பட்ட 3 மாணவர்களைத் தெரிவுசெய்யுங்கள். காட்ணருடைய பல்நிலை நுண்மதியின்கீழ் இம்மூன்று மாணவர்களுடைய பலம் மற்றும் பண்புக் கூறுகளைத் துணிவதற்கு அவதானித்து பிரசுரிக்கப்படாத பதிவுகளைப் பயன்படுத்தி எளிமையான விடய ஆய்வொன்றினை மேற்கொள்ளுங்கள்.

கணிப்பீடு எதிர் மதிப்பீடு

பாடசாலைகளிலும் மற்றும் ஏனைய கற்கும் நிறுவனங்களிலும் உள்ள எமது பொதுவான அனுபவங்கள் எடுத்துக்காட்டும் விடயம் என்னவெனில் கணிப்பீடு, அளவீடு மற்றும் மதிப்பீடு ஆகியசொற்களை ஆசிரியர்களும் கல்வியாளர்களும் மாற்றிப் பயன்படுத்துகின்றனர் என்பதாகும். உண்மையிலே இம்மூன்று சொற்களும் ஒன்றுக்கொன்று மாற்றாகப் பயன்படுத்தப்படுகின்றன என மற்றவர்களும் சிந்திக்கக் கூடும். எங்களில் அநேகர் இம்மூன்று சொற்களையும் வேறுபடுத்துவதில் சிரமமடைவதோடு அவற்றின் இலக்குகள் மற்றும் வகிபாகங்கள் தொடர்பிலும் தவறான புரிந்துணர்வை உருவாக்குகிறார்கள். ஆயினும், அவற்றுள் வேறுபாடுகள் அல்லவென்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

Oosterhof (1994) என்பாருடைய அபிப்பிராயத்தின்படி, இம்மூன்று சொற்களுக்கு மத்தியில் அளவீட்டு மற்றும் மதிப்பீட்டினை இலகுவில் வேறுபடுத்தலாம். கல்வி மற்றும் கற்றல் நிறுவனங்களில் அளவீடு என்பது தனியாள் அல்லது தனியாட்கள் கொண்ட குழு பற்றிய தொகைசார் மற்றும் பண்புசார் குணவியல்புகளை உருவாக்குவதில் கவனஞ்செலுத்துகிறது எனகக் கருதலாம். வழக்கமாக, மாணவர்கள், கற்பவர்கள் அல்லது பயிற்சி பெறுவோர் இதனுள் அடங்குவர். குணவியல்புகளின் பெறுமதி என்னவென்பதை உருவாக்குவது அளவீட்டின் கவனமல்ல. இது மதிப்பீடு சார்ந்ததாகும். ஆயினும் மதிப்பீடானது திரட்டப்பட்ட

மற்றும் உருவாக்கப்பட்ட பண்புகளில் கவனிக்கப்பட்டன. விருப்பத்தினையும் அவதானிக்கப்பட்டவற்றின் முக்கியத்துவத்தை உறுதி செய்வதாகவும் உள்ளது. மதிப்பிட்டிலோ, ஏனைய தகவல்களோடு சகல அளவீடுகளையும் இணைத்து தனியாள் அல்லது குழுவின் பண்புகளாக நாம் அவதானித்தவற்றின் பெறுமானங்களை உருவாக்குகிறோம். இருந்தபோதிலும் நாம் மதிப்பீட்டினை பெறுமானஞ் சேர்க்க்பபட்ட பின் அளவீட்டின் விளைவு என வரையறை செய்கிறோம்.

மதிப்பீடானது அளவீட்டினை அடைப்படையாகக் கொண்டது. தனியொருவர் என்ன செய்கிறார், சிந்திக்கிறார் மற்றும் உணர்கிறார் என்பது பற்றியதாகும். மதிப்பீட்டுக்கும் அளவீட்டுக்கும் இடையிலுள்ள இத்தகைய தொடர்பு அவற்றைத் தனித்தனியாகக் கலந்துரையாடுவதில் கடினமான நிலையை உருவாக்குகிறது. நாம் எதனை அளவிடவேண்டும் என்பது நாம் எதனை அவதானிக்கிறோம் என நாம் எதிர்பார்க்கும் பெறுமானத்தில் தங்கியிருக்கிறது. எனவே நாம் அளவீட்டினை சில பௌதிகப் பொருட்களால் பெறப்பட்ட அல்லது தீர்மானிக்கப்பட்ட பண்புக்கூறுகள், பரிமாணங்களின் செயல் முறையாகும். ஒரு குறிப்பிட்ட மாணவன் பெறுகின்ற குணவியல்புகளின் அளவின் எண்சார் விபரமாகவும் இது அமைகின்ற வேளையில், மதிப்பீடு என்பது ஒரு செயற்பாடு, வினையாற்றல் அல்லது அத்தகைய செயற்திட்டத்தின் வெளியீடு, சோதனை முடிவுகள் முதலியவற்றின் பெறமதியைத் தீர்மானிக்கும் செயல்முறையாகும்.

மறுபுறத்திலே, அளவீட்டுக்கும் கணிப்பீட்டுக்கும் இசையிலுள்ள வேறுபாடு குறைவானதும் சுருக்கமானதுமாகும், கணிப்பீடு என்ற சொல் அளவீட்டுக்கான மாற்றுச் சொல்லென நாம் கருதுகின்றோம். சில அறிந்த பொருள் அல்லது மாணவர் கற்றல் விளைவுகள் போன்ற இலக்குகள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் செயல்முறையாக கணிப்பீட்டினை வரையறை செய்கிறோம். முரடிளைஒலஅய யனெ டீழசஉைா (2007)ஆகியோர் விரிவானதொரு கணிப்பீட்டுச் செயல்முறையானது சோதனை முடிவுகளையும் ஏனைய அளவீட்டு ஒழுங்குமுறைகள் வாயிலாகப் பெறப்பட்ட முடிவுகளையும் உள்ளடக்குமென வாதிடுகின்றனர். (உதாரணம் வினையாற்றல் மற்றும் செயலடைவுக் கோவைக் கணிப்பீடு. அவதானம், கணிப்பீடடுப் பட்டியல் தரமிடு அளவுச் சட்டம் என்பன.

எங்களில் சிலர் அளவீட்டிலும் பார்க்கக் கணிப்பீட்டினைப் பயன்படுத்த விரும்புகின்றோம். ஏனெனில் சில கல்விசார் இலக்கியங்களிலே அவை சிறந்த மற்றும் புலமைசார் முறையில் இடம் பெற்றுள்ளன. நடுத்தவணை அளவீட்டினை ஆயத்தம் செய்தல் என்பதற்கு பதிலாக தயவுசெய்து நடுத்தவணைக்கான கணிப்பீட்டினைத் தயாரிக்குக எனக் கூற விரும்புகிறோம். இவ்விரு வாக்கியங்களும் மாணவரின் அறிவு, திறன்கள் ஆகியவற்றை குறிப்பிட்ட போதனைப் பாடவேளையின் போது தொகை அடிப்படையில் கூறும் செயல் முறையாக உள்ளது. அதுபோலவே அளவீடானது அதிகளவில் தொகைரீயாக கவனங்குவிப்பதாகவும், கணிப்பீடு பண்புரீதியான இயல்புகளில் கவனங்குவிப்பதாகவும் சிலவேளைகளில் நாம் கருதுகிறோம். கணிப்பீடானது மிகவும் உற்சாகம் மிகுந்ததாகவும் விருப்புக்குரியதாகவும்

அமையும் வேளையில் அளவீடானது மிகவும் தொழில்நுட்ப ரீதியானதாகவும் குறைந்த விருப்புக்குரியதாகவும் உள்ளது.

அகராதிகளும் சொல்லகராதிகளும் இம்மூன்று சொற்களை ஒரேவிதமாகவே வரையறை செய்கின்றன. உண்மையிலே நீங்கள் Microsoft word சொல்லகராதியைப் பயன்படுத்தினால் ஒரு சொல் ஏனைய சொற்களுக்கும் மாற்றுச் சொல்லாகத் தரப்படுகிறது.

இந்நிலைமைகளைக் கவனத்திற் கொண்டு இந்த மொடியூலானது பல ஆசிரியர்களால் வழங்கப்பட்ட தொழிற்பாட்டுரீதியான வரைவிலக்கணங்களைத் தருகின்றது. அவற்றைச் சுருக்கமாகத் தருகின்றோம்.

கணிப்பீடு என்பது ஒரு பொதுவான சொல்லாகும். இது மாணவரின் கற்றல் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் பல ஒழுங்குமுறைகளைளயும் கற்றல் செயல்முறை சார்ந்த பெறுமானத் தீர்ப்பு பற்றிய தகவலகளையும் உள்ளடக்குகிறது. கணிப்பீட்டு ஒழுங்குமுறைக்கான உதாரணமாக, அவதானம் வினையாற்றல் அல்லது செயற்திட்டத்தை தரமிடுதல், பேப்பர் - பென்சில் சோதனையைக் குறிப்பிடலாம் கணிப்பீடானது "தனியாள் ஒருவர் எவ்விதம் வினையாற்றுகிறார்?" என்னும் வினாவுக்கு விடைதருகிறது.

அளவீடு என்பது ஒரு சோதனையின் முடிவுகளுக்கு அல்லது குறிப்பிட்ட விதிகளுக்கு அமைய ஏனைய கணிப்பீட்டுச் செயல்லொழுங்குக்குரிய முடிவுகளுக்குப் புள்ளிகளை வழங்கும் செயல்முறையாகும். மாணவர்கள் பெற்றுக்கொள்கின்ற பண்புகளுக்கு எண்சார் விபரங்களைப் பெற்றுக்கொள்ளும் செயல்முறையாகும். அளவீடானது எவ்வளவு? என்னும் வினாவுக்கு விடைதருகிறது.

மதிப்பீடு என்னும் செயல்முறையானது ஒரு செயற்பாடு வினையாற்றல் அல்லது விளைவுக்குரிய பெறுமதியைத் தீர்மானிக்கிறது. இது செயற்திட்டம், சோதனை முடிவுகள் முதலியவை போன்றவை. மதிப்பீடு "எவ்வளவு பெறுமதியானது என்னும் வினாவுக்கு விடைதருகிறது.

அளவீட்டுக்கும் மதிப்பீட்டுக்குமுள்ள வேறுபாடு மற்றும் தொடர்புபற்றி கவனமெடுக்க வேண்டியதுடன் அவைப்பற்றித் தனித்தனியாகப் பேசுவதும் கடினமானது. தவறான மற்றும்

பொருத்தமற்ற அளவீடானது பிழையானதும் தகுதியற்றதுமான மதமிப்பீட்டில் முடியும். ஓர் அவதானத்தின் மூலம் நாம் எதிர்பார்க்கும் பெறுமானங்கள் நாம் பயன்படுத்திய அளவீடுகளின் வகையினால் தீர்மானிக்கப்படுகிறது.



உரு. 1.1 கணிப்பீடு, அளவீடு மற்றும் மதிப்பீடு ஆகியவற்றுக்கிடையிலான தொடர்பு பற்றிய வரைபடம்

1. மதிப்பீடு மற்றும் கணிப்பீட்டுக்கு இடையிலான ஒப்பீடு

அட்டவணை 5.3

மதிப்பீடு மற்றம் கணிப்பீடு பற்றிய ஒப்பீடு

மதிப்பீடு	கணிப்பீடு
• **அறிகைசார் திறன்கள் பற்றிய அளவீடு:**	▪ அறிகைசார் திறன்கள் ▪ சமூகம்சார் திறன்கள் ▪ மனவெழுச்சிப் பண்புக் கூறுகள் ▪ ஆளுமைப் பண்புக் கூறுகள் ▪ உள - இயக்கத் திறன்கள் பற்றிய அளவீடு
வழங்கப்படும் தரங்கள் யு - உன்னதம் டீ - மிக நன்று ஊ - நன்று னு - திருப்தி நு - சித்தியின்மை	தேர்ச்சி மாணவரின் தேர்ச்சி கணிப்பிடப்படுகிறது.
சராசரியுடன் ஒப்பிடுதல் • சராசரிக்கு மேல்	

மதிப்பீடு	கணிப்பீடு
வரிசைப்படுத்தல் மாணவர் மாதிரியை வரிசைப்படுத்தும் முயற்சி	உதவுதல் மாணவருக்கு அருகமர்ந்து உதவுதலும் தேர்ச்சியை அடைந்துகொள்ள உதவுதலும்
புள்ளி வழங்கல் • புள்ளிகள் மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளன	மாணவரை இனங்காணல் → என்ன முடியும், என்ன முடியாது
அடைவு சோதனைகள்; → மாதிரிக;டாக முழுவதையும் எடுகோளாக்கம் செய்தல்; குறிப்பிட்ட சில காலத்தின் பின்னர் வெளியாட்களால்	வினயாற்றல் சோதனை → யதார்த்த வாழ்க்கை ஊடாக; அண்மிய தொடர்புடையது
எழுத்துச் சோதனை → நம்பகம்; தகுதி	சரியீட்டுப் பட்டியல் வாய்மொழிச் சோதனை செயற்திட்டம் ஒப்படைகள் அவதானங்கள் அட்டவணைகள் ஏனைய கருவிகள்
மதிப்பீடு ஒரு நேர்கோட்டுச் செயல்முறை கற்பித்தல் → கற்றல் → மதிப்பீடு	கணிப்பீடு ஒரு வட்டச் செயல்முறை – ஒரு மொத்த செயற்முறை கற்பித்தல் → கற்றல் → கணிப்பீடு → கற்பித்தல் → கற்றல் → கணிப்பீடு மொத்தச் செயல்முறை

பாடசாலை மட்டக் கணிப்பீடு

இலங்கைப் பாடசாலைகள், மாணவர்களைத் தொடர்ச்சியாகக் கணிப்பிடுதற்குப் பாடசாலை மட்டக் கணிப்பீட்டினைப் பயன்படுத்துகின்றன. க.பொ.த.(சாதாரண) மற்றும் (உயர்தர) நிலைகளின் இறுதிப் பரீட்சை முடிவுகளில் பாடசாலையில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடும் வினையாற்றல் மட்டமும் குறிப்பிடப்பட்டுள்ளன.

1. கணிப்பீட்டுக் கோட்பாடுகள்

கணிப்பீட்டுக்கான அணுகுமுறைகளும் கணிப்பீட்டின் உபாயங்களும்:

- SBAயின் தேவைகளால் பாடசாலைக் கலைத்திட்டக் குறிக்கோள்களைப் போசிப்பதற்கும் அவற்றுக்கு ஆதரவு வழங்கவும் வழிகாட்டப்பட்டுள்ளது.
- பிரதானமாக அமைப்பு மற்றும் தொடர்கணிப்பீடுகள் ஆய்ந்தறிதல் நோக்கத்தினையும் பரிகாரக் கற்பித்தலையும் வசதிப்படுத்துகின்றன.
- நியதிசார் கணிப்பீடுகள் நியதிகளுடன்கூடிய வகையில் பாடசாலைக் கலைத்திட்டக் குறிக்கோள்களுடன் இணைக்கப்பட்டிருத்தல்.
- கணிப்பீட்டு நடைமுறைகளில் நியதிகள் அல்லது விபரிப்பிகள் பயன்படுத்தப்படுகின்றன.
- சமமான பாடசாலைச் சூழமைவில் பரவலாகப் பிரயோகிக்கப்படக் கூடியவை.
- முறையியல் சார்ந்து எளிமையானதும் நேர்த்தியானதுமாகும்:
  - வகுப்பறையில் பிரயோக நிலையில் நம்பகத்தை உறுதிப்படுத்தல்.
  - ஆசிரியரின் இலகுவான மற்றும் சுமையற்ற பிரயோகம்.
  - ஆசிரியர்களால் ஒழுங்குவிதிகளை உள்வாக்குவதற்கு வசதிப்படுத்தல்.
  - மாணவர்களாலும் அவரது பெற்றோராலும் இலகுவில் விளங்குவதற்குரியது.
  - மேற்பார்வை செய்வோரால் (ஏனெனில் சா.தரம், உ.தரம் சான்றிதழ் வழங்கல்) நம்பகத்தையும் ஒப்பிடக்கூடிய தன்மையையும் உறுதிப்படுத்தும் நோக்கில் பாரிய அளவிலான கண்காணிப்பினை வசதிப்படுத்தலாம்.

2. SBA யின் வழிமுறைகள்

ளுடீயுயானது மாணவரின் கற்றல் பற்றிய விளைவுகளைக் கணிப்பிடுதற்கான பல வழிமுறைகளை வழங்குகிறது. மரபுரீதியான அமர்ந்து எழுதும் சோதனைகள் சில விளைவுகளுடன் கணிப்பீட்டினை கட்டுப்படுத்தி விடுகின்றன. அவை மாணவர்கள் அமைதியாகத் தனிப்பட்ட ஒருவராக எழுத்துமூலம் மட்டும், வினாத்தாளைத் தவிர வேறு வெளிப்புறத் தகவல் மூலகங்கள் எவையுமின்றித் துலங்குவதற்குக் கட்டாயப்படுத்தப்படுகின்றனர்.

தெரிவுசெய்யப்பட்ட கணிப்பீட்டு வழிமுறைகள்:

- நோக்கம் திறன்பற்றிய சூழமைவு மனப்பாங்கு அல்லது கற்கவுள்ள நடத்தைகள் ஆகியவற்றுக்குப் பொருத்தமானதாகவும் பொருத்தமற்றதாகவும் இருத்தல்
- அத்தகைய அனுமானங்கள் ஒவ்வொரு மாணவரும் கற்ற அறிவு, திறன் மனப்பாங்கு மற்றும் நடத்தைகள் தகுதியானதாக தவறான விளக்கங்களுக்கு திறந்ததன்மை இல்லாதவையாக இருத்தல் வேண்டும்.
- போதனை இலக்குகள் மற்றும் குறிக்கோள்களுடன் தெளிவான தொடர்புடையதும் போதனை அணுகுமுறைகளுக்கு இணங்கியவையாகவும் இருத்தல் வேண்டும்.
- மாணவரின் பின்னணி மற்றும் முன்னைய அறிவுக்குப் பொருத்தமாக இருத்தல் வேண்டும்.

தேசிய கல்வி ஆணைக்குழு (NEC) எடுத்துரைத்த அடிப்படைத் தேர்ச்சிகள் ஒன்றிணைக்கப்படுதல் வேண்டும். அவற்றினை பாடசாலை மட்டக் கணிப்பீட்டில் உள்ள மாணவர்களுக்கு வழங்குதல் வேண்டும். ளுடீயு யை நடைமுறைப்படுத்துவதில் தேசிய தேர்ச்சிகள் முக்கிய வகிபாகத்தினை ஏற்கின்றன.

அட்டவணை 5.4

கணிப்பீட்டு வழிமுறைகளின் வகைகள், கற்பித்தல் மீதான குறிப்புகள் மற்றும் அடிப்படைத் தேர்ச்சிக்கான இணைப்பு.

கணிப்பீட்டு வழிமுறைகள்	கற்பித்தல் கற்றல் அம்சங்கள் குறிப்பு	அடிப்படைத் தேர்ச்சியுடன் இணைப்பு
1.தனியாள் ஒப்படைகள்	• பாட விடயமொன்றில் கிரகித்தலை ஆழமாக்குதல் • அறிவைத் தெரிதல் பிரயோகிததல் மற்றும் அங்கீகரித்தல் • பிரச்சினை தீர்த்தல் • காரணங் காணல் • யதார்த்த வாழ்க்கையுடன் இணைப்பு • சுய கற்றல் திறன்களை விருத்தி செய்தல்	மாணவருக்குக் கொடுக்க வேண்டிய தனியாள் ஒப்படையை எழுதுதல் இந்த ஒப்படையுடன் இணைந்துள்ள அடிப்படைத் தேர்ச்சிகள் எவை.
2.தனியாள் செயற்திட்டம்	• பாடவிடயத்தில் கிரகித்தலை ஆழமாக்குதல் • பலதுறைசார் அணுகுமுறைகள் • நீதியான தெரிவு அறிவைப் பிரயோகித்தலும் இனங்காணுதலும் • பிரச்சினை தீர்த்தல் • நியாயங்காணல் • யதார்த்த வாழ்க்கையுடன் இணைப்பு	செயற்பாடு: ஒரு மாணவருக்குக் கொடுக்கப்படவுள்ள தனியாள் செய்திட்டம் ஒன்றை எழுதுக. இந்த ஒப்படையுடன் இணைந்துள்ள அடிப்படைத் தேர்ச்சிகள் எவை?

கணிப்பீட்டு வழிமுறைகள்	கற்பித்தல் கற்றல் அம்சங்கள் குறிப்பு	அடிப்படைத் தேர்ச்சியுடன் இணைப்பு
	• சுய கற்றல் திறன்களை விருத்தி செய்தல் • முன்னேற்றகரமான திட்டங்கள் செயற்பாடுகளை ஒழுங்கு செய்தல் • சுய கணிப்பீடும் திருத்தமும் • அறிக்கை எழுதுதல்	
3.அளவீடு	• செயற்பாடுகளை ஏற்கனவே திட்டமிடலும் ஒழுங்கு செய்தலும் • பலதுறைசார் அணுகுமுறை • வினாக்கொத்து, தரவு அட்டவணைகளை ஆயத்தம் செய்தல் • தரவு சேகரித்தலும் தரவுளை அடிப்படையாகக் கொண்ட முடிவுகளும் • யதார்த்த வாழ்க்கையுடன் இணைப்பு • கூட்டாகக் கற்றல் • சுய கற்றல் திறன்களை விருத்தி செய்தல் • சுய கணிப்பீடு	செயற்பாடு: ஒரு மாணவருக்குக் கொடுக்கப்படவுள்ள அளவீட்டுக்கான விடயமொன்றை எழுதுக. இந்த ஒப்படையுடன் இணைந்துள்ள அடிப்படைத் தேர்ச்சிகள் எவை?
4.அவதானஞ்சார் செயற்பாடுகள்	• அவதானஞ்சார் செயற்பாடுகளை முன்னரே திட்டமிடுதலும் ஒழுங்கு செய்தலும் • அவதானங்களின் அடிப்படையில் முடிவுகள் • யதார்த்த வாழ்க்கையுடன் இணைப்பு • சுய கற்றல் திறன்களை விருத்தி செய்தல் • சுய கணிப்பீடும் இணைப்பும் • அறிக்கை எழுதுதல் • வாழ்மொழி அறிக்கைகள்	செயற்பாடு: ஒரு மாணவருக்குக் கொடுக்கப்படவுள்ள அவதானஞ்சார் செயற்பாடு ஒன்றை எழுதுக. இந்த ஒப்படையுடன் இணைந்துள்ள அடிப்படைத் தேர்ச்சிகள் எவை?
5.தேடல்கள்	• முன்னரே திட்டமிடல் • பல்துறைசார் அணுகுமுறை • அவதானங்கள் பற்றிய சேகரிப்பு • யதார்த்த வாழ்க்கையுடன் இணைப்பு • சுய கற்றல் திறன்களை விருத்தி செய்தல் • சுய கணிப்பீடு • அறிக்கை எழுதுதல் • அறிக்கைகள்	செயற்பாடு: ஒரு மாணவருக்குக் கொடுக்கப்படவுள்ள தேடல் பயிற்சியை எழுதுக. இந்த ஒப்படையுடன் இணைந்துள்ள அடிப்படைத் தேர்ச்சிகள் எவை?

கணிப்பீட்டு வழிமுறைகள்	கற்பித்தல் கற்றல் அம்சங்கள் குறிப்பு	அடிப்படைத் தேர்ச்சியுடன் இணைப்பு
6.பொருட்காட்சி, காட்சிப்படுத்தல், அறிக்கைகள்	• அவதானிப்புச் செயற்பாடுகளை முன்னரே திட்டமிடுதலும் ஒழுங்கமைத்தலும் • சாதனங்களைத் தெரிவு செய்தலும் சிக்கனப் பயன்பாடும். • யதார்த்த வாழ்க்கையுடன் இணைப்பு • சுய கற்றல் திறன்களை விருத்தி செய்தல் • சுய கணிப்பீடும் திருத்தமும் • திறன்களை அறிக்கை செய்தலும் காட்சிப்படுத்தலும்	செயற்பாடு: ஒரு மாணவருக்குக் கொடுக்கப்படவுள்ள பொருட்காட்சி, காட்சிப்படுத்தல், அறிக்கை ஒன்று எழுதுக. இந்த ஒப்படையுடன் இணைந்துள்ள அடிப்படைத் தேர்ச்சிகள் எவை?
7. களப் பயணங்கள்	• செயற்பாடுகளை முன்னரே திட்டமிடுதலும் ஒழுங்கமைத்தலும் • பல்துறைசார் அணுகுமுறை • யதார்த்த வாழ்க்கையோடு இணைப்பு • அவதானங்கள் படங்கள் பதிவு செய்தல் • கூட்டாகக் கற்றல் • சுய கற்றல் திறன்களை விருத்தி செய்தல் • ஆசிரியர்கள் கற்பவர்களாக வேலை செய்தல் • அறிக்கை எழுதுதல்	செயற்பாடு: ஒரு மாணவரைக் களப் பயணமொன்றுக்கு எடுத்துச் செய்வதை நினைத்துப் பார்த்தல் இந்த ஒப்படையுடன் இணைந்துள்ள அடிப்படைத் தேர்ச்சிகள் எவை?
8. குறுக்கெழுத்துச் சோதனை	• உள்ளடக்கக் கற்றலை கணிப்பிடுதல் • உள்ளடக்கத்தைக் கிரகித்தல்	செயற்பாடு: குறு எழுத்துச் சோதனையைக் கொடுத்தல் இந்த ஒப்படையுடன் இணைந்துள்ள அடிப்படைத் தேர்ச்சிகள் எவை?
9. அமைப்பாகக்கப்பட்ட கட்டுரைகள்	• உள்ளடக்கக் கற்றலைக் கணிப்பிடுதல் • உள்ளடக்கத்தைக் கிரகித்தல் மற்றும் வரிசைப்படி ஒழுங்கு செய்தலைக் கணிப்பிடுதல் • எழுதப்பட்ட சாதனங்களை முன்வைப்பதில் தெளிவும் கூறுதலும்	செயற்பாடு: அமைப்பாக்கப்பட்ட கட்டுரையுடன் இணைந்துள்ள அடிப்படைத் தேர்ச்சிகள் எவை?
10. திறந்த நூல் சோதனை	• உள்ளடக்கக் கற்றலைக் கணிப்பிடுதல் • உள்ளடக்கத்தைக் கிரகித்தலைக் கணிப்பிடுதல் • நூல்களை விரைவாக	செயற்பாடு: திறந்த நூல் சோதனையுடன் இணைந்துள்ள அடிப்படைத் தேர்ச்சிகள் எவை?

கணிப்பீட்டு வழிமுறைகள்	கற்பித்தல் கற்றல் அம்சங்கள் குறிப்பு	அடிப்படைத் தேர்ச்சியுடன் இணைப்பு
	வாசித்தல் • நியாயபூர்வமான தெரிவு • அறிவைப் பிரயோகித்தலும் அங்கீகரித்தலும் • பிரச்சினை தீர்த்தல், நியாயங் காணல் • சுய – கற்றல் திறன்களை விருத்தி செய்தல்	
11.ஆக்கச் செயற்பாடுகள்	• பாவனை செய்தலை விருத்தி செய்தலும் பயன்படுத்துதலும் • பாத்திரமேற்று நடித்தல் • நடித்தல், பாடுதல் • இசைக்கருவிகளைப் பயன்படுத்துதல் • நடனம், சுவரொட்டி மற்றும் சித்திரக் கலை • முன்மாதிரி • சாதனங்களைத் தெரிவு செய்தலும் சிக்கனப் பயன்பாடும் • கூட்டாகக் கற்றல் • சுய கற்றல் திறன்களை விருத்தி செய்தல் • சுய கணிப்பீடு திருத்தங்களும் • முன்வைக்கும் மற்றும் காட்சிப்படுத்தும் திறன்கள்	செயற்பாடு மாணவருக்கான செயற்பாட்டினை இனங்காணுதல். இந்த ஒப்படையுடன் இணைந்துள்ள அடிப்படைத் தேர்ச்சிகள் எவை?
12. செவிமடுத்தல்	• கவன நிலைப்பு, போதுமான தன்மை, சரியான தன்மை என்பவற்றைப் பேச்சைச் செவிமடுக்கும்போது சரிபார்த்தல் • பதிவு செய்யப்பட்ட அல்லது நேரடி நிகழ்ச்சித்திட்டம் பற்றிய கலந்துரையாடல் • சுருக்கம் எழுதுதல் • புத்திசாலித்தனமான பதிற்குறியும் கலந்துரையாடலும்	செவிமடுத்தல்: பயிற்சியுடன் இணைந்துள்ள அடிப்படைத் தேர்ச்சிகள் எவை?
13பயிற்சி சோதனை	• பரிசோதனைசார் கற்றல் • சாதனங்கள் கருவிகள் பற்றிய தெரிவு • முன்பாதுகாப்பும் சாதனங்களில் கவனமும் • அவதானிப்புத் திறனை விருத்தி செய்தல் • பொருத்தமான அவதானங்களைப் பதிவுசெய்தல்	செயற்பாடு: பெயர்குறித்த பயிற்சிச் சோதனையை தயாரித்தல் இந்த ஒப்படையுடன் இணைந்துள்ள அடிப்படைத் தேர்ச்சிகள் எவை?

கணிப்பீட்டு வழிமுறைகள்	கற்பித்தல் கற்றல் அம்சங்கள் குறிப்பு	அடிப்படைத் தேர்ச்சியுடன் இணைப்பு
	• சுய கற்றல் திறன்களை விருத்தி செய்தல்	
14. வாய்மொழி அறிக்கைகள்	• உள்ளடக்கக் கற்றலைக் கணிப்பிடுதல் • உள்ளடக்கத்தைக் கிரகித்தலை கணிப்பிடுதல் • அறிக்கைகாக உண்மை கற்கையை ஒழுங்குபடுத்துதல் • பல்லூடகத்தைப் பயன்படுத்துதல்	வாய்வழி அறிக்கையுடன் இணைந்த அடிப்படைத் தேர்ச்சிகள் எவை?
15. குழச் செயற்திட்டம் செயற்பாடுகள்	• பாட விடயம் பற்றிய கிரகித்தலை ஆழமாக்குதல் • பல்துறைசார் அணுகுமுறை • நியாயமான தெரிவு, அறிவைப் பிரயோகித்தலும் அங்கீகரித்தலும் • பிரச்சினை தீர்த்தல், நியாயங்காணல் • யதார்த்த வாழ்க்கையுடன் இணைப்பு • ஆளிடைத் தொடர்புகள் • குழுவொன்றில் வேலை செய்தல் • ஏனையவரின் கருத்துக்கு மதிப்பளித்தல் • செயற்பாடுகளை முன்னரே திட்டமிடுதலும் ஒழுங்கு செய்தலும் • சுய கணிப்பீடும் திருத்தமும் • அறிக்கை எழுதுதல்	குழுச் செயற்திட்டம் செயற்பாடுகள் ஆகியவற்றோடு இணைந்துள்ள அடிப்படைத் தேர்ச்சிகள் எவை?
16. சுவர் பத்திரிகைகள்	பின்வரும் கூடுகளை நிரப்புக. ↓	பின்வரும் கூடுகளை நிரப்புக ↓
17. புதிர் போட்டிகள்		
18. விவாதம்		

பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடு 5.3:

a. அடிப்படைத் தேர்ச்சிகள் மீதான வெவ்வேறு வழிமுறைகளின் கீழ்த் தரப்பட்டுள்ள செயற்பாடுகளுக்கான வழிமுறைகளை நிரப்புக.

b. அட்டவணை 5.4 இலுள்ள வழிமுறைகளின் கீழுள்ள நிரல்களை நிரப்புக. சுவர்ப்பத்திரிகை, புதிர், போட்டிகள் மற்றும் விவாதம்.

3. வகுப்பறையில் ஆசிரியரால் ளுடீயு யை நடைமுறைப்படுத்துதல்

கீழே விபரிக்கப்பட்டுள்ள வழிமுறைகள் சில, ஒரு வகுப்பறையில் செய்யவேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட சில வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்காக ஆசிரியரால் ஆயத்தஞ் செய்யப்பட வேண்டிய வழிமுறைகளுக்கான விதிமுறைகளாகும்.

a. ஒப்படைகள்

ஒப்படை என்பது ஆசிரியரின் நெறிப்படுத்தலுடன் பாடத்துறையைக் கற்றலாகும். இங்கு இனங்காணப்பட்ட பிரச்சினையொன்றுக்கு தீர்வுகளைக் காணுமாறு மாணவர் எதிர்பார்க்கப்படுகிறார்.

எதிர்பார்க்கப்பட்ட கற்றல் விளைவுகள் :

- மாணவர் தீர்வு காண்பதற்கான பிரச்சினை ஒன்றை இனங்காண்பர்
- பிரச்சினைக்கு மாணவர் தீர்வு காண்பர்
- குறித்த பாடவேளையின்போது துலங்கல்கள் முன்வைக்கப்படும்.

	விபரிப்பவர்	புள்ளி வழங்கல்			
		தேர்ச்சியை அடைந்துள்ளார்		தேர்ச்சியை அடையவில்லை	
1	ஒப்படை பற்றிய வரைவிலக்கணம் பரப்பும் நோக்கமும்	4	3	2	1
2	தரவு தகவல் சேகரிக்கும் முறையின் பொருத்தப்பாடு	4	3	2	1
3	தரவு தகவல் சேகரித்தல் மற்றும் பதிவு செய்தல்	4	3	2	1
4	பின்பற்றப்பட்ட உபாயத்தின் நியாயமும் பொருத்தமும்	4	3	2	1
5	முடிவும் முடிவுக்கான காரணங்களும் அறிக்கையும் முன்வைத்தலும்	4	3	2	1
	மொத்தப் புள்ளிகள்	?∴ 20			
	இறுதிப் புள்ளி	பெறப்பட்ட புள்ளி∴2 = 10க்கு			

b. செயற்திட்டம்

ஆசிரியரின் வழிகாட்டலின் கீழ் மாணவர் பிரச்சினை விடயம், நிகழ்ச்சி, செயற்பாடு ஒன்றினை இனங்கண்டு தரவு சேகரித்தல், தரவுப் பகுப்பாய்வுசெய்து முடிவுக்கு வருதலும் குறிப்பிட்ட காலப்பகுதியில் அறிக்கையொன்றினை ஆயத்தஞ்செய்து பிரச்சினைக்கான தீர்வினை முன்வைத்தலும்

எதிர்பார்க்கப்பட்ட கற்றல் விளைவுகள்:

- மாணவர் தீர்வு காண்பதற்கான பிரச்சினையை இனங்காண்பர்
- மாணவர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பர்
- பிரச்சினைக்கான தரவு சேகரிப்பர்
- சேகரிக்கப்பட்ட தகவல்களின் உதவியுடன் அனுமானங்களைச் செய்வர்
- அறிக்கை ஒன்றைத் தயாரிப்பர்.

	விபரிப்பவர்	புள்ளி வழங்கல்			
		தேர்ச்சியை அடைந்துள்ளார்		தேர்ச்சியை அடையவில்லை	
1	பிரச்சினையை இனங்காணுதலும் செயற்திட்டத்துக்கான குறிக்கோள்களைத் தயாரித்தலும்	4	3	2	1
2	திட்டமிடல், நேரச்சட்டகம், தகவல் சேகரித்தல் மற்றும் ஒழுங்குசெய்தல் பற்றிய தீர்மானங்கள்	4	3	2	1
3	தகவல் சேகரித்தலும் அவற்றின் சரியான தன்மையும்	4	3	2	1
4	உரிய காலத்தில் பூர்த்தி செய்தலும் பெறப்பட்ட தகவல் மீதான அனுமானங்களும் அதற்கான காரணங்களும்	4	3	2	1
5	துகவல்மீது பெறப்பட்ட அனுமானங்களும் அறிக்கை எழுதுதலும் அதன் பொருத்தப்பாடும்.	4	3	2	1
	மொத்தப்புள்ளி	?∴ 20			
	இறுதிப் புள்ளி	பெறப்பட்ட புள்ளி∴2 = 10க்கு			

C. பயிற்சிகள்

கற்பிப்பிக்கப்பட்ட கொள்கையின் சரியான தன்மையை உருவாக்குவதற்குக் கொள்கைசார் அம்சங்கள் பயிற்சிகளாகச் செய்துபார்க்கப்படுதல் வேண்டும். அவ்வாறு செய்வதனால், விரும்பிய திறன்கள் பொருத்தமான தேர்ச்சிகள் என்பவற்றைக் கணிப்பீடு செய்யவும் தீர்மானங்களுக்கு வரவும் ஆசிரியர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது. மாணவர் பற்றிய சுயகணிப்பீடுகளும் சாத்தியமாகிறது.

எதிர்பார்க்கப்பட்ட கற்றல் விளைவுகள்

- மாணவர் தேர்ச்சி திட்டமிடல் வெவ்வேறு உள இயக்கத் திறன்களும், மனவெழுச்சித் திறன்களும்.
- மாணவரின் அவதானிப்பு ஆற்றல்
- பொருத்தமான தரவுகளைச் சரியாகச் சேகரித்தல்
- சேகரிக்கப்பட்ட தகவல்களின் உதவியுடன் அனுமானங்களுக்கு வருதல்
- அறிக்கை தயாரித்தல்

	விபரிப்பு	புள்ளி வழங்கல்			
		தேர்ச்சி அடையப்பட்டுள்ளது		தேர்சசி அடையவில்லை	
1	பயிற்றியைத் திட்டமிடலும் தேவையான உபகரணங்களை இனங்காணலும்	4	3	2	1
2	திடடமிடல், நேர அட்டவணை உபகரணங்கள் ஒழுங்கு செய்தலும் பயன்படுத்தும் விதமும்	4	3	2	1
3	தரவு சேகரித்தல், அவற்றின் சரியான தன்மை, திருத்தமான தன்மை, தராதரம்	4	3	2	1
4	முடிவுகளை அட்டவணைப்படுத்தல், வரைபடங்கள் மற்றும் பயிற்சியைச் செய்தபின்னர் அனுமானம்	4	3	2	1
5	பெறப்பட்ட தகவல்மீதான அனுமானங்கள், அறிக்கை எழுதுதல், முடிவுகளின் பொருத்தப்பாடு	4	3	2	1
	மொத்தப் புள்ளிகள்	?∴ 20			
	இறுதிப் புள்ளி	பெறப்பட்ட புள்ளி /2 /10 க்கு எவ்வளவு			

பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடு 5.4:

நீங்கள் சிறப்புத் தேர்ச்சி பெற்ற பாடத்தில் உங்கள் மாணவரைக் கணிப்பீடு செய்வதாயின் பின்வரும் வழிமுறைகளைத் தெரிவுசெய்து கொண்டு இவ்வழியின்மூலம் எதிர்பார்க்கப்பட்ட தேர்ச்சிகளை எடுத்துக்காட்டும் கணிப்பீட்டுத் திட்டமொன்றைத் தயாரிக்குக.

1 ஆக்கச் செயற்பாடுகள்

2. களப் பயணங்கள்

3 .காட்சிபபடுத்தப்பட்டவை

எதிர்பார்க்கப்படும் கற்றல் விளைவுகளையும் ஒவ்வொரு வழிமுறைக்குமென பரிந்துரைக்கும் ஐந்து விபரிப்பிகளையும் குறிப்பிடுக.

4. பாடசாலைகளில் SBA யை நடைமுறைப்படுத்துவதில் கல்வித் தலைவர்களின் வகிபாகம்.

பாடசாலை மட்டக் கணிப்பீடு பாடசாலை முறைமையிலே நடைமுறைப்படுத்தப்படும் ஒரு புத்தாக்கச் செயற்பாடாகும். இந்நிகழ்ச்சித்திட்டம் கற்பித்தலுக்கான் தராதரத்தைச் சேர்ப்பதுடன், பல கணிப்பீட்டுச் செயலொழுங்குகளை வழங்குவதுடன் தரமான கற்பித்தல் மற்றும் கற்றல் விளைவுகளை வழங்குவதிலும் மிகவும் பயனள்ளவை. பாடசாலைகளில் SBA நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு கல்வித் தலைவர்களின் உதவி அத்தியவசியமானது.

பின்வருவன பாடசாலையின் கல்வித் தலைவர்களால் முன்மொழியப்பட்ட சில உள்ளீடுகைகளாகும்.

அட்டவணை 5.5.

SBA நடைமுறைப்படுத்துவதில் கல்வித் தலைவரிகளின் வகிபாகங்களும் தொழிற்பாடுகளும்.

பதவிநிலை	வகிபாகங்களும் தொழிற்பாடுகளும்
அதிபர்	• SBA பற்றிய முழு நிகழ்ச்சித் திட்டத்தை திட்டமிடல், ஏனைய பொறுப்புள்ள பதவியணியினருக்கு அமுலாக்கத்தைப் பகிர்ந்தளித்தல் • SBA பற்றிய வழிகாட்டலை வழங்குதல் • கற்பித்தலை மேற்பார்வை செய்தல் • SBA நிகழ்ச்சித்திட்டத்தை எழுமாற்றாகக் கண்காணித்தல்
பிரதி அதிபர் (கல்வி சார்)	• பாடசாலையின் SBA அமுலாக்கல் திட்டத்தை தயாரிக்க அதிபருக்கு உதவுதலும் மேற்பார்வை மற்றும் கண்காணிப்புக்கு வேண்டிய பதவியணியினரை இனங்காணுதலும் • பாடசாலையில் SBA யைச் சிறப்பாக அமுலாக்குவதற்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை விளக்குதலும் ஒழுங்கு செய்தலும் • SBA நிகழ்ச்சித் திட்டத்துக்கான தராதர உள்ளிடுகையை வழங்குதல் • கணிப்பீடுகளைப் பதிவுசெய்யத் தேவையான பத்திரங்களை வழங்குதல்

பதவிநிலை	வகிபாகங்களும் தொழிற்பாடுகளும்
	• SBA நிகழ்ச்சித்திட்டத்தை மேற்பார்வை செய்தலும் கண்காணித்தலும் • பாடசாலையின் ளுடீயு தரவுளைப் பேணுதல் • தேவையான தலையீடுகள் பற்றி மேற்பார்வையாளருடன் கலந்துரையாடுதல் இனங்காணப்பட்ட தேவைகளின் அடிப்படையில் தொழில்சார் அபிவிருத்தியைத் தயாரித்தல் • இனங்காணப்பட்ட தேவைகள் மீது பாடசாலை மட்ட பதவியணியினர் அபிவிருத்தியை ஒழுங்கு செய்தல்.
பிரதி அதிபர் நிருவாகமும் நிதியும்	• SBA க்கான பாடசாலைக் கமிட்டியினருக்கு தேவைப்படும் தர உள்ளிகை நிதியை வழங்குதல். • பாடசாலையின் SBA நிகழ்ச்சித்திட்டத்தை அமுலாக்க உதவுதல் • வகுப்பறையில் கற்பித்தலையும் SBA அமுலாக்கத்தையும் மேற்பார்வை செய்தல்
பிரிவுத் தலைவர்கள்	• குறித்த பிரிவில் SBA அமுலாக்கத்துக்கான உள்ளிகைகளை முன்மொழிதல் • பாடசாலையின் ளுடீயு மேற்பார்வைத் திடடத்தை தயாரிப்பதற்கு அதிபருக்கு உதவுதல் • பிரிவுக்குரிய SBA நிகழ்ச்சித்திட்டத்தைக் கண்காணிக்க உதவுதல் • வகுப்பறையில் கற்பித்தலையும் ளுடீயு யின் பயன்பாட்டினையும் மேற்பார்வை செய்தல்
தர இணைப்பாளர்	• பாட வாரியான ஆசிரியர் குழுக்கூட்டங்களை ஒழுங்கு செய்து தரத்துக்கான ளுடீயு திட்டங்களைத் தயாரித்தல் • தரத்துக்குரிய ளுடீயு பதிவுகளைப் பேணுவதற்கு பிரதி அதிபருக்கு (கல்விசார்) உதவுதல் • வகுப்பறையில் கற்பித்தலை மேற்பார்வை செய்தலும் ளுடீயு யைப் பயன்படுத்துதலும்
பாட இணைப்பாளர்	• ளுடீயு திட்டங்களைத் தயாரிப்பதற்கு பாட ஆசிரியர் குழுக் கூட்டங்களை ஒழுங்கு செய்வதற்கு தர இணைப்பாளருக்கு உதவுதல் • வகுப்பறையில் சிறப்புத் தேர்ச்சிபெற்ற பாடங் கற்பித்தலை மேற்பார்வை செய்தலும் ளுடீயு யைப் பயன்படுத்துதலும்

பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடு 5.5:

உங்கள் பாடசாலையில் கிடைக்கக்கூடிய கல்வித்தலைவர்களைக் கவனத்திற்கொண்டு உங்கள் பாடசாலைக்கான ளுடீயு அமுலாக்கத் திட்டம் ஒன்றைத் தயாரிக்குக.

உசாத்துணைகள் மற்றும் பிற்சேர்க்கை வாசிப்புச் சாதனங்கள்

References and List of Supplementary Reading Materials:

SBA யை அமுலாக்குதல் தொடர்பான கல்விமையச்சு மற்றும் பரீட்சைத் திணைக்களத்தின் கற்றறிக்கைகள்

கைந்நூல் - தரம் 10,11,12,13 பாடசாலை மட்டக் கணிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டம்.

மொடியூல் 6	தரமான கற்றல் விளைஸ

வுகளுக்கான மேற்பார்வையும் பின்னூட்டலும்

குறிக்கோள்கள்:

மேற்பார்வையானது பாடசாலையில் தொடர்ச்சியாக நிகழுஞ் செயல்முறையாகும். இது பாடசாலையில் தரமான கற்பித்தலை வழங்கும். மேற்பார்வையானது கற்பிததலின் பலங்களையும் பலவீனங்களையும் இனங்காண்பதுடன் ஆசிரியரின் வாண்மை விருத்தி என்ற முறையில் பரிகார நடவடிக்கைகளையும் திட்டமிட்ட முறையில் ஆசிரியர்களுக்கு வழங்குகிறது. தரமான கற்பித்தலானது மேற்பார்வையினாலும் ஆசிரியரின் இனங்காணப்பட்ட வாண்மை விருத்தியினாலும் ஏற்படுவதுடன் தரமான கற்றல் விளைவுகளையும் தருகிறது. மேற்பார்வைக்கு இட்டுச்செல்லுதல், இவற்றினை அடைவதற்கு கல்விசார் போதனா தலைமைத்துவத்தை வழங்குதல் என்பன இந்த மொடியூலிலே தரப்பட்டுள்ளன.

கற்றல் விளைவுகள்:

மொடியூலின் இறுதியில் மாணவர்கள்

1. கற்பித்தலை மேற்பார்வை செய்வதற்கான விளக்கக் குறிப்புகளைத் தயாரிப்பர்
2. மேற்பார்வை செய்வதுடன் ஆசிரியருக்கு வழிகாட்டலையும் வழங்குவர்

3. ஆசிரியரின் உயர்தொழில் விருத்திக்கு உதவிகளை வழங்குவர**மொடியூல் பற்றிய நோக்கு**

வாரம்	தலைப்பு உள்ளடக்கம்	செயற்முறை	மாணவருடைய கற்றல் பணிகள்
1	பாடசாலையில் மேற்பார்வைக்கு இட்டுச் செல்லல்	விரிவுரை மற்றும் குழுக்கலந்துரையாடல்	மேற்பார்வை பற்றிய செயற்பாடுகள் மேற்பார்வைக்கான அமைப்பினைத் தயாரித்தல்
2	மேற்பார்வைச் செயல்முறை சுயமதிப்பீடும் சகபாடி மதிப்பீடும்	விரிவுரையும் கலந்துரையாடலும் சாதனங்களை மீள்நோக்குதல் பாடசாலை அவதானம் பாடசாலை அவதானம் பற்றிய கலந்துரையாடல்	சுயமதிப்பீட்டுக்கான குறிப்புகளைத் தயாரித்தல் பாடசாலை மேற்பார்வை நிகழ்ச்சித் திட்டங்களை அமுலாக்குதலைத் திட்டமிடல்

பாடசாலையில் மேற்பார்வைக்கு இட்டுச்செல்லல்

வினைதிறனுள்ள கற்பித்தலுக்கும் மாணவரின் கல்விசார் அடைவுக்குமிடையில் வலுவான இணைப்புள்ளது எனப் பல ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. இருப்பினும் தரமான கற்றல் விளைவுகளுக்கு ஆசிரியர் வினையாற்றல் அவசியமானது. மாணவர்களுக்குச் சிறந்த கற்பித்தலை வழங்குதல்வேண்டும். அதனால் அவர்களுடைய கற்றல் ஆர்வமுள்ளதாகவும் மகிழ்ச்சிகரமாகவும் இருக்கும். இந்த முடிவையிட்டு ஆசிரியரின் வகிபாகம் கற்பித்தலியல் உன்னதத்தையும் சிறந்த மனிதத் தொடர்புகளுடன் கூடிய மனித இயல்புகளையும் கொண்டிருத்தல் வேண்டும். ஆசிரியர்கள் நல்லெண்ணம், சாமர்த்தியம் புரிந்துணர்வு, சமநிலையான தீர்ப்பு, மாணவர் சொல்வதைக் கேட்பதில் பொறுமை அவர்களுடைய பதிற்குறிக்கு முன்னெச்சரிக்கை, தனிப்பட்ட சந்திப்புகளுக்கான நேரம் கிடைத்தல் மற்றும் மாணவருடன் உரையாடல் முதலிய பண்புகளை அவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், தேவைகளைக் கவனிப்பதற்கும் கட்டாயம் பெற்றிருத்தல் வேண்டும்.

பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடு 6.1:

"வினைதிறனுள்ள கற்பித்தலுக்கும் மாணவரின் கல்விசார் அடைவுக்கும் இடையில் வலுவான இணைப்புள்ளதெனப் பல ஆய்வுகள் எடுத்துக் காட்டுகின்றன. இதனை எடுத்துக்காட்டியுள்ள ஆய்வுகள், புத்தகங்களிலிருந்தும் வலைத் தளங்களிலிருந்தும் மேற்கோள்களை எடுத்துக்காட்டி அவற்றை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகளையும் தருக.

ஒரு நிறுவனத்திலே சிறந்த மேற்பார்வை நிகழ்ச்சித் திட்டத்தை மேற்கொள்ளுதல் அவசியமானது. பாடசாலை முகாமைத்துவக் குழு (ளுஆவு) பாடசாலையிலே பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்துகிறது. கற்பித்தல் பற்றிய மேற்பார்வைக்கான திட்டமிட்ட நிகழ்ச்சிதிட்டம், ஒரு ஐந்தாண்டு அபிவிருத்தித் திட்டமாகவும் வருடாந்த அமுலாக்கல் திட்டமாகவும் இருத்தல் வேண்டும். இது கற்பித்தல் அபிவிருத்திக்கான முக்கிய செயற்பாடாக இருப்பதாலும் நிகழ்ச்சித்திட்டத்தின் தரமான கற்றல் விளைவுகளை அடைவதற்கு முக்கியமானதாக இருப்பதாலும் பாடசாலையின் அதிபர் இதனை முன்னெடுக்கவேண்டும்.

1. கற்பித்தல் மேற்பார்வைக்கு இட்டுச்செல்வதில் பதவியணியினரின் பொறுப்புகள்.

அட்டவணை 6.1.

கற்பித்தல் மேற்பார்வைக்கு இட்டுச்செல்லும் பதவியணியினரின் பொறுப்புகள்

பதவிநிலை	கற்பித்தல் மேற்பார்வைக்கு இட்டுச் செல்லும் பொறுப்புகள்
அதிபர்	• மேற்பார்வை நிகழ்ச்சித்திட்டம் முழுவதையும் திட்டமிடுதல் ஏனைய பொறுப்புள்ள பதவியணியினருக்கு மேற்பார்வையை ஒப்படைத்தல் • கற்பித்தலை மேற்பார்வை செய்தல் • மேற்பார்வை நிகழ்ச்சிதிட்டத்தை எழுமாற்றாக மேற்பார்வை செய்தல்
பிரதி அதிபர் (கல்வித் தராதர அபிவிருத்தி)	• பாடசாலையின் மேற்பார்வைத் திட்டத்தைத் தயாரிப்பதற்கு அதிபருக்கு உதவுதலும் மேற்பார்வைக்கான பதவிய ணியினரை இனங்காணுதலும் • மேற்பார்வைக்கான அமைப்பினை வழங்குதல் • தெரிவுசெய்யப்பட்ட மேற்பர்வையாளருக்கு மேற்பார்

	வைக்கான பாடவேளைகளை ஒப்படைத்தல் • தேவையான தலையீடுகளை மேற்பார்வையாளருடன் கலந்துரையாடுதல் இனங்காணப்பட்ட பயிற்சித் தேவைகளை அடிப்படையாகக்கொண்டு உயர்தொழில் அபிவிருத்தியை ஆயத்தஞ்செய்தல் • இனங்காணப்பட்ட தேவைகளின்படி பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட பதவியணியினர் அபிவிருத்தியை ஒழுங்கு செய்தல்
பிரதி அதிபர் (நிருவாகமும் நிதியும்)	• பாடசாலையின் மேற்பார்வை நிகழ்ச்சித்திட்டத்தை தயாரிப்பதற்கு உதவுதல் • கற்பித்தலை மேற்பார்வை செய்தல்
பதவிநிலை பிரதிதலைவர்	• பாடசாலை மேற்பார்வை நிகழ்ச்சித்திட்டத்தை தயாரிபபதற்கான உள்ளீடுகளை முன்மொழிதல் • பிரிவுக்குரிய மேற்பார்வை நிகழ்ச்சித்திட்டத்தைக் கண்காணிப்பதற்கு உதவுதல்
தர இணைப்பாளர்	• பொறுப்பாக இருக்கும் தரத்தின் மேற்பார்வையைக் கண்காணிப்பதற்கு உதவுதல் • கற்பித்தலை மேற்பார்வை செய்தல்
பாட இணைப்பாளர்	• விசேடத்துவமான பாடத்தைக் கற்பித்தலை மேற்பார்வை செய்தல்

மேற்பார்வைச் செயல்முறை, சுயமதிப்பீடு, மற்றும் சகபாடி மதிப்பீடு

மேற்பார்வைச் செயல்முறையானது கல்வியில் பல முகங்களைக் கொண்டுள்ளது. அத்தகைய முகங்கள் சில பின்வருமாறு.

தனிப்பட்ட பண்புகள்:

- நேர்மை, வாண்மை, மற்றும் மனிதப் பண்புள்ளவராக இருத்தல்
- பொறுப்புடமை, தோழமை, மற்றும் கூட்டாக வேலை செய்பவராக இருத்தல்
- மாறாத் தன்மை மற்றும் மனச்சாட்சியுடையவராதல்.

வாண்மை பண்புகள்:

- கற்றல் - கற்பித்தல் செயல்முறை பற்றிய அறிவு
- அமைச்சு, அதிபர்கள், பிரிவுத் தலைவர்கள் மற்றும் மாணவர் ஆகியோரின் எதிர்பார்ப்புக்களைப் பூர்ததிசெய்தல்
- தரமான கற்பித்தல் வடிவில் வாண்மைசார் உள்ளிகைகளை மீள்நோக்குதல்
- கற்பித்தலின் உள்ளடக்கம் மற்றும் அவை முன்வைக்கப்படும் விதம் பற்றிய அறிவு
- மாணவர் ஆசிரியர் இடைவினைத்தாக்கம்
- மதிப்பீட்டுச் செயல்முறை பற்றிய அறிவு

1. மேற்பார்வை ஏன் தேவைப்படுகிறது?

ஆசிரியர் மேற்பார்வை ஆசிரியரின் வாண்மை விருத்தியோடு தொடர்புடையது. அத்தகைய மேற்பார்வையும் மதிப்பீடும் சகல மாணவருக்குமான சிறந்த கற்றல் சூழலையும் உபாயங்களையும் வழங்குவதற்கு இன்றியமையாதது. மேற்பார்வை என்பது கற்பித்தல் செயல்முறை மீதான குவிமையமாகும். அது விளைவின் மீது தாக்கம் செலுத்துகிறது. அவையே கற்றல் வெளியீடாகும். தரமான கற்பித்தல் தரமான கற்றல் விளைவுகளாக இருக்கும்.

a. தரமான கற்பித்தலுக்கான நியதிகள்

தரமான கற்பித்தலானது சூழமைவு, கற்பித்தலியல் அறிவு மற்றும் ஆசிரியர் பிரயோகிக்கவிருக்கும் ஆற்றல்கள் பற்றி முடிவெடுத்தல், கற்பதற்குரிய சிறந்த சாதகமான வாய்ப்பினை மாணவர் பெற்றிருத்தல் என்பவற்றை ஆசிரியர் பகுப்பாய்வு செய்யும்போது இடம்பெறுகிறது. தரமான கற்றலில் காணக்கூடிய சில நியதிகள் கீழே தரப்பட்டுள்ளன.

- ஆசிரியருக்கு வழங்கப்படும் கல்வி மாணவர்கள் கற்பதற்கும் பணியாற்று வதற்கும் நாட்டின் சிறந்த பிரசைகளாக இருப்பதற்கும் தூண்டுதலளிக்க வேண்டும். ஆயத்தஞ் செய்தல் வேண்டும்.
- கற்பித்தலின் சூழமைவினால் விளங்கிக்கொள்ளுதல்.
- பாடசாலையில் அவர்கள் பணியாற்றும் சட்டரீதியான, ஒழுக்கம் மற்றும் நீதி நெறிசார்ந்தவற்றை விளங்கிக்கொள்ளல்.
- தாம் கற்பிற்கும் பாடத்துறையை விளங்கிக்கொள்ளல்
- பாடத்தைக் கற்பித்தலில் மற்றும் கற்றலில் பல அணுகுமுறைகளைப் பயன்படுத்துதல்.
- பாடத்தைத் திடடமிடுதலில் ஈடுபடுதல்.
- கற்றலுக்குச் சாதகமான சூழலை உருவாக்குதலும் பேணுதலும்.
- கலைத்திட்ட உள்ளடக்கம் மற்றும் குறிக்கோள்களை பாடங்களில் அர்த்தமுள்ள கற்றல் செயற்பாடுகளாக மாற்றுதல்.
- மாணவரின் கற்றல் தேவைகளை நிறைவேற்றுதற்கு பல வகையான தொழில்நுட்பங்களைப் பிரயோகித்தல்.
- மாணவரின் கற்றல் தேவைகள் மற்றும் முன்னேற்றம் பற்றிய தகவல்களைச் சேகரித்தலும் பயன்படுத்துதலும்
- கற்பித்தலின் விளைவுகளை அளவிடுவதற்கு மாணவருடன் இடைத்தாக்கம்
- மாணவர்களைக் கணிப்பீடு செய்வதற்குப் பொருத்தமான வகுப்பறை மட்டக் கணிப்பீடுகளை நடைமுறைப்படுத்துதல்.
- பாடசாலை, வீடு, மற்றும் சமுதாயம் மற்றும் தமது சொந்தப் பாடசாலையில் பங்குதாரராதலை உருவாக்குதலும் பேணுதலும்
- தொழில்காலம் முழுவதும் கற்பவராதல்

பரிந்துரைக்கபட்ட செயற்பாடுகள் 6.2:

பாடசாலையில் கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியர்களை மேற்பார்வையின்போது அவதானிப்பதற்குப் பயன்படுத்தக்கூடிய 14 நியதிகள் மேலே தரப்பட்டுள்ளன. மேலே தரப்பட்ட 12 விடயங்கள் ஒவ்வொன்றுக்கும் அவதானிக்கக்கூடிய இரண்டு நியதிகளை தயாரிக்குக. அவை உங்கள் பாடசாலையின் மேற்பார்வைச் செயல்முறையின்போது பயன்படுத்தக் கூடியதாக இருத்தல் வேண்டும். ஒரு அவதான அட்டவணையையும் மதிப்பீட்டு அளவுச்சட்டத்துடன் கூடிய வகையில் தயார் செய்க.

b. கற்பித்தல் மேற்பார்வைக்கென கவனத்தில் கொள்ளவேண்டிய விடயங்கள்

வகுப்பறைச் சூழல்

- ஆசிரியர் வழங்கும் கல்வி கற்பதற்கும் பணியாற்றவும் நாட்டின் சிறந்த பிரசையாகவும் இருக்கவும் தூண்டுதலளிக்க வேண்டும். ஆயத்தஞ் செய்ய வேண்டும்.
- கற்பித்தலின் சூழமைவினை விளங்கிக்கொள்ளல்
- திட்டமிடல் செயற்பாடுகள் பலவற்றில் ஈடுபடல்
- கற்றலுக்கு வாய்ப்பான சூழலை உருவாக்குதலும் பேணுதலும்

திட்டமிடலும் ஆயத்தமும்

- ஆசிரியர் வழங்கும் கல்வி மாணவர்கள் கற்பதற்கு, பணியாற்றுவதறற்கு மற்றும் நாட்டில் சிறந்த பிரசையாக விளங்குவதற்குத் தூண்டுதலளிக்க வேண்டும். ஆயத்தஞ் செய்தல் வேண்டும்.
- தாம் வேலைசெய்யும் பாடசாலையில சட்டமாக்கப்பட்ட விடயங்கள் ஒழுக்கம் மற்றும் நீதிநெறிச் சட்டங்களை விளங்கிக்கொள்ளல்
- தாம் கற்பிக்கும் பாடத்துறைகளை விளங்கிக்கொள்ளல்
- கற்பித்தலுக்கும் கற்றலுக்குமான பல அணுகுமுறைகளைப் பயன்படுத்துதல்
- பல திட்டமிடல் செயற்பாடுகளில் ஈடுபடுதல்

போதனைசார் ஒழுங்மைப்பு

- ஆசிரியர் வழங்கும் கல்வி மாணவர்கள் கற்பதற்கு, பணியாற்றுவதற்கு நாட்டில் சிறந்த பிரசையாக விளங்குவதற்குத் தூண்டுதலளிக்க வேண்டும். ஆயத்தஞ்செய்ய வேண்டும்.
- தாம் கற்பிக்கும் பாடத்துறைகளை விளங்கிக்கொள்ளுதல்
- கற்பித்தல் கற்றலுக்குப் பாடந்திட்டமிடுவதில் பல அணுகுமுறைகளைப் பயன்படுத்துதல்
- மாணவர்களுடைய கற்றல் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு பலவகையான தொழில்நுட்பங்களைப் பிரயோகித்தல்.

போதனைசார் முன்வைப்பு

- ஆசிரியர் வழங்கும் கல்வி மாணவர்கள் கற்பதற்கும், பணியாற்றவும் மற்றும் நாட்டில் சிறந்த பிரசையாக விளங்குவதற்கும் தூண்டுதலளிக்க வேண்டும் ஆயத்தஞ் செய்ய வேண்டும்.
- தாம் கற்பிக்கும் பாடத்துறைகளை விளங்கிக் கொள்ளல்
- கற்பித்தல் கற்றலுக்கான பாடந்திட்டமிடும்போது பல அணுகுமுறைளைப் பயன்படுத்துதல்
- கற்றலுக்கு வாய்ப்பான சூழலை உருவாக்குதலும் பேணுதலும்
- கலைத்திட்ட உள்ளடக்கத்தையும் குறிக்கோள்களையும் அர்த்தமுள்ள கற்றல் செயற்பாடாக மாற்றுதல்
- கற்பித்தல் வெளியீடுகளை அளவிடுவதற்கு மாணவருடன் இடைத்தாக்கம்
- மாணவர்களைக் கணிப்பிடுவதற்குப் பொருத்தமான வகுப்பறை மட்டக் கணிப்பீடுகளைப் பயன்படுத்துதல்

உயர்தொழில்சார் பொறுப்புகள்

- ஆசிரியர் வழங்கும் கல்வி மாணவர்கள் கற்பதற்கும் பணியாற்றவும் மற்றும் நாட்டில் சிறந்த பிரசையாக விளங்குவதற்கும் தூண்டுதலளிக்க வேண்டும். ஆயத்தஞ் செய்ய வேண்டும்.
- கலைத்திட்ட உள்ளடக்கம் மற்றும் குறிக்கோள்களை அர்த்தமுள்ள கற்றல் செயற்பாடுகளாக மாற்றுதல்
- மாணவரின் கற்றல் தேவைகளை நிறைவுசெய்ய பலவகையான தொழில்நுட்பகங்களைப் பிரயோகித்தல்
- மாணவரின் கற்றல் தேவைகள் மற்றும் முன்னேற்றம் பற்றிய தகவல்களைத் திரட்டுதலும் பயன்படுத்துதலும்

- மாணவர் பற்றிய கணிப்பீடு செய்வதற்குப் பொருத்தமான வகுப்பறை மட்ட கணிப்பீடுகளைப் பயன்படுத்துதல்.
- பாடசாலை, வீடு மற்றும் சமூகம் ஆகியவற்றுக்கு மத்தியிலும் தமது பாடசாலையிலும் பங்குடமையை உருவாக்குதலும் பேணுதலும்
- தொழில்காலம் முழுவதும் கற்பவராதல்.

C. மேற்பார்வைச் செயல்முறை

கற்பித்தல் செயல்முறையில் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய 5 துறைகளைக் கற்பித்தலை மேற்பார்வை செய்வதற்கான அடிப்படைகளாகப் பயன்படுத்த முடியும்.

பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடு 6.3:

5 துறைகளையும் மேற்பார்வையின் போது கற்பித்தலை மதிப்பிடுவதற்கு பயன்படுத்திய 4 விபரிப்பிகள் கொண்ட விளக்கங்களை ஒவ்வொரு துறைக்குமென தயாரிக்குக. ஆசிரியருடைய வினையாற்றல்கள் தராதரத்தை எவ்வாறு விஞ்சவேண்டும், தராதரத்தை அடைதல் வேண்டும் அல்லது எதிர்பார்த்த தராதரத்திலும் கீழ் இருத்தல் வேண்டும் என விபரிக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

ஆசிரியர் மேற்பார்வை தனிப்பட்டதொரு செயற்பாடாக இருக்ககூடாது. அது உடன்நிகழும் மேற்பார்வையாக இருத்தல் வேண்டும். உயர்தொழில்சார் அபிவிருத்தியும் மதிப்பீடும் ஒரு செயல்முறையின் பகுதிகளாகும். உடன்நிகழும் கற்றல் மற்றும் கற்பித்தல் மேற்பார்வை பாடசாலை முகாமைத்துவத்துக்கும் பாடசாலையால் நியமிக்கப்பட்ட ஒருவருக்கும் பொறுப்பளிக்கப்படுதல் வேண்டும். பாடசாலை அதிபர், பிரதி அதிபர், பிரிவுத் தலைவர்கள் மற்றும் பாடத் தலைவர்கள் கற்பித்தல் - கற்றலை மேற்பார்வைசெய்யும் குழுவின் உறுப்பினர்களாக இருப்பார்கள். கற்பித்தலை மேற்பார்வை செய்தல் ஆசிரியர் அபிவிருத்திக்கும், கற்பித்தல் தராதரத்துக்கும் இட்டுச்செல்ல வேண்டும். மற்றும் அதன் விளைவு தராதரமான கற்றல் விளைவுகளாகும்.

கற்பித்தலை மதிப்பீடு செய்வதற்குப் பின்வருவன உதவும்:

- பாடத்திட்டங்கள்
- வகுப்பறை அவதானங்கள்
- சுய – கணிப்பீடுகள்
- மாணவர் அடைவுபற்றிய தரவுகள்
- மாணவர் வேலைகள்

▪ **மேற்பார்வை வட்டம்**

ஒரு பாடசாலையில் மேற்பார்வை வட்டமானது பின்வரும் கட்டங்களைக் கொண்டமையும்

- கற்பித்தலை அவதானித்தல்

- ஆசிரியருடன் கலந்துரையாடுதல்
- கற்பித்தல் கற்றல் செயல்முறைக்குரிய பின்னூட்டல்
- மேம்படுத்த வேண்டிய விடயங்களை எடுத்துக் கூறுதல்
- பயிற்சித் தேவைகள்
- ஆசிரியர்க்கான வாண்மை விருத்தித் திட்டம்.



உரு 6.1 மேற்பார்வை வட்டம்

கற்பித்தலை அவதானித்தல்

மேற்கூறிய செயற்பாடு தொடர்பாக பாடசாலையில் தயாரிக்கப்பட்ட அறிவுறுத்தல்களை அவதானிப்பதற்கெனப் பயன்படுத்தலாம். இத்தகைய அறிவுறுத்தல்கள் பாடசாலையில் இனங்காணப்பட்ட தேவைகளுக்கு அமையத் தயாரிக்கப்படுதல் வேண்டும். அறிவுறுத்தலானது கற்பித்தல் மற்றும் கற்றல் பற்றிய வெவ்வேறு அம்சங்களை உள்ளடக்க வேண்டும். ஆசிரியரை அவதானிக்கும் வேளையில் மாணவர் கற்றலும் கற்றல் விளைவு என்ற வகையில் அவதானிக்கப்படுதல் வேண்டும்.

ஆசிரியர்களுடைய பாடத்திட்டங்களை மீள்நோக்குதல் ஆசிரியரை மதிப்பிடும் ஒரு முறையாகும். இவை உள்ளடக்கத்தை விநியோகிப்பதற்கு ஆசிரியரின் ஆயத்தம், மாணவர்

திறன் விருத்தியைக் கட்டியெழுப்புதல் மற்றும் வகுப்பறைக் கற்றல் சூழலை முகாமை செய்தல் பற்றிய தகவல்களை வழங்கும். பாடத்திடடங்கள் யாவும் மாணவரின் கற்றல் குறிக்கோள்களை ஆசிரியர் செயற்பாட்டுடன் இணைக்கப்படும்போது, மாணவரின் கவனத்தை பேணும்வகையில் கற்பித்தல், மாணவரின் கற்றல் குறிக்கோள்கள் தேசிய எதிர்பார்ப்புகள் மற்றும் தராதரங்களுடன் இணையும்போது, மேம்படுத்தப்பட மாணவர் விளைவுளுடன் உடன்பாடான விதத்தில் தொடர்புபடுகிறது.

பாடத்திட்டங்கள் பாடத்தை வழங்குவதற்கு முன்னர் ஆயத்தப்படுத்தப்படும் திட்டங்களாகும், என்பதால், திட்டத்திலுள்ளவை கற்பித்தலின்போது சீராக்கப்படுதல் வேண்டும். எனவே, வகுப்பறை அவதானமும், பாடத்திட்டத்தை பார்ப்பதால் மட்டும் மேற்கொள்ளப்பட்ட அவதானங்களை நிறைவுபடுத்துவதாக அமைதல் முக்கியமானது.

பாடத்திட்டங்கள், வகுப்பறையில் செய்யப்பட வேண்டிய விடயங்கள், மற்றும் வகுப்பறையில் நிகழும் விடயங்களுடன் இணைக்கப்படுதல் வேண்டும். வகுப்பறை அவதானமானது ஆசிரியர்களை மதிப்பீடு செய்வதற்கு அதிகளவில் பயன்படுத்தப்படும் கருவியாகும். வகுப்பறை அவதானம் ஆசிரியர்களின் போதனா நடைமுறைகள் பற்றிய தகவல்களை அடக்கும். அவதானங்கள் ஆசிரியர் வளர்ச்சியைப் பின்தொடர்ந்து செல்வதுடன் தேவையான வாண்மை அபிவிருத்தியையும் பரிந்துரைக்கும்.

1. ஆசிரியருடன் கலந்துரையாடல்

பாடசாலை ஒன்றில் கற்பித்தலை மேற்பார்வை செய்தல் ஒரு உடன்நிகழ் செயற்பாடாக இருத்தல் வேண்டும். இதுவோர் குழு முயற்சியாகும். திட்டமிட்டவகையில் ஆசிரியருடைய வாண்மை விருத்தியில் நம்பிக்கையும் மதிப்பும் தரும் விளைவுடன் ஈடுபடுகிறது. மேற்பார்வையானது ஆசிரியருக்கும் மேற்பார்வையாளருக்கும் இடையில் மேற்பார்வையை அவதானித்தல் பற்றிய வாண்மைசார் உரையாடலாக அமைதல் வேண்டும்.

2. கற்பித்தல் மற்றும் கற்றல் பற்றிய பின்னூட்டல்

அவதானிப்புப்பற்றி ஆசிரியருடன் கலந்துரையாடும்போது மனப்பூர்வமான மதிப்பும் நம்பிக்கையும் இருத்தல் வேண்டும். அத்தகைய அவதானங்களுக்கும் பின்னூட்டலுக்குமான காரணங்கள் வாண்மை ரீதியாக ஆசிரியருக்கு வழங்கப்படும்போது ஆசிரியரின் கற்பித்தல் செயல்முறையை மேம்படுத்த உதவும். மேலும், ஆசிரியரின் பயிற்சிபற்றி இனங்காணப்பட்ட தேவைகள் நீண்டகால அடிப்படையில் ஆசிரியரின் அபிவிருத்திக்கு உதவுதல் வேண்டும்.

3. கற்பித்தலின் தராதர அம்சங்கள்

மேற்பார்வையின் போது இனங்காணப்பட்ட தராதர அம்சங்கள் ஒழுங்குபடுத்தப்படுதல் வேண்டும். சிறந்த நடைமுறைகள் ஆசிரியர் கூட்டத்திலே, பாடசாலையில் ஆசிரியர் மத்தியில் அத்தகைய நடைமுறைகளைப் பரப்பும் வகையில் எடுத்துக் காட்டப்படுதல் வேண்டும். இவை பாடசாலையில் கற்பித்தலை மேம்படுத்த உதவும்.

4. மேம்படுத்துவதற்கான விடயங்கள்

மேம்படுத்துவதற்கான விடயங்கள் மேற்பார்வையின்போது இனங்காணப்படுதல் வேண்டும். அவை ஆசிரியருடன் கலந்துரையாடப்படுதல் வேண்டும். கற்பித்தலை மேற்பார்வை செய்தல் ஆசிரியருக்கு உதவும் விடயமாக இருத்தல் வேண்டுமேயொழிய விமர்சிக்கும் விடயமாக இருக்கக்கூடாது. இத்தகைய மேற்பார்வை நிகழ்ச்சித்திட்டம், பாடசாலை முழுவதையும் கவனத்தில் கொள்வதாகவும் ஆசிரியரின் உயர்தொழில்கள் அபிவிருத்திச் செயல்முறைகளையும் மாணவரின் தரமான கற்றல் விளைவுகளைக் கவனத்தில் கொள்வதாகவும் இருத்தல் வேண்டும்.

5. பயிற்சித் தேவைகளும் வாண்மை விருத்தித் திட்டமும்:

மேற்பார்வையின்போது பயன்படுத்தப்பட்ட விளக்கங்கள் ஆசிரியரின் வாண்மை அபிவிருத்திக்கான துறைகளை இனங்காண உதவவேண்டும். பாடசாலை முகாமைத்துவக் குழு, ஆசிரியர்களின் தேவைகளை இனங்காண்பதன் மூலம் பாடசாலையிலுள்ள ஆசிரியர்களின் வாண்மை அபிவிருத்திக்கு உதவுதல் வேண்டும். இனங்காணப்பட்ட வாண்மை விருத்தி தேவைகள் திட்டமிட்ட அடிப்படையில் வழங்கப்படுதல் வேண்டும். இதனால் ஆசிரியரின் உயர்தொழில் வளர்ச்சி உறுதிசெய்யப்படுகிறது. பாடசாலையின் 5 ஆண்டுத்திட்டத்தில் தேவைகள் உள்ளடக்கப்படுதல் வேண்டும். குறித்த ஆண்டுக்கென இனங்காணப்பட்ட துறைகள் வருடாந்த அமுலாக்கல் திட்டத்தில் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

பரிந்தரைக்கப்பட்ட செயற்பாடு 6.4:

ஆசிரியரை அவதானிக்கும் விளக்கங்கள் பல இணையத்தளங்களில் உள்ளன. சில இணையத்தளங்களைப் பார்த்து பின்வருவனவற்றைக் குறித்துக் கொள்ளுங்கள்:

a. ஆசிரியர் அவதானங்களுக்குப் பயன்படும் வெவ்வேறு விபரிப்பிகள்

b. விபரிப்பிகளை அல்லது நியதிகளைப் பயன்படுத்தி அவதானங்களைத் தரமிட உதவும் பாங்குகளும் அமைப்புகளும்.

6. மாணவர் வெளியீடுகள்

கற்பித்தல் மாணவர் வெளியீடாக இருக்கும். இவை மீண்டும் கற்பித்தலின் தராதரம் பற்றிய தகவல்களை வழங்கும்.

ஒரு காலப்பகுதிக்கான மாணவர் அடைவுபற்றிய தரவுகள் மாணவர்களின் முன்னேற்றம் தொடர்பான தகவல்களை வழங்கும். அவை கற்பித்தலால் விளைந்தவை. இத்தகைய தரவுகளைப் பகுப்பாய்வு செய்யும்போது, முன்னேற்றம் உள்ளனவா என்பதை எடுத்துக்காட்டும். குறிப்பிட்ட காலப்பகுதியில் ஆசிரியரால் கற்பித்தலின் தராதரத்தின் அடிப்படையில் மதிப்பீடும் அமைந்துள்ளது எனவும் எடுத்துக்காட்டும்.

மாணவர் வேலை மாதிரிகளும் கற்பித்தலுக்கு மாணவர் எவ்வாறு துலங்குகிறார், உள்ளடக்கத்தின் தராதரம் செய்யப்பட்ட பயிற்சிகளும், திருத்தப்பட்டவையும் என்பன பற்றிய தகவல்களை வழங்குகின்றன.

7. சுய கணிப்பீடு

பிரதிபலித்தல் என்றவகையில் செயல்முறையில், ஆசிரியர்கள் தமது சொந்த போதனைகளைத் திரும்பவும் நினைவுபடுத்திப் பகுப்பாய்வு செய்தல்வேண்டும். கற்பித்தல் பற்றிய சுயகணிப்பீடு நன்கு விதந்துரைக்கப்பட்ட நடைமுறையாகும். தயாரிக்கப்பட்ட விளக்கங்கள் பாடசாலை ஆசிரியர்களால் பயிற்சி செய்யப்படலாம். மற்றும் ஆசிரியரால் உண்மையான நியாயங்காணல் மூலம் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின் அடிப்படையில் செய்யப்படலாம்.

சுயகணிப்பீட்டினை பாட அல்லது தர கூட்டங்களின்போது ஏனைய ஆசிரியர்களுடனான உயர்தொழில்சார் உரையாடல் மூலம் செய்யமுடியும். மதிப்பீட்டுச் செயல்முறையென்ற வகையில் அவர்களது கற்பித்தல் மீதான பிரதிபலிப்புகள் தொடரவும் வளரவும் ஊக்குவிக்கும், ஆசிரியர்களாக சேவையில் இருக்கும் காலத்தில்

பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடு 6.5:

உங்கள் பாடசாலையில் சுயகணிப்பீட்டினை ஒரு நிகழ்ச்சித்திட்டம் என்றவகையில் அமுல்படுத்தக்கூடிய வழிமுறைகளை விபரிக்குக. நீங்கள் இதனை நடைமுறைப்படுத்துகிறீர்களாயின், நீங்கள் சுயமதிப்பீட்டினை அமைப்புசார் முறையில் நடத்துவதற்கு ஆசிரியர்களுக்கு வழங்கும் நெறிப்படுத்தல்களைத் தருக.

8. சகபாடி மதிப்பிடு

சகபாடி மதிப்பீடும் மற்றும் சகபாடிப் பயிற்றுவித்தலும் பாடசாலையில் பின்பற்றப்படும் சில செல்நெறிகளாகும். பாடசாலைக்கெனத் தயாரிக்கப்பட்ட மேற்கூறிய விளக்கங்கள் சகபாடி மதிப்பீட்டிற்கும் பயன்படுத்தப்படுகின்றன.

ஒரு ஆசிரியர் அதே அந்தஸ்திலுள்ள அல்லது, அதே பாடசாலையில் கற்பிக்கும் நெருங்கிய ஆசிரியர் ஒருவரை தமது கற்பித்தலை மதிப்பீடு செய்யுமாறு கேட்கலாம். இயல்பாகவே இத்தகைய மதிப்பீடு மிகவும் சிநேகபூர்வமான பயிற்சியாக இருக்கும். சில நேரங்களில் பரஸ்பரம் நன்மை பயப்பதாகவும் இருக்கும். இவ்வாறு ஆசிரியர்கள் ஒருவரையொருவர் மாறிமாறி மதிப்பிடலாம். இதன் விளைவாக, ஆசிரியர்கள் இருவரும் தமது கற்பித்தல் பற்றிய பின்னூட்டலையும் முன்னேற்றத்துக்கான பரிந்துரைகளையும் பெறமுடியும்.

பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடு 6.6:

ஆசிரியர்களுக்கான சிறந்த மதிப்பீட்டுமுறை ஆசிரியர்களால் தெரிவு செய்யப்படுவதாக இருத்தல் வேண்டும். ஆசிரியர்கள் தமக்கிடையில் சகபாடி மதிப்பீட்டினை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுங்கள். இது நடைமுறைப் படுத்தப்படுமானால், பாடசாலையின் தலைவர் என்ற வகையில் இந்நிகழ்ச்சித்திட்டத்தினை ஏற்றுக்கொள்ளவும் நீடித்துநிலவச் செய்வதற்குமான உங்கள் அணுகுமுறைகளை விளக்குக.

9. மேற்பார்வைக்காக மேற்பார்வையாளரைப் பயிற்றுவித்தல்

வகுப்பறை அவதானங்கள், மேற்பார்வையின்போது ஆசிரியர்களை மதிப்பீடு செய்யும் நோக்குடன் அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது. இதிலும் சில மட்டுப்பாடுகள் உண்டு. நன்கு பயிற்றப்படாத அவதானிப்புகள் மற்றும் மேற்பார்வை செயல்முறையில் ஒரு சீரின்மை ஆசிரியர்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தலாம். சில விடயங்களில் பக்கச்சார்பான முடிவுகளும் இருக்கலாம். அவதானங்களை முறைப்படி செய்யும் போதும் இடையறாது செய்யும்போதும் ஆசிரியர் மேற்பார்வைக்கும் பழக்கப்படுகிறார். மற்றும் அதுவோர் வழமையான எதிர்பாக்கப்பட்ட நிகழ்ச்சியாகவும் மாறுகிறது.

அதிபர் மேற்பார்வை நிகழ்ச்சித்திட்டத்துக்கு இட்டுச்செல்லும்போது, அதற்கென நியமிக்கப்பட்ட மேற்பார்வையாளருக்குத் தெரிவிப்பதும் தமது பணியை வாண்மைரீதியாக செயலாற்றுவதற்குப் பயிற்றுவிக்கவும் வேண்டும்.

பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடு 6.7:

பாடசாலையொன்றில் கற்பித்தலை மேற்பார்வை செய்வதைச் சிறந்த மேற்பார்வையாளருடனும், தேவையான நன்கு தயாரிக்கப்பட்ட கருவிகள் பற்றும் மேற்பார்வைக்கான பயிற்சியுடனும் கூடியவகையில் முறைப்படி திட்டமிடப்படுதல் வேண்டும்.

மேற்பார்வையாளருக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம், அதற்கான கருவிகள் மற்றும் அவற்றைப் பயன்படுத்துதல்பற்றி எவ்வாறு பயிற்றுவிப்பீர்களென விளக்குக.

10. தராதரமான கற்றல் விளைவுக்கு இட்டுச் செல்லுதல்

பாடசாலையில் இடம்பெறும் மிகமுக்கியமான இடைத்தாக்கமானது ஆசிரியருக்கும் மாணவருக்கும் இடையில் நிகழும் இடைத்தாக்கமாகும். ஆசிரியர் பாடசாலையிலே தரமான கற்பித்தலை வழங்குவாராயின், கற்றலும் இலகுவாகவும் கவர்ச்சிகரமாகவும் இருக்கும். பாடசாலையின் தலைவர்கள், கற்பித்தலுக்குத் தேவையான உதவிச் சேவைகளை வழங்குவதன் மூலம் கற்பித்தலை நன்கு மேற்கொள்ள உதவுவதுடன், பாடசாலைச் சூழலை சிநேக பூர்வமானதாக உருவாக்குவதன் மூலம் மாணவர்கள் கற்பதற்கு உதவலாம்.

பாடசாலையில் வழிகாட்டுதல் அதிபருக்கும் பாடசாலை முகாமைத்துவக் குழுவுக்கும் மகிழ்ச்சிகரமானது ஆசிரியரின் கற்பித்தலுக்குத் தேவையானவை நிறைவுசெய்யப்படும் போதும் மாணவருக்கான தரமான கற்றல் சந்தர்ப்பங்கள் வழங்கப்படுவதனால், மாணவரின் அபிலாசைகள் பூர்த்திசெய்யப்படும்போதும் மகிழ்ச்சிகரமான நிலையுருவாகிறது.

இக்கற்கைநெறியின் உள்ளடக்க விபரங்கள் ஒரு பாடசாலையிலுள்ள தலைவர் ஒருவர் மாணவர், பெற்றோர், சமூகம் மற்றும் கல்வி முறைமையிலுள்ள உத்தியோகத்தர் எதிர்பார்க்கும் மாணவரின் தரமான கற்றல் விளைவுகளைக் கருத்திற்கொண்டு பாடசாலையை வழிநடத்த வேண்டும். தரமான கற்றல் விளைவுகள் பாடசாலை முறைமையிலே பொதுவாகப் பொதுப்பரீட்சை முடிவுகளினால் அளவிடப்படுகிறது. மேற்பார்வையோடும் வழிகாட்டலோடும் இணைந்த தரமான கற்பித்தல் சிறந்த விளைவுகளைத் தரும்.

குறித்த காலப்பகுதியில் மேற்பார்வைக்கும் கற்பித்தலுக்கும் இடையிலே இடம்பெறும் தொடர்புகள் கற்றல் விளைவுகளிலும் மேற்பார்வையிலும் தாக்கத்தை உருவாக்கும்.

பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடு 6.8:

உங்கள் பாடசாலையில் 10,11 ஆகிய தரங்களுக்கான தெரிவு செய்யப்பட்ட

பாடங்களுக்குரிய வெவ்வேறு மேற்பார்வை நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்க. இதனைப் பல வருடங்களுக்கு நடைமுறைப்படுத்துவதுடன், அவ்வருடங்களுக்குரிய க.பொ.த (சா.த) பரீட்சை முடிவுகளையும் அட்டவணைப் படுத்துக.

மேற்கொள்ளப்பட்ட மேற்பார்வை நிகழ்சிசத் திட்டத்துடன் தொடர்புபடுத்தி பரீட்சை முடிவுகளைப் பகுப்பாய்வு செய்க, கற்பித்தல் மீது அதன் அவதானங்கள் மற்றும் எடுக்கப்பட்ட பரிகார நடவடிக்கைகள் என்பவற்றையும் பகுப்பாய்வு செய்க.

அச்சிடப்பட்டது:
அச்சகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம
www.nie.lk